52 YEAR RECORD IN KOKUVIL HINDU COLLEGE



Mrs.Sukirthalakshmy Supramaniam

# கொக்குவில் இந்துவின் புதுமைப் பெண்



தோற்றம் September 30, 1923

மறைவு September 08, 2011

ஆண்டு கர ஆவணி ஆர் பூர்வபட்சமது
பூண்ட ஏகாதசியில் புக்கடைந்தார்- மாண்மோட்சம்
சுப்பிரமணியம் சுகிர்தலக்ஷ்மியாம் கொக்குவிலூர்
அப்புனிதை ஆன்றோர் அழ

அமரர்

# திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் B.A. (Lond.)
## (சுகிர்த ரீச்சர்)

அவர்களின்

# நினைவு மலர்

2012

உ

சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்


சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
    தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
    உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
    உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம்மானே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
    பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
    உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
    செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
    உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
    சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
    அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
    தொண்டனேன் விளம்புமா விளம்பே



## திருப்பல்லாண்டு


பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
 பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
 மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
 சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே


## புராணம்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளையாடு முகமொன்றே
 ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
 குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
 வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
 ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே






தோற்றம்:
September 30, 1923
3rd Mile Post
K.K.S. Road
Kokuvil
Sri Lanka

மறைவு:
September 8, 2011
Richmond Hill
Ontario
Canada

கால் பதித்த நாள் முதலாய் கடைசி மூச்சு
இருந்த வரை
**கொக்குவில் இந்து** உச்சரித்த உதடுகள்
மௌனித்துக் கிடந்தாலும்
விழுதெறிந்த பல விழுதுகள்
உம் வழித்தடம் என்றும் தொடர்வர்!
வாழ வழிகாட்டிய கல்லூரி விளக்கே!
உம்மில் தோன்றிய சுடர்கள் நாம்
என்றும் ஒளிர்வோம் உம் வழியில்!
நிஜமான நிழல் தேடி நிம்மதியாய்
தூங்கிடுவீர்!

**- கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிள்ளைகள்**

# "கொக்குவில் இந்துவின் புதுமைப் பெண்"

அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் B.A. (Lond.)

(சுகிர்த ரீச்சர்)

| | |
|---|---|
| 1927–1937 | கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவியாக |
| 1942 | கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று, அதே பாடசாலையில் நியமனம் பெற்ற முதற் பெண் ஆசிரியை (கணிதம், ஆங்கிலம், தமிழ், லத்தீன்) |
| 1983 | பிரதி அதிபராகச் சேவையாற்றி, தன்னலமற்ற 42 வருட ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றமை |
| 1993 | கனடாவிற்குப் புலம் பெயர்ந்து சென்றமை |
| 1994 | கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்–கனடாக் கிளையின் உயிர்நாடியாக விளங்கி, முதல் நான்கு வருடங்கள் அதன் தலைமைப்பதவியை அலங்கரித்து, வாழ்வின் இறுதி நாள் வரை (2011) உபதலைவராக உயிர்ப்புடன் செயலாற்றியமை |



# அறிவுக் கடலொன்று அமைதியானது

**வை**யத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் கலந்துவிட்ட திருமதி. சுகிர்தலக்ஷமி சுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்பதை எண்ணும் போது நெஞ்சம் கனக்கின்றது. ''தோற்றமும் மறைவும் தொல்லியல்பு'' என்று தேறும் பண்பே உலகை வாழ்விக்கின்றது எனும் உண்மையை மனம் உணர்ந்தாலும் ஒரு சிலரின் மறைவுகள் மறக்கமுடியாத தொன்றாய் மனதில் பதிந்துவிடுகின்றன.

அமரர் திருமதி. சுகிர்தலக்ஷமி சுப்பிரமணியம் அவர்கள் எமது கல்லூரியின் நூற்றாண்டு கடந்த வளர்ச்சிப் பயணத்தில் ஏறத்தாழ அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகத் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்டவர். கல்லூரியின் பழைய மாணவியாகிய இவர் தன்னுள் அறிவுச் சுடரேற்றிய கல்லூரி அன்னைக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து நீண்டகாலமாக ஆசிரியப் பணியாற்றித் தொடர்ந்து உபஅதிபராகவும் கடமையாற்றினார்.

'அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'

எனும் பாரதியின் வாக்கை மெய்ப்பித்துப் பெருமைப்படுத்தும்

வகையில் அரும்பணியாற்றினார் என்பது மிகையல்ல. கனவிலும் நனவிலும் கல்லூரியின் மேன்மைக்காக முழு மனதோடு முனைப்புற்றவராக வாழ்ந்தார். கல்லூரி நூற்றாண்டு விழா மலரில் இவர் எழுதிய ''நான் கண்டு அறிந்த கொக்குவில் இந்துக் கல்லூரி'' எனும் கட்டுரையை வாசிக்கும் பொழுது இவர் கல்லூரி மீது கொண்ட பேரன்பும் பேரபிமானமும் எவ்வளவு தூரம் ஆழமானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டு அறந்திறம்பாச் செம்மை மாதராக விளங்கிய இவர், தன்னை நாடிவரும் மாணவச் செல்வங்களிற்கு அறிவை வழங்குவதில், ஆற்றுப்படுத்துவதில், அன்பு செய்வதில், கலங்கரை விளக்கமாக, உயரவைக்கும் ஏணியாக அமைந்தவர். அமரராகிவிட்ட அன்னாரது அளப்பரிய சேவையை எமது கல்லூரி என்றென்றும் மறந்துவிடாது.

எல்லோரிடத்திலும் அன்பு, இரக்கம், நட்பு, பரோபகாரச் சிந்தையுடையவராகத் துலங்கினார். பிறருக்கு உதவி செய்யும் ஈத்துவக்கும் பெருங்குணம் படைத்த குணவதி என்பதை இவருடன் பழகியவர்கள் நன்கு அறிவர். கடல் எல்லைகளைத் தாண்டிக் கனேடிய மண்ணில் தனது நிறைவுக் காலத்தைக் கழித்த வேளையிற் கூட கல்லூரித் தாயைத் தனது நெஞ்சகத்தில் சுமந்தே வாழ்ந்தார். கல்லூரியின் வளர்ச்சி பற்றி அடிக்கடி தொலைபேசியில் விசாரித்தறியும் இவரது கனிவான மொழிகளை இனிக் கேட்க முடியாதென்பதை எண்ணும் போது நெஞ்சம் நனைகின்றது.

நற்பண்புகள் அனைத்தினதும் நிலைக்களனாக விளங்கிய பண்பாளரான இவரது மறைவு இவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். ஒரு நல்ல பெண்மணியை நாம் இழந்துள்ளமை எமது துரதிஷ்டமே.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு''

எனும் பொய்யாமொழியினைச் சிந்தித்துத் தேறுதல் அடைவோமாக. அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானது திருவடி நிழலில் இன்பம் ஆர, அவனது திருத்தாளை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**கல்விசாரா ஊழியர்கள்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**கொக்குவில்**




Born
September 30, 1923
3rd Mile Post
K.K.S. Road
Kokuvil
Sri Lanka

Expired
September 8, 2011
Richmond Hill
Ontario
Canada

She was a role model and a guide to many students and teachers

Her memory will ever remain green in our minds

She was a legend in the history of **Kokuvil Hindu College**

She was steeped in the ways and traditions of Kokuvil

She was an embodiment of the "Kokuvil Spirit"

She was the last of "THE OLD BRIGADE"

Her dedication to the College was exemplary

She was our "Guardian Angel"

**By grateful students of the College**

# "கொக்குவில் இந்துவின் புதுமைப் பெண்"

## Late Mrs.Sukirthalakshmy Supramaniam B.A. (Lond.)
## (Sukirtha Teacher)

| | |
|---|---|
| **1927 – 1937** | Student at Kokuvil Hindu College |
| **1942** | First female student and teacher in the same institution (Mathematics, English, Tamil and Latin) |
| **1983** | Retired as Deputy Principal with 42 years of service as teacher |
| **1993** | Immigrated to Canada |
| **1994** | Live-wire of K.H.C. O.S.A. in Canada and was its President up to 1998; thereafter Vice President until her demise in 2011 |



# காவியமாய் நிலைத்திட்ட கலங்கரை விளக்கம்

**"நீயே வித்தையின் உறையுள்**

**நினதே எங்களின் உயர்வு**

**நினதடி ஏத்துவோமே,,,"**

நம் முன்னோர் கல்வியைக் கண் எனக் கருதினர். அதன் மூலமாகவே இவ்வுலகு பற்றிய புரிதலைச் சரிவர உணர்ந்துகொள்ள முடியும் என நம்பினர். அவ்வழியே நல்வழி என நடைபோடவும் செய்தனர். "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என வான்புகழும் வள்ளுவரும் தனது தேன்தமிழ் குறள் மூலம் நமக்குத் தெளிவுறுத்திக் கூறியுள்ளமை இதற்கேயாகும். அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கும் மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரவும் அறிவுலகை நோக்கி பீடுநடை போட வைக்கவும் மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறந்துவிடுதல் எனும் வலுவான தொண்டைப் பலரும் ஆற்றியுள்ளனர். இப்பணிக்கென கல்வியை உவந்தளித்த சிந்தனையாளர்கள், ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள், அறிவியல் மேதைகள் பலர் தோன்றி முழுமூச்சுடன் அர்ப்பணிப்பு மிக்க சேவையை ஆற்றியுள்ளனர், ஆற்றியும் வருகின்றனர்.

இத்தகைய கல்விக் கண்ணைத் திறக்க வைத்தல் எனும் அரும்பணியைத் தனது வாழ்வின் முழு இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து இறவாப் புகழ்பெற்ற தகைமையாளர் அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள். நூற்றாண்டுகளைக் கடந்து கிராமத்து ஒண்மணி மகுடமாக இலங்கும் நமது கல்லூரியின் அபரிமிதமான பாரிய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை உந்துசக்தியாக அம்மையார் விளங்கினார் என்பதில் ஐயமில்லை. தமது வாழ்வியலின் பெரும்பகுதியையும் எமது கல்லூரியுடன் மாணவியாக, ஆசிரியராக, பிரதி அதிபராக ஒன்றிணைத்து வாழ்ந்தவர். கல்லூரியைத் "தாய்" என வெறும் வார்த்தைகளால் வண்ணந்தீட்டிவிடாது அவ்வார்த்தைகளின் சத்தியத்தை நன்குணர்ந்து ஈன்ற தாய்க்கும் மேலாக நேசித்தவர்.

அம்மையாரது அரை நூற்றாண்டுக்கும் மேலான கொக்குவில் இந்துக் கல்லூரியுடனான சேவை அவரது வாழ்க்கையின் ஒரு கூறாக அன்றி வாழ்க்கையாகவே மாறிவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். மாணவர்களுக்கான கல்விப்பணி, கல்லூரி நிர்வாகப்பணி, சமூகப்பணி, சமயப்பணி என "என்கடன் பணிசெய்து கிடப்பதே" எனும் வார்த்தைகளின் வலுவைத் தன்மீது சுமந்து பணிகளாற்றி பல்பரிமாணமிக்க ஆளுமை கொண்ட தனித்துவமான பெண்மணியாக விளங்கினார். இவ்விடத்தில் நான் கேட்டும், கண்டும் அறிந்த அவரது அளப்பரும் பணிகளை இச்சிறுகட்டுரையில் தொகுத்தளித்தல் என்பது இயலாத காரியமாகும். எனினும் ஒருசிலவற்றையேனும் பதச்சோறாக இங்கு குறிப்பிடலாம் என எண்ணி என் மனதில் எழும் எண்ணங்களைப் பதிவுசெய்ய முயல்கின்றேன்.

இவரது இளமைக்காலம் பற்றி இன்றும் இவரது வயதை ஒத்த பெரியோர்கள் கதைக்கக் கேட்டதுண்டு.

**அ.அகிலதாஸ்**
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



பாடசாலையில் கல்வி கற்கும் ஆரம்ப காலத்திலேயே தலைசிறந்த மாணவியாக, சுட்டிப்பான பெண்ணாக விளங்கினார். கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி விளையாட்டுத்துறை, கலைநிகழ்வுகள் போன்ற வற்றிலும் அனைவரும் இனங்காணத்தக்க வகையில் தனிமுத்திரை பதித்து விளங்கினார். எச்செயலையும் அசாத்திய துணிச்சலுடன் முன்னின்று ஏற்று நடாத்தும் வல்லமை, தலைமைத்துவத்திறன் என்பன மாணவப் பருவத்திலேயே இவரிடம் இயல்பாகக் குடிகொண்டிருந்தன. ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களைக் கூர்ந்து நோக்குதலும் அவற்றை அறிவுக் கண்கொண்டு ஆராய்தலும், தான் ஆராய்ந்து கற்றவற்றை ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதலும் ஆகிய குணாம்சங்கள் இவரை எல்லோராலும் நேசிக்கத் தக்கவராகவும் நன்கு பாராட்டி மதிக்கத்தக்கவராகவும் உயர்த்தியிருந்தன.

மாணவப் பருவத்திலேயே தான் கல்வி கற்கும் பாடசாலை வளர்ச்சி அடையவேண்டும், கொக்குவில் கிராமத்தில் உயர்நிலை மையமாக விளங்க வேண்டும் என்பதில் ஆராத அவா கொண்டிருந்தார். அதற்கென இளமைப் பருவத்திலிருந்தே தன்னை முழுமையாக ஈடுபடுத்தி முன்னின்று உழைத்தார். இதற்கு ஒரு சம்பவத்தை இங்கு சுட்டிக்காட்டலாம் என நினைக்கின்றேன். அன்றைய காலத்தில் நவராத்திரி விழா பாடசாலையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழமையாக இருந்தது. விழாக்காலத்தில் "விருத்தம் பாடுதல்" எனும் நிகழ்வு நடந்து வந்துள்ளது. நன்றாக இசையுடன் பாடக்கூடிய மாணவர்களை நவராத்திரிப் பாடல்களைப் பாடக் கற்றுக்கொடுத்து மாணவர்களின் வீடுகளிற்குக் கூட்டிச் செல்வார்கள். வீடுகளில் மாணவர்களின் வரவினை முன்கூட்டியே இரு ஆசிரியர்கள் அறிவித்திருப்பர். அம்மாணவர் குழுவில் தலைமை மாணவியாக சுகிர்தலக்ஷ்மி அம்மையார் அவர்களே விளங்கினார். திரு.சம்பந்தன், திரு.கனகசபை எனும் ஆசிரியர்களுடன் வீடுதோறும் சென்று காப்புப்பாடி, சக்தி கீதங்கள் பாடி, நிறைவில் வாழ்த்துப்பாடி முடிப்பர். வீட்டினர் முடிவில் சிற்றுண்டி வழங்கி ஆசிரியர்களிடம் அன்பளிப்புப் பணத்தை வழங்குவர். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணமே பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டது. தன்னையொத்த மாணவர்களின் வீடுகளிற்கு மட்டுமன்றி பெரியோர்களின் வீடுகளிற்கும் சென்று நிதி சேகரித்துள்ளார். இந்தவகையில் அக்காலத்தில் மாவட்ட நீதிபதியாக இருந்த திரு.C.குமாரசுவாமி, பிரபல சட்டத்தரணி திரு.சு.நல்லையா ஆகியோரது வீடுகளிற்குச் சென்று விருத்தம்பாடி பணம் சேகரித்து கல்லூரி வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்தினர் என்பதைக் கல்லூரி நூற்றாண்டு விழா மலரில் அவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் எழுதிய கட்டுரை மூலம் படித்து அறிந்து கொண்டேன்.

''கற்றதொழுகு'' எனும் கல்லூரியின் மகுட வாசகத்தை நெஞ்சிருத்தினாற் போல நூலிழையும் பிசகாமல் மாணவர்களில் மாண்பினளாக விளங்கினார் என்பதைக் கேள்வியுறும் போது கல்லூரி மாணவிகளுக்கு அவர் ஒரு முன்னுதாரணம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அம்மையார் கற்ற கல்வியின் பயனாய் அக்காலத்தில் அவர் வேறு உயர் பதவிகளை நாடிச் சென்றிருக்கலாம். அதன் மூலம் பெரும் பொருளையும் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவற்றையெல்லாம் புறந்தள்ளி ஆசிரியப்பணி எனும் தன்னலங்கருதாச் சேவையைத் தலையாய பணியாகத் தேர்ந்தெடுத்தார். எழுத்தறிவித்தலே நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாய அறமெனக் கருதினார்.

**"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்**
**இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்**
**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்ன யாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

எனும் பாரதியின் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் கல்விப்பணியாற்றுவதனைத் தனது உயர்ந்த இலட்சியமாகக் கொண்டொழுகினார். கருத்தமைந்த கல்வியை மாணவர்களுக்கு பாத்திரம் அறிந்து வழங்கி அக்கல்வி மூலம் அவர்களிடம் காணக்கூடிய நடத்தை மாற்றங்களை அவ்வப்போது நிதானமாகக் கவனிப்பதில் மிகச் சிறந்தவராக விளங்கினார். ஓர் ஆசிரியரது கடமை என்ன? மாணவர்களை எந்த வகையில் எல்லாம் படிப்பில் ஆர்வம் காட்டச் செய்ய முடியுமோ அவ்வகையில் எல்லாம் அவர்களை ஊக்குவித்து கல்வியறிவை ஊட்டுதலாகும். விதைகளை நட்டால் மட்டும் போதாது. நல்ல நீரும் உரமும் இட்டு பயிரைப் பாதுகாக்க வேண்டும். மாணவ மலர்களை மணம் வீசச் செய்ய வேண்டும். இத்தகைய அரிய சேவையை அம்மையார் ஆற்றினார்.

"கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்னும் ஔவையின் வாக்கை அடிக்கடி அவரது உதடுகள் மாணவர்களை நோக்கி உச்சரித்த வண்ணம் இருக்கும். எச்சூழ்நிலையிலும் கல்வியை உதறிவிடக்கூடாது எனவும் கற்றலுக்கு வறுமை ஒரு தடைக்கல் அல்ல எனவும்

மாணவர்களுக்குப் போதித்தார். அவர்களின் வறுமையை நீக்குவதற்குத் தன்னாலான உதவிகளை வழங்குவார். பால் நினைந்து ஊட்டும் தாயைப் போல பரிவுடன் இவர் கல்விச் செல்வத்தை வழங்கியதனால் பூவினை நாடிவரும் தேனீக்கள் போல எப்பொழுதும் மாணவர்கள் இவரை நாடிய வண்ணமே இருப்பர். அநேக வேளைகளில் மாணவர் மத்தியிலே இவரைக் காண முடியும். இக்காட்சியானது தூய வெண்தாமரை மலர்களின் மத்தியில் கலைமகள் காட்சி தருவது போல இருக்குமெனக் கூறினால் மிகையல்ல.

இவ்வாறு கல்விப் பணியை ஆற்றும் வேளையில் பெண்களது ஒழுக்கத்திலும் அதிக அக்கறை காட்டினார். கடந்த முப்பது வருடங்களில் முக்கியமான வளர்ச்சிகளில் ஒன்றாகப் பெண்கள் உரிமைகளின் தோற்றம் இருக்கின்றது. உலகம் முழுவதும் மகளிர் அமைப்புக்களில் "பெண்களின் உரிமைகள்'' என்ற விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் சகல விடயங்களிலும் சமஉரிமை வேண்டும் எனப் போராட்டம் நடாத்துகின்றனர். பெண்கள் சமூகத்தில் உரிமையும் அங்கீகாரமும் பெற வேண்டுமாயின் அவர்களது கல்விநிலை உயர வேண்டும். அறியாமை எனும் அகஇருளில் இருந்து விடுதலை பெறவேண்டும். கல்வி கற்றலே பெண் விடுதலைக்கு அடிப்படையாக அமையும் என்பது அம்மையாரது நம்பிக்கையாக இருந்தது. "கல்லாதவரைக் களர்நிலம்'' என்பார் வள்ளுவர். "களர் அனையார் கல்லாதவர்". இவரை அடியொற்றிப் பெண் கல்வியின் தேவையைப் பாடும் பாவேந்தர் பாரதிதாசனும்

**''கல்வியறிவில்லாப் பெண்கள்**
**களர்நிலம் அந்நிலத்தில்**
**புல் விளைந்திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை**
**கல்வியை உடைய பெண்கள்**
**திருந்திய கழனி, அங்கே**
**நல்லறிவுடைய மாக்கள்**
**விளைவது நவிலவோ நான்''**

என்ற பாடலில் கல்வியறிவில்லாத பெண்களைக் களர்நிலத்திற்கு ஒப்பிட்டுப் பாடுகின்றார். கல்வியை உடைய பெண்களைத் திருந்திய கழனியாகக் காணுகின்றார். இத்தகைய கருத்தியலே அம்மையாரிடமும் காணப்பட்டது. பெண்கள் கற்க வேண்டும். அதனூடாகவே அவர்களது மடமைத்தனமும், நீசத்தன்மையும் மறையும் என நம்பினார். ''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி'' என்ற பாரதியின் வாக்கை வேதமாகக் கொண்டொழுகினார்.

## கண்ணீர்ப் பூக்கள்



**க**ல்லூரி முற்றத்தில்
விழுதெறிந்திருந்த மரம்
இன்று விழிமூடிக் கிடக்கிறது.

மூச்சுக்கு முந்நூறு தடவை
கொக்குவில் இந்து
உச்சரித்த உதடுகள்
மௌனித்துக் கிடக்கின்றன.

ஆளுமையின் சின்னமாய்
உலவிய தாயவள்
நீள் துயில் கொள்கிறாள்.

கொக்குவில் இந்துவின்
வரலாறே நிம்மதியாய்த் தூங்கு
ஆயிரம் ஆயிரம் பிள்ளைகள்
நிச்சயம் தொடருவர்
உன்வழித்தடம் ...

**கண்ணீர்ப் பூக்களுடன்**
**கொக்குவில் இந்துவின்**
**பிள்ளைகள்**

பெண் பிள்ளைகளை அரவணைத்து தாயினைப் போல் அன்புடன் கல்வியை உவந்து ஊட்டினார். கற்பித்தலுடன் அவர்களது தனிப்பட்ட ஒழுக்க நிலையைப் பேணுவதிலும் அதிக அக்கறை செலுத்தினார். மாணவிகள் அணியும் ஆடை முதற்கொண்டு அவர்களது அணுவளவான அசைவுகள் வரை அதிக அக்கறை காட்டினார். இவரது செயற்பாடுகள் பாடசாலையிலும் சமூகத்திலும் இவருக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்திருந்தன.

இவ்வாறு பெண்களது கல்வி நிலையில் அதிக அக்கறை காட்டியது மட்டுமன்றி சமயம், பண்பாடு, விழுமியங்களைப் பேணுவதிலும் தீவிர நாட்டமுடையவராக விளங்கினார். மாணவர்களிடையே நல்ல பண்பாட்டை விதைக்க வேண்டுமெனில் கல்வியினூடாக சமய நெறிகளையும் போதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். "சமூகம் என்ற நெய்யப்பட்ட துணியின் வலுவான இழைகளாக பாடசாலைகளும், கோவில்களும் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னப்பட்டுள்ளன'' எனப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி குறிப்பிடுவார். சமுதாயத் துணியின் வலுவையும் நெகிழ்வையும் தீர்மானிப்பதில் பாடசாலைகள் மிகவும் முக்கியமானவை. பள்ளிகள் மூடப்படும்போதும் இலக்குகள் தவறவிடப்படும்போதும் சமுதாயத் துணியில் ஓட்டைகள் விழ ஆரம்பிக்கின்றன.

சமுதாயக் குற்றங்கள் பெருகுகின்றன. வகைதொகையின்றிச் சிறார்கள் தம்மைச் சீரழித்து விடுகின்றனர். சமுதாயத்தில் இளம் குற்றவாளிகள் பெருகி வீட்டையும், நாட்டையும் அமைதியற்ற வலயங்களாக்கி விடுகின்றனர் எனக் குறிப்பிடுகின்றார். இதற்கு ஏற்ற வகையில் மாணவர்களிடையே ஆன்மீகம் சார்ந்த சமயக் கல்வியைப் பேணி நல்லறிவு பெற வைப்பதில் வழிகாட்டியாக முன்னின்று உழைத்தார். தான் கற்பித்த கணித, ஆங்கிலப் பாடங்களின் ஊடாகக்கூட சமயக்கல்வி விழுமியங்களைப் போதிக்க இவர் தவறவில்லை.

இவர் ஆசிரியராக இருந்த காலத்தில் கல்லூரியின் புறச்சூழல் வளர்ச்சிக்காகவும் முழுமையாக உழைத்தார். கல்லூரியை நாடி நாலாதிசையிலிருந்தும் மாணவர்கள் வந்துகொண்டிருந்தமையால் பாடசாலையை விரிவாக்க வேண்டிய தேவை அப்போது ஏற்பட்டது. இதற்கெனப் புதுக்கோவிலின் வடக்கேயுள்ள காணியைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை உணரப்பட்டபோது பணப்பற்றாக்குறை முக்கிய தடைக்கல்லாக விளங்கியது. இந்நிலையில் பல மாணவர்களை ஒன்றுதிரட்டி கலைநிகழ்ச்சிகளை அவர்களுக்குப் பழக்கி அதன் மூலம் நிதி சேகரிப்பதில் தீவிர நாட்டம் செலுத்தினார். கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களுக்கு சில ஆசிரியர்களுடன் தானும் சேர்ந்து மாணவர்களை அழைத்துச் சென்று கலைநிகழ்வுகளை நடாத்தி பெருமளவு நிதி சேகரித்தார். அதுவே கல்லூரியின் விரிவாக்கத்திற்கும் பல அபிவிருத்திகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு விடியலிலும் புதிதாக மலரும் மலரினைப் போல கணந்தோறும் தனது அறிவினைப் புதுப்பித்துக் கொள்வார். கல்விக் கொள்கைகள், கோட்பாடுகள், விதிகள், நியமங்கள் என்பவற்றுக்கு ஏற்ப தானும் நடந்துகொண்டதோடு ஏனைய ஆசிரியர்களும் அவ்வாறு நடந்துகொள்ள உதவினார். ''மாற்றமுறும் சமூக தேசிய சர்வதேச தேவைகளுக்கமைய உத்தம விளைதிறனுடைய தேசிய ரீதியிலான முதன்மைப் பாடசாலையாக மிளிர்தல்'' எனும் எமது கல்லூரியின் தூரநோக்கை அதன் எல்லையை எட்டுவதற்காகப் பாடுபட்டவர்கள், பாடுபடுகின்றவர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் முதன்மையானவராக அம்மையாரை நான் இனங்காணுகின்றேன்.

கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் அப்பால் சிறந்த நிர்வாகியாகவும் இவர் விளங்கினார். ஆசிரியப்பணியோடு கல்லூரியின் சிறந்த பிரதி அதிபராகவும் நீண்டகாலம் அர்ப்பணிப்போடு சேவையாற்றினார். நிர்வாக ரீதியாக இவர் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் மாணவர் நலன் சார்ந்தவையாகவே அமைந்திருக்கும். எதனையும் நிதானமாக ஆராய்ந்து தீர்க்கமாக இவர் எடுக்கும் முடிவுகள் மிகவும் சரியானவையாகவே அமைந்திருக்கும். அதிகம் பேசுவதில் நம்பிக்கை அற்றவராய் செயலில் தனது திறன்களை நிரூபிப்பவராக விளங்கினார். அவர் பேசும் வார்த்தைகள் கூட

**"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்"**

என்பதற்கிணங்க மாற்றுக் கருத்துக்கள் உள்ளவர்களையும் மாற்றவல்ல வசிய சக்தியாக விளங்கின. கனிவுடன் கண்டிப்பும் நிறைந்ததான அவரது நடவடிக்கைகள் அனைவரையும் தன்பால் கவர்ந்திழுக்கும் ஆகர்சிய சக்திகளாக விளங்கின. அறிவாற்றலும், அனுபவ முதிர்ச்சியும் தீட்சண்யமான கூரிய பார்வையும், நிமிர்ந்த கம்பீரமான தோற்றமும் வயது முதிர்ந்த வேளையில் கூட இவரை விட்டு விலகாதிருந்தமை இவரைக் காணுந்தோறும் எனக்குப் பெருவியப்பை ஏற்படுத்தும். தள்ளாத வயதிலும்கூட சிறுபெண் போல சுறுசுறுப்புடன் இவர் இயங்கியமையைக் கண்டு பலரும் வியந்துள்ளனர். குறிப்பாகச் சொல்வதானால்

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும்..."**

உடைய பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் வடிவமாக, அறந்திறம்பாச் செம்மை மாதராக அம்மையார் விளங்கினார்.

கல்லூரிக்கும் அப்பால் சிறந்த சமூகநேயமுள்ள பெண்மணியாகவும் இவர் துலங்கியமையை அறிய முடிகின்றது. பாடசாலையில் கற்ற ஒவ்வொரு பிள்ளையினதும் குடும்பப் பின்னணியைத் தெளிவாக அறிந்து வைத்திருந்தார். மாணவர்களது குறைநிறைகளைப் பெற்றோர்களுடன் கலந்து ஆராய்ந்து அவற்றைத் தீர்த்து வைப்பதில் அயராப்பணி புரிந்தார். சமூகத்தில் நிகழும் சுகதுக்கங்களிலும் பங்கெடுத்துத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அன்புத் தாயாக, சகோதரியாக, மகளாக சமூக உறவுநிலைகளைச் சரிவரப் பேணியிருந்தார். உற்றவர், மற்றவர், ஊரவர் அனைவரும் மனதார மதித்துப் போற்றத்தக்க வகையில் மாண்புடைய மாதரசியாக சிறப்புற்றிருந்தார் என்பதனை என்னுடன் இவர்பற்றி உரையாடும் உள்ளங்களின் வார்த்தைகள் மூலம் சரிவரப் புரிந்து கொண்டேன். "நல்ல பாடசாலைகள் இன்றி நல்ல குடும்பமோ, நல்ல சமூகமோ உருவாக முடியாது" என இவர் அடிக்கடி கூறும் வார்த்தைகள் பாடசாலை மீதான சமூகம் மீதான இவரது அபரிமிதமான அக்கறையை உணர்த்தும் உரைகல்லாக அமைந்துள்ளன.

இவ்வாறு சிறந்த பிரதி அதிபராக விளங்கி

பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் கூட கல்லூரியுடனான தனது தொடர்பை இறுகப் பேணியிருந்தார். பெருவிருட்சத்தைப் பற்றிப் படரும் கொடி தன் ஆயுள் உள்ளவரை அவ் விருட்சத்தைப் பற்றியே தனது வாழ்வைப் பிணைத்துக் கொள்வதனைப் போல அம்மையாரின் வாழ்க்கையும் கொக்குவில் இந்துவைச் சுற்றியே பிணைந்திருந்தது. நாட்டின் சூழ்நிலை கருதி 1993ஆம் ஆண்டு கனடா நாட்டிற்குக் குடிபெயர்ந்து சென்றாலும் கல்லூரியின் வளர்ச்சியே அவரது கனவாகவும், நனவாகவும் இருந்தது. தன்னோடு தன்னையொத்த அன்பும் ஆர்வமும் அக்கறையுமுள்ள பழைய மாணவர்களைத் தேடி ஒன்றிணைத்து கனடா மண்ணில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கினார். அதில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தலைவராக விளங்கியதுடன் இறக்கும் இறுதித் தருணம் வரை உபதலைவராக இருந்து தனது பிறவிப் பயனைக் கல்லூரி அன்னையின் காலடியில் சமர்ப்பித்திருந்தார். கனடா மண்ணிற்கும் அப்பால் பழைய மாணவர் சங்கத்தினர் ஜெர்மனியில் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட எடுத்த முயற்சி அனைத்திற்கும் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்து பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டார். கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் புலம்பெயர் நாடுகள் பலவற்றிலும் பரந்து விரிந்திருந்தாலும் அனைத்திற்கும் ஓர் உறவுப்பாலமாக அம்மையார் விளங்கிக் கல்லூரி அன்னையின் வளர்ச்சியிலும் மலர்ச்சியிலும் அன்பு மகளாகத் தன்னை அர்ப்பணித்து உழைத்தார். எமது பாடசாலையில் நூற்றாண்டு விழா சிறப்புற நிகழ்ந்த வேளையில் கூட தன்னால் இயன்ற உதவிகள் அனைத்தையும் சிறப்புறச் செய்ததோடு விழாவில் கலந்து கொண்டு கல்லூரி அன்னையின் மூத்தமகளாக இருந்து அன்னையின் நிகழ்வைக் கண்டு அகமகிழ்ந்தார்.

"தோன்றின் புகழொடு தோன்றுக..." எனும் ஐயன் வள்ளுவனின் வாய்மொழிக் கிணங்க இவ்வுலகில் புகழுடன் தோன்றிய அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

## சாதனைகள் சுமந்திட்ட சரித்திரம் ஆனவளே



கண்ணியமாய் வாழ்ந்திட்ட காருண்ய வடிவமே
கனவாகிக் கலைந்தே போனதும் ஏனம்மா?
நண்ணியே உமைநாடி நல்லறிவு பெற்றே
நலமாகப் பலர் வாழ நற்பணி செய்தவரே
புண்ணியமே நீரென்று புகழாரம் சூட்டிநின்றே
பொலிவோடு உமை வாழ்த்திப் புகழ்ந்திட்ட நாளை
எண்ணியே ஏங்குகிறோம் எம் இறைவன் அருளால்
இணையில்லா திருக்கழலில் அடைகவே சாந்தி.

வேதனைகள் தந்திட்டே வேறுலகம் சென்றதுமேன்
வேரிழந்த மரமாகி விழுதின்றித் தவிக்கின்றோம்
போதனைகள் பல செய்தே போதிக்கும் உள்ளமதால்
பேதமைகள் அகற்றியே பெரிதுவக்கும் அம்மையே
சாதனைகள் சுமந்திட்ட சரித்திரம் ஆனவளே
சந்தன மரமாகி சாந்துணையும் மணம் வீசி
சோதனைகள் பல தாண்டி சுடரிட்டாய்-நினதான்மா
சுகவாழ்வு பெற்றிடவே அடைகவே சாந்தி.

நேற்றுவரை நீர் இருந்தீர் நிஜமான உம்வாழ்வே
காற்றோடு கலந்ததுமேன் கனவாகிப் போனதுமேன்
ஆற்றிய சாதனைகள் அளப்பெரும் சேவையெல்லாம்
போற்றியே பொக்கிஷமாய் புதைத்திட்டோம் எம் நினைவில்
தோற்றுவதும் மறைவதும் தொல்லியல்பு ஆயிடினும்
தேற்றுதல் இல்லாமல் தெளிவின்றித் தவிக்கின்றோம்
ஏற்றிய விளக்கானீர்; ஏணியாய் எமைச்சுமந்தீர்
எம்மிறைவன் தாள் மலரில் அடைகவே சாந்தி.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**பாடசாலை அபிவிருத்திக் குழு**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**கொக்குவில்**

2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி மண்ணகத்தை விட்டு புகழுடம்போடு விண்ணகத்தில் இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார். அம்மையாரின் மறைவு எம்மவர்க்கு ஈடுசெய்யமுடியா பேரிழப்பாய் இந் நூற்றாண்டில் அமைந்துவிட்டது. கலைமகளின் அருட்கடாட்சம் பெற்ற தவப்புதல்வி இவ்வுலகை விட்டு மறைந்து சென்றாலும் அவர் ஆற்றிய மகத்தான பணிகளும் மாணவப் பரம்பரையும் என்றென்றும் மறையா. அவரது அளப்பரும் பணிகள் சிலைமேல் எழுத்துப்போல கல்லூரி வரலாற்றில் அவர் புகழை எப்போதும் நிலைக்க வைத்திருக்கும் என்பது திண்ணமே.

*




# மாநிலம் புகழும்
# மாதவச் செல்வி

திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கைப்பாதை கொக்குவில் இந்துக் கல்லூரி யினைச் செழுமைப்படுத்தியது என்று கூறும் அதே வேளை கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாரம் பரியங்களும் செயற்பாடுகளும் அமரரில் பெருமளவு செல்வாக்குச் செலுத்தியதெனக் கூறலாம். இவ்வாறு பல தசாப்தங்களாகக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையும், அமரரின் வாழ்க்கையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்பட்டன. பாட சாலை மேம்பட, அமரர் அவர்களும் தனது கல்வியில் மேம்பட்டு London B.A. பட்டதாரி யானார்.

அன்னார் 1927ஆம் ஆண்டு தனது மூன்றாவது வயதில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அரிவரியில் காலடி எடுத்து வைத்து 1937ஆம் ஆண்டு வரை இக்கல்லூரியில் மாணவியாக J.S.C வகுப்பு வரை படித்தார். அக்காலகட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி J.S.C. வகுப்பு வரை மட்டுமே வகுப்புக்களைக் கொண்டிருந்த காரணத் தினால் மேற்படிப்பிற்காக (Matriculation) இராமநாதன் கல்லூரிக்குச் சென்றார். அப்பரீட்சையில் தேர்ச்சி பெற்று 1942ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அக்காலப்பகுதியில் நான் அவரின் மாணவனாக இருக்கும் பாக்கியம் பெற்றிருந்தேன். அவர் ஒரு சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்து மாணவர்களின் நன்மதிப்பினைச் சம்பாதித்துக் கொண்டார். அன்றைய யாழ்ப்பாணப் பண்பாட்டுக்கமைய அவர் நடத்தைகள் அமைந்தன. அவர் வீட்டிலிருந்து பாடசாலைக்கு வரும்பொழுதாயினும் அல்லது வீடு செல்லும் பொழுதாயினும் அவரின் பார்வை கீழ் நோக்கியதாகவே இருக்கும். கீழ் வகுப்புகளில் எனது சக மாணவர்கள் அதிசயப்பட்டது அவரின் கூந்தலைப் பற்றித்தான். அவரது பின்னிய கூந்தல் முழங்கால் வரை நீண்டிருக்கும்.

திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியராக இருந்த ஆரம்ப காலத்தில் எமது பாடசாலையின் பௌதீக வளங்கள் மிகச் சொற்ப மாகவே இருந்தன. புதுக்கோவிலின் தெற்குப் புறத் தில் மட்டுமே இயங்கிய எமது பாடசாலை பௌதீக வளங்களைப் பெரிதாகக் கொண்டிருக்கவில்லை. ஒரு சிறிய மண்டபத்தையும், சில வகுப்பு அறை களையும் கொண்டதாக எமது பாடசாலை அமைந்தது. ஆசிரியர், அதிபர் ஆகியோரின் அர்ப்பணிப்பினாலும் கற்பித்தலில் அவர்களின் ஈடுபாட்டினாலும் பாடசாலையில் மாணவர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. எனவே பாடசாலையின் வளங்களைப் பெருக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதில் ஆசிரியர், அதிபர், சமூகம் ஆகியன இணைந்து செயற்பட்டதைப் பாடசாலையுடன் தொடர்புடை யோர் அறிந்திருப்பர். திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களும் தனது பங்கிற்கு வேறு சில ஆசிரியர்களுடன் இணைந்து ஒரு குழுவினைத் தயார் செய்து கொழும்பு போன்ற இடங்களுக்குக்


**அ.பஞ்சலிங்கம்**
முன்னாள் மாணவன்
ஆசிரியர்
பிரதி அதிபர், அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

கூட்டிச் சென்று கதம்ப நிகழ்ச்சிகளை நடாத்திக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியமை எம்மனதை விட்டு அகலாது.

கல்லூரியின் மேம்பாட்டில் ஈடுபாடு காட்டிய அதே வேளை மாணவிகளின் ஒழுக்கத்திலும் வளர்ச்சியிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளார். மாணவர்களுக்குச் சீருடை அவசியமென்பதை நன்கு உணர்ந்த அமரர் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்தினார். பலரின் எதிர்ப்பிற்கு மத்தியிலும் சளைக்காது தனது நிலைப்பாட்டில் உறுதியாக நின்று நிறைவேற்றி வைத்தார்.

அன்னார் பல அதிபர்களுடன் வேலை செய்த அனுபவம், கல்லூரியில் நீண்டநாள் அர்ப்பணிப்பு டன் கடமையாற்றியதால் சமூகத்திலும் பழைய மாணவர்களிடமும் அவர் சம்பாதித்த நன்மதிப்பு, அபாரமான ஞாபகசக்தி, உணர்ச்சி வசப்படாத செயற்பாடு, மாணவர், ஆசிரியர் சமூகத்தினரை மதிக்கும் தன்மை போன்ற பண்புகள் அவர் பொறுப்பான பதவிகளுக்குப் பொருத்தமானவர் என்பதனை என் உள்மனம் உணர்த்தியது.

1980ஆம் ஆண்டு எமது கல்லூரியில் பிரதி அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டது. திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் இப்பதவிக்குப் பொருத்தமானவர் போல் எனக்குத் தோன்றியது. இருந்த போதிலும் சில எதிர்மறையான சிந்தனைகளும் தோன்றின. ஒன்று, இதுவரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராக ஒரு பெண்மணி இருந்தது இல்லை. இரண்டாவதாக, திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் எனது ஆசிரியர். அவரை எனது பிரதி அதிபராக இருக்கும்படி எவ்வாறு கோர முடியும் என்பன போன்ற சிந்தனைகள் உருப்பெற்றன. இவ்வேளையில் எனது நண்பரும் ஆலோசனைகளைப் பரிமாறக் கூடியவருமான திரு.குமாரவேலு அவர்கள் எனது குழப்பத்தினை நீக்கித் தானாகவே அன்னாரை அணுகிப் பிரதி அதிபராகக் கடமையாற்றுவதற்குச் சம்மதிக்க வைத்தார்.

திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் அன்று முதல் இளைப்பாறும் வரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் முதல் பெண் பிரதி அதி பராகச் செயற்பட்டுத் தனது நியமனத்தை நியாயப் படுத்திக் கொண்டார். அவர் சமூகத்துடன் நல்ல உறவினை வளர்ப்பதற்குப் பெரும் துணையாக அமைந்தார். அவர் கல்லூரியின் தென்பகுதியின் நிர்வாகத்திற்கும் கல்விச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாகச் செயற்பட்டுத் தனது திறமையினை வெளிப்படுத்தியுள்ளார்.

அமரர் அவர்கள் இளைப்பாறிய பின்பும் கல்லூரியின் செயற்பாடுகளில் பெரிதும் கவனம் செலுத்தி வந்தார். அவர் கனடாவில் குடியேறிய போதும் கல்லூரியின்பால் தனது ஈடுபாட்டினை எள்ளளவும் குறைக்கவில்லை. கனடாவிலும் அவர் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து ஒரு சங்கம் அமைத்துக் கல்லூரிக்குப் பெருந்தொண்டாற்றியுள் ளார்.

அவர் கனடா சென்ற பின் மாதம் ஒரு முறையாவது என்னுடன் கதைக்க மறப்பதில்லை. நீண்ட நேரமாகக் கல்லூரி பற்றியும், அதன் சமூகம் பற்றியும் கருத்துப் பரிமாறிக் கொள்வோம். எமக்கிடையில் கருத்தொருமைப் பாடு எப்பொழுதும் காணப்படும். அதனால் அவருடன் உரையாடுவது மனதிற்கு ஆறுதலையும், அமைதி யையும் தரும். அன்னாரின் மறைவு எமது கல்லூரிக்கும், கல்லூரிச் சமூகத்திற்கும் என்றுமே ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அவர் மரணித்த போதிலும் அவரின் ஆசீர்வாதங்கள் என்றும் எம்மீது பொழிந்த வண்ணம் இருக்குமென்பது நிச்சயம். அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*

## கொக்குவில் இந்து அன்னையின் மூத்தமகள்

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது ஆன்றோர் வாக்கு.
கொக்குவில் இந்து அன்னையின் மூத்தமகள்
ஆனால் நின்சேவையின் மூலம் கொக்குவில் இந்துவிற்கே
அன்னையானவள் நீ!
பள்ளிப் பருவத்தில் கால் பதித்தீர்
பாங்குடனே பல கலைகள் கற்றிட்டீர்
கற்ற கல்வியினை, மற்றவர்க்கும் தந்திடவே
அவதரித்தீர் ஆசானாய்...
ஆற்றினீர் சேவையினை நாற்பத்திரண்டு ஆண்டுகள்!
நிற்கவில்லை உம் சேவை,
கடைசி மூச்சுவரை கொக்குவில் இந்து அன்னையின்
ஏற்றமே என் விருப்பு என்றுழைத்தீர்.
சேவைக் காலத்தில் கல்வி வரமளித்தீர்.
சேவையின் பிற்பாடு செல்வ வரமளித்தீர்.
நூற்றாண்டு விழாக்காண ஓடோடி வந்திட்டீர்.
எம் கல்லூரி அன்னையின்
ஏற்றம் கண்டு அகமகிழ்ந்தீர்.
இன்று எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர்! ஏங்குகிறோம் நாமெல்லாம்
இருந்தும் தயங்கோம், தாமதியோம்,
தடம் பதிப்போம் உம்வழியில்.

**– கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொக்குவில்**



# நினைவு ஏத்துவோம்!

1910ஆம் ஆண்டு... கொக்குவில் இந்துக் கல்லூரி தோன்றிய பொன்னாண்டு. 2010ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட ஆண்டு. கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மண்டபத்திலே தாயின் தவப்புதல்வி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் நூற்றாண்டு விழாவிலே உரையாற்றும் போது “இங்கிருப்பவர்களில் மிகவும் மூத்த பழைய மாணவி நான்தான்” என்று பெருமையுடன் கூறிய போது எல்லோருமே எழுந்து நின்று கை தட்டி ஆரவாரித்தார்கள். இன்று அவரது பிரிவால் கொக்குவில் இந்து சமூகமே இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது.

அன்னார் கல்வி கற்ற காலத்தில் அதிபர் முதல் ஆசிரியர்கள் யாவரும் அவரைச் சிறந்த மாணவியெனப் பாராட்டினார்கள். அக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பதென்பது கடினமானதாகும். அதுவும் கலவன் பாடசாலைகளில் கற்பதென்பது மிகவும் அபூர்வமானதாகும். எனவே அவரைப் பெண் கல்வியின் முன்னோடி எனலாம். 1942ஆம் ஆண்டு கல்லூரியின் ஆசிரியையாகப் பதவியேற்றார். மிகவும் இளவயதிலேயே ஆசிரியையாகிய இவர் கல்லூரியின் முதலாவது இலங்கைப் பெண் ஆசிரியையாவார். அன்று தொடங்கிய கல்விப்பணி வற்றாத ஜீவநதியாகப் பெருக்கெடுத்து ஓடியது. பல்லாயிரம் மாணவர்களுக்கு அறிவும், பண்பும் வழங்கியது. தமிழ், ஆங்கிலம், லத்தீன், கணிதம் என்பவற்றினை மிகத் திறமையாகக் கற்பித்தார். ‘‘கற்றதொழுகு’’ என்பது கல்லூரியின் மகுடவாக்கியமாகும். இந்த இலட்சியத்தினை மாணவர்களிடம் பதிய வைப்பதில் சிறந்து விளங்கினார். மாணவர்களைத் தாயினும் சாலப் பரிந்து வழிநடத்தினார். மாணவிகளை விளையாட்டுத் துறையில் ஊக்குவித்தார். அவர்கள் இசை, நடனம் போன்ற கலைகளில் பங்குகொள்ளப் பெரிதும் ஊக்கினார். மாணவர்களை முழுமையான மனிதர்களாக்க வேண்டுமென்பதில் மிகுந்த கவனமெடுத்தார். சக ஆசிரியர்களுக்குச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு வகைகளில் நிதி சேகரிக்கும்போது அவரது பங்கு மகத்தானதாக இருந்தது. அக்காலத்தில் நவராத்திரி நாட்களில் வீட்டிற்கு வீடு மாணவர்கள் சென்று பாடுவது குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்களை அழைத்துச் செல்லும் துணையாகவும், சேர்ந்து பாடும் ஆசிரியையாகவும் இருந்தார். இத்தகைய செயற்பாடுகளினால் கல்லூரிக்கும் கிராமத்திற்குமான உறவு பலமடைந்தது. 1947ஆம் ஆண்டு கல்லூரியின் கட்டிட நிதிக்காகக் கொழும்பிலும், மலைநாட்டிலும் மாணவர் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அப்போது அக் கலைக்குழுவில் சுகிர்த ரீச்சரின் பங்களிப்பு மகத்தானது.

வருடந்தோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள், தேர்த்திருவிழா போன்று மிகவும் கலகலப்பானவை. போட்டிகள் நடைபெறும் காலங்களில் மாணவிகளை மிகவும் அக்கறையுடன் கண்காணித்துக் கண்ணியம் காத்த காவல் தெய்வம்

**இ.மகேந்திரன்** (Canada)
முன்னாள் ஆசிரியர்
பிரதி அதிபர்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



என்றால் மிகையாகாது.

இவரது அயராத உழைப்பிற்கும், கல்லூரி விசுவாசத்திற்கும், உயர்ந்த சேவைக்கும் அளிக்கப்பட்ட பெருமையே பிரதி அதிபர் பதவியாகும். சிறந்த நிர்வாகி என்ற புகழும் இவரை வந்தடைந்தது.

1994ஆம் ஆண்டு கனடா பழைய மாணவர் சங்கத்தின் முதலாவது தலைவராக மணிமகுடம் சூட்டப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து நான்கு வருடங்கள் கடமையாற்றினார். பழைய மாணவர் சங்கம் அன்று முதல் இன்று வரை மிகவும் சிறப்பாக இயங்குவதற்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்தார். கல்விக் களஞ்சியமான அவர் கனடாவில் வாழும் பழைய மாணவர்களின் தகவல் களஞ்சியமெனலாம். அவரிடம் எந்தப் பழைய மாணவர்களினதும் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பெரும் பாலானவர்களின் குடும்ப விபரங்களையும் நன்கு அறிந்திருந்தார். இவருடைய நினை வாற்றல் மகத்தானது. வாழ்வின் இறுதி வரை நினைவாற்றல் மிக்கவராக, மிகுந்த தன்னம்பிக்கையுடையவராக இருந்தார். அவருடைய பேச்சில், மூச்சில் கல்லூரி பற்றிய சிந்தனையே மேலோங்கியிருந்தது.

சிறந்த மனையாளாக, நன்மக்களின் தாயாக, பாசமிகு அன்னையாக விளங்கினார். இவரது பிள்ளைகள் சிறந்த கல்வியாளர்களாகவும், உயர்ந்த குணவியல்புகளைக் கொண்டவர்களாகவும் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகமெங்கும் பரந்து வாழும் எமது கல்லூரி மாணவர்கள் இவரைப் போற்றி மகிழ்ந்தார்கள். 2011ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் பிரதம விருந்தினராகிப் பெருமை பெற்றார். இலண்டன் வாழ் பழைய மாணவர்கள் இவரைக் கௌரவித்தார்கள். இவர் அவுஸ்திரேலியா சென்றபோது அங்கு வாழும் பழைய மாணவர் களால் பாராட்டப்பட்டார்.

**எமது கல்லூரியின் வரலாறு படைக்க**
**உதவியவர்**
**தாமே வரலாறாகி விட்டார்.**
**பெண்மைக்குப் பெருமை சேர்த்தவர்**
**ஆசிரியப் பணிக்கு அணிகலனாகியவர்**
**கல்லூரியை உயிராக நேசித்தவர்**
**அன்பிலும், பண்பிலும் மேலானவர்**
**வானவர்கள் வாழ்த்தும் வானுறையும்**
**தெய்வமாகி விட்டார்.**

*



# கல்லூரி மகுடத்தின் மாணிக்கக் கல்லே...

வரலாறு ஒன்று இன்று
வாய்மூடிக் கிடக்கிறது – எமக்கு
அறிவூட்டிய கல்வித்தாய் இங்கு
கண்மூடித் துயில்கின்றாள்.
எங்கள் கல்லூரியின் எழுச்சிக்காய்
எண்பத் தெட்டு அகவையிலும்
அயராது உழைத்து வந்த ஆசிரியை
1994இல் கனடா பழைய மாணவர் சங்கத்தை
உருவாக்கி அதன் தலைவராய்
ஆண்டுகள் நான்கு அணிசேர்த்து
இன்றுவரை அச் சங்கத்தின்
பிரதித் தலைவராய் பிரகாசித்த எம் தலைவி
ஆவி துறந்து இங்கு அமைதியாய்த் தூங்குகிறாள்
கொக்குவில் இந்துக் கல்லூரியின்
மகுடத்தில் ஓர் மாணிக்கக்கல்.
அமைதியாய்த் தூங்கும் எங்கள் ஆசிரியையைக்
காணுகையிலே எங்கள் கண்களிலே
காட்டாறு பாய்கிறதே – அன்பினால்
எமை எல்லாம் அமைதியாய் வழி நடத்திய
கலங்கரை விளக்கு இன்று
கண்மூடிக் கிடக்கிறதே!
கல்லூரியின் மாணவியாய்
பத்து ஆண்டுகள் – பிரியமுள்ள
ஆசிரியராய் – பிரதி அதிபராய்
நாற்பத்திரண்டு ஆண்டுகள் பல்வேறு நிலைகளில்
பார்போற்ற வாழ்ந்த பாசமிகு தாயார்.
எங்கள் அன்பை எல்லாம் சுமந்து செல்லும்
ஆசிரியை இன்று எங்களோடு இல்லை என்றாலும்
காற்றுள்ளவரை – கனமழை பொழியும் வரை
வாழ்வார் எம் நெஞ்ச மெல்லாம்
வாழும் அவர் நாமம் – அவர் வழி நடப்போம் காலமெல்லாம்.

**– உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்**
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**கனடா**



# நான் அறிந்த சுகிர்தம் ஆசிரியை

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் மிகவும் காத்திரமான இடத்தைப் பிடித்துக் கொண்ட ஆசிரியர்களுள் ஒருவராக அமரர் திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் திகழ்கின்றார். இவர் இக்கல்லூரியிலேயே மாணவியாக இணைந்து கல்வி பயின்று, ஆசிரியப் பணியாற்றி, இறுதியில் பிரதி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற பெருமைக்குரியவராவார். அதுமட்டுமன்றி, இக்கல்லூரியில் பணியாற்றிய 9 அதிபர்களின் சேவைக் காலங்களில் பணியாற்றிய சிறப்பிற்குரியவர். மூன்று தலைமுறையினருக்குக் கல்வி போதித்த பேறு பெற்றவர்.

கல்வியில் லண்டன் கலைமாணிப் பட்டம் (B.A.London) பெற்றவர். தமிழ், ஆங்கிலம், லத்தீன் பாடங்களைப் பட்டப் படிப்பிற்காகக் கற்றவர். கணித பாடத்திலும் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியையாகத் திகழ்ந்ததுடன், நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகளிலும் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார். இவர் ஒரு சகலதுறை ஆசிரியையாக விளங்கியமையால் மாணவச் சமூகத்தின் மத்தியில் நல்லாசிரியையாக விளங்கினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கென உரித்தான கல்லூரிப் பாரம்பரியத்தை வளர்த்தெடுத்த பெருமைக்குரிய ஆசிரியராக விளங்கியவர். கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்திலேயே கலவன் பாடசாலையாக விளங்கியதுடன், சிறந்த கட்டுக்கோப்புடன் செயற்பட்டு வருவதும் யாவரும் அறிந்ததொன்றே. இத்தகைய கட்டுக்கோப்பினை, பாரம்பரியத்தினை, கலாசாரத்தினை நெறிப்படுத்திய பெருமை சுகிர்தம் ஆசிரியைக்கும் உரித்தாகும்.

நீண்டகாலம் ஆசிரியையாகப் பணியாற்றியமையால் பெற்றோர் மத்தியிலும், கொக்குவில் சமூகத்தினர் மத்தியிலும் நன்கு அறிமுகமானவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கியவர். பிள்ளைகளின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணும் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டவர். இவர் பிள்ளைகளின் நல்ல நடத்தைக்காகவும் சிறந்த பழக்கவழக்கத்திற்காகவும் வழிகாட்டியவர். அதற்கான ஆலோசனைகளைக் கல்லூரி நிர்வாகத்திற்கு வழங்கிய நல்லாசிரியை. பிள்ளைகளின் நடத்தைகளை மிக அவதானமாகக் கூர்ந்து கவனித்து முரண்பாடுகள் காணப்படுமிடத்து அவ்வப்போது பரிகாரம் காண்பதற்கான வழிவகைகளையும் மேற்கொண்டவர்.

அன்றைய ஆசிரியர்களினால் எமது கல்லூரி மாணவருக்கென ஆக்கித்தந்த சிறந்த கட்டுக்கோப்பு, நடத்தை, கலாசாரம் என்பவை இன்றும் எமது கல்லூரியில் பேணப்படுகின்றதென்றால் அதற்குக் காரணம் சுகிர்தம் ஆசிரியையிடம் பயின்ற மாணவிகள் இப்போது ஆசிரியைகளாகப் பணியாற்றுகின்றமையேயாகும்.

சுகிர்தம் ஆசிரியையின் சிறந்த ஆளுமைக்கு அவரது கல்வித்தகைமை, கற்பிக்கும் திறன் என்பவை மட்டுமன்றி, அவருடைய கலை அம்சம்

பொ.கமலநாதன்
முன்னாள் மாணவன்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



பொருந்திய தோற்றம், தமிழ்ப்பெண்களின் இலக்கணத்திற்கமைவாக அணியும் உடை, என்பவையும், ஆடம்பரமின்றி மிக அடக்கமாகவும், மெதுவாகவும் பேசும் இயல்பும் காரணங்களாக அமைந்திருந்தன. அவரிடம் காணப்பட்ட மேற்படி பண்புகளினால் மாணவர்கள் இவர் மீது மிக்க விருப்புடையவர்களாக இருந்தனர். அது மட்டுமன்றி ஒரு தாய் என்ற ஸ்தானத்திலும் மதித்தனர்.

சுகிர்தம் ஆசிரியை பணியாற்றிய காலத்திலே நானும் 1958 முதல் 1964 வரை கொக்குவில் இந்துவிலே கல்வி பயின்றேன். ஆனால் எனது துர்ப்பாக்கியம் இவரிடம் கல்வி பயிலும் பாக்கியம் எனக்குக் கிடைக்காது போனது. நான் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராகப் பதவியேற்ற பின்னர் பல தடவைகள் தொலைபேசி மூலம் என்னுடன் கதைத்துள்ளார். அவருடைய குரல் மிகவும் இளமையானவர்களின் பேச்சுக்குரல் போன்று இருக்கும். சிரித்துச் சிரித்துக் கதைப்பார். கல்லூரிச் செயற்பாடுகள் பற்றி விசாரிப்பார். நல்லவற்றைப் பாராட்டுவார். நல்லவற்றுக்கான ஆலோசனைகள் கூறுவார். பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரால் நடாத்தப்பட்ட கலைவிழாவில் பங்கு கொள்வதற்காக நான் அங்கு சென்றிருந்த வேளை சுகிர்தம் ஆசிரியையும் வருகை தந்திருந்தார்.

நீண்ட இடைவெளியின் பின் அவரை அங்கு நேரில் காணக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. மீண்டும் எமது கல்லூரி நூற்றாண்டு விழாவின் போது கொக்குவில் மண்ணில் அவரைக் காணும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. அவரிடம் கல்வி பயின்ற பலரும் அவரைச் சூழ்ந்து வரவேற்று சுகம் விசாரித்துப் பேசிக் கொண்டமை எமது மனக்கண் முன் நிலைத்திருக்கின்றது. அவர் ஆசிரியையாகப் பணியாற்றியபோது என்ன தோற்றத்துடன் இருந்தாரோ அதேபோன்று இன்றும் இருக்கின்றார் எனப் பேசிக்கொண்டோம். ஆசிரியை அவர்கள் தனக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் ஐம்பது வருடங்களுக்கும் மேலான தொடர்பு இருந்ததைப் பெருமையாகக் கூறி மகிழ்ந்தார். இத்தொடர்புதான் அவரது இறுதி மூச்சு வரை கொக்குவில் இந்துக் கல்லூரி அவரது உள்ளத்தில் இடம் பிடித்திருந்ததற்குக் காரணமென்று கூறலாம்.

ஆசிரியை அவர்களின் பிற்காலம் கனடாவில் அமைந்திருந்த வேளையிலும் கல்லூரிக்காகப் பல உதவிகளைச் செய்திருந்தார். பழைய மாணவர் சங்க கனடா கிளை மூலம் பல உதவிகளைப் பெற்றுத் தந்துள்ளார். அதேபோன்று தனது பிள்ளைகள், மருமக்கள் ஆகியோரையும் கல்லூரிக்கு உதவுவதற்கு வழிகாட்டியுள்ளார். இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்திற்குப் பெருமளவு நிதி கிடைக்கப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆசிரியை அவர்கள் உயர்வான பெயருடனும், புகழுடனும் திகழ்ந்தமைக்குக் காரணமாக அமைந்தவர்கள் இவரது வாழ்க்கைத் துணைவர் பொறியியலாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களும், பிள்ளைகள், மற்றும் மருமக்களுமாவர். இவரது குடும்பத்தினர் கல்லூரி மாணவர்களின் கல்வி, விளையாட்டு என்பவற்றின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் பரிசுகள் வழங்குவதற்காகப் பெருமளவு நிதியினை முதலீடு செய்து அதன் வட்டி வருவாயைப் பயன்படுத்த வழி செய்துள்ளனர்.

'நல்லாசிரியர்கள் இறப்பதில்லை' என்ற கூற்றுக்கு இலக்கணமாக எமது ஆசிரியை விளங்குகின்றார். பொதுவாக ஆசிரியப் பணி தவிர்ந்த ஏனைய பணியாற்றியவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் அவர்கள் நினைவுகூரப்படுவது மிகவும் அரிதாகவே காணப்படும். ஆனால் நல்லாசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் என்றுமே நினைவுகூரப்படுவர். அந்த வகையில் சுகிர்தம் ஆசிரியை அவர்கள் விதியின் பலன் இறந்தாலும் அவர் என்றுமே எம் எல்லோர் உள்ளத்திலும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்.

*

## Last of
## "THE OLD BRIGADE"

Kokuvil Hindu College (Old Students' Association) Colombo conveys its heartfelt condolences on the demise of their beloved teacher in Canada on September 8, 2011. Like our former principals V.Nagalingam, S.Handy Perinbanayagam and C.K.Kanthaswami, Mrs.Sukirthalakshmy Supramaniam, former vice principal was a legend in the history of Kokuvil Hindu College. Her entire life span of working life was dedicatedly devoted to building up Kokuvil Hindu College as one of the leading institutions in the Jaffna peninsula of Sri Lanka. To crown it all she travelled down to Jaffna and graced the centenary celebrations of the school with her presence in July 2010 and cheerfully mixed up with most of her past pupils and colleagues. She was amidst Kokuvilites in Canada even on her final day, when she was struck down with an ailment that led to her eventual passing away. Her memory will ever remain green amongst her students, teachers and all others at Kokuvil and inspire them.

**Kokuvil Hindu College**
**(Old Students' Association) Colombo**




# கொக்குவில் இந்துவின் "சுகிர்த ரீச்சர்"

**முதற்சந்திப்பு**

நான் அப்பொழுது ஆரம்பப் பாடசாலையில் கற்றுக்கொண்டிருந்த வேளை, என்தந்தை அமரரான 'ஷேக்ஸ்பியர்' நாகலிங்கத்துடன் அருகில் நின்றிருந்த வேளை ஒய்யாரமான உடலமைப்பு, பெண்மைக்கே உரித்தான பண்புடன் அழகாக சேலை உடுத்திருந்த ஓர் இளம் ஆசிரியை புன்னகை ததும்பும் முகத்துடன் இனிய கணீரென்ற ஓசையுடன் "Good Morning Sir" என்று காலை வணக்கம் கூறினார். நான் அப்பாவுடன் கொக்குவில் இந்துக் கல்லூரியை அளப்பது போல் என்னை மறந்து போய் எங்கோ என்நினைவு செல்ல நானும் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தேன். ரீச்சரின் குரல் கேட்டதும் உடனே என் கவனமும் பார்வையும் அவர் பக்கம் திரும்பியது. நான் கண்டது ஓர் அற்புதக்காட்சி. அதுதான் நான் அவரை முதல் முறை பார்த்தது. நல்ல அளவான உயர்ந்த மெல்லிய உடலமைப்பு, அமைதி தவழும் முகபாவனையுடன் அடக்க ஒடுக்கமான ரீச்சரைக் கண்ணுற்றேன். இக்கோலத்தின் கவர்ச்சியுடன் இனிய குரல் எனும் காந்தமும் என்னைக் கவர்ந்தது. அக்கணத்திலிருந்தே அவர்பால் கவரப்பட்டேன். இக்காட்சியை எனக்கு எழுத்துக்களால் வரைய முடியவில்லை. இவ்வாறு மெய்சிலிர்த்து மெய்மறந்து போயிருந்த வேளை மேலும் அவர் சில கேள்விகளை என்னிடம் கேட்கத் தொடங்கினார். வழமையாக நான் அப்பாவுடன் ஏமலாந்திக் கொண்டிருக்கும் பொழுது எனது நண்பர்களன்றி என்னிலும் வயதில் மூத்தவர்கள் கேள்வி கேட்டால் எனக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். ஆனால் அன்று நான் மிகவும் பயபக்தியாகவும், அடக்க ஒடுக்கமாகவும் சந்தோசமாகவும் விடையளித்தேன் (இது அவர் முதல் சந்திப்பின்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று உணர்த்தியுள்ளார் என இப்பொழுது நினைத்துப் பார்க்கின்றேன்). அவரும் உடனே என்னை முதுகில் தட்டி "கெட்டிக்காரி இப்படித்தான் இருக்க வேண்டும்" என அகமகிழ்ந்து ஒரு சிரிப்புச் சிரித்தார். அந்தச் சிரிப்பு இன்னும் என் அகக்கண்ணில் உள்ளது. இது முடிந்ததும் ரீச்சர் எம்மிடம் இருந்து விலகிப் போகும்பொழுது அவரால் கவரப்பட்ட நான் அவர் மறையும் வரை பார்த்துவிடுவோமே என்ற எண்ணத்துடன் திரும்பினேன். இது இன்னொரு காவியக்காட்சி. நீண்ட அடர்த்தியான அழகான கருங்கூந்தல் அல்ல. கரும்பின்னல். இப்படியான ஒரு நீளமான பின்னலைக் கண்டதும் அதுதான் முதற்தடவை. வேறெந்த ரீச்சரைப் பற்றிய நினைப்போ இல்லாத, மதிப்போ விளங்காத நான் கண்டதே காட்சி கொண்டதே கோலமாக அவருக்கு என் மனதில் ஒரு தனியிடம் அளித்துவிட்டேன். இக்காலகட்டத்தில் அவர் எனக்குப் படிப்பிக்கத் தொடங்கவில்லை. அவர் என்னைச் சந்திக்கத் தேவையில்லை. நான் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு வகுப்புக்கு வெளியே போய் அவர் எங்கேயிருந்தாலும் கண்டு அவரின் புன்னகை பெற்று பின் அவரை வலம் வருவேன் (அந்தப்


**● திருமதி.**
**நித்தியலட்சுமி குணபாலசிங்கம்**
முன்னாள் மாணவி
ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி

பின்னல் அழகை நயப்பதற்கு). இதை அவர் நன்குணர்வார். அப்பொழுதெல்லாம் சிரித்துக் கொண்டே (அவரின் சிரிப்பே ஒரு தனிரகம்) "ஒவ்வொருநாளும் பின்னலினைப் பார்க்க என்ன கிடக்குது?" என்று ஒரு பெருமையுடன் வினவுவார். சிறு பிள்ளைகள் மனமறிந்து அவர்கள் மனம் மகிழ நடந்த ஓர் உத்தமி எனலாம்.

## அன்னாரின் மாணவியாக

கொக்குவில் இந்துவில் சுகிர்த ரீச்சரிடம் ஒரு கிழமை கல்வி கற்ற மாணவர்களே அவரின் மாணவர் நாம் எனப் பெருமை தட்டும் சந்தர்ப்பத்தில் நான் அவரிடம் நீண்டகாலமாகக் கல்வி கற்ற ஒரு மூத்த பழைய மாணவி என்று கூறுவதில் மனமகிழ்வும் பெருமிதமும் அடைகின்றேன். சிறிய வயதிலிருந்தே அவரால் கவரப்பட்ட நான் Form I, Form IIஇல் அவரிடம் கல்வி பயிலத் தொடங்கியதும் மிகவும் சந்தோசப்பட்டேன். எங்களுக்கு ரீச்சராக இருந்து எங்களுக்கு கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தியதோடு ஆக்கமும் ஊக்கமும் அளித்தமையால் அவரிடம் கல்வி பயின்ற எல்லா மாணவ மாணவிகளும் பலதுறைகளிலும் நம்நாட்டில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் அவரின் சேவையையும் கல்லூரியின் புகழையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

சுகிர்த ரீச்சரின் திறமைகள் இவைதான் என்று கூறிக்கொள்ள இயலாதவை. அவர் ஒரு குறிப்பிட்ட பாடத்தைத்தான் கற்பிக்கும் திறமையுடையவர் அல்ல. கணிதம், சமயம், உடற்பயிற்சி, சங்கீதம், நடனம் ஆகிய எல்லாப் பாடங்களையுமே கற்பிக்கும் திறனுடையவர். அவர் இளம் ஆசிரியையாக இருந்த காலத்தில் பாடசாலை, இந்துக் கல்லூரி முகாமைச் சபையினால்தான் நிர்வகிக்கப்பட்டு வந்தது. எனவே ஒவ்வொரு பாடமும் கற்பிப்பதற்குத் தனியான ஆசிரிய ஆசிரியைகள் நியமிக்கப்படாத காலம். இவர் எனக்கு ஆங்கிலமும் கணிதமும் கற்பித்தவர். நாங்கள் எல்லாம் சரியான குழப்படி. ஏனைய ஆசிரியர் சிலர் பிரம்புடன்தான் வகுப்பறைக்குள் நுழைவர் (எங்களுக்குப் பயந்தல்ல. எங்கள் குழப்படிக்குப் பயந்துதான்).

ரீச்சர் வகுப்பறையுள் தன்னம்பிக்கை தாண்டவமாட இன்முகத்துடன் நுழைவார். வடிவான எழுத்து. ஆங்கிலம், தமிழ் இரண்டும் அவ்வாறே. ஒன்றும் விளங்கவில்லை என்று கேட்க வேண்டிய தேவையில்லை. நாங்கள் பக்கத்திலிருப்பவருடன் கதைத்தால் "விளங்காட்டால் என்னட்டைக் கேட்க வேண்டியதுதானே'' என அன்புடன் கூடிய அதட்டலாகக் கேட்பார். இதன் அர்த்தம் எனக்கு அந்த சிறிய வயதில் விளங்கவில்லை. பின்புதான் அவரது தனி உபாயத்தை விளங்கிக் கொண்டேன்.



அதாவது நீங்கள் தேவையில்லாமல் கதைக்கக்கூடாது. விளங்காவிட்டால்தானே கதைக்க வேண்டும். அதை என்னிடம் கேட்கலாமே என்பதை எல்லாம் கோவிக்காமல் பேசாமல் புரியவைத்தார். அவர் ஒருநாளும் பிரம்பை உபயோகித்தது எனக்குத் தெரியாது. அமைதியாக அன்பான வார்த்தைகூறி அழகாக வகுப்பில் அனைவரும் விளங்கக்கூடிய வகையில் படிப்பிப்பார். Form Iஇல் எனக்கு கணிதமும் ஆங்கிலமும் கற்பித்தார். நான் அப்பொழுது வகுப்பில் நல்ல குழப்படிதான். மற்ற ஆசிரியர் பிரம்பால் அடிப்பார்கள் அல்லது வெளியே பிடித்துவிடுவார்கள். ஆனால் ரீச்சரின் தண்டனை வித்தியாசமானது. வகுப்புக்கிடையே "நித்தியலட்சுமி என்ன நடக்குது" என்று ஒரு கேள்விதான். நான் மட்டுமல்ல என்னை அவிவேக பூரண குருவாகக் கொண்ட என் சீடர் குழாமும் உடனே அமைதியாகிவிடுவர். எனக்கு ஆங்கிலம் வரும்.

எழுத்துப்பிழை, கருத்துப்பிழை விட்டால் ஷேக்ஸ்பியர் இப்படியோ எழுதினவர்? சொன்னவர்? என்று மட்டும் கேட்டுப் படிக்க வைத்துவிடுவார். ஒருபொழுதும் என்னைப்பற்றி என் தகப்பனாருக்குப் புகார் செய்தது கிடையாது. சிறுவயதில் அவர் போட்ட அத்திவாரம்தான் எனது ஆங்கிலமும், கணிதமும். எனக்கு ஆங்கிலம் நல்லாக வரும். ஆனால் ஒருநாள் நான் I'm sure என்பதற்கு I'm sour என்று எழுதிவிட்டேன். இதற்கு அவரின் தண்டனை இதுதான். "Principal இப்படி எழுத விடுவாரோ?'' என்று கேட்டு வகுப்புக்கு வாசித்துக்காட்டித் தானும் சிரித்து வகுப்பு முழுவதும் சிரிக்க வைத்துவிட்டார். ''அன்று விட்டேன் கொண்டலடி" என்றதற்கிணங்க அதற்குப்பின் ஒரு மறுமொழியும் திருப்பி வாசிக்காமல் கொடுப்பதில்லை. அவரின் அத்திவாரத்தை இன்று இந்த வயோதிப வயதிலும் நானும் கையாள்வதுடன் என் மாணவர்கள் எல்லோருக்குமே புகட்டியுள்ளேன். இன்றும் நன்றியுடன் என் அன்புக்கினிய ரீச்சரை நினைக்கின்றேன்.

அவரைப்பற்றி எழுதுவதானால் 'volumes' ஆக புத்தகமே எழுதிவிடுவேன் போலும். கணிதம் எனக்கு மட்டுமட்டுதான். ஆனால் சுகிர்த ரீச்சர் வகுப்பில் என்னை ஒரு மேதையாகத்தான் கணித்துக் கொண்டார். ஏனெனில் எனது பிழையான கணக்குகளுக்குப் பிழை போட்டுத்தந்து என்னைக் கவலைப்படுத்துவதில்லை. என்னைக் கூப்பிட்டு விடையைத் திருத்திவிட்டு என்னை கணக்கைத் திருப்பிச் செய்துகொண்டு வரச் சொல்லி சிவத்த மையால் சரிபோட்டு correct பண்ணித்தருவார். இந்த அணுகுமுறையால் வகுப்பில் அனைவரையும் சித்தியடையச் செய்துவிடுவார். இந்த அணுகுமுறையைத்தான் இந்த நூற்றாண்டில் கல்வியியலாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். அதாவது பிள்ளை பிழை என்று உணர்த்தாத வகையில் திருத்திவிட வேண்டும். இதை அந்தக்காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைமுறைப்படுத்திய பெருமை அவருக்குண்டு. இதனால்தான் ஒரு Simple Interest காணச் சொன்ன கணக்குக்கு Compound Interest கண்டு விடை எழுதிக்கொடுத்த நானும் ஒரு கணித மேதை என்ற நினைவுடன் வகுப்பை விட்டு பெருமிதத்துடன் வெளியேறினேன்.

அமரரான திருமதி.சுப்பிரமணியத்தின் சகபாடியாகவும் சிநேகிதியாகவும் இருந்து அவருடன் தோளுடன் தோள்கொடுத்து கொக்குவில் இந்துவின் வளர்ச்சிக்கு உழைத்த திருமதி.சரஸ்வதி பாக்கியராசா சங்கீத ஆசிரியராக வரமுன் சுகிர்த ரீச்சர்தான் எங்களுக்கு Singing படிப்பித்தவர். நன்றாக இனிய குரலில் பாடுவார். அவர் பாடுவதைக் கேட்டுக் கொண்டிருக்கத்தான் விருப்பம். ஆனால் அவர் விடமாட்டார். நாங்களும் படிக்கத்தான் வேண்டும். நான் ரசித்துப் படித்துப் பாடமாக்கிய ஒரே ஒரு உருப்படி "கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை" என்னும் பாடல்தான். நன்றாக எல்லோரும் நயக்க இனிமையான குரலில் பாடும்பொழுது எனக்கு அவரின் பின்னலைப் பின்னே நின்று இழுத்துப் பார்த்தால் என்ன என்று தோன்றும். பின்னலை இழுத்துப்போட்டு நான் தப்பியிருக்க முடியுமா?

இப்பொழுது எனது பழைய மாணவர்கள் எல்லோரும் என்னை அதற்கு வாருங்கள், இதற்கு வாருங்கள் என்று கூப்பிட்டால் 'நான் ஒரு மூத்த பழைய மாணவி நாட்டில் மிஞ்சியிருக்கின்றேன் போலும்' என்று கூறி என்னை மன்னித்து விடுங்கள் என்று கேட்டால் 'நாங்கள் உங்களைத்தான் சுகிர்த ரீச்சருக்குப் பதிலாக இங்கு வைத்திருக்கின்றோம்' என்று சொல்வார்கள். அவர்கள் என் மாணவர்கள் தானே. என் பலவீனத்தை நன்குணர்ந்தவர்கள். எனக்கு சுகிர்த ரீச்சரைப் போல வர நல்ல விருப்பம் என்று அவர்களுக்குத் தெரியும். நானும் அவரைப் போல வரலாம்தானே என்ற நினைப்பில் வெயிலும் பாராது மழையும் பாராது நேரமும் பாராது வெளிக்கிட்டு விடுவேன். அவரைப் போல வர எனக்கு நல்ல ஆசை. ஆனால் ஏணி வைத்தாலும் வரமுடியாது.

அவரின் பட்டறிவு, பகுத்தறிவு, படிப்பறிவு தனித்துவமானது. அத்துடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதற்கு மேலாக கொக்குவில் இந்து அன்னை மீது அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

## கல்லூரிக்கு ஆற்றிய சேவைகள்

கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் பின்னிப் பிணைந்த பெயர் சுகிர்த ரீச்சர். அவர் கல்லூரி அன்னைக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. வார்த்தைகளால் வருணிக்க முடியாதவை. ஒருங்கிணைந்து வளர்ந்த பெண்பிள்ளைகள் Half-Saree உடுக்க வேண்டும் என்ற மரபு கொண்டுவரப்பட்டது. மாணவர்களது ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாடு, சமயப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை சுகிர்த ரீச்சர் மாணவர்கள் மத்தியில் அன்பாகக் கூறி திணிக்காது, சிதைக்காது, தண்டிக்காது நடைமுறைப்படுத்திய விதம் போற்றுதற்குரியது.

கல்லூரியில் ஆண்பிள்ளைகளையும், பெண் பிள்ளைகளையும் ஒருங்கிணைத்து வைபவங்களில் தேவாரம், பண்ணிசை ஆகியவற்றை ஓதும் கலாசாரத்தை ஏற்படுத்தினார். கல்லூரி கீதம் நன்கு இசைக்கவும் மாணவர்களைப் பயிற்றுவித்தார்.

கல்லூரியில் சைவத்தையும், தமிழையும் ஒருங்கே வளர்ப்பதில் தொண்டாற்றியுள்ளார். சிவராத்திரி

முன்பு இரவு நிகழ்வாகவே மிகச்சிறப்பான நிகழ்ச்சிகளுடன் கிராம மக்கள், பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் பங்குபற்றும் பெருவிழாவாக மிக விமரிசையாக இடம்பெற்றது. இதற்கு அவரின் பங்களிப்பு மெச்சத்தக்கது. இரவு வேளைகளில் பெண்பிள்ளைகள் எல்லோருக்கும் தாயாக விளங்கினார். இவ்வாறே கல்லூரியின் திருக்கேதீஸ்வர விழாவுக்கும் ஆசிரியர், மாணவர்கள் எல்லோரும் அவரைச் சூழ்ந்தே ஒருங்கிணைந்து செயற்படுவர். பெருந்தொகையான பெண்பிள்ளைகளையும் அழைத்துச் சென்று கோலாகலமாக கல்லூரி விழா இடம்பெறும். கொக்குவில் இந்துவின் தீர்த்தக்காவடி ஒரு தனி அழகானதாக விளங்கும். அதிபர், ஆசிரிய ஆசிரியைகள், மாணவ மாணவிகள் கல்லூரியின் ஏனைய உத்தியோகத்தர் எல்லோரும் வரிசையில் தீர்த்தக்காவடி எடுக்கும் கண்கொள்ளாக் காட்சியை எல்லோரும் பார்த்து ரசிப்பர். இதனை ஒழுங்கு செய்வதில் ரீச்சரின் ஊக்கம் சிறப்பானதாகும். ரீச்சருக்கு நீச்சலும் தெரியும். பாலாவியில் அவர் நீச்சலடிப்பதை நான் பார்த்து வியந்துள்ளேன்.

கல்லூரி பரிசளிப்பு விழாக்களையும் எவ்வித குறையுமின்றி ஒழுங்கு செய்வதில் உதவி புரிந்தார். வகுப்பாசிரியர்கள் பரிசில் பெறும் மாணவர்களின் பட்டியலை சரியாகத் தயாரிப்பதில் உதவி புரிந்து விழா சிறப்புற அமைய பெரிதும் உதவினார். விழா ஆரம்பம் தொடங்கி முடியும் வரை அவரது கண்காணிப்பு இடம்பெறும்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் அவரது பங்களிப்பு குறிப்பிட வேண்டியதாகும். செல்லையா இல்லப் பொறுப்பாசிரியராக இருந்தபோதும் சகல இல்லக்கூட்டங்கள் தொடக்கம் விளையாட்டுப்போட்டி இறுதிநாள்வரை மைதானத்தில் நின்று சகல மாணவர்களும் மைதானத்தைவிட்டு வெளியேறிய பின்தான் மைதானத்தை விட்டு வெளியே செல்வார். பயிற்சி பெறும்பொழுது எல்லா இல்லங்களுக்கும் மேற்பார்வையாளராக இருப்பார். ஆனால் தனது செல்லையா இல்லத்தைக் கண்ணும் கருத்துமாக இருந்து பயிற்சியளித்து ஊக்குவிக்கும் பொழுது தானும் ஒரு இளம் வீராங்கனையாக மாறி விடுவார்.

அவர் ஆசிரியையாக இருந்த காலத்தில் கடமை யாற்றிய அதிபர்கள் எல்லோரும் ''சிரேஷ்ட ஆசிரியை" என மதிப்பளித்து அவர் ஆலோசனையை நிர்வாகத்திற்குப் பெற்றுக்கொள்ளத் தவறியதில்லை. அதற்கேற்ப நீதியான நியாயமான கல்லூரியின் முன்னேற்றத்திற்கேற்பவே அவரது அறிவுரையும் ஆலோசனையும் இருக்கும். எவராயினும் அவரிடம் குறையோ குற்றமோ கண்டது கிடையாது. ஏனெனில் நடுவுநிலைமை தவறாத தீர்ப்பாகவே அவரது முடிவு இருக்கும். யார் யாரைப் பிரதம விருந்தினராக அழைக்க வேண்டும் யார் யாருக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட வேண்டும் என்பவற்றிலும் அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கி நிகழ்ச்சிநிரல் தயாரிப்பதிலும் உதவியாக இருப்பார். கல்லூரிக்கு வெளியே உள்ள தொடர்பும் அவருக்குத்தான் முழுமையாகத் தெரியும். கொக்குவில் மண்ணின் பெருமாட்டி என்றமையால் கிராம மக்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒவ்வொரு வரையும் அவரது குடும்ப விபரங்களையும் நன்கு உணர்ந்தவராவார். எனவே கல்லூரி விழாக்களிலும் அவர் பங்கு தனித்துவமானதாகும்.

### ஏனைய பங்களிப்பும் சமூக உறவும்

தனது கற்பித்தல், நிர்வாகப் பணிக்கும் அப்பால் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், முன்னர் இருந்த பெற்றார் ஆசிரியர் சங்கம், பின்னர் அமைந்த கல்லூரி அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் கழகம் ஆகியவற்றிலும் பல பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஏற்றுத் திறம்படக் கடமை யாற்றியுள்ளார். இச்சங்கங்கள் யாவற்றிற்கும் கல்லூரிக்கும் இடையே நிலவும் உறவு, ஒத்துழைப்பு என்பனவற்றிற்கு ஆதாரமாக விளங்கிய பெருந்தகை எனலாம். அமரரான அதிபர் ஷேக்ஸ்பியர் நாகலிங்கம் இருந்த காலத்தில் கல்லூரிக் கட்டிட நிதிக்காக மிகவும் திறமையாகச் செயற்பட்டார். கல்லூரி மாணவ மாணவிகள் குழுவுக்கு இசை, நடனம் ஆகியவற்றைப் பயிற்றுவிப்பதில் திருமதி.சரஸ்வதி பாக்கியராசாவுக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் பக்கபலமாக விளங்கிக் கல்லூரியின் நிகழ்ச்சிகள் கொழும்பு, கண்டி ஆகிய நகரங்களில் சிறப்புற அமையச் செய்தவர்.

இத்தகைய சேவையினால் கொக்குவில் இந்துவிற்கும் இச்சங்கங்கள் எல்லாவற்றிற்கும் இடையே நிலவும் சீரிய உறவுமுறை நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட சிறப்புடையதாகும்.

### கனடாவில் "சுகிர்த ரீச்சர்"

கொக்குவில் இந்து என்ற எல்லைக்கப்பால் பிறநாடு களிலும் குறிப்பாக கனடாவிலும் அவரது சேவை தடம்பதித்துள்ளது. அங்கு ஒரு தன்னிகரில்லாத தலைவியாகவும், நன்றியுணர்வும் கல்லூரிப் பற்றும் மிக்க மூத்த பழைய மாணவியாகவும் விளங்கினார். எங்கும் உள்ள கடல் கடந்த கொக்குவில் இந்துவின் பிள்ளைகளின் ஆசிரியராக, இளைப்பாறிய பிரதி அதிபராகச் சேவையாற்றிய பெருமைக்குரியவர். கனடாவிலிருந்தும் ஏனைய நாட்டுப் பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு கல்லூரித் தொண்டைத் தன் இறுதி மூச்சுவரை தொடர்ந்துள்ளார். கனடாவிலும் அவருடைய தொடர்பினை மறக்க முடியாது என்று நினைக்கும் பொழுது மெய்சிலிர்க்கின்றது. கடல் கடந்தும்

அன்னாரது வாழ்க்கையும், சேவையும் அளவிட முடியாதன. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை யாகும்.

நானும் எனது கணவரும் கனடாவிற்குச் சென்ற பொழுது நாம் சுகிர்த ரீச்சருக்கு எந்தவித முன்னறிவித்தலும் கொடுக்கவில்லை. ஏனெனில் அங்கு சென்றடைந்த பின் அவருக்குப் பெரிய அதிர்ச்சியுடன் கூடிய மகிழ்ச்சி கொடுக்கும் ஆச்சரியத்தை வழங்கவிருந்தோம். ஆனால் நாம் போய் உறவினர் வீட்டை அடைந்ததும் அடையாததுமாக கொக்குவில் இந்துவின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், கொக்குவில் சமூகத்தினர் எல்லோருமே தொலைபேசி அழைப்பு மேற்கொண்டனர். எனது ஒரு சகோதரியும் அவரது மாணவியும் ஆகியவரிடமிருந்து எங்கள் தொலைபேசி இலக்கம் பெறப்பட்டு உடனுக்குடன் எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டு விட்டது. நாங்கள் அவரை வெல்ல எவ்வளவோ சாதுரியமாகத் திட்டமிட்டுச் செயற்பட்டோம். ஆனால் அவர் சர்வசாதாரணமாக எமது திட்டத்தைத் தவிடுபொடியாக்கி பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டார். எங்களது பழைய மாணவர்களிடம் கேட்டபோது "ஐயோ சுகிர்த ரீச்சர் தான் இங்கிருந்து கொண்டு எங்களுக்குப் பாடசாலைச் செய்திகள் எல்லாம் B.B.C.யிலும் துரிதமாகவும், திறமையாகவும் தருவார்" என்று கூறினார்கள். மிகச்சுலபமாகவும் சீக்கிரமாகவும் எங்களை வரவேற்பதற்கும், மகிழ்விப்பதற்கும் ஒரு ஒன்றுகூடலைப் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதற்குத் தானும் தனது குடும்ப சமேதராக வந்து அன்பான உணர்வுபூர்வமான பேச்சினை நிகழ்த்தி எம்மை சந்தோசப்படுத்தினார். இவை யாவற்றுக்கும் சுகிர்த ரீச்சர் தான் தோன்றாத் துணையெனப் பின்பு தெரிந்து கொண்டோம். இதனை நானும் எனது கணவரும் அடிக்கடி கதைத்து அவரின் பெருமைகளைக் கூறிக் கொள்வோம். எங்களை வரவேற்று ஞாபகார்த்தப் பரிசில்களும் தந்து கனடாவிலுள்ள அத்தனை பேரையும் சந்திக்க வைத்தார். இங்குள்ள அவரைத் தெரியாதவர்க்கு நாம் இதனைக் கூற அவர்கள் நம்பமுடியாதவர்கள் போல் விழிக்க "நம்பினால் நம்புங்கள்" என்று கூறி முடிப்போம்.

### இறுதிவரை அதே பாசமும் உறவும்

இவற்றிற்கெல்லாம் மகுடம் சூடியது போல் அமைந்தது கல்லூரி நூற்றாண்டு விழா. தோன்றாத்துணையாகக் கனடாவிலிருந்து ஒவ்வொருநாள் இரவிலும் நூற்றாண்டு மலருக்கு வேண்டிய குறிப்புகளை நான் கேட்கும் போதெல்லாம் விடை பகர்ந்து குறிப்புகளைத் தவறில்லாது, திகதி பிழைக்காது ஒரு Diary குறிப்புக்கூட இன்றி Phone பண்ணியபடி கூறிவிடுவார். Computer memoryயையே தோற்கடித்துவிடும் அவரது ஞாபகசக்தி. ஈற்றில் தானும் தனது கணவருடன் வருகை தந்து எங்கள் எல்லோருக்கும் மிக மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தந்தார். அன்னார் நாங்கள் கனடாவிற்குச் செல்லும்போது கண்டது போலத்தான் நூற்றாண்டு விழாவிற்கு வந்தபொழுதும் காட்சியளித்தார். எனது கண்களை என்னால் நம்பமுடியவில்லை. எனது கணவனார் மறைந்த பொழுது அங்கிருந்து கண்ணீர் அஞ்சலிகளை யெல்லாம் உடனுக்குடன் அனுப்பி வைத்ததை ஒருபொழுதும் மறக்க முடியாது. பின்னர் நூற்றாண்டு விழாவின்போது இறுதியாக அவரைச் சந்தித்ததும் என்னை மீறிக் கண்ணீர் மல்கினேன். அன்று சிறுபிள்ளையைத் தாய் அணைப்பது போல் அணைத்துத் தானும் சில துளிகள் சிந்திவிட்டு என்னை ஆறுதலடையச் செய்தார். இது எனக்கும் மெய்சிலிர்க்கும் சம்பவம். இதுதான் அவரது கடைசிச் சந்திப்பும் என்பது எனக்கு அப்போது தெரியவில்லை. நான் தான் அன்புக்குரிய சுகிர்த ரீச்சரைக் கண்ணூறுபடுத்தி விட்டேனோ என்று வருந்தத்தக்க வகையில் இங்கிருந்து சென்று நோய்வாய்ப்பட்டு எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார்.

அவரது மூத்த மகள் சுகன்யாவும் மருமகன் ரகுவும் என்னை ஆறுதற்படுத்த அவரின் இறுதி நாட்களையும், இறுதி மரியாதைகளையும் எனக்கு அன்புடன் ஆறுதலாக விளக்கினார்கள். சுகன்யா கதைக்கக் கதைக்க நான் ஒரு படம் பார்த்துக் கொண்டிருந்தது போல் இருந்தது. எழுத எழுத இக்கட்டுரை "திரௌபதையின் துகில்" போல் வளரும் போல் இருக்கிறது. நூற்றாண்டு விழாவிலும் என் கௌரவிப்புச் சின்னத்தைத் தானே மேடையில் எனக்குத் தந்தார். நான் அதைப் பெற்று இறங்கிவர என்னை மறித்துத் தன்னுடன் கொஞ்ச நேரம் நிற்கும்படி அருகில் வைத்திருந்தார். அப்பொழுது எனக்கு மிகவும் வெட்கமாக இருந்தது. ஏனெனில் நிரம்பி வழியும் சபையினர், எனக்கு மேடையில் நிற்கின்ற ஆசையில் இறங்க மனமில்லாமல் நிற்கின்றேன் என்று நினைத்துவிடுவார்கள் என்று. மறுபுறம் சில இளம் பாலகர்கள் தாய்மாருடன் மேடையில் தொத்திவிடுவார்கள். அவ்வாறே அன்னைக்கு மேலாக நேசிக்கும் "சுகிர்த ரீச்சர்" உடன் நானும் நிற்கின்றேன் என்று நினைத்திருப் பார்கள். ஆனால் அன்று கடைசிச் சந்தர்ப்பம் என்றதனால் தான் நீண்டநேரம் என்னைத் தன்னுடன் வைத்திருக்க வேண்டும் என்று விரும்பினாரோ என்று இப்போது நினைக்கின்றேன். மேலும் அவருடன் வந்தபடியால் நான் திட்டமிட்டிருந்தது போலன்றி மூன்று நாட்களும் இரவும் பகலும்

விழாவில் பங்குபற்ற வேண்டியதாயிற்று. உண்மையில் நான் பகல் நிகழ்வுகளில் பங்குபற்றிவிட்டு இரவில் வீட்டில் நிற்போம் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் பகலில் அவருக்கு விடைகூறி வெளியேறும்போது கட்டாயம் வரவேண்டும் என்று வற்புறுத்தாமல் "பின்னேரம் நித்தியலட்சுமி வாறதுதானே" என்று தான் சொல்வார். கேட்பதில்லை. தலையாட்டவும் பயம், தலையாட்டாமல் விடவும் பயம். அவரிடம் பயின்ற கண் பாஷையால் ஓம் என்று விடைபகர்ந்து விட்டு மூன்றுநாள் இரவு நிகழ்ச்சியிலும் இறுதிக்கட்டம் வரை இருந்துவிட்டுத்தான் வீடு திரும்பினேன். இதற்கிணங்க எமது கல்லூரி பழைய மாணவன் சந்திரநாதனும் எனக்கு வாகன வசதி வழங்கினார்.

### அற்புதமான சங்கமம்

என் தகப்பனார் அதிபராக இருந்தபொழுது ஆசிரியையாகத் திகழ்ந்தார். அவர் ஆசிரியையாக இருந்தபொழுது நானும் எனது சகோதர சகோதரியும் அவரது மாணவர்களாக இருக்கும் வாய்ப்பினைப் பெற்று அவரால் உருவாக்கப்பட்டோம். சமகாலத்தில் அவரது சகோதரியின் பிள்ளைகளும் கல்வி பயின்றனர். எமது குடும்பமும் அவரது குடும்பத்தினரும் ஒன்றாகவே கல்லூரியில் வளர்ந்தோம். பின்னர் நானும் எனது சகோதரியும் (அவரது மாணவர்கள்) அவருடன் கொக்குவில் இந்துவில் ஆசிரியைகளாகக் கடமை புரியும் பெரும்பேற்றினையும் பெற்று அவரது வழிகாட்டலில் எமது பணியைத் தொடர்ந்தோம். அதன் விளைவாக இன்றும் என் முதுமையையும் பொருட்படுத்தாது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் என் சேவையை நாடி நிற்கின்றன எனில் அப்பெருமையும் நன்றியும் "சுகிர்த ரீச்சருக்கே" உரித்தாகும். மேலும் அவரது ஐந்து பிள்ளைகளும் எங்கள் இருவரிடமும் கல்வி பயின்று மிகவும் கெட்டிக்காரராகவும் ஒழுக்க சீலர்களாகவும் விளங்கினர். அத்துடன் அவரது சகோதரியின் பிள்ளைகளும் நன்மாணாக்கர்களாக எங்களிடம் கல்வி பயின்றமையால் அத்தொடர்பும் உறவும் மேலும் வலுப்பெற்றது. இதற்கு மேலாக ரகுவின் குடும்பமும் கல்லூரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் மட்டுமன்றி ரகுவும் அவரது சகோதரரும், சகோதரியும் எமது மாணாக்கர்களாக எமது அன்புக்கும், பாசத்திற்கும் உரித்தானவர்களானார்கள். ரகுவின் பெற்றோரும் அவ்வாறே எமது குடும்பத்துடன் நெருங்கியவர்களானார்கள். இத்தகைய ஒரு தொடர்பும் உறவும் தனித்துவமானதும் கிடைத்தற்கரியதுமாகும். அவரை செல்வி.சுகிர்த லக்ஷ்மி செல்லையாவாகக் கண்டு, பின்னர் புகழ் பூத்த பொறியியலாளர் சுப்பிரமணியத்தை மணந்து கொண்ட விழாவினைக் கண்டு மகிழ்ந்து, எனது

## வளர்மதியாள் விழி நனைந்து விம்முகிறாள்

வளர்மதியை விழியினில் வைத்து – அதன்
வளர்ச்சிகள் கண்டு தினம் மகிழ்ந்து
மகளிர் அணியின் தலைமைகள் ஏற்று எமக்கு
மணி மகுடம் சூட்டிற்ற அன்னையே ...!
கொக்குவில் இந்துவின் கொலுசாக
இருந்திட்ட காலத்தில்
சுறுசுறுப்பாய் நீங்கள்
சாறியுடன் நடந்திடும் வேகம்...
சின்னக் கண்ணாடி அணிந்து உதட்டில்
மெல்ல வரும்
புன்னகைகள் உதிர்த்து
கைப்பையைச் சுமந்து
பள்ளிக்கு விரைந்திடும்...
காட்சிகள் உங்கள்
அடையாளங்கள்
நீர் என மாணவரை விழித்திடும் – உங்கள்
முதிர்ந்திட்ட பக்குவமும்...
முரண்பட வார்த்தைகளை
அளவாக உச்சரித்து
சுகிர்த ரீச்சர் என
செல்லப் பெயர் பெற்றிட்ட
அன்னையே!
இன்று நீங்கள்
கால்கள் ஓய்ந்து நா தளர்ந்து
கண்கள் செருகி ஓய்வெடுக்க
விழி நனைந்து விம்முகிறாள்
வளர்மதியாள்! – இங்கு
மற்றொரு அமாவாசை
கண்டது கொக்குவில்.



– கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்

ஆசிரியராக இருந்தவருடன் சக ஆசிரியராகப் பணிபுரிந்து, அவரது குடும்பம் முழுவதுடன் அந்நியோன்னிய உறவினை வளர்த்து ஒரு மூத்த பழைய மாணவி என்னும் பகட்டான பட்டத்தையும் பெற்றுள்ளேன். இது எனது பெரும் பேறாகக் கருதி புளகாங்கிதம் அடைகின்றேன்.

தன் தனிமூச்சும் முழுமூச்சும் இறுதி மூச்சும் கொக்குவில் இந்து அன்னையின் சேவையே என வாழ்ந்து அமரரான என்றென்றும் மறக்க முடியாத அன்புக்கும் பெரும் மதிப்பிற்குமுரிய அன்னை பற்றிய இக்கட்டுரையை எழுதும் வாய்ப்பிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய என் அன்புசால் மாணவர் ரகு, சுகன்யாவுக்கு நன்றி கூறி கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் பாதாரவிந்தத்தை வணங்கி அணையா விளக்கான என் ரீச்சரின் ஆத்ம சாந்தி வேண்டி சமர்ப்பிக்கின்றேன். *



# அர்ப்பணிப்பிற்கு இலக்கணமான பிரதி அதிபர்

# அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் பிரிவு எம்மால் மறக்க முடியாத நிகழ்வாகும். கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவியாக, ஆசிரியையாக பின் பிரதி அதிபராக நீண்டகாலம் பணியாற்றி அவர் ஆற்றிய சேவையை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. அவரது அர்ப்பணிப்பான சேவையை மாணவர் சமூகம் என்றும் நினைவுகூரும் என்பதில் ஐயமில்லை. அன்னார் கல்லூரியின் மீது வைத்திருந்த ஆழ்ந்த பற்றே அவர் இளைப்பாறிய பின்னரும் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபடக் காரணமாயிற்று. அவரையும் கல்லூரியையும் ஒன்றாகப் பார்க்கும் மனப்பான்மை கல்லூரிச் சமூகத்தவரிடையே தோன்றியமைக்குக் காரணம் அவரால் கல்லூரிக்கு ஆற்றப்பட்ட அர்ப்பணிப்பான அதாவது தன்னலமற்றதான சேவையேயாகும்.

அமரர் சுகிர்தலக்ஷ்மி அவர்களை நான் மாணவனாக இருந்த காலத்திலேயே நன்கு அறிவேன். அருமை மிக்க ஆசிரியராக விளங்கிய அவர் மாணவர் மனங்களைக் கவர்ந்தவராக இருந்தார். ஆங்கில ஆசிரியராக அவர் இருந்த போதும் கணிதத்தைப் போதிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். பல ஆங்கிலப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் செய்து பல வெற்றிகளைப் பெற்றுத் தந்த பெருமை அவரையே சாரும். அவரது ஆங்கிலமொழித் திறன் ஆங்கிலேயரையே வியக்க வைக்கும் தன்மை கொண்டதாகும். இதன் காரணமாகவே ஆங்கிலத்தையும் விரும்பிப் படிக்கும் சமூகமொன்றைக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்த பெருமைக்குரியவர். அமரர் சுகிர்தலக்ஷ்மி அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களது ஆங்கில அறிவு மேம்பாட்டிற்காக ஆற்றிய பணி தொடர வேண்டும் என்பதற்காகவே அவரது மகள் சந்திரிகா நாகேந்திரன் அவர்கள் கல்லூரியின் ஆங்கில பேச்சுப் போட்டிகளுக்கு 2010ஆம் ஆண்டில் இருந்து வருடாந்தம் அனுசரணை வழங்கி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அன்னார் கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் எத்தகைய அக்கறை கொண்டிருந்தாரோ அதேபோல் மாணவர்களது ஒழுக்கத்திலும் அக்கறை காட்டி வந்தார். கலவன் கல்லூரியாக எமது பாடசாலை இருந்தபோதும் மாணவிகளின் ஒழுக்கத்திற்கு முத்திரை பதித்த கல்லூரியாக விளங்க வித்திட்டவர் அமரர் சுகிர்தலக்ஷ்மி அவர்கள் எனக் கூறினால் மிகையாகாது. மாணவிகள் அழகியற் பாடங்களான சங்கீதம், நடனம் ஆகியவற்றைக் கற்பதற்கும் அதில் சாதனை படைப்பதற்கும் காரணமாக இருந்தார். இவரது முயற்சியின் காரணமாகவே அப்போதைய பல மாணவிகள் நடன, சங்கீதக் கலைகளை நன்றாகக் கற்பதற்கும் அதில் தமது ஆளுமையை நிலைநிறுத்துவதற்கும் முடிந்துள்ளதெனத் துணிவுடன் கூறலாம். இக்கலைகளின் வளர்ச்சிக்கு அன்னார்


● பேராசிரியர் க.தேவராஜா
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி




மேற்கொண்ட பணிகள் இடையில் தடைப்படக் கூடாது என்பதற்காகவே அவரது மகள் சுகன்யா தேவராசா அவர்களும் மருமகன் ரகு தேவராசா அவர்களும் 5 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவு செய்து கல்லூரி மாணவிகளுக்கென நவீன கலையகமொன்றையும் உள்ளக விளையாட்டரங்கையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிறுவியுள்ளனர். இது எமது கல்லூரியில் நடனம், சங்கீதம் ஆகியவற்றைக் கற்கும் மாணவர்களிடையே இக்கலைகளை விரும்பிக் கற்பதில் பெரும் நாட்டத்தை ஏற்படுத்துமென உறுதிபடக் கூறமுடியும். இதுமட்டுமல்லாமல் ரகு சுகன்யா தம்பதியினர், சதுரங்க விளையாட்டினை ஊக்குவிப்பதற்காக, திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் ஞாபகார்த்தமாகவும் 2008ஆம் ஆண்டில் இருந்து வருடா வருடம் கல்லூரியில் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் தனித்தனியாக சதுரங்க விளையாட்டுப் போட்டி ஒன்றினை நடாத்தி அதற்கான பரிசில்களையும் வழங்குவதற்கு ஏதுவாக ஒருதொகைப் பணத்தைக் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தில் வைப்பில் இட்டிருப்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

அமரர் சுகிர்தலக்ஷ்மி அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றி சாதனை படைத்தது போன்றே பிரதி அதிபராக நியமனம் பெற்ற பின் தலைமைத்துவத்திற்கு இலக்கணமாக விளங்கினார். பாடசாலையின் இலக்கை அடைவதற்குப் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டவராக விளங்கினார். மாணவர்களை அரவணைப்பதிலும், ஆசிரியர்களை வழிநடத்துவதிலும் வெற்றி கண்ட அமரர் பாடசாலை அதிபர்களுக்கு இருந்த நிர்வாகச் சுமையைக் குறைப்பதற்கும் பெரிதும் உதவினார் எனக் கூறினால் மிகையாகாது. இதன் காரணமாகவே அமரர் பணியாற்றிய காலம் பொற்காலம் எனக் குறிப்பிட முடியும்.

அன்னார் பாடசாலையில் பணியாற்றிய காலத்தில் அதன் வளர்ச்சிக்கு எப்படி உதவினாரோ அதேபோல் அவர் இளைப்பாறி கனடா சென்ற பின்னரும் அதன் வளர்ச்சிக்கு உதவினார் என்பது வெள்ளிடை மலையாகும். கனடாவில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கிளையொன்று உருவாகுவதற்குக் காரணமாக இருந்தவர் அமரர் எனக் கூறினால் மிகையாகாது. இந்த நடவடிக்கை கனடா முழுவதும் பரந்து வாழ்ந்த கொக்குவில் இந்துவின் பழைய மாணவர்கள் ஒன்றுகூட வாய்ப்பாக அமைந்தது. இன்றைய கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு கனடா பழைய மாணவர்கள் ஆற்றிய, ஆற்றிவரும் பணிகளை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. பௌதீகவள வளர்ச்சியிலும் கல்வி அபிவிருத்தியிலும் இணைச் செயற்பாடுகளின் முன்னேற்றத்திலும் கனடா பழைய மாணவர்கள் அக்கறையுடன் செயற்பட அடிகோலியவர் அமரர் சுகிர்தலக்ஷ்மி அவர்களேயாவார். இவர் பாடசாலைக்கு ஆற்றிய பணிக்கு நிகராகவும் மேலாகவும் ஆற்றும் தன்மை கொண்டவர்களாக அவரது பிள்ளைகளும் மருமக்களும் மாறியிருப்பது எமது மனதைப் புளகாங்கிதம் அடைய வைத்துள்ளது. பொய்யாமொழிப் புலவர் கூறியது போல் “தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்” என்ற திருக்குறளை எண்ணிப் பார்க்கும்போது அமரரின் பெருமை மேலும் உயர்ந்து நிற்கின்றது. அவரது புகழ் பரப்பும் அவரது குடும்பத்தினரின் செயற்பாடுகள் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக இருக்கும்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள வந்தபோது அமரர் சுகிர்தலக்ஷ்மி அவர்களைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தமை பழைய மாணவர்களான எம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க வைத்தது. இருந்தும் ஒரு வருடத்தில் அவர் எம்மை விட்டுப் பிரிவார் என எவரும் எண்ணவில்லை. அவரது பிரிவு எமக்குப் பேரிழப்பாக இருந்தபோதும் அவர் வழியில் அவரின் பணிகளைத் தொடர்வோம் என உறுதி கூறி அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

“வாழ்க அவர் புகழ்! வாழ்க அவர் நாமம்!”

## The Shining Star Forever

Mrs. Sukirthalakshmy Supramaniam is no more with us. The news of her death shocked the entire school community and spread like wild fire among the old students across the continents within a matter of hours. It only proves her popularity among our old students. She was a rare teacher who will be in our memory as a shining star forever. Sukirtha teacher as we all call her studied and became a teacher at Kokuvil Hindu College and committed her entire life to teach English to students of so many generations. She was not only an excellent teacher but like a mother who cared about all her students. Her love for Kokuvil Hindu College continued even after her retirement and helped in so many ways to all our old students' associations across the globe.

**Kokuvil Hindu College Old Students' Association (Vic) Australia Inc.**

Memorial function at
**Kokuvil Hindu College**



### கொக்குவில் இந்துவின் நங்கை (புதுமைப்பெண்)
### அமரர்
# திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்
### அவர்களின்
## கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வு

"மண்ணிலே மங்கையராய்ப் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும்" என்ற கூற்றுக்கு அமைவாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்த திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் "நினைவஞ்சலி" நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் ஆகியன ஒன்றிணைந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் செப்ரெம்பர் 28, 2011 அன்று மதியம் 1:00 மணியளவில் பாடசாலை அதிபர் திரு.அ.அகிலதாஸ் தலைமையில், பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. இவ்வஞ்சலி நிகழ்வில் பழைய மாணவர்கள், அன்னாரின் உறவினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

அன்றைய நாளில் கொக்குவில் இந்துக் கல்லூரி தனது மூத்த மகளை இழந்து துன்பமுற்று வாடிக் காணப்பட்டாள். கல்லூரியின் முகப்பு வாயிலில் அன்னையின் உருவப்படம் பொறிக்கப்பட்ட சேலை அசைந்தாடிக் கொண்டிருப்பதும் வாசல் முகப்பில் இருந்து அஞ்சலி நிகழ்வு அரங்கு வரை காணப்பட்ட மாவிலை தோரண அலங்காரமும் மனதை உருக்குவதாக அமைந்திருந்தன. இவை மட்டுமன்றி சுகிர்த ரீச்சரின் உருவமேந்திய பெரியளவான திரைச்சீலை மேடையில் தொங்கிய வண்ணம் இருந்தது. உருவப்படம் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் வைக்கப்பட்டு அதற்கு மாலை அணியப்பட்டதுடன், அணையாதீபம் ஏற்றப்பட்டும் இருந்தது. பார்ப்பவர் நெஞ்சமதை நெகிழ வைக்கும் காட்சியாகவே அன்றைய நாள் அமைந்திருந்தது. மதியநேரம் மாணவர்கள் வரிசையாக அழைத்து வரப்பட்டு ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சகிதம் ஒரு மணியளவில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அன்னாரின் உருவப்படத்திற்குப் பாடசாலை அதிபர் திரு.அ.அகிலதாஸ் அவர்கள் மலர் தூவி ஈகைச்சுடரினை ஏற்ற அதைத் தொடர்ந்து பழைய மாணவர்கள், அன்னாரின் உறவினர்கள் அனைவரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பாடசாலை மாணவியினால் தேவாரம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து அதிபர் அவர்கள் நிகழ்வின் அவசியத்தையும், அன்னார் பாடசாலை முன்னேற்றத்தில் கொண்டிருந்த அக்கறையையும், தள்ளாத வயதிலும் தளராத அவரது ஞாபக சக்தியையும், சந்தேகங்களுக்கு அவர் தரும் விளக்கங்களையும் தெளிவாக எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து பழைய மாணவனும், கல்லூரி அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், பேராசிரியருமான திரு.க.தேவராஜா அவர்கள் தாம் கல்வி கற்ற காலத்தில் அன்னார் செய்த தொண்டினையும், பெண்களின் ஒழுக்கத்தில் அவர் கொண்டிருந்த அக்கறையையும் கேட்போர் மெய்சிலிர்க்கும் வண்ணம் எடுத்துக் கூறினார். பின்னர் முன்னாள் அதிபரும், பழைய மாணவருமான திரு.பொ. கமலநாதன் அவர்கள் 1927இல் இம்மண்ணில் கால் பதித்து 1983இல் ஓய்வு பெற்றுக்கொண்டாலும்,

ப.இராஜேஸ்வரன்
ஆசிரியர்
கொக்குவில் இந்துக்
கல்லூரி






SUKIRTHA TEACHER'S MEMORIAL FUNCTION AT KOKUVIL HINDU COLLEGE













கொக்குவிலில் வாழ்ந்ததால் பாடசாலையின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அக்கறையுடன் செயற்பட்டவர் எனவும் குறிப்பாகப் பெண்களின் ஒழுக்க நடவடிக்கைகளில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொண்டவர் எனவும் கனடா சென்றாலும் நினைவில் எல்லாம் பாடசாலை வளர்ச்சி ஒன்றையே பெரிதாக எண்ணிக் கொண்டவர் எனவும் இப் பெருந்தகையின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று எனவும் குறிப்பிட்டார். பழைய மாணவரும் வலிவடக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் அன்னாரின் தோற்றப் பொலிவையும், அவர் நடந்து வரும் அழகினையும், சுட்டிக் காட்டிக் கூறி அவர் இறக்கவில்லை பலரது மனதில் நிலைத்து நின்று வாழுகின்றார் என்று கூறினார். மேலும் அன்னாரின் இழப்பினால் பாடசாலை மட்டுமல்ல, கொக்குவிலே துயருறுகின்றது எனவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பழைய மாணவியும், பாடசாலை ஆசிரியருமான திருமதி.கலா சுந்தரேசன் அவர்களால் அன்னாரின் மறைவையொட்டி அவரது இழப்பினால் அல்லற்பட்ட மக்களின் இதயத்தில் இருந்து வந்த அஞ்சலிக் கவிதைகள், உரைகள்






என்பன கேட்போர் மனதை உருக்கும் வகையில் ஓசைநயமிக்க வகையில் உருக்கமாக வாசிக்கப்பட்டன. ஆங்கிலத்தில் உள்ள செய்தியினைப் பாடசாலை ஆங்கில ஆசிரியர் திருமதி.ஜெயலிங்கம் அவர்கள் உருக்கமாக வாசித்தார். ஆயின் இவற்றுக்கும் மேலாக ஆசிரியர் திரு.ச.சந்திரசேகர் அவர்களால் அன்னாரின் சேவையையும், அவர் ஆற்றிய பணிகளையும் விளக்கும் வகையில் கவிதையொன்று மனதை நெகிழவைக்கும் வகையில் வாசிக்கப்பட்டது. இறுதியாக பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.த.பகீரதராஜ் தனது நன்றியுரையில் அன்னையின் மடியில் தவழ்ந்து, பின் நடந்து, கனடா மண்ணில் மரணித்த துயர் நிகழ்வினைச் சுட்டிக்காட்டி, அன்னார் கட்டிக் காத்த ஒழுக்கமே இன்றும்











கல்லூரியை உயர்வுடன் திகழ வைத்திருக்கின்றது எனக்கூறி அன்னாரின் ஆத்மா இறைவனடியில் சாந்தி பெறப் பிரார்த்தித்ததுடன் 2:30 மணியளவில் கல்லூரி கீதத்துடன் இந்நிகழ்வு நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் மறைவையொட்டி அன்னையை இழந்து துயருற்றிருக்கும் மைந்தர்களினால் செப்ரெம்பர் 8, 2011 அன்று வெளியிடப்பட்ட இதய அஞ்சலிகள் அடங்கிய புத்தகம் ஒன்றும், மேலும் அன்னாரின் அழகிய முழு உருவத் திருவுருவப்படமும் அஞ்சலி நிகழ்விற்கு வந்த எல்லோருக்கும் வழங்கப்பட்டதுடன்,














இந்நிகழ்வு 2000இற்கும் மேற்பட்ட மாணவர்கள், 100இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கு “மல்ரிமீடியா” (multimedia) மூலம் காட்சிப்படுத்தப்பட்டு வீடியோ மூலம் படமாக்கப்பட்டது. இவை மட்டுமன்றி அன்றைய நாளிதழ்களில் அன்னையின் சேவையையும், அவர் கல்லூரி மீது கொண்ட பற்றினையும், அதனை வளர்த்தெடுக்க அவர் மேற்கொண்ட முயற்சியினையும் பாராட்டிக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

“அன்னாரின் புகழ் இவ்வுலகம் உள்ள மட்டும்
நின்று நிலைக்கும்”

*

Memorial function at
**Valarmathy Community Centre**



### அஞ்சலி நிகழ்வு

# கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்

வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் முன்னை நாள் மகளிர் குழுத் தலைவியும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவி, ஆசிரியை மற்றும் உப அதிபருமாகிய அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் வளர்மதி வேலாயுதபிள்ளை அரங்கில் கழக உபதலைவர் திரு.செ.செல்வராசா தலைமையில் ஒக்டோபர் 2, 2011 அன்று மாலை 4:00 மணியளவில் நடைபெற்றது. இவ்வஞ்சலி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர், முன்னை நாள் அதிபர்கள், இந்நாள் அதிபர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கிராமப் பொது அமைப்புக்களின் தலைவர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என நூறு பேர் வரையில் கலந்து கொண்டனர்.

இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்வு ஆரம்பமாகி அன்னாரின் திருவுருவப் படத்தினைச் சுற்றி அவரின் 88 அகவையினைக் குறிக்கும் முகமாக ஒழுங்கமைக்கப்பட்ட 88 ஈகைச் சுடர்களின் முதலாவது சுடரினை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் அவர்கள் ஏற்றி வைக்க மற்றையவை ஏனைய சபையோரால் எற்றி வைக்கப்பட்டன. தொடர்ந்து அன்னாரின் உறவினர் திரு.ச.திருக்குமார் அவர்களினால் தேவாரம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து கழக மண்டபத்தில் அன்னாரின் திருவுருவப் படத்தினை முன்னை நாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் திரைநீக்கம் செய்து வைக்க ஞாபகார்த்த மரக்கன்றினைக் கல்லூரி அதிபர் திரு.அ.அகிலதாஸ் நாட்டினார். தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்திய தலைவர், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள், கழக மகளிர் குழுவின் வளர்ச்சியில் ஆற்றிய பங்களிப்பு மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் சமூகம் ஆகியவற்றிற்கு ஆற்றிய பணிகள் பற்றி விபரித்தார்.

தொடர்ந்து அஞ்சலி உரையினை நிகழ்த்திய முன்னை நாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களிடம் மாணவனாக, சக ஆசிரியராக மற்றும் அதிபராகக் கடமையாற்றத் தனக்குக் கிடைத்த வாய்ப்பு தான் பெற்ற பெரும் பாக்கியம் என்றார். மேலும் தான் அதிபராகப் பொறுப்பேற்றபொழுது தான் கல்வி கற்ற ஆசிரியரை எவ்வாறு உப அதிபராகக் கடமையாற்றக் கோருவது எனச் சங்கடப்பட்டதாகவும் எனினும் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் தனது மாணவனின் வளர்ச்சி கண்டு பெருமை கொள்வதாகக் கூறி மிக்க மகிழ்ச்சியுடன் அப்பதவியை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார். மேலும் அன்னார் சமூகத்துடன் வைத்திருந்த உறவு பாடசாலையில் ஏற்பட்ட ஒரு சில இடையூறுகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருந்ததாக ஓர் உதாரணத்துடன் குறிப்பிட்டார். மேலும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே ஒரு பாலமாக விளங்கினார் என்றும் கூறினார்.

தொடர்ந்து அன்னாரின் மறைவையொட்டி வளர்மதிக்காக திரு.செ.ஸ்ரீனிவாசன் எழுதிய "வளர்மதியாள் விழி நனைந்தாள்" எனும் கண்ணீர் அஞ்சலிக் கவிதை வாசிக்கப்பட்டது.

● இ.சிவசங்கர்
கொக்குவில்
வளர்மதி முன்னேற்றக்
கழகமும் சனசமூக
நிலையமும்





SUKIRTHA TEACHER'S MEMORIAL FUNCTION AT VALARMATHY COMMUNITY CENTRE, KOKUVIL





தொடர்ந்து நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய நிர்வாக செயலர் திரு.மாதவகுமார் தனதுரையில், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் ஆலய நிர்வாக சபை உறுப்பினராக இருந்து ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்ததுடன் அன்னாரின் ஆன்மா அம்பாளின் காலடியில் சாந்தி பெறப் பிரார்த்தித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் ஆசிரியையுமான திருமதி. நித்தியலட்சுமி குணபாலசிங்கம் தனதுரையில், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் தற்கால ஆசிரியர்களைப் போல ஒரு துறை சார்ந்து இல்லாமல் கணிதம், ஆங்கிலம், தமிழ் என எல்லாப் பாடங்களையும் போதிக்கும் ஆற்றல் கொண்டவர் எனப் புகழ்ந்துரைத்தார். இவற்றிற்கு மேலாகக் கல்லூரி நிதி சேகரிப்பிற்காக மாணவர்களை நடனம், சங்கீதம் என்பன பயிற்றுவித்து இலங்கையின் சில பாகங்களுக்கு அழைத்துச் சென்று நிதி சேகரித்ததைக் குறிப்பிட்ட அவர் மிகச்சிறிய வயதில் தனது பெறாமகள் ஜெயதேவியினை இந்நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்றதையும் சுட்டிக்காட்டினார். அவ்வாறு அரை





நூற்றாண்டுக்கு மேல் கல்லூரியுடன் இணைந்தது மட்டுமல்லாமல் தனது முழுக் குடும்பத்தினரையும் கல்லூரியுடன் இணைத்தவர் எனப் புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் அவர்கள், தனது சிறுவயதில் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்த அனுபவம், அதனூடே அவரிடம் இருந்து பெற்ற அறிவுரை பற்றிக் கூறினார். கூடவே யாழ் மாணவ சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காகத் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியத்தினைத் தன் சார்பில் ரூபா 100,000 இட்டு ஆரம்பித்து வைப்ப தாகவும், அதற்குரிய பாராளுமன்ற அங்கீகாரத்தையும் பெற்றுத் தருவதாகவும் அதனை முன்னெடுத்து நடத்துமாறும் சபையில் இருந்த கல்விச் சமூகத்தினரிடம் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து உரையாற்ற அழைக்கப்பட்ட பேராசிரியர் திரு.க.தேவராஜா, திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து வணங்கித் தன் உரையை ஆரம்பித்தார். பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஈ.சரவணபவன் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதுடன் தனது பள்ளிப் பருவத்தில் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களிடம் பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு.அ.அகிலதாஸ், அன்னாரின் காலத்தில் கல்லூரியில் பேணப்பட்ட ஒழுக்கமே கொக்குவில் இந்துக் கல்லூரி கட்டுக்கோப்பான ஒரு பாடசாலை எனப் பெயர் கொள்ளக் காரணம் என்றார். கூடவே அன்னாரின் குடும்பத்தினர் தொடர்ந்து ஆற்றிவரும் பணிகள் குறித்தும் பாராட்டுத் தெரிவித்தார்.

இவர்களுடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் திரு.பெ.கனகசபாபதி மற்றும் கோமதி ரவிதாஸ், முன்னாள் அதிபர் திரு.பொ.கமலநாதன், விரிவுரையாளர் திரு.சிவராஜா, மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் சார்பில் திரு.பாலசுப்பிரமணியம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சார்பில் திரு.செல்வநாதன், கொக்குவில் C.C.T.M. அதிபர் மற்றும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி.ச.செல்வராணி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து வளர்மதி நிறை வாழ்வக செயலாளர் திரு.அ.சத்தியமூர்த்தி தனதுரையில், இனிவரும் காலங்களில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தில் நடைபெறும் ஆசிரியர் சிறுவர் நிகழ்வு திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் ஞாபகார்த்த நிகழ்வாக நடத்தப்படுமெனப் பிரகடனப்படுத்திய தோடு கொக்குவிலில் உள்ள சிறிய பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு உரிய கௌரவம் கிடைப்பதில்லை எனவும் இனிவரும் காலங்களில் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கி வளர்மதி முன்னேற்றக் கழகம் அவர்களைக் கௌரவிக்கும் எனவும் அறிவித்தார். அதற்குரிய முதல் நிகழ்வு ஒக்டோபர் 08, 2011 அன்று நடைபெறும் எனவும் அறிவித்தார். தற்கால மாணவர்-ஆசிரியர் உறவு பற்றிக் குறிப்பிட்ட அவர் மாணவர்கள் ஆசிரியர்களை மதிப்பதில்லை என்பது தொடர்பில் மாணவர்கள் மீது சாட்டப்படும் குற்றச் சாட்டை நிராகரித்ததோடு, இன்றும் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் போன்று சேவை மனப்பாங்குடைய ஒரு சில ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என்றும் அவர்களை இன்றைய மாணவர்கள் மதிக்கிறார்கள் என்றும் கூறி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி விடை பெற்றார்.

இறுதியாக திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தினர் சார்பில் திரு.ச.திருக்குமார் ஆற்றிய கண்ணீர் கலந்த ஏற்புரையுடன் கூட்டம் 5:45 மணியளவில் நிறைவுபெற்றது.

*

Memorial function at
**K.H.C. O.S.A. Germany**



அஞ்சலி நிகழ்வு

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஜெர்மனி




SUKIRTHA TEACHER'S MEMORIAL FUNCTION AT K.H.C. O.S.A. GERMANY

● தே.தேவகுமாரன்
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
ஜெர்மனி



**கொ**க்குவில் இந்துக் கல்லூரியின் மாணவியாக இருந்து ஆசிரியராகி, உப அதிபராகக் கடமையாற்றி கனடாவில் செப்ரெம்பர் 8, 2011 அன்று அமரத்துவம் எய்திய திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களுக்கான நினைவு அஞ்சலி ஒன்றுகூடல் ஒக்டோபர் 30, 2011 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஜெர்மனியால் தமிழர் கலையகம், Rheinische str. 130, 44149 Dortmund என்ற இடத்தில் திரு.பொ.விஜயேந்திரன் தலைமையில் பகல் 11:30 மணியளவில் ஆரம்பமானது. இவ்வொன்றுகூடலில்



நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

முதலில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு எமது ஆசிரியையின் திருவுருவப் படத்திற்கு மாலை சூட்டப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருமதி.இராசதேவி செல்வநாயகம் அவர்களினால் தேவாரம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து அஞ்சலி உரை நிகழ்த்திய தலைவர் திரு.பொ.விஜயேந்திரன், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும்போதும், ஆசிரியராகக் கல்வி போதிக்கும்போதும், உப அதிபராகக் கடமையாற்றியபோதும், தொடர்ந்து இளைப்பாறிய பின்பு கனடா நாட்டிற்கு வந்து கனடாவில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்தபோதும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்காகவே அவரது செயற்பாடுகள் இருந்ததாகக் கூறினார்.

அவரைத் தொடர்ந்து செயலாளர் திரு.தே.தேவகுமாரன் தனதுரையில் “சுகிர்த ரீச்சரின் மறைவு எமக்கு ஒரு பேரிழப்பு. எந்த விடயத்திற்கும் ரீச்சரிடமே அறிவுரை கேட்பது வழக்கம். ரீச்சரும் எவ்வித மறுப்பும் இன்றித் தெளிவாக விளக்கி வைப்பார்கள்” என்று கூறினார். மேலும் மார்ச் 5, 2011 அன்று ஜெர்மனியில் நடைபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் 100ஆவது ஆண்டு விழாவிற்கு திரு.திருமதி.சுப்பிரமணியம் அவர்களைப் பிரதம விருந்தினர்களாக அழைத்தபோது மறுக்காது தம்பதி சமேதராய் வருகை தந்து விழாவைப் பிரமாண்டமாகச் சிறப்பித்து வைத்ததாகக் கூறினார். ரீச்சரைப் பார்ப்பதற்காகவே வருகை தந்த, அவரிடம் கல்வி கற்ற மாணவர்களினால் மண்டபம் நிறைந்ததாகவும், இதையிட்டு அவர்கள் அளப்பரிய மகிழ்ச்சி அடைந்ததாகவும் கூறினார். மேலும் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அச்சிடப்பட்ட ஞாபகார்த்த முத்திரைகளை வெளியீடு செய்து ஜெர்மனி பழைய மாணவர் சங்கத்திற்குப் பெரும் கௌரவத்தை ஏற்படுத்தியதாகவும், இதனைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா மலர் வெளியிடும்பொழுது அதன் முதற் பிரதியைத் தானே பெற்றுக் கொண்டு பழைய மாணவர் சங்கத்திற்காக சங்கத் தலைவரிடம் 1,000 Euros காசோலையை வழங்கியதாகவும் கூறினார்.

ஜெர்மனியால் வெளியிடப்பட்ட நூற்றாண்டு விழா மலர் உலகம் பாராட்டும் அளவுக்குச் சிறப்படையக் காரணமாக இருந்தவரே ரீச்சர்தான் எனவும் அவரே இவ்விழா மலரை முழுமையாகச் சரி பிழை பார்த்தவர் எனவும் தனது உரையில் குறிப்பிட்டார். “கொக்குவில் இந்துக் கல்லூரியின் சரித்திரப் பின்னணி'', ''நான் கண்டு அறிந்த கொக்குவில் இந்துக் கல்லூரி'' ஆகிய இரு கட்டுரைகளை நூற்றாண்டு விழா மலருக்காக எழுதிக் கொடுத்து மலரைச் சிறப்பித்ததாகவும் இம்மலருக்கு உலகெங்கும் இருந்து பாராட்டுக் கிடைத்ததாகவும் இவை அனைத்தும் ரீச்சர் இறைவனடி சேர்வதற்கு ஒருசில மாதங்களுக்கு முன்பாக நடந்தவை எனவும் கூறினார். அத்துடன் அவரது பிரிவை எவராலும் ஜீரணிக்க முடியவில்லை எனவும் கூறினார்.

தொடர்ந்து திருமதி.இராசதேவி செல்வநாயகம் அவர்கள் தமது உரையில் “பாட போதனைகள் செய்து சாதனைகள் படைத்த சுகிர்த ரீச்சரே! நீங்கள் அமர்ந்த இடம் நாம் அறிவோம் எனினும் எங்கள் இதயங்களில் என்றும் நீங்கள் நிரந்தரமாக இருப்பீர்கள்” என்று கூறினார்.

தொடர்ந்து திரு.ச.சாந்தநாதன், திரு.நா.மனோகரன், திருமதி.உதயராணி தியாகலிங்கம் ஆகியோரின் உரைகளுடன் அஞ்சலிக்கான ஒன்றுகூடல் நிறைவடைந்தது.

*

# 1910ஆம் ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தோற்றத்திற்கான பின்னணி பற்றிய ஒரு நோக்கு



● திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்
மாணவி, 1927–1937
ஆசிரியை, 1942–1983
கொக்குவில் இந்துக் கல்லூரி

கொலனித்துவ அரசாங்கம் ஸ்ரீலங்காவின் (அப்போதைய இலங்கை) கல்வி அதிகாரத்தை அங்கிலிக்கன் மதகுருக்களைக் கொண்ட கீழே குறிப்பிட்ட மூன்று புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ திருச்சபைகளிடம் ஒப்படைத்தது.






திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி எட்டியதும் ஆழ்ந்த கவலை உண்டாகியது. அன்னாரின் வாழ்வுச் சரித்திரம் மனக்கண் முன் விரைவாக ஓடிற்று.

அறிவும் ஆற்றலும் நிறைந்தவர், கொக்குவில் இந்துக் கல்லூரியில் மிகக் கூடிய வருடங்கள் சேவை செய்த ஆசிரியை ஆவார். கனடாவில் உள்ள கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சிறப்பான வளர்ச்சிக்கு இவர் முக்கிய காரணமாக விளங்கினார்.

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவை ஜெர்மனியில் (March 5, 2011) நாம் கொண்டாட எடுத்த முயற்சிகள் எல்லாவற்றிற்கும் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்தார்.

நூற்றாண்டு விழா மலரைச் செவ்வனே உருவாக்குவதற்கு எல்லாவிதமான உதவிகளையும் மேற்பார்வையையும், வழிகாட்டலையும் செய்தவர். இம்மலரின் சிறப்புக்கு உலகெங்கும் இருந்தும் பாராட்டுக்கள் கிடைக்கப்பெற்றன. இப்பாராட்டுக்கள் அனைத்தும் எமது சுகிர்த ரீச்சருக்கே சேரவேண்டியவை.

எமது விழாவிற்குப் பிரதம விருந்தினராக வந்து எம் எல்லோருக்கும் ஒரு உத்வேகத்தையும் ஆர்வத்தையும் உருவாக்கினார். அவரை எமது கல்லூரி அன்னையாகவே தரிசித்தோம், உறவாடி மகிழ்ந்தோம். இவையாவும் மறக்கமுடியாத பசுமையான நிகழ்வுகளாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**-கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஜெர்மனி**

- அங்கிலிக்கன் திருச்சபை
- அமெரிக்கன் திருச்சபை
- வெஸ்லியன் திருச்சபை

அரசாங்கம் இத்திருச்சபைகளுக்குப் பண உதவியும் வழங்கியது. இதன் முக்கிய நோக்கம் கல்வியினூடாக இலங்கை மக்களை மதம் மாற்றுவதேயாகும். ஆனால் கத்தோலிக்கர், பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கு இந்த உதவி மறுக்கப் பட்டது.

யாழ் ஆயராகவும், பின் கொழும்பு ஆயராகவும் இருந்த கிறிஸ்தோபர் பொன்ஜோன் (Christopher Bonjean) என்னும் பிரெஞ் (French) பாதிரியார் அந்த அதிருப்தியாளர்களுக்குத் தலைமை தாங்கி தத்தம் மத அடிப்படையில் ஒவ்வொரு மதத்தவரும் அம்மதம் சார்ந்த பிள்ளைகளுக்கு அரசாங்க பண உதவியுடன் கல்வி புகட்டும் முறையை உறுதியுடன் வலியுறுத்தினார்.

எனவே 1865இல் சட்டசபையினால் கல்வி சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையின்படி அரசாங்கம் 1841இல் நியமிக்கப்பட்ட புரொட்டஸ்தாந்து மேலாண்மை கொண்ட மத்திய பாடசாலை ஆணைக்குழுவை ரத்துச் செய்தது. பதிலாக 1869இல் பொதுவான கல்வித் திணைக்களத்தை ஸ்தாபித்தது. இதுவே தற்கால கல்வித் திணைக்களம் ஆகும். இக்குழு நாட்டின் கல்விக்கான இரு கொள்கைகளை வலியுறுத்தியது.

- ஒவ்வொரு மதப்பிரிவும் தனது பிள்ளைகளுக்குப் பாடசாலையை ஆரம்பிக்கலாம்;
- திறமான மதச் சார்பற்ற கல்வி கற்பிக்கும் எல்லாப் பாடசாலைகளுக்கும் அரசாங்க மானியம் வேறுபாடின்றி வழங்கப்படும்.

இக்கொள்கைகளே மதம் சார்ந்த பாடசாலை முறைக்கு அடிப்படையாயின. இவையே மானிய உதவி முறை அல்லது உதவி பெறும் பாடசாலைகளாயின. இம்முறையின் கீழ் அடங்கிய பல பாடசாலைகளுள் ஒன்றாக கொக்குவில் இந்துக் கல்லூரியும் வந்தது. யாழ்

இந்துக் கல்லூரி சஞ்சிகை (தொகுதி II) மார்ச் 1912 இல.1இலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க் காணப்படும் பகுதியிலிருந்து இது புலனாகிறது. “யாழ் இந்துக் கல்லூரி பிரதம பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்த திரு.E.செல்லையா அவர்கள் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையின் நிரந்தர தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். திரு.E.செல்லையாவின் மேற்பார்வையின் கீழ் பாடசாலை வளர்ந்து பிரபல்யம் அடைந்து வருகின்றது. பாடசாலை முகாமையாளர் இப் பாடசாலையை மானிய உதவி பெறும் பாடசாலையாகப் பதிவு செய்ய பொதுக் கல்வித் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.”

இக்கல்வி முறை நாட்டில் பரவலாக விருத்தியடைந்து 1960ஆம் ஆண்டில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் வரை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம்வரை நீடித்தது. இவ்வாறே அரசாங்கம் ஒரு பக்கமும் மதப்பிரிவு மறுபக்கமுமாகக் கல்வியில் பங்காளிகளாயின.

இங்கு நாம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இரு பெரும் மகான்களை நன்றியுடன் நினைவுகூர வேண்டும். திரு.S.ராஜரட்ணம் (சைவ வித்தியா விருத்திச் சங்கம்), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவர்கள் இந்துமத மாணவர்களுக்கு இந்துமதப் பின்னணியில் கல்வி புகட்ட பெருமளவு பொறுப்பாக இருந்துள்ளனர். நாவலர் பெருமான் தன் இளம் பிராயத்திலேயே மொழிக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றுவதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாக வரித்துக் கொண்டவர். பல தமிழ்ப் பாடசாலைகளை ஸ்தாபித்தார். ‘‘தமிழ் வசன நடையின் தந்தை’’ எனக் கூறப்படும் நாவலர் பெருமானின் கடின உழைப்பிற்கும் விடாமுயற்சிக்கும் காணிக்கையாக இப்பாடசாலைகளில் அநேகம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதே சான்றாகும்.

1945இல் இலவச கல்வித்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. இவ்வாண்டு ஒக்டோபரில் இருந்து கல்விக் கட்டணம் ரத்துச் செய்யப்பட்டது. 1947இல் கல்வி மொழியாக சுயபாஷை (சிங்களம் அல்லது தமிழ்) மாற்றம் பெற்றது. 1959ஆம் ஆண்டில் இருந்து சர்வகலாசாலை பிரவேசப் பரீட்சைகள் சுயபாஷையில் நடைபெற்றன. மதசார்பான பாடசாலைகள், கல்வி அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் மாற்றம் பெறுவது 1960 டிசம்பரில் நடைபெற்றது. பாடசாலை அதிகாரத்தை அரசாங்கம் கையேற்பது 1963இல் இருந்து நடைமுறைக்கு வந்தது. 1975இல் ஆரம்ப பாடசாலை நிர்வாகம் மேல்நிலைப் பாடசாலையில் இருந்து பிரிந்து போனது. இம்மாற்றங்கள் அனைத்திற்கும் ஈடுகொடுத்துக் கல்வியிலும் சரி, பாடத்திட்டத்திற்கு மேலதிகமான செயற்பாடுகளிலும் சரி மிகத் திறமையான பெறுபேறுகளைக் கல்லூரி பெற்றது.

1945இற்கு முன் ஆங்கிலமொழி மூலமான உயர்கல்வி பணம் படைத்தவர்களின் தனி உரிமையாக இருந்து வந்தது. சர்வகலாசாலைக் கல்வி சராசரி வருமானம் உள்ளவர்களுக்குக் கூட எட்ட முடியாதிருந்தது. ஏழை மக்கள் இடைநிலைப் பள்ளிப் படிப்புடன் திருப்தியடைய வேண்டியிருந்தது. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகப் படிப்பு வரையான இலவசக் கல்வித் திட்டம் அப்பொழுது “விலையுயர்ந்த முத்து’’ என அழைக்கப்பட்டது. ஏழைகளுக்கும் உயர் கல்விக்கான கதவுகளை இத்திட்டம் அகலத் திறந்துவிட்டது. ஐந்தாம் வகுப்பில் இருந்து சர்வகலாசாலை வரை உள்ள புலமைப்பரிசில் திட்டமானது இலவச விடுதி வசதிகளை ஏழை, உதவியற்ற, விவேகமுள்ள பிள்ளைகளுக்கு வழங்கியது. இது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இம் மாணவர்கள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இலவச சுயபாஷைக் கல்வி நிறைவான பயனை அளித்துள்ளது.

சைவசமயச் சிறார்கள் நெடுந்தூரம் நடந்து சென்று கல்வி கற்க வேண்டிய சிரமத்தையும், சைவசமயச் சூழலிலே சமயக் கல்வியைக் கற்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து பெரியார் E.செல்லையா அவர்கள் கிராமப்புறப் பாடசாலையாகிய கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையை 1910இல் ஸ்தாபித்தார். அப்பெரியாரின் தூரநோக்கின் விளைவாக கல்லூரி ஓங்கி வளர்ந்து கொக்குவில் மற்றும் அதன் அயற் கிராமப் பிள்ளைகளையும் கல்வியில் சிறந்து விளங்கச் செய்து கொக்குவில் கிராமத்துக்கு ஒரு தீபமாகவும் ஒளிவீசும் மணிமகுடமாகவும் திகழ்கின்றது. இன்றைய சூழலில் தூர இருந்து வந்து கல்வி கற்பவர்களுக்கும் கைகொடுத்து உதவுகின்றது.


ஸ்தாபகர் பெரியார் E.செல்லையா அவர்களின் பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கும். 2010இல் நூற்றாண்டு விழாக்கண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அதன் காவல் தெய்வம் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் அருளால் நிலைத்து, நிறைந்து, சிறந்து வளர வாழ்த்துவோம்.


**(திரு.செ.இரத்தினப்பிரகாசம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட** “Historical Background” **என்ற கட்டுரையின் ஒரு பகுதியானது திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, ஜெர்மனி பழைய மாணவர் சங்கத்தினரின் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலரில் வெளிவந்து தற்போது இம்மலரை அலங்கரிக்கின்றது.)**

*


## Principals with whom Teacher Sukirthalakshmy served in K.H.C. until retirement and their successors



E.Chelliah
1910-1926


S.Thiagarajah
1926-1928



M.Karthigesu
1928-1942



S.Seenivasagam
1943-1946


V.Nagalingam
1946-1949


S.Handy Perinbanayagam
1949-1960



C.K.Kanthaswami
1960-1971



C.Gunapalasingam
1971Jan-1971May



P.S.Cumarasamy
1971-1972



M.Mahadeva
1972-1980


A.Panchalingam
1980-1991


R.Mahendran
1991-1996


T.Kanesapillai
1996 Jan-1996 Sept


P.Kamalanathan
1996-2007


S.V.Mahendran
2007 May-2007 Sept


A.Ahiladas
2007-Up to Date



# எங்கள் சுகிர்த ரீச்சர்


எனது வீட்டுச் சுவாமி அறையில் நாளாந்தம் காலை நான் வணங்கும் போது தோன்றும் நடமாடும் தெய்வங்களில் என்னை வழிப்படுத்திய சுகிர்த ரீச்சரும் தோன்றுவார். தெய்வநிலையில் மதிக்கத்தக்க எங்கள் ஆசிரியை கொக்குவில் இந்துவுடன் இரண்டறக் கலந்தவர். கொக்குவில் இந்துவின் வரலாறும் அவரின் வரலாறும் பின்னிப் பிணைந்தவை. ஆயிரம் பிறை கண்ட எங்கள் ஆசிரியை இவ்வுலகில் 88 வயதுவரை வாழ்ந்தார். கல்லூரியும் 100 வயதை நிறைவு செய்து பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது. கல்லூரி உயர்வுக்கு உழைத்தவர்களில் சுகிர்த ரீச்சரும் உன்னத நிலையில் உயர்ந்து நிற்பதோடு கல்லூரி வாழும் காலம் வரை அவரின் நாமமும் உச்சரிக்கப்படும், போற்றப்படும், பூசிக்கப்படும்.

கொக்குவில் கிராமத்தில் புகழ்பூத்த குடும்பத்தில் செப்ரெம்பர் 30, 1923 இல் பிறந்த எங்கள் சுகிர்த ரீச்சர் தந்தையார் செல்லையா தபாலதிபரின் வழிகாட்டலிலும், தாய் முத்தாச்சி அம்மையாரின் அருளாட்சியிலும், சகோதரர்களுடைய வழிநடத்தலிலும் 1927இல் கொக்குவில் இந்துவில் மழலையாக நுழைந்து 1937 வரை கற்றுத்தேறி, கல்விப் பணியைக் கடவுள் பணியாக மேற்கொண்டு 1942இல் புனிதமான ஆசிரியப் பணியை ஏற்று 1983 வரை மூன்று சந்ததிக்குக் கல்வியூட்டிய தாயாகக் கொக்குவில் இந்து சமூகத்தால் போற்றித் துதிக்கப்படுகின்றார். அவரது சேவைப் பணிபற்றிக் குறிப்பிடுவதில் உள்ள பெருமையானது :

- முதலாவது அதிபரை ஞானகுருவாகக் கொண்டு
- இரண்டாவது அதிபர் காலத்தில் மாணவியாகவும்
- மூன்றாவது அதிபர் காலத்தில் மாணவியாகவும், ஆசிரியராகவும்
- 4, 5, 6, 7, 8, 9, 10ஆம் அதிபர் காலத்தில் ஆசிரியராகவும்
- 11ஆம் அதிபர் காலத்தில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும், பழைய மாணவியாகவும்
- 12 இல் இருந்து 16ஆம் அதிபர் காலத்தில் பழைய மாணவியாகவும் இருந்தமையாகும்.

கொக்குவில் இந்துவில் சுகிர்த ரீச்சர் தன்னைப் படிப்பித்த ஆசிரியர்களோடு உடன் கற்பித்தவர். தன்னுடன் கற்றவர்களுடன் ஆசிரியராகக் கற்பித்தவர். தான் கற்பித்த மாணவர்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றியபோது அவர்களுடன் கற்பித்த பெருமைக்குரியவர். கல்லூரியின் பெயரை (கொக்குவில் இந்துவை) நாளும் உச்சரித்த பெருமைக்குரியவர். கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்குப் பிரதம விருந்தினராகத் தம்பதிகளாக வருகைதந்து, அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்தவர். நாம் எல்லோரும் அவருடைய பாதம் தொட்டு வணங்கி, ஆசீர்வாதம் பெற்றதில் கொடுத்து வைத்தவர்களானோம். நிறைவாகக் கல்லூரித் தாயை


**திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி வலயம்

உச்சரித்தபடி கல்லூரி நிகழ்விலேயே இறுதியில் கலந்ததோடு செப்ரெம்பர் 08, 2011 இல் இறைவன் அடியை அடைந்தார்.

1965இல் முதன் முதலாக எங்கள் சுகிர்த ரீச்சரை கொக்குவில் இந்துவில் மாணவனாகச் சந்தித்ததில் இருந்து 2010ஆம் ஆண்டு கல்லூரி நூற்றாண்டு விழா நிறைவில் கண்டேன். ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன் கண்ட அதே அழகு, பண்பு, பாரம்பரிய ஆடை, அணிகலன், தோற்றப் பொலிவு, இனிமையாக உரையாடும் சுபாவம், நிறைந்த ஞாபக சக்தி, நிதானம் ஆகிய எல்லா நல்ல பண்புக் கூறுகளும் நிறைந்த ஆளுமை மிக்கவராக அவரைக் கண்டதில் ஆனந்தம் அடைந்தேன். ஆரம்பம் முதல் இறுதிவரை ஒரே சுபாவம் கொண்டவராக எங்கள் ஆசிரியை வாழ்ந்துள்ளார். அவருடைய வாழ்வு எங்கள் வாழ்விற்கு வழிகாட்டுவதாக, வழிப்படுத்துவதாக, வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

எனக்குக் கணித பாடத்தைக் கற்பித்த தாய். கணிதத்தைக் கற்கண்டாக இனிக்கச் செய்தவர். இன்றைய அறிவுமைய நூற்றாண்டில் கணிதக்கல்வியை மேம்படுத்த மேற்கொள்ளும் நுட்ப முறைகள் எவையெவையென ஆய்வு செய்கின்றார்கள். பல அறிஞர்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடுகின்றார்கள். அன்று எங்கள் ஆசிரியை மிகவும் அற்புதமாக தனியாள் நிலையறிந்து எமது பலம், பலவீனம் என்பவற்றை அறிந்து அவரவர் நிலைக்கு ஏற்ப இறங்கி எல்லோரையும் பாடத்திற்கு அழைத்துச் சென்றவர். அவருடைய கணிதபாடக் கற்பித்தலில் முழு நேரமும் மாணவர் செயற்படுவதற்கு நேரம் ஒதுக்கியவர். "கூலியாளுடைய வியர்வை காய்வதற்கு முன் கூலி வழங்குவது போல'' கணக்குத் தருவார். கணக்குச் செய்து முடியும் முன் ஒவ்வொருவர் இடத்திற்கும் வந்து கொப்பியை வாங்கிப் பார்த்து மிக மகிழ்ச்சியாக சிவப்புப் பேனாவால் பெரிய சரி போட்டு நன்று, மிகநன்று எல்லாம் இட்டு, அழகாக ஒப்பமிட்டு எம்மை மகிழ்வித்தவர். நிறையச் சரி வாங்கவேண்டுமென்ற ஆவலில் எல்லோரும் கணக்கை நிறைவாகச் செய்ததோடு சுகிர்த ரீச்சர் போட்ட சரியைப் போட்டி போட்டு எண்ணுவதில் பெருமை பெற்றோம். இன்று கல்வியில் வெகுமதியளித்தல் என்ற செயற்பாட்டை அன்றைய எங்கள் ஆசிரியை கையாண்டவர். எங்கள் ஆசிரியை கணித பாடத்துடன் மட்டுமன்றி தமிழ், வரலாறு, ஆங்கில மொழி ஆகிய பாடங்களையும் மகிழ்வாகக் கற்பித்தவர். வகுப்பறையை மகிழ்ச்சிக்குரிய இடமாக மாற்றியவர். மகிழ்ச்சியோடு கற்பது ஒருபோதும் மறப்பதற்கில்லை என்பதுடன் இன்னும் பல விடயங்கள் எனது நினைவில் உண்டு. "பாடசாலை வாழும் இடம்'' என்ற தத்துவத்திற்கேற்ப எங்கள் ஆசிரியையிடம் கணிதம் கற்றதோடு வாழ்க்கை முறையையும் கற்றுக் கொண்டோம்.

அவருடைய நடை, உடை, பாவனை மிக எளிமையானது. மிக்க தூய்மை நிறைந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரு கலவன் பாடசாலை. அன்றைய நிலையில் பெண்கள் மகளிர் கல்லூரியில் மட்டும் கற்ற காலம். அத்தோடு பெண் பிள்ளைகள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் அடுத்த வீடு தெரியாது பெற்றோருடைய அரவணைப்பில் மிகப் பொறுப்புடன் வாழ்ந்த காலம். எனவே வீட்டுச் சூழலில் இருந்து பாடசாலை வந்த பெண் பிள்ளைகளை மிகப் பக்குவமாக, பண்பாக, சமூகம் விரும்பும் நல்ல தூய்மையுள்ளம் மிக்கவர்களாக வளர்த்தெடுத்ததில் ரீச்சரின் பங்களிப்பு போற்றுதற்குரியது. அன்று பெண் பிள்ளைகளுக்குக் கல்வியுடன் வாழும் கலைப் பயிற்சியும் வழங்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக அன்றைய ஆசிரியைகளுடைய இனிமையான உரையாடலும், உயர்வான வாழ்வை வாழ்ந்து காட்டியமையும் கல்லூரியில் கருத்து வேறுபாடின்றி கல்வியே உயர்வு எனவும் கடமையே கண் எனவும் போற்றியமையும் குறிப்பிடத்தக்கன. பதவிப் போட்டியில்லை. ஒருவரையொருவர் குறைகூறும் பழக்கம் இல்லை. பாடசாலையில் கட்சியில்லை. அங்கத்தவர் சுகதுக்கங்களில் கொக்குவில் இந்துக் குடும்பம் பங்குபற்றும் பண்பு எல்லோராலும் பாராட்டுப் பெற்றது. ஆசிரியர் ஓய்வறையில் அறிவியல் சம்பந்தமான நல்ல விடயங்கள், கல்வி மேம்பாடு என்பன பற்றி எல்லோரும் கதைத்து மகிழ்ந்தனர். நிறைவாகப் பெண் ஆசிரியர்கள் நிறைந்திருந்தார்கள். யாவரும் நிறைகுடங்களாக இருந்தனர். ஆசிரியர் அறை அழகாக இருக்கும். ஆசிரியைகள் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதைப் பார்ப்பதன் மூலம் மாணவிகள் நல்ல பல விடயங்களைப் பழகிக் கொண்டனர். நல்ல வார்த்தைப் பிரயோகத்தை உச்சரிப்பர். மறந்தும் ஒருபோதும் மற்றவர் மனம் நோகுமாறு ஆசிரியர்கள் வார்த்தைகளை உச்சரிக்க மாட்டார்கள். ஆசிரியர்கள் மாணவர்களைக் கண்டிக்கும்போதுகூட அழகான, இரக்கமான சொற்களையே உச்சரிப்பர். பாடசாலையில் நடைபெறும் விழா ஏற்பாடுகள், ஒத்திகைகள், பயிற்சி, விருந்தோம்பல், விட்டுக் கொடுக்கும் பண்பு, தலைமைத்துவப் பண்பு, பொறுப்பேற்றுக் கொள்ளும் மனப்பாங்கு இவையாவும் அன்றைய மாணவிகள் அற்புதமாகப் பெற்றிட அரும்பாடுபட்ட ஆசிரியைகளில் சுகிர்த ரீச்சரின் வகிபங்கு முக்கியமானதும், போற்றுதற்குரியதுமாகும். "குடும்பம் ஒரு கோயில்", "குடும்பம் ஒரு கதம்பம்", "நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்'' என்பதற்கமைய அவர் தான்

வளர்ந்த குடும்பத்தைக் கோவிலாக்கினார். தான் வாழ்ந்த கொக்குவில் இந்துக் குடும்பத்தையும் கோவிலாக்கினார். தான் கற்பித்த பிள்ளைகளது குடும்பங்களையும் கோவிலாக்கினார்.

அவருடைய எளிமைக்கு எடுத்துக்காட்டாகப் பாடசாலையில் படிக்கும் காலத்தில் புத்தகங்களை எப்படி நெஞ்சில் அணைத்துக் கொண்டு வந்தாரோ அதுபோலவே ஆசிரியராகக் கடமையாற்றிய காலங்களிலும் கோவைகள், புத்தகங்கள், கொப்பிகள் யாவற்றையும் எடுத்து வந்த காட்சியானது இன்றும் எமது கண்முன் நிற்கிறது. எங்கள் ஆசிரியை விதவிதமான அழகிய புதிய கைப்பை (Hand bag) கொண்டு வருவதை நான் காணவில்லை. முதன் முதல் 1965இல் நான் கண்ட சுகிர்த ரீச்சரின் எளிமையான, அன்பான அழகையே 2010இலும் கண்டேன்.

எங்கள் சுகிர்த ரீச்சர் கணிதத்தில் பல நிறுவல்களை நிறுவியது போலவே "பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்" என்ற தத்துவத்தையும் நிறுவினார். அவரும் அவருடைய அன்பான, பண்பான சுப்பிரமணியம் ஐயாவும் பெற்றெடுத்த அரும்பெரும் பிள்ளைச் செல்வங்களும், மருமக்களும் கல்வியில் உயர்ந்து உன்னத வாழ்வு வாழ்கின்றார்கள். இங்கு அவருடைய அன்பில், அரவணைப்பில் வாழ்ந்த அவரது பெறாமக்கள் ஆசிரியர் திருக்குமார், தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் விஜயகுமார், ஆசிரியை ஞானகுமாரி யாவரும் கொக்குவில் இந்து அன்னையைப் போற்றி வணங்குகிறார்கள், சிறியதாயை வாழ்த்துகிறார்கள்.

எங்கள் சுகிர்த ரீச்சர் சிறுவயதில் கொக்குவில் இந்துவிற்கு அன்று "விருத்தம்" பாடி செல்வம் சேர்த்தார். பின்பு ஓய்வு பெற்றபின் திரைகடலோடி புலம்பெயர் நாடுகளில் கல்லூரித் தாய்க்குப் பெருமளவு நிதி தேடித் தந்தார். கொக்குவில் இந்துவில் என்ன வளம் இல்லை எனக் கல்வியியலாளர்கள் கூறும் அளவிற்கு கல்லூரி மிகவும் சிறப்பாக சகல வளமும் நிறைந்து காணப்படுகிறது. எங்கள் சுகிர்த ரீச்சர் கொக்குவில் இந்துவிற்குக் கல்விக் கடாட்சத்தையும், லக்ஷ்மி கடாட்சத்தையும் நிறைவாகத் தந்து மகிழ்ந்தார்.

அவருடைய அருட்கடாட்சம் கிடைத்த, அவரிடம் கற்ற கொக்குவில் இந்துவின் மைந்தர்களாகிய நாம் எமது அன்னையாகிய சுகிர்த ரீச்சரை வணங்கி அவருடைய ஆத்மா எங்கள் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் பாதங்களிலிருந்து கொக்குவில் இந்து அன்னையை ஆசீர்வதித்து ஆற்றுப்படுத்த வேண்டிப் பிரார்த்திப்பதோடு எனது குருவை நினைக்க, உச்சரிக்க, எழுத வாய்ப்புத் தந்த ரீச்சரின் குடும்பத்திற்கு நன்றி கூறுகின்றேன்.

> The greatest happiness of life is the conviction that we are loved - loved for ourselves, or rather, loved in spite of ourselves.
>
> *-Victor Hugo*

*



## Sukirtha Teacher
### – A Role Model

She came, she conquered, she loved and she was loved by one and all. She was "Sukirtha Teacher" to all the past students of Kokuvil Hindu College. She was an institution, an outstanding conscientious teacher. She excelled in teaching English, Tamil and Mathematics.

A methodical teacher, a perfectionist and a disciplinarian. She was a role model and a mentor to many students and teachers. She was an embodiment of calmness and peace.

Her contribution to Kokuvil Hindu College is immeasurable. A legend and an icon of her Alma Mater.

We discard our old clothes
And humans go in for new ones
The soul departs from the aged body
And seeks a new one.

-Gita

May her soul rest in peace

**V.Ganeshalingam (Sydney, Australia)**

Former student, teacher

Kokuvil Hindu College

# கல்லூரித் தாயவளின் காவிய வித்தகி



அன்னையே!
எங்கள் அறிவாலயம் சுமந்திட்ட
அமுதமே.....
அறிவெனும் சுடரேற்றி.....
அன்பெனும் நெய்யூற்றி.....
அணையாது வாழ்ந்திட்ட தீபமே நீ
அணைந்ததும் ஏனம்மா?

சாதனைகள் சுமந்தவள் நீ
அதனால்,
சரித்திரமும் ஆனவள் நீ நாம்
வேதனைகள் படவோ
விண்ணுலகம் நீ புகுந்தாய்.

போதனைகள் செய்தவள் நீ
அதனால்,
போதிமரம் ஆனவள் நீ
மேதைகளை, மேன்மையுறு மானிடரை
வேதமென உலகிற்குப்
பேதமின்றித் தந்தவள் நீ

அம்மா... அம்மா...
காவியமாய் நிலைத்திட்ட அதிசயமே...
கல்லூரித் தாயவளின் ஆச்சரியமும் நீயே
லக்ஷ்மி எனும் நாமம் தாங்கிய
கலைமகளே..!
முப்பெரும் சக்தியும்
முனைப்புற்ற தூயவளே.
விலைபேச முடியா மாணிக்கமே இன்று
நிலையற்றுத் தவிக்கின்றோம்
நீயின்றி நாங்களம்மா.

அலைபோலே வந்து
அரவணைத்த கரங்கள்...
ஆழ்கடலாய் அமைதியாய்
ஆனதும் ஏனம்மா?
ஆரிடம் நாம் சொல்வோம்?
யாரொடு நோகோம்?
பேரிடியாய் வந்த செய்தி நீ
பிரிந்தாய் என்றே.
நம்புமா எம் நெஞ்சம்
நம்தாயே எங்கு சென்றாய்?

நூற்றாண்டு காண
ஓடோடி நீ வந்து
ஏற்றமாய் உரைத்த
இனிய வார்த்தையெல்லாம்
தேற்றமாய் நம்செவியில்
தேனாய் ஒலிக்குதம்மா
ஆற்றிய சேவைகள்
அளப்பெரும் பணிகள் எல்லாம்
போற்றாதார் யாருள்ளார்?
புகழாதார் எங்குள்ளார்?

கல்வியே கருந்தனம் என்று
அல்லும் பகலும் அயராது
உழைத்தவளே....
எல்லா மாந்தரும் நிலையில் உயர்ந்திடவே
வல்லமை தந்திடும் சக்தியும் ஆனவளே.

உற்றவளே.... எம் உறவே.....
உயிரே....
உணர்வான தாயவளே.....
ஏற்றிய விளக்காகி
ஏணியாய்ச் சுமந்தவளே!

தோற்றுவதும் மறைவதும்
தொல்லியல்பு நாமறிவோம்
எனினும்
தேற்றுவாரின்றித்
தவிக்கின்றோம் நாம் அம்மா.
ஆற்றவில்லை உம் இழப்பு
அன்னையே எங்கு சென்றாய்?

கற்ற கல்வியைக்
கலைமகள் கேட்டறிய
கற்பிக்கச் சென்றனையோ?
இல்லை.......
கயிலை மலை வாழும்
கண்டத்து ஈசனிடம்
வேதம் கற்றிடவே
விண்ணகம் புகுந்தனையோ?
இல்லை....
உன்னைப் போல் உத்தமிகள்
விண்ணகத்தில் இல்லையென்று
உயர்கல்வி சொல்ல
விண்ணுலகம் சென்றனையோ?

மாதவம் செய்த நல்ல
மங்கையர் திலகமே.....
சரிந்த பின்னும் மணம் வீசும்
சந்தன மரமே.....

விரிந்த நல் அறிவும்
விளங்கிடும் புன்னகையும்,
பரிந்த நல் அன்பும்,
பழகிடும் தாய்மையும்,
புரிந்த நின் சேவைகளும்
பொக்கிசமாய் இங்கே
பிரிந்தாலும் எம் நெஞ்சில்
பிரியமாய் இருக்குதம்மா.

நீரின்றி உலகும் நிலைபெறுமோ?
வேரில்லா மரமும்
விழுதெறியுமோ?
தேரில்லாத் தெய்வமும் திருவீதி
காணுமோ?
யாமும் அதுபோல்
நீயின்றித் தவிக்கின்றோம்
நின் இழப்பு பொய்யென்று
மீண்டுமொரு செய்தி
மின்னலாய் வந்திடாதோ?

தூயவளே எம்தாயே.....
கல்லூரி வளர்ச்சியே
கனவிலும் கண்டவளே..... உன்
கனவுகள் மெய்ப்பட உன்
கருமங்கள் செயற்பட
உன்பணியில் நாமும்....
உன்வழியில் நாமும்.....

கால்பதித்து நடப்போம்
உறங்காது நாம் உழைப்போம்.

ஆண்டவன் அருங்கழலில்
அணையா வாழ்வு பெற்றே,
அம்மையே நினதான்மா
பெறுகவே சாந்தி......
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ச.சந்திரசேகர்**
முன்னாள் மாணவன், ஆசிரியர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



# என்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும்
# திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்
# (சுகிர்த ரீச்சர்)

**தி**ருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் (சுகிர்த ரீச்சர்) அவர்களும் நானும் சமகாலத்தில் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையில் (KOKUVIL HINDU ENGLISH SCHOOL) கல்வி பயின்றோம். வியாபாரிமூலை புலோலியைச் சேர்ந்த அமரர் திரு.முருகேசு கார்த்திகேசு (1st Class English Trained) அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தார். அப்போது தமிழ், சமயம் ஆகிய இரு பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்கள் ஆங்கில மொழியிலேயே போதிக்கப்பட்டன. சுகிர்த ரீச்சர் என்னிலும் ஒரு வகுப்பு முன்னிலையில் இருந்தார்.

கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை 1941ஆம் ஆண்டு "கொக்குவில் இந்துக் கல்லூரி" என தரம் உயர்த்தப்பட்டு SENIOR SCHOOL CERTIFICATE, LONDON MATRICULATION பரீட்சைகளுக்கான வகுப்புகள்வரை கல்வி போதிக்கப்பட்டது. ஏற்கெனவே அங்கு தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.கார்த்திகேசு அவர்களையே கொக்குவில் இந்துக் கல்லூரியின் முதல் அதிபராகவும் நியமித்தார்கள்.

சுகிர்த ரீச்சர் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயிலும்போது சிறந்த மாணவியாகவும், சாந்தகுணமுடையவராகவும், ஒழுக்கம், கட்டுப்பாடு உடையவராகவும் மிளிர்ந்தார். இவை மட்டுமன்றி சகமாணவர்களினதும், ஆசிரியர்களினதும் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமானவராகவும் திகழ்ந்தார். இத்தனை பண்புகளையும் தன்னகத்தே கொண்ட சுகிர்த ரீச்சர் அவர்களை அதிபர் திரு.M.கார்த்திகேசு அவர்கள் விருப்பத்தோடு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஓர் ஆசிரியையாக நியமித்ததில் வியப்பேதும் இல்லை. சுகிர்த ரீச்சர் அவர்கள் ஆசிரியையாகப் பணிபுரிந்து கொண்டே தன் படிப்பைத் தொடர்ந்து B.A.(Lond.) பரீட்சையில் சித்தியடைந்து பட்டதாரி ஆனார். அவர் பல்லாண்டு காலம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவியாய், ஆசிரியையாய், உபஅதிபராய் இருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றபின் தாய் மண்ணிலேயே கல்லூரிக்கும், பழைய மாணவர் சங்கத்திற்கும் சிறந்த சேவையாற்றி 1993ஆம் ஆண்டு முற்பகுதியில் கணவருடன் கனடா வந்து குடியேறினார்.

அச்சமயம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் கனடாவில் இருந்தனர். அவர்கள் ரீச்சரின் வருகையால் உற்சாகமடைந்து கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒன்றை கனடாவிலும் நிறுவ எண்ணி அதனை ரீச்சரிடம் தெரிவித்தார்கள். ரீச்சரும் அந்த ஆலோசனையை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அத்தருணம் நானும் என் பாரியாரும் விரைவில் கனடா வரவுள்ளோம் என்பதை அறிந்து எங்கள் வரவுக்காகக் காத்திருந்தார்கள். நாங்கள் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி கனடாவில் கால் பதித்தோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி ABIRAMI CATERING உணவகத்தில் நடைபெற்றது.

**சு.நாகலிங்கம்** (Canada)
முன்னாள் மூத்த பழைய
மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி



அக்கூட்டத்தில் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் (சுகிர்த ரீச்சர்) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் இப்பதவி யிலிருந்து அரும்பணியாற்றி சக நிர்வாகசபை அங்கத்தவர்களினதும், ஏனைய அங்கத்தவர்களினதும், கல்லூரி நலன் விரும்பிகளினதும் ஒத்துழைப்புடன் சங்கத்தினை ஓர் உயர்நிலைக்குக் கொண்டு வந்தார்.

ரீச்சரும் நானும் கொக்குவில் இந்துவில் மாணவர் களாக இருந்தபோது நெருங்கிப் பழகியதில்லை. ஆனால் நாங்கள் கனடா வந்தபின் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக இருந்த காரணத்தால் ஒருவருக்கொருவர் மிக நெருங்கியவர்களானோம். அப்போதிலிருந்து அவர் இறைவனடி சேரும்வரை அவ்வாறே இருந்தோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக்கிளை திறம்பட இயங்கி வந்ததென்றால் சுகிர்த ரீச்சர் அவர்கள் நடுநாயகமாக இருந்து வழிநடத்தியதே அதற்கான காரணமெனலாம். பெரும்பாலான பழைய மாணவர்கள் அவரிடம் கல்வி பயின்றவர்கள், அல்லது அவரது காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவர்களாக இருந்தவர்கள். அவர்கள் எல்லோரும் ரீச்சரை நன்கு அறிந்தவர்கள். சங்கத்தின் கூட்டங்களின்போது அபிப்பிராய பேதங்களினால் விவாதங்கள் எழும்போது அவர்கள் மௌனமாக இருந்துகொண்டு விவாதம் செய்பவர்களின்பால் பார்வையைச் செலுத்தினால் போதும் எல்லாம் தணிந்துவிடும். பழைய மாணவர்கள் ரீச்சரின்மீது அவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள்.

கனடாவிலுள்ள கொக்குவில் இந்து பழைய மாணவர்களுக்கு சுகிர்த ரீச்சர் ஒரு தகவல் நிலையமாக விளங்கினார். இங்குள்ள பழைய மாணவர் ஒருவரைப்பற்றி அறிய விரும்பினாலோ அல்லது அவரைத் தொடர்புகொள்ள விரும்பினாலோ ரீச்சரைக் கேட்டால் உடனடியாக சகல விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிதாக பழைய மாணவர் ஒருவர் கனடா வந்துவிட்டால், உடனே என்னைத் தொடர்பு கொண்டு அவர் எப்போது வந்தார், எங்கு தங்கி உள்ளார், அவருடன் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம், அவர் வந்த காரணமென்ன, அவர் எப்போது திரும்பிச் செல்கின்றார் என்ற சகல விபரங்களையும் சொல்லிவிடுவார்.

கனடா பழைய மாணவர் சங்கத்தினால் பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்காக வருடாவருடம் நடாத்தப்படும் கல்விசார் போட்டிகளை ரீச்சர் தலைமை தாங்கி நடாத்துவார். வெளிக்கள ஒன்றுகூடலுக்கும் வருகைதந்து எல்லாம் சரிவர நடக்கின்றனவா என்று கவனித்துக் கொள்வார். அவர் ஓய்ந்து ஒரு இடத்தில் இருக்கமாட்டார். சதா சுற்றித் திரிந்து கொண்டு அங்கு நடப்பவைகளைக் கண்காணிப்பார். அங்கு வருகை தந்திருக்கும் பழைய மாணவர்களை தனித்தனியாகச் சந்தித்து உரையாடி அவர்களை மகிழ்விப்பார்.

2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி ஸ்காபரோவிலுள்ள Milliken parkஇல் நடைபெற்ற வெளிக்கள ஒன்றுகூடலின்போதும் கல்லூரிக் கொடியை அவரே ஏற்றி வைத்ததுடன் வழமைபோல அங்கு நடப்பவற்றைக் கண்காணித்து வந்தார். மதியபோசன இடைவேளையின்போது ஒரு வாங்கின் ஒருமுனையில் நானும் மறுமுனையில் ரீச்சரும் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டு இருந்தோம். பலர் உணவருந்திக்கொண்டு இருந்தார்கள். ரீச்சர் திடீரென எழுந்து அருகே இருந்த கொட்டில் பக்கம் விரைந்து நடந்தார். அதற்குப் பின் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் சடுதியாக கடும் சுகவீனமுற்றதன் காரணமாக மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல அவரது மூத்த புதல்வி சுகன்யாவும்

# தாங்கிடுமா நெஞ்சம்?

**எ**மது கல்லூரியின் அதிமூத்த பழைய மாணவியும், ஓய்வு பெற்ற புகழ் பூத்த ஆசிரியரும், பிரதி அதிபருமாகிய அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்ற தவப்புதல்வர்களில் முதன்மையானவராக எல்லோராலும் போற்றப்படுகின்ற பெருந்தகையாவார். மாணவர்களின் அன்பைப் பெற்ற அன்னார் கல்வி கற்ற காலம் தொடக்கம் இறைவனடி சேரும் வரை கனவிலும் நனவிலும் கல்லூரியின் உயர்வே தனது உயர்வெனக் கருதி அயராது உழைத்த உத்தமராவார். அம்மா அவர்கள் எமது நம்பிக்கை நிதியச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டி உறுதுணையாக இருந்தார். அவரைக் கௌரவிக்கும் முகமாக ஏற்கெனவே அவரது குடும்பத்தினர் நிதியத்திற்குப் பெருமளவு பங்களிப்பினைச் செய்துள்ளார்கள். அம்மா அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது.

கல்விச் செல்வத்தைக் கண்போன்று காத்திடவே
கலைமகளாய்க் காவியமாய்க் காட்சி தந்தீர்.
ஆண்டாண்டு காலமெல்லாம்
அரும்பணியால் உம்மைப் போல்
ஆற்றியவர் யாருளரோ? அவனியிலே அம்மா.
பிறந்து வளர்ந்திட்ட
கொக்கூர் மண்ணகத்தின்
பெருமை பல சிறந்திட
பெரும்பணி ஆற்றினீர் அம்மையே!
நும்பணியால் நும்வழியில்
பல்லாயிரம் மைந்தர்களை
பார் போற்ற உயர்த்தி வைத்தீர்.
அறிவுக் கண் திறந்து அயராது உழைத்த
அன்னையே உம் இழப்பை
அறிவுள்ளோர் தாங்குவரோ அம்மா?
தள்ளாத வயதிலும் தளர்ந்து சாயாமல்
எல்லாமே அன்னையென்று
நூற்றாண்டு விழாக்காண
நொடிப் பொழுதில் நீர் வந்தீர்
நூற்றாண்டு மேடையிலே கலைமகளாய்
மேன்மையுற வீற்றிருந்து
சிந்திய பேச்சுக்கள்
தேனாகச் செவிதன்னில்
தெவிட்டாமல் கேட்குதம்மா...
கண்விழிகள் கலங்குதம்மா
கனலாக நெஞ்சமெல்லாம்
கனன்றே கொதிக்குதம்மா...
கல்லூரிப் பிள்ளைகளின்
கவினுறு வளர்ச்சிக்கு
நின்னோடு நின்குடும்பமெல்லாம்
வள்ளலாய் மாறியிங்கே
வான் மழை போல் நிதி தந்தே
எல்லாமாய் எமக்குள் இருந்ததை மறப்போமா?
நீ இல்லை எனும் போது
நின்றதோ எம் இதயம்
தாயே என் செய்வோம்?
தாங்கவில்லை எம் இதயம்
தலைமகட்கு வந்தனங்கள்
தந்து தாள் வணங்குகின்றோம்.



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் பாதாரவிந்தங்களை வேண்டிப் பணிகின்றோம்.

**–கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம், கொக்குவில்**

---

மருமகன் ரகுவும் முற்பட்டபோது தனது இயலாத நிலையிலும் நிகழ்ச்சிகள் நிறைவுறும்வரை பூங்காவை விட்டு வெளியேற மறுத்துவிட்டார் எனவும் நிகழ்ச்சிகள் முடிவடைய சிறிது நேரம் இருக்கும்போதே வைத்தியசாலைக்குச் செல்ல சம்மதித்தாரெனவும் பின்னர் வைத்தியசாலையில் உடனடியாகவே தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார் எனவும் அறிந்தேன்.

வெளிக்கள ஒன்றுகூடல் முடிவடைந்து இரண்டாம் நாள் எனது பாரியாருடன் Switzerland சென்றுவிட்டேன். அங்கு இருக்கும்போது ரீச்சர் செப்ரெம்பர் 8, 2011 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தியை எனது புத்திரன் ரஞ்சிற்குமார் லண்டனிலிருந்து தெரிவித்தபோது நானும் எனது பாரியாரும், எனது மகளும் அவர் கணவனும் (அவர்களும் ரீச்சரிடம் கல்வி பயின்றவர்கள்) அதிர்ச்சியடைந்து துக்கசாகரத்தில் மூழ்கினோம்.

அன்னாரின் மறைவு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், கனடா பழைய மாணவர் சங்கத்திற்கும் மாத்திரமல்ல, கொக்குவில் சமுதாயம் முழுவதற்குமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். ரீச்சர் ஓர் அபூர்வப் பிறவி, மாந்தருள் ஒரு மாணிக்கம், எனது உடன் பிறவாச் சகோதரி. கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் ரீச்சரை அழைத்து அவரின் சேவைக்காகப் பொன்னாடை போர்த்தி கௌரவித்துக் கொண்டதன் மூலம் கல்லூரி தன் வரலாற்றில் தனக்கும் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை எனலாம். பழைய மாணவர் சங்க கனடாக் கிளையும் ரீச்சரின் இறுதிக் கிரியை சிறப்புற நடைபெற ரீச்சரின் பிள்ளைகளுக்கு உறுதுணையாக நின்று செயலாற்றியதன் மூலம் தன் கடமையையும் செய்து தன் வரலாற்றிலும் தடம் பதித்துக் கொண்டுள்ளதும் இங்கு குறிப்பிட வேண்டியதொன்றே.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*



# A distinguished Kokuvilite

Memories that remain green for a while disappear with time. Drifting backwards on time, I recall having met Sukirthalakshmy, a sweet young girl, first in 1937 as a member of the team of over twelve children who were taken by the school for "Virutham Paduthal" during Navarathri. Two teachers Sambanthar and Cumaraswamy accompanied the children in those visits, by prior arrangement, to houses of parents and well-wishers of the school. Four others and I, from 3rd standard were in Sambanthar group (Tamil School) while Sukirthalakshmy and a few others were in Cumaraswamy group (English School). The two groups formed the team which was specially trained. Sukirthalakshmy the pretty modest girl, dressed in skirt and blouse, led the chorus that commenced with an invocation to Lord Ganesha and was followed by Navarathri songs. She knew her music and sang well. Her contribution to the chorus was significant. The singing lasted over half-an hour, after which all children were feasted by the hosts and donations to the school were handed over to the leader. Funds so raised then increased the slender resources of the school. That was a time when government grants and teachers' salaries were very low. The children enjoyed these visits which were an annual feature in the school calendar in its early years. But in the succeeding years we badly missed Sukirthalakshmy as she had left to join Ramanathan College having passed the J.S.C. exam that year from Kokuvil Hindu College (K.H.C.) where she had been a student for ten years (1927-1937).

I joined the English School in 1939 in the 1st year class. With annual promotions I had risen up to the 6th standard in K.H.E.S. in 1942 when Sukirthalakshmy returned to K.H.C. as a teacher having been successful in the London Matriculation examination in 1940, from Ramanathan College. There was stiff competition in filling this vacancy at Kokuvil. Amongst the candidates, one was the son of an intimate friend of the Head Master M. Karthigesu, and another was closely connected to the management. Both these candidates were resident in the vicinity of the school and were with Inter Arts qualifications. However the board, without yielding to pressures, appointed the candidate (Sukirthalakshmy) recommended by the Head Master of the school. May be it was Sukirthalakshmy's luck or was it Devine Will. Her genuine dedication and devotion to K.H.C. till she breathed her last confirms that she had not belied the expectations of those responsible for her appointment in 1942. Her selection created a stir in the neighbourhood and the Head Master's explanation was that the school had to increase its lady teachers to meet the demand for admission of girl students in a co-education school.

As a secondary school teacher Sukirthalakshmy was really good in teaching Latin which is now a dead language. She had qualified in Latin in both Inter Arts and B.A. examinations. She was therefore assigned to teach Latin in my 6th, 7th and 8th form classes. Three periods in a week were allocated to the study of Latin. Students had no choice. Latin, they say helps to acquire proficiency in English. One could not then enter Medical College or Law College without a pass in Latin in the London Matriculation examination. To

**S. Ratnapragasam**
Colombo
Former student
Kokuvil Hindu College



most students in our class Latin was a subject as dry as dust. But I was her favourite student as I faithfully completed my home work and memorized the assigned portions. Over the years she had mastered the art and ability of imparting her knowledge to her students. She was noted for promptly correcting students' work-books. She seldom or never admonished a child in person. But her adverse comments and advice to the students can be seen only in her remarks in work-books. That was a time when visiting school inspectors assessed the teacher's performance by questioning the class in the subject taught and by making random checks on work-books. She maintained unequivocal rapport with the staff, parents and others.

Head master Karthigesu who raised K.H.E.S. to collegiate status in 1941 retired as its Principal in 1942. The school held a well attended grand function at the college quadrangle along Station Road. The farewell address was delivered in English by senior teacher S.C. Thillainathan and the farewell song in Tamil was melodiously sung by two senior girls, Sukirthalakshmy Chelliah and Gnanambikai Gnanasuntharam. A drama by school children and tea followed. As a display of their gratitude to the retiring Principal, the general public of villages in and around Kokuvil and old students honoured him with a second grand function, the following week, and this was organized by S. Sangarasivam and S.K. Murugiah.

Sukirthalakshmy was a shining example of a teacher who continued to learn as she taught. She collected her B.A. Degree by private study. Amirthalingam, another teacher in the school, also joined her in combined study and both were rewarded with success. She was a devout Hindu steeped in the values and traditions of our ancient faith. Her brother C. Balasingam was popular in tunefully singing Thevaram at the school morning assembly in Chelliah Hall. She was also a popular teacher in Mathematics and Tamil. She was methodical in her ways and was deeply committed to the well-being of her students. She had a "watchful eye" for excellent behaviour and conduct of young girls in a co-educational institution. She knew the family background of a majority of the students in the school. Along with her five year old niece Jayadevi Balasundaram, she played a significant role in the school concert of 1947 which held performances in Colombo, Kandy and Matale in aid of the school building fund. In her 42 year record as a teacher in K.H.C. she had left behind a symbolic image of a prospective guardian and a foster mother to a continuing bevy of girls year after year. She led a disciplined life and expected students in her charge to do likewise. She spent her entire lifetime labouring hard and cheerfully co-operating with her Principals to build up Kokuvil Hindu College. Her teaching career was interwoven with the history and destiny of K.H.C.

In the school carnival and exhibition in 1950, she and two other teachers were in charge of the Arts and

## Sword Dance Group



*First Price Winners of All-Ceylon (Sri Lanka) dance competition in 1977*

## Music Group



*First Price Winners of All-Ceylon (Sri Lanka) music competition in 1977*

Crafts stall. They were also overlooking the arrangements for the dance recitals and other events put on stage at the college hall during the carnival week. Tamil classical dance as a fine art is expressive of the soul of a people; it is a consummation of all arts. She had a sustained interest in imparting the knowledge of music and dance with all its intricacies to students who opted for these disciplines. As evidence of the excellent performance of the participants, the college teams trained and led by Miss. Jegasoruby Rajadurai (dance teacher) and Miss. Shanthanayaki Supramaniam (music teacher) came out with flying colours in the all-Ceylon (Sri Lanka) dance and music competition held in 1977. She was the senior teacher in overall charge in presenting these children and bringing them back to college.

One of the best things that happened to "Sukirtha teacher" was the linking of her fate in matrimony with Kathirgamer Supramaniam, a Chartered Engineer (Civil and Water Management) from Araly in the year 1956. They led a happy married life and had five children. All of them are in good positions and are well settled in life. As a wife, in her own quiet way she saw to Supramaniam's every need and was the wind beneath his wings. She had the satisfaction that she was leaving behind good natured children.

Mrs. S. Supramaniam was made Deputy Principal of K.H.C. as from 1980. She had the opportunity to display her administrative talents and managed her portion of work efficiently to the admiration of the staff, students and parents. Having ably assisted Principal Panchalingam for three full years, she retired from the teacher's service in September 1983. She had served under nine of Kokuvil Hindu's Principals and everyone of them had a word of praise for her loyalty to the school. She spent ten years of retired life in Kokuvil and was an important member of the School Community. She immigrated to Canada in 1993 as all her children are living overseas. Like many others, circumstances forced her to leave her native Kokuvil to seek relative peace and serenity in Canada. Without opting for reclusive retirement in that country she motivated the organization of an O.S.A. in Canada in 1994, which has since made significant contributions to the college in providing for needy children's further higher studies.

She was conscious that the Colombo O.S.A. was a vibrant component of the school community from early 1940s. When she visited Sri Lanka on holiday, the Colombo O.S.A. honoured her with a felicitation dinner on September 5, 2001 at Hotel Holiday Inn, Colombo and presented her with a gold Medal and a certificate of appreciation of her services to K.H.C. even in retirement. After studying our Diamond Jubilee Souvenir of 2004 she sent me the following encouraging note:

"It is a wonderful book, replete with interesting details of the growth of K.H.C., its Principals, its staff, past pupils and all those who contributed to the "Success Story" of our beloved "Alma Mater". It thrilled me to read this book with its interesting anecdotes, narration of years gone by and its informative articles on key education and sport topics".

An excellent Tamil translation by her of the section

"Historical Background" in the above book had been carried in the Souvenir published by the O.S.A. in Germany where she went in March 2011 to celebrate K.H.C. Centenary (1910-2010) by the old students living there. I met Sukirtha teacher last at the Centenary celebrations in the college in Kokuvil on 18th July 2010 where I was assigned by the organizers to garland S.H. Perinbanayagam's picture when Mrs. Supramaniam honoured this humble self by covering with a silk shawl and showered her blessings on me. We exchanged greetings and left the stage. Finally she spoke to me over the phone in late April 2011 and inquired about Panchalingam's health condition expressing her grief. It never struck me then that she was to cast her mortal coil on 8th September that year to take refuge at the Lotus Feet of Lord Parameswara. She is a good example of that lyric poem by Longfellow:

**"Lives of great (wo)men all reminds us**
**We can make our lives sublime.**
**And, departing, leave behind us**
**Footprints on the sands of time;**
**Sailing o'er life's solemn main,**
**A forlorn and shipwrecked brother,**
**Seeing, shall take heart again"**

*

---

# ஆலமரமொன்று அடியோடு சாய்ந்ததம்மா!



ஆலமரமொன்று அடியோடு சாய்ந்ததம்மா
ஆணிவேரோடு அடியற்று வீழ்ந்ததம்மா
ஆரோக்கியமாக நிமிர்ந்து நின்ற ஆலமரம்
ஆதரவு பலவகையும் அளித்திட்ட ஆலமரம்
கோடைகால வெப்பத்திலும் குளிர் தந்த ஆலமரம்
கோடை ஒன்று கூடலிலும் குளிர் தந்த ஆலமரம்
சூறாவளி வந்து சுழன்றடித்த போதினிலும்
சுகமாகி வந்த சொத்தாகும் ஆலமரம்
குணமாகி வந்தெம்மைக் குளிர்வித்த ஆலமரம்
குடைசாய்ந்த செய்தியெமைக் கொல்லுதன்றோ உயிரோடு
மகளாயும் மகனாயும் மதிப்புயரும் பதியாயும்
மாணவர்கள் சங்கங்கள் மன்றங்கள் எனப்பெரிய
தொகையாக விழுது பல விட்டிருந்தும் இன்றனைத்தும்
துவண்டு பெரு வேதனையில் துடிக்க வைத்ததேன் தாயே!
தாயே தமிழனாய் தாரணியில் நாம் சிறக்க
தமிழ் தந்த ஆசானே தாங்குவோமோ நின் பிரிவை
சங்கம் அமைத்தவளே சங்கம் வளர்த்தவளே
எங்கும் புகழ் கொண்ட ஏற்றம் மிகுந்தவளே
மாணவியர் மத்தியிலே மாண்புடனே நீர் செய்த
மாற்றங்கள் இன்றளவும் மாறாதிருக்குதம்மா
கூற்றுவனும் உன்னிடத்தில் கூனித்தான் வந்திருப்பான்
குற்ற உணர்வுதனைக் கொண்டேதான் வந்திருப்பான்
பாவியவன் பயத்தால் பகல்நேரம் தவிர்த்துன்மேல்
பார் தூங்கும் நேரமதில் பாசக் கயிறெறிந்தான்
அம்மா உன் திருமணத்தின் ஐம்பதாண்டு நிறைவுதனில்
அமர்க்களமாய் வாழ்த்தி அகங்குளிர்ந்து பெருமையுற்றேன்
அதனைத் தொடர்ந்த உன்தன் அரும் ஜனன தினத்தினிலே
ஆனந்தம் பொங்க அன்புடனே வாழ்த்தி நின்றேன்
ஆனாலும் தாயே ஆலமரமே இன்று
அகமுடைந்து நாக்குளறி அளிக்கின்றேன் விடையுனக்கு
போய்வா எம் தாயே பூவோடும் பொட்டோடும்
போய் வருவாய் திருமகளே புகழோடும் பெயரோடும்
நீயெம்மை விட்டு நீங்கிவிட்ட போதுமுன்தன்
நினைவெம்மை விட்டு நீங்காது இறுதிவரை

**ஜீவா தெய்வேந்திரன்** Mississauga, Canada

# 1947 DRAMA TROUPE




**Front row (From left):** S.Srirathy, N.Rajalakshmy, P.Lakshmy, R.Sarojini, P.Sugirthalakshmy, G.Gnanasakunthala, B.Jayadevi, S.Sakunthala, S.Pathmanayaki, N.Annalakshmy, S.Kanageswary, S.Jeevaratnam

**Second row (From left):** N.Supramaniam, M.Chandrasekaram, K.Kanagalingam, R.Sathyapal, A.Poopalasingam, N.Thurai, N.Maheswaran, K.Pathmanathan, C.Balasingam, T.Kumarasamy, A.Kunapalasingam

**Third row (From left):** A.Muttulingam, S.Sivanesan, S.Velayuthapillai



# பழைய புகைப்படம்

**நா**ன் பத்து வருடங்களுக்கு முன்னர் Toronto வந்து சேர்ந்தபோது என் இரண்டாவது அண்ணர் சொன்னதை நினைத்துக் கொண்டேன். 'எங்களையெல்லாம் படிப்பித்த சுகிர்த ரீச்சர் Torontoவில்தான் இருக்கிறார். அவரைப் பார்க்க மறக்காதே'. ஆனால் நான் வந்து இறங்கியபோது என்னுடன் வேறு பல பிரச்சனைகளும் வந்து இறங்கிவிட்டன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாகத் தீர்க்க வேண்டியிருந்ததால் என்னுடைய சந்திப்பு தள்ளிப் போனது. சுகிர்த ரீச்சரும் எங்கள் மூத்த அண்ணரும் ஒன்றாகப் படித்தவர்கள். நவராத்திரியின்போது இருவரும் பள்ளியிலிருந்து வீடு வீடாகப் போய்ப் பாடியிருக்கிறார்கள். இதுதவிர எனக்கு சிறுவயதில் ஆகப்பிடித்த ரீச்சர் அவர்தான்.

எனக்கு சிறுவயதில் சுகிர்த ரீச்சர்தான் சரித்திரம் படிப்பித்தவர். மிக அழகாக சாரியை மடிப்பு கலையாமல் உடுத்திக்கொண்டு வருவார். வகுப்புக்குள் நுழையும்போது படிகளை மான்குட்டி போல துள்ளிக் குதித்துக் கடந்து வருவார். பள்ளி விடும்போது மணி அடித்ததும் தேவாரம் பாடுவது நான்தான். ரீச்சர் என்னைப் பெரிய பாடகன் என நினைத்து என்னையே பாடச் சொல்லுவார். பள்ளிக்கூட நாடகத்திற்கு ஆட்கள் சேர்த்தபோது எனக்கும் அதில் இடம் கிடைத்தது. காரணம் சுகிர்த ரீச்சர்தான். நாடகம் மேடையேறிய பின்னர் அந்த நாடகக் குழுவைப் படம் பிடித்ததும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. என்னுடைய சின்ன வயதுப்படம் என்னிடம் ஒன்றுகூட இல்லை. ரீச்சரைச் சந்தித்தால் இதுபற்றிக் கேட்க வேண்டும் என்றும் நினைத்திருந்தேன். ஆனால் அந்த சந்திப்புத்தான் நிகழவில்லை.

ஒருவருக்கு அதிக மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்னவென்றால் அவருடைய ஆகச் சின்ன வயது புகைப்படத்தைப் பார்ப்பதுதான். என்னுடைய மனைவியின் சின்ன வயதுப் படம் ஒன்று இருந்தது. அதை அவர் மிகவும் பத்திரமாகப் பாதுகாத்தார். அப்படி ஒன்று எனக்கும் கிடைத்தால் நல்லாயிருக்குமே என்று நான் நினைப்பதுண்டு. என்னை சுகிர்த ரீச்சர் நாடகத்தில் நடிப்பதற்குத் தேர்வு செய்த நாள் இன்றைக்கு நடந்ததுபோல ஞாபகமிருக்கிறது. நான் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் நேரத்திற்கு அம்மா வாசலில் காத்து நிற்பார். தூரத்தில் அம்மாவைக் கண்டதும் ஓடத்தொடங்குவேன். அம்மாவைக் கட்டிப்பிடித்ததும் நான் அப்பொழுதுதான் பிறந்ததுபோல அவர் என் உடம்பு முழுவதையும் தடவிப் பார்ப்பார். இன்றைக்கு என்ன நடந்தது என்று கேட்பார். அந்தக் காலத்தில் பள்ளிக்குப் போய் வந்தால் வீட்டிற்கு ஏதாவது காயத்துடன் திரும்பி வருவதுதான் வழக்கம். வாத்தியார்மார் அடிப்பார்கள் அல்லது கூடப்படிக்கும் பெடியன்கள் என்னைப் போட்டு மிதிப்பார்கள். இது இரண்டும் நடக்காவிட்டால் நானாகவே விழுந்து முழங்காலையோ, முழங்கையையோ உடைத்து விடுவேன். அன்றைக்கு நேரம் பிந்தி வந்ததால் அம்மா என்னைக் கண்டதும் பாதி தூரம் ஓடி வந்துவிட்டார். நான் சுகிர்த ரீச்சர் என்னை நாடகக்

**அ.முத்துலிங்கம்** (Canada)
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி



குழுவிற்குத் தேர்வு செய்திருந்ததைச் சொன்னேன். அம்மா தானே தெரிவு செய்யப்பட்டது போல எனக்காக மகிழ்ந்தார்.

நாடகக் குழுவைப் புகைப்படம் எடுத்த அன்று நான் பட்ட அவதியும் மறக்க முடியாதது. முதல் நாள் ரீச்சர் நாடகத்தில் நடித்தவர்களைப் படம் எடுக்க வரப்போகிற விடயத்தை என்னிடம் சொல்லிவிட்டார். நல்ல திறம் உடுப்பாகப் போட்டு வரவேண்டும் என்பதுதான் கட்டளை. எனக்கோ இரவிரவாக நித்திரை வரவில்லை. வெள்ளைக் கால்சட்டையை தலையணையின் கீழ் மடித்து வைத்துப் படுத்திருந்தேன். அரைக்கை வெள்ளைச் சட்டை வெள்ளாவி வைத்து நீலம் போட்டு வெளுத்து, சிரட்டைக்கரி ஸ்திரிப்பெட்டியால் தேய்த்து தயாராகவிருந்தது. கஞ்சிபோட்டு மொடமொடவென்று வாசனையோடு இருந்த சேர்ட்டை அம்மா பெட்டகத்துள் இருந்து எடுத்துத் தந்தபோது பிரித்தேன். அது பேப்பர் கிழிவது போன்ற சத்தத்துடன் பிரிந்தது. கால்சட்டைக்குள் சேர்ட்டை நுழைத்து பொத்தான்களை ஒவ்வொன்றாகப் போட்டு தயாரானேன். அம்மா கன்ன உச்சி பிரித்து தலைசீவி விட்டார். படம் எடுக்க வரச்சொன்ன நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே சென்று காத்திருந்தேன். முதல் வரிசையில் உயரமானவர்கள் நின்றார்கள். பின்வரிசையில் வாங்கு போட்டு ஏறி நின்றார்கள். மேசை போட்டு அதற்கு மேல் வாங்கு போட்டு அதன்மீது ஏறி நின்ற சிறுவர்களுடன் கடைசி வரிசையில் நானும் நின்றேன். எனக்குப் பக்கத்தில் நின்றவன் மூச்சுவிடாதே படம் ஆடிவிடும் என்று புத்திமதி சொன்னான். ஒரு முட்டாளுக்கும் அவன் முட்டாள்தனத்திற்கும் இடையில் நான் குறுக்கிடவில்லை. இடது பக்கத்தில் முதலில் நின்றது நான்தான். மூன்றுகால் வைத்த கமராப் பெட்டியால் கறுப்புத்துணி மூடிய ஓர் உருவம் எங்களைப் படம்பிடிக்க ஆயத்தம் செய்தது. நாங்கள் எல்லோரும் தயாராகி சிரித்த சமயத்தில் சூரியன் முகிலுக்குள் மறைந்துவிட்டான். இன்னுமொருமுறை சிரிக்கச் சொன்னார்கள். பலமுறை இப்படி ஆயத்தமாகி சிரித்து படம் எடுக்கும் சமயம் சூரியன் முகிலுக்குள் புகுந்துவிடுவான். பல நிமிடம் காத்திருந்து பல தடவை சிரித்து அன்று ஒரு மாதிரியாகப் படம் எடுத்து முடிந்தது. சுகிர்த ரீச்சரும் படத்தில் எங்களுடன் நிற்பார் என நான் நினைத்தேன். ஆனால் அவர் நிற்கவில்லை. நாடகத்தில் நடித்தவர்களுக்கு மட்டும்தான் படம் என்று சொல்லிவிட்டார்கள்.

இதுவெல்லாம் நடந்தது எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர். எதிர்பாராத விதமாக ஒரு நாள் Torontoவில் நடந்த விருந்து ஒன்றில் நான் சுகிர்த ரீச்சரைச் சந்தித்தேன். அவருடைய முகம், உடம்பு, நடை, உடை, பாவனை ஒன்றுமே மாறவில்லை. முன்பு பள்ளிக்கூடத்தில் பார்த்தது போலவே இருந்தார். சரித்திர வகுப்பில் எங்கள் நாட்டை ஆண்ட அரசர்களின் பெயர்களை நாங்கள் வரிசையாகப் பாடமாக்க வேண்டும். தாதுசேனன், காசியப்பன் என்ற பெயர்களை நான் மாற்றிச் சொல்லும்போது அவருக்குக் கோபம் வரும் விசயத்தை நினைவூட்டினேன். சிரித்தார். பின்னர் பள்ளிக்கூடத்தில் நாங்கள் போட்ட நாடகம் பற்றிப் பேச்சு வந்தது. நான் அந்த நேரம் படம் ஒன்று எடுத்தது பற்றியும் அதை ஒருவருமே கண்ணால் கண்டதில்லை என்றும் சொன்னேன். அவர் பதில் பேசவில்லை.

சில மாதங்கள் கழித்து என் வீட்டுக்கு முன்னறிவித்தல் ஏதும் இல்லாமல் ரீச்சர் வந்திருந்தார். வாசலில் இருந்த ஆறு படிகளையும் இளைமைக் காலத்தில் செய்ததுபோல துள்ளிக் கடந்தார். அவர் கூப்பிட்டிருந்தால் நானே அவர் வீட்டிற்குப் போயிருப்பேன். ஏனென்றால் சுகிர்த ரீச்சருக்கு அப்போது வயது 87. என்னை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்பதுதான் அவர் நோக்கம். அவர் பெரிதாக்கப்பட்ட ஒரு புகைப்படத்தைத் தூக்கிக் கொண்டு வந்து என்னிடம் தந்தார். பள்ளிக்கூட நாடகக் குழுவினருடன் நான் நிற்கும் படம். என்னால் நம்பவே முடியவில்லை. கிட்டத்தட்ட 60 வருடங்களுக்குப் பின்னர் அந்தப்படம் என்னைத் தேடி வந்திருந்தது. படத்தைத் தந்தது மாத்திரமல்லாமல் படத்திலே இருந்தவர்களின் பெயர்களையும் அவர்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள், எங்கே இருக்கிறார்கள் என்ற விபரங்களையும் சொன்னார். அவருடைய ஞாபகசக்தி நம்பமுடியாமல் இருந்தது. திடீரென்று வந்தது போலவே ரீச்சர் விடைபெற்றுக்கொண்டு எழுந்து போனார். எனக்கு எல்லாமே கனவு போல இருந்தது.

சுகிர்த ரீச்சர் என் வீட்டிற்குக் கொண்டு வந்து தந்த அந்தப் பொக்கிசமான படத்தை முதலில் என் மனைவியிடம் காட்டி என்னைக் கண்டுபிடிக்கச் சொன்னேன். இந்தியாவைக் கண்டுபிடிக்க வெளிக்கிட்ட மகலனின் கப்பல் போல மனைவியின் விரல் படத்தில் ஊர்ந்து ஊர்ந்து என்னைத் தேடியது. திடீரென்று ஏதோ வெளிச்சம் வந்தது போல யோசிக்காமல் என் அண்ணையைத் தொட்டுக் காட்டி என்னை அவமதித்தார். நான் உம்முடைய சின்ன வயதுப் படத்தில் உம்மை டக்கென்று காட்டினேன் என்று அவரிடம் சொன்னேன். அவர் பதிலுக்கு அதில் நின்றது இரண்டு போர்தானே என்றார். சரியென்று என் மகனிடம் கேட்டேன். அவனுக்காவது என்மீது நல்ல அபிப்பிராயம்

இருக்கிறதா என்று பார்க்கலாம். அவன் முற்றிலுமே தொடர்பில்லாமல் பரதநாட்டிய உடுப்பணிந்து உதட்டுச் சாயம் பூசிநின்ற பெண்ணைக் காட்டினான். மிஞ்சியது என் மகள்தான். அவளாவது சரியாகக் கண்டுபிடிப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. வெள்ளைக் கால்சட்டையும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்த பையனைச் சுட்டிக் காட்டினாள். அவன் எனக்குப் பக்கத்தில் மூச்சுவிடாமல் நின்றவன். அவன் நானில்லை.

பிறகு அது ஒரு விளையாட்டு ஆகியது. வீட்டிற்கு வரும் விருந்தாளியிடம் அந்தப் படத்தில் நான் யாரெனச் சுட்டிக் காட்டச் சொல்வேன். சிலர் ஆண் வேடமிட்ட பெண்ணைச் சுட்டிக் காட்டினர். சிலர் பெண் வேடமிட்ட ஆணைச் சுட்டிக் காட்டினர். சிலர் பெண் வேடமிட்ட பெண்ணையே தொட்டுக் காட்டினர். ஒருவராவது என்னைச் சரியாக அடையாளம் காட்டவில்லை. எனக்குத் துக்கமாக இருந்தது. மகிழ்ச்சியும் வந்து போனது. ஒருவர் 28ஆவது முயற்சியில் என்னைக் கண்டுபிடித்தார். படத்திலிருந்தது 26 பேர்தான். இப்படியாக அந்தப்படம் பெருமகிழ்ச்சியை எங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்தது. யார் வந்தாலும் உரையாடல் அந்தப் படத்திலிருந்து ஆரம்பித்தது.

இப்பொழுது சுகிர்த ரீச்சர் இல்லை. மறைந்து போனார். என் வீட்டில் ஒருவரும் பக்கத்தில் இல்லாத சமயம் நான் அவர் தந்த படத்தைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் இருப்பேன். சுகிர்த ரீச்சர் வீடு தேடி வந்து படத்தைக் கொடுத்துவிட்டுப் போன பெருந்தன்மையை நினைத்துக் கொள்வேன். படம் கையில் கிடைத்தபோது எத்தனை மகிழ்ச்சியாக இருந்தது. முதல் நாளிரவு தலையணையின் கீழ் மடித்து வைத்து நானணிந்த வெள்ளைக் காற்சட்டை படத்தில் ஒருதுளியும் தெரியவில்லை. ஸ்திரிப்பெட்டியால் உரஞ்சி மடித்த வெள்ளைச் சேர்ட்டு படத்திலே வால் போலக் கூராக நின்றது. அம்மா சீவிய கன்ன உச்சியும் கலையாமல் அப்படியே படத்தில் தெரிந்தது. கிராமத்துச் சூரியன் முகிலைவிட்டு வெளியே வந்த கணநேரத்தில் புகைப்படக்காரர் படத்தைப் பிடித்திருந்தார். கடைசி நிரையில் மேசை வைத்து அதற்கு மேல் வாங்குவைத்து ஏறி நின்ற அந்தச் சிறுவர்களின் மேல் என் கண் போய் நின்றது. இடதுபக்க ஓரத்தில் நின்ற சிறுவன் நான்தான். அந்தச் சிறுவனை உற்றுப் பார்க்கும் போதெல்லாம் எனக்குத் தெரிவது சுகிர்த ரீச்சர்தான்.

*

# ஊர் போற்ற வாழ்ந்த உத்தமி



**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக் கொண்டற்று– குறள்**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மணிமகுடம் நீ அம்மா...!
ஊரோடு உறவாடிய உத்தமியே!
எமது கல்லூரியின் வளர்ச்சியில் நீங்கள்
இந்த வயதிலும் காட்டிய அக்கறை
எங்களைப் பிரமிக்க வைத்ததம்மா!
உங்கள் சேவை அளவிட முடியாதது!
நீங்கள் அனைவரிடமும் காட்டிய
அன்பும் அரவணைப்பும்
சொல்லும் தரமன்றோ!
உலக நாடுகள் எல்லாம் வாழ்கின்ற
உங்களிடம் கல்வி பயின்ற
உத்தமர்கள் இன்று உங்கள் இழப்பால்
துடிக்கின்றனரே!
வையகத்தில் பெருவாழ்வு வாழ்ந்து
இறைபாதம் தேடிச் சென்றீரம்மா!
உங்கள் உறவுகளோடு
இரங்கலில் பங்கெடுத்து
உங்கள் அன்பிலே நாங்கள்
சுற்றம் சூழ புகழ் பாட
எம்மையெல்லாம் இங்கு ஏங்க வைத்து
இறைவன் திருப்பாதம் ஏகினீர்!
அன்புக்கு இலக்கணம் வகுத்தீர்!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பரராஜசிங்கம் ஜெயலோஜினி குடும்பம்**
Scarborough, Canada



Our
Wonderful
Teacher
and
Friend,

# Mrs. Sukirthalakshmy Supramaniam



The unexpected loss of our beloved teacher Mrs. Sukirthalakshmy Supramaniam, is a real blow to one and all, mainly to her husband, children and close friends, such as myself.

Our friendship began in the year 1947 when I was appointed as music teacher in Kokuvil Hindu College (K.H.C.). She was my intimate friend, guru and a wonderful person in every respect. She was a lady of virtue and wisdom, and possessed the most unassuming qualities. She was to me, the most helpful person in time of need.

She entrusted her daughters Sukanya, Chanthrika and her niece Thivya, to learn classical music and they proved to be good vocalists to this date.

In April 2005, Mr. and Mrs. Supramaniam, visited the United Kingdom by invitation of the Old Students' Association of K.H.C. (U.K.). I was immensely happy and it was indeed a privilege to have them as my guests during their visit. She then brought me a Thiruppukhal book and as she correctly thought, it was very useful for my career. Sukirtha teacher never forgot to wish me on my birthday every year and I too would reciprocate the same on her birthday in September.

All of us who knew her, her husband, children, relations, myself and the old students of K.H.C. Canada will feel her loss immensely. However let us be content that we were indeed fortunate to have had the opportunity to know this wonderful lady, wife, mother, teacher and loving friend to all. May her soul rest in peace.

**Mrs. Saraswathy Packiarasa**
**(London, England)**
Former teacher
Kokuvil Hindu College





# A Great Life to Celebrate

It is hard to accept that our beloved teacher Mrs. Sukirthalakshmy Supramaniam (Sukirtha teacher) is no longer with us. I always called her Akka (Elder Sister) and I have had the privilege of knowing her well before I joined Kokuvil Hindu College (K.H.C.).

When I funded a scholarship scheme in memory of my father Rajaratnam it was Akka I turned to for co-ordination and to be on the Board of Directors. I got to know Akka more closely when she immigrated to Canada. When the Canadian Branch of Kokuvil Hindu Old Students' Association was formed in 1994, I worked with her as the group's first Vice President.

She always referred to her students as "my children". She was kind hearted and generous. She was very independent minded and loathed to be of burden to others.

It was through her focus, dedication and unyielding efforts that she succeeded in galvanizing the former K.H.C. students in Canada to raise significant funds for Kokuvil Hindu projects. She personally visited homes across the Toronto area to raise funds, and she was there at every function related to the school.


Akka's memory was phenomenal. She remembered names and family connections in detail. Normally we didn't engage in lengthy chat over the phone, but in mid July of 2011, a week before I went on vacation to California, she phoned and wanted the phone number of a mutual friend and student living in the United Kingdom. This time we had a long chat and talked about various, old-time families of Kokuvil. Akka was so full of knowledge I told her that she should write about the history of Kokuvil. She said she would do just that.

When I was in California I heard about her sudden illness and that she was in intensive care. I phoned and talked to her daughter Sukanya about her prognosis. After I came back from California I phoned again and found out that she was better and visitors were being allowed in starting that Friday, September 2nd. I went to see her at the hospital on September 4th. She was so full of life and very alert. Her memory was so sharp and we continued with the conversation we had started in July. I was one of the few people who got to spend time with her before she passed away. It was as though she came back to say farewell before leaving for good. She even filled some blanks in my memory. All these days I was under the impression that my eldest brother Sivaratnam was a student of Jaffna Hindu and not of Kokuvil Hindu. On our last meeting she corrected me and told me that he was her classmate at Kokuvil Hindu College.

When I found out that Akka journeyed to Sri Lanka in 2010 for Centenary celebrations of Kokuvil Hindu College, I was deeply moved and very happy for her to have done that at a ripe old age. After she returned we had a lengthy chat about her experiences.

Referring to Indira Gandhi, it was said that "Indira was India and India was Indira". It can be said about Mrs.Sukirthalakshmy Supramaniam that she was Kokuvil and Kokuvil was her. She lived for Kokuvil Hindu and the village until her last breath.

Akka will be deeply missed.



**A.R.Arasaratnam (Canada)**
Former student (1949 – 1956)
Kokuvil Hindu College



# யாழ் கொக்குவில் இந்து அன்னையின் அருமைப் புதல்வி

யாழ் மண்ணிலே நூற்றாண்டுகளுக்கு மேலாக அறிவொளி பரப்பிவரும் அறிவாலயமான கொக்குவில் இந்துக் கல்லூரியின் அருமைப்புதல்வி என்று பல வழிகளாலும் பாராட்டிச் சிறப்பித்துக் கூறத்தக்கவர் எங்கள் அன்புக்குரிய ஆசிரியை திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள். தான் பெற்ற அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தைத் தான் கற்ற கல்விச் சாலைக்கே மிகுந்த நன்றியுணர்வோடும், அர்ப்பணிப்போடும் மனதாரத் தொடர்ந்து வழங்கிய சிறப்பு அவருக்குரியது. தான் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியையாகவும், நிர்வாகியாகவும் (உபஅதிபர்) பணிவோடு பணிபுரிந்த பெருமை அவருக்குரியது. கணித ஆற்றலும், ஆங்கில மொழிப் பண்பாட்டுப் புலமையும் அவர்தம் ஆளுமையை வளர்த்திருந்தமையை எண்ணிப் பெருமிதமடைகிறேன். பிரச்சனைகளை விரைவாகவும், தெளிவாகவும் இனங்கண்டு அதற்கான தீர்வுகளை எட்டவும், செயற்படுத்தவும் அவர்தம் கணித அறிவும் ஆற்றலும் உதவியிருந்தன. அவரது ஆங்கில மொழிப் பண்பாடு, தான் கண்டு கொண்ட தீர்வுகளைப் பதற்றமின்றி நாகரீகமாக சுருக்கமாகச் செயற்படப் பேருதவி புரிந்துள்ளது. அத்தகைய பெருமாட்டியிடம் நான் கணிதத்தையும், ஆங்கிலத்தையும் கற்றதைப் பெரும் பேறாக எண்ணி மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். என்றும் அவருக்கு என் மனமார்ந்த நன்றிப் பூக்களைத் தூவி நன்றி செலுத்துகின்றேன்.

இந்துப் பண்பாட்டு விழுமியங்களை எள்ளளவும் பிசகாமல் பெரிதும் கடைப்பிடிப்பவர் அவர். அத்தோடு குறிப்பாக மாணவியர்களின் ஒழுங்கு, ஒழுக்கச் செயற்பாடுகளில் மிகுந்த கரிசனையோடு செயற்பட்டவர். பெண்மைக்குரிய பண்பு நலன்கள் பலவும் வாய்க்கப் பெற்ற அவர் அடக்கமான ஆடை அணிகலன்களை அணிந்ததோடு கனிவான பேச்சுக்கும், பவித்திரமான செயற்பாட்டுக்கும் உரியவராகவும் இருந்தார். எளிமையான தோற்றமும் அவரது சிறப்புக்கு மேலும் சிறப்புச் சேர்த்திருந்தது. இத்தகைய பண்புகள் எல்லோருடைய இதயங்களையும் கொள்ளை கொள்ளத்தக்கனவாக அமைந்திருந்தன.

செயல்திறமை உள்ளவர்களை ஊக்குவிப்பதோடு அவர்களுக்குரிய இடத்தை மனதாரத் தருகின்ற பரந்து விரிந்த மனம் அவருக்குரியது. தன் மாணவனான திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களை அதிபராக்கி, அவருக்குப் பேருதவியாக உபஅதிபராகச் செயற்பட்டமையைச் சிறந்ததோர் உதாரணமாகக் காட்ட முடியும். இது பற்றி அவரிடம் கேட்டபோது “என் மாணவன் தலைமைப் பதவியேற்பது எனக்குப் பெருமையையும், பெருமகிழ்ச்சியையும் தருகின்றது'' என்றார். இது அவருடைய இனிய பண்பையல்லவா காட்டி நிற்கின்றது.

ஆசிரியத்துவமும் அது தொடர்பான நிர்வாகமும் பல்வேறு திறமைகளையும் பண்பு நலன்களையும் வேண்டி நிற்கின்ற ஒன்று. அதற்கு எல்லாவகையிலும்

**திருமதி.செல்வராணி சகாதேவன்**
முன்னாள் மாணவி,
கொக்குவில் இந்துக் கல்லூரி
அதிபர், கொக்குவில் இந்து
ஆரம்ப பாடசாலை



மிகப் பொருத்தமான ஒருவராகத் தன்னை வளர்த்திருந்தார். பாகுபாடற்ற நிர்வாகம், கனிவான வார்த்தை, பணிவான, எளிமையான நடத்தை, என்றும் மலர்ந்த மனமும் முகமும், பறந்து சென்றுவிடக் கூடிய நேரம் பற்றிய விழிப்புணர்வு, திறமையான கற்பித்தல், நல்ல ஆசிரிய மாணவர் பெற்றோர் தொடர்புகள், சமூகத்தோடு ஒட்டி உறவாடும் பண்புகள் எல்லாம் அவர்தம் செயற்பாடுகளில் வெற்றிவாகை சூட உதவியுள்ளன. இவரை முன்மாதிரியாகக் கொண்டு இத்துறையில் இருப்பவர்கள் எல்லோரும் செயற்பட வேண்டும் என்று அவர் நினைவாக அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

சிறந்த சமூக சேவகியாக, கல்லூரியுடன் தொடர்புடைய நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அந்நிறுவனங்களில் அங்கத்தவராகச் சேர்ந்து செயற்பட்டார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றில் அங்கம் வகித்ததுடன் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் மாதர் முன்னணியின் போஷகராகவும், கொக்குவில் வளர்மதி முன்பள்ளியின் ஆரம்ப கர்த்தாவாகவும் தன் வாழ்வைச் சமூகம் பயன்பெறும் வழிகளில் வாழ்ந்திருந்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின்போது கனடா நாட்டிலிருந்து வந்து மிகுந்த மன மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு பல்வேறு தேவையான விடயங்களைப் பேசி எல்லோரையும் மகிழ்வித்ததையும், பாடசாலை சமூகமும், ஊர்மக்களும் அவருக்குரிய மதிப்பையும் மரியாதையையும் நல்கியதையும் கண்டோம், கேட்டோம், மகிழ்ந்தோம். எங்கள் ஊரின் ஒளி எங்கோ சென்றுவிட்டது. இறந்தாலும் இறவாத புகழோடு என்றும் எங்கள் நெஞ்சில் இனிய நினைவுகளோடு வாழ்வார்.

"மறப்பதில்லை நெஞ்சம்."

*





# கொக்குவில் இந்துக் கல்லூரியின் தவப்புதல்வி

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு."**

கொக்குவில் மண்ணின் புத்திரியாய், கல்லூரி வளர்ச்சிக்குக் காரணமான நல்லதோர் நட்சத்திரமாய் கொக்குவில் இந்து வரலாற்றில், கொக்குவில் இந்துவின் பெருமைக்குரிய மாணவியாக, மாணவர் மனங்கவர்ந்த நல்லாசிரியையாக, சக ஆசிரியர்களைப் பேணி மதித்த நண்பியாக, உப அதிபராகக் கல்லூரியின் வளர்ச்சியே தன் உயிர் மூச்சு என வாழ்ந்த பெருமைக்குரியவரும், பழைய மாணவர் சங்கத் தலைவராக, உபதலைவராக எனப் பல கோணங்களில் தன்னை அர்ப்பணித்த பேறு பெற்றவராகவும் விளங்கியவர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள்.

**"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"**

என்றார் பாரதி.

பாரதியின் பாட்டுக்கேற்ப இவருடைய நடை, உடை, பாவனை என்பன அமைந்திருந்தன. மிக்க தாய்மை நிறைந்தவராகவும் எல்லோரிடத்தும் அன்பு, இரக்கம், நட்பு, பரோபகாரச் சிந்தையுடையவராகவும் விளங்கினார். குறிப்பாகப் பெண் பிள்ளைகளை மிகப் பக்குவமாக, பண்பாக, சமூகம் விரும்பும் நல்ல தாய்மை உள்ளம் மிக்கவராக உருவாக்கிய பெருமை கொக்குவில் இந்துவில் இவருக்கே உரியது ஆகும். இப்படிப்பட்ட பண்புகளைக் கொண்ட திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார் என்பதை எண்ணும்போது நெஞ்சம் கனக்கிறது. கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்த ஒரு சிலரின் மறைவுகள் மறக்க முடியாததொன்றாய் மனதில் பதிந்து விடுகின்றன.

இவர் கல்லூரியில் மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், கணிதம் போன்ற பாடங்களைக் கற்கண்டாக இனிக்கச் செய்தவர். மாணவர்களின் தனியாள் நிலைமை அறிந்து அவர்களின் தன்மைக்கு ஏற்ப பாடங்களைக் கற்பித்த சிறப்பிற்குரிய ஆசிரியை ஆவார். சுகிர்த ரீச்சர் வகுப்பறைக்கு ஒருமுறை சென்றால் போதும் வகுப்பறையில் இருக்கும் மாணவர்கள் அனைவரது பெயர்களையும் மனதில் பதித்துவிடும் அபார ஞாபகசக்தி கொண்டவர்.

கல்லூரியில் தனது மூன்றாவது வயதில் காலடி எடுத்து வைத்த பெருமைக்குரியவர். அந்தக் காலத்தில் ஆரம்பப் பாடசாலையில் நவராத்திரி காலங்களில் "விருத்தம் பாடுதல்" என்ற நிகழ்வு நடைபெற்று வந்தது. பாடக்கூடிய மாணவர்களை நவராத்திரி பாடல்களை பாடக் கற்றுக்கொடுத்து மாணவர்களை வீடுகளுக்கு ஆசிரியர்கள் அழைத்துச் செல்வார்கள். மாணவர்கள் காப்புப்பாடி, சக்தி கீதங்களும் பாடி, வாழ்த்துப்பாவுடன் முடிப்பார்கள். மாணவர்கள் பாடல்களைப் பாடி முடித்தவுடன்


● மா.சுப்பிரமணியம்
(Colombo)
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி




வீட்டார்கள் மாணவர்களுக்கும் உடன் சென்ற ஆசிரியர்களுக்கும் சிற்றுண்டி வழங்கி ஆசிரியரிடம் அன்பளிப்பு செய்வர். இவ்வாறு சேகரிக்கப்படும் பணம் பாடசாலை அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும். பல பெரியார்கள் வீடுகளுக்கு எல்லாம் சென்று இவ்வாறு பணம் சேர்த்தார்கள். இந்த விருத்தம் பாடுதல் நிகழ்வில் முக்கியமானதொரு மாணவியாக இவர் பங்குபற்றியது பெருமைக்குரிய விடயமாகும். மாணவியாக இருக்கும்போதே பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த உத்தமர் என்றே சொல்ல வேண்டும்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக இருந்த காலத்தில் கல்லூரிக்கு கொக்குவில், கோண்டாவில், இணுவில், தாவடி பகுதி மாணவர்களே வருவார்கள். எந்தப் பகுதியில் இருந்து மாணவர்கள் வந்தாலும் பிள்ளையைத் தாய் எப்படி அரவணைப்பாரோ அப்படி மாணவர்களை அரவணைப்பார். மேலும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை "சுகிர்த ரீச்சர் கல்லூரியில் இருக்கின்றார்" என்ற நம்பிக்கையுடன் அனுப்புவார்கள். இது ஊர்ப்பள்ளிக்கூடம். எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும். மாணவர்கள் வழிதவறிப்போக சந்தர்ப்பங்கள் மிக அரிது. இவர் மாணவர்களின் வளர்ச்சிக்கு அனுசரணையாக இருப்பார் என்ற பெற்றோர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருந்தார்.

இவர் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களுடன் ஆசிரியையாகக் கற்பித்தவர். தான் கல்வி கற்பித்த மாணவர்கள் ஆசிரியராகக் கல்லூரியில் கடமையாற்றும் போது அவர்களுடன் கற்பித்த பெருமைக்குமுரிய பெண்மணி ஆவார். இன்னுமொரு சிறப்பம்சம் என்னவென்றால் தன்னுடைய மாணவனும் நாடறிந்த கல்விமானும் சிறந்த கல்வி நிர்வாகியுமான உயர்திரு அ.பஞ்சலிங்கம் அவர்கள் அதிபராக கொக்குவில் இந்துவை அலங்கரித்துக் கொண்டிருந்த காலத்தில் கல்லூரியில் உபஅதிபராகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டமையாகும். அதாவது தனது மாணவன் அதிபராக இருக்க தான் உபஅதிபராக இருந்து பணியாற்றியது தனக்குப் பெருமை என்று அடிக்கடி கூறி ஆனந்தமடைவார். இப்படிப்பட்ட உயர்ந்த மனப்போக்கையும் அமைதியான பண்பட்ட குணத்தையும் யாரிடம் காண முடியும்? இப்படி எத்தனை பேர் சிந்திப்பார்கள்?

கொக்குவில் இந்துவின் புகழ் பெற்ற அதிபர்களின் கீழ் கல்வி கற்ற பெருமையுடையவர். அதோடு ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் திரு.ஹன்டி பேரின்பநாயகம், திரு.C.K.கந்தசுவாமி போன்ற யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த அதிபர்களாகப் பாராட்டப்பட்டவர்களின் கீழ் பணியாற்றிய சிறப்பைப் பெற்றவர். மேலும் மறக்க முடியாத ஆசிரியர்களான ஞானாம்பிகை ரீச்சர், சோமாஸ்கந்தன் மாஸ்ரர், S.P.நடராசா மாஸ்ரர், அமிர்தலிங்கம் மாஸ்ரர், கென்ஸ்மன் மாஸ்ரர், பரமானந்த மாஸ்ரர் போன்றோருடன் சேர்ந்து கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஒன்றாகும்.

இவர் தன்னுடைய குடும்பத்தினரையும் இக்கல்லூரியுடன் இரண்டறக் கலக்க வைத்தவர். அதாவது தன்னுடைய பிள்ளைகளை இக்கல்லூரியிலேயே கல்வி கற்க வைத்தவர். இவருடைய புதல்வன் சுதாகர் இக்கல்லூரியில் கல்வி கற்று 1979ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் கணிதப்பிரிவில் 4"A" சித்தி பெற்று பொறியியல் பீடத்திற்கு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானது கல்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுத்த விடயமாகும். கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டதோடு தனது பிள்ளைகளையும் கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபட வைத்தவர். குறிப்பாகத் தனது புதல்வி சுகன்யா, மருமகன் ரகு தேவராஜா அவர்களைத் தொடர்ந்து கல்லூரியின் வளர்ச்சியில் ஈடுபட உருவாக்கிய பெருமை கொண்டவராவார்.

கல்லூரித்தாய் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியபோது கனடாவில் இருந்து தம்பதிகளாக வந்து விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்து பழைய மாணவர்களாகிய எமக்கெல்லாம் பெருமை சேர்த்தவர்.

நீண்ட வருடங்களுக்குப் பின் விழாவிற்கு ரீச்சர் வருகை தந்திருந்தபோது அவரைக் கண்ட பழைய மாணவர்கள் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ரீச்சரை அணுகித் தங்களை அறிமுகம் செய்ய முற்பட முன்னரே சுகிர்த ரீச்சர் அவர்களுடைய பெயர்களைச் சொல்லி நலம் விசாரித்தது மட்டுமல்லாமல் அவர்களுடைய சகோதரர்கள், பெற்றோர்கள் பெயர்களையும் கூறி நலம் விசாரித்த காட்சி என் கண்முன்னே நிற்கின்றது. என்னை மெய் சிலிர்க்க வைத்தது.

நான் தனிப்பட்ட பயணமாக கனடா நாட்டிற்குச் சென்றிருந்த சமயம் கனடா பழைய மாணவர் சங்கமானது புலம்பெயர்ந்த எமது பழைய மாணவர்களை இணைத்து என்னையும் எனது குடும்பத்தினரையும் அழைத்து இராப்போசன விருந்து ஒன்றினை அளித்து கௌரவித்தது. இந்த ஒழுங்கினைச் சுகிர்த ரீச்சர் அவர்களே முன்னின்று செய்ததை உணர்ந்து கொண்டேன். அன்றைய நிகழ்வில் என் மனதில் உதித்த, உதயமான எமது கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கு ஒன்றினை நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தைக் குறிப்பிட்டுக் கூறினேன். அந்தநேரம்

# கொக்குவில் இந்துவின் புதுமைப்பெண்!



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் புதுமைப் பெண்ணிற்குரிய அம்சங்களான நிமிர்ந்த நல்ல நடையும், நேர்கொண்ட பார்வையும், திமிர்ந்த ஞானச் செருக்குடனும் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சேவை செய்வதையே தனது தலையாய பணியாகக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த சுகிர்த ரீச்சர் செப்ரெம்பர் 08, 2011 இல் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார்.

செப்ரெம்பர் 30, 1923இல் செல்லையா முத்தாச்சி தம்பதிகளுக்குப் புதல்வியாகப் பிறந்த சுகிர்தலக்ஷ்மி அவர்கள் 1927ஆம் ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். 1927இல் கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் ஆரம்பித்த தொடர்பு 2011 ஜூலை 30இல் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையின் வெளிக்கள விருந்து, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் வருடாந்த கல்விசார் போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் பங்குபற்றும் வரை நீடித்தது.

1920 களில் பெண்களின் விடுதலையைக் கனவில் கொண்டு பாரதியார் 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்' எனவும், 'பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம், எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி' என்றும் பாடினார். 1927 இல் ஏட்டைத் தொட்ட சுகிர்த ரீச்சர் 1942 இல் எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று தான் படித்த கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணியாற்ற ஆரம்பித்தார்.

'நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம்' என்னும் பாரதி, கல்வியறிவு கொண்ட பெண்கள் 'மாண்புயர் மக்களைப் பெற்றிடுவர்' என்கிறார். சுப்பிரமணியம் சுகிர்தலக்ஷ்மி தம்பதிகள் மூன்று பெண்களும் இரண்டு ஆண்களுமாக ஐந்து மக்களைப் பெற்று வளர்த்தார்கள்.

1942இல் கல்விப்பணி ஆற்றத் தொடங்கிய சுகிர்தலக்ஷ்மி அவர்கள் 1983இல் பிரதி அதிபராக இளைப்பாறும் வரை நாலு தசாப்தங்களுக்கு மேலாக மக்கள் அத்தனை பேருக்கும் ஒன்றாய் அறிவை வளர்த்திட்டார்.

சுகிர்த ரீச்சர் இளைப்பாறிய பின்னரும் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்திற்காகத் தொண்டாற்றி ஏழைக்கெழுத்தறிவித்து புண்ணியம் கோடி சேர்த்தார்.

மீண்டும் பாரதியின் புதுமைப் பெண் போல் 1993இல் அன்னார் கனடாவிற்குக் குடிபெயர்ந்து நாற்றிசை நாடுகள் யாவுஞ் சென்று, கனடாவில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கி அதில் நான்கு ஆண்டுகள் தலைவராக இருந்து, இறக்கும் வரை உபதலைவராக இருந்து புதுமை கொணர்ந்து இங்கே கொக்குவில் இந்துக் கல்லூரி ஓங்க உழைத்திட்டார்.

**– சிவ ஞானநாயகன்**
Kingston, Canada

---

விருந்தில் கலந்து கொண்டோரிடமிருந்து பலத்த கரகோசங்கள் இடம்பெற்றன. நிகழ்வு முடிவடைந்ததும் சுகிர்த ரீச்சர் என்னையும், எனது மனைவியையும் அணுகி வாயாரத் தனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்கினார். அவரின் ஆசியுடன் எனது எண்ணத்தை நிறைவேற்றி பார்வையாளர் அரங்கைக் கட்டி முடித்துள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

88ஆவது வயதுவரை எல்லோரது நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்று வாழ்ந்தார். இவருடைய இழப்பு கல்லூரிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக ஏற்பட்டுள்ளது. பிறப்பவரெல்லாம் இறப்பது நியதி. அதை மாற்றியமைக்க முடியாது. பிறந்தோம், வாழ்ந்தோம் என்று சொல்லாமல் அடுத்த சந்ததிக்கு எதைச் செய்துவிட்டுச் செல்கிறோம் என்பதுதான் முக்கியம். அடுத்த சந்ததியினருக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவாக ஆற்றியிருக்கின்றார் எமது சுகிர்த ரீச்சர். அவருடைய நாமம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் என்றுமே ஒலித்துக் கொண்டிருக்கும். எனவே சுகிர்தலக்ஷ்மி ரீச்சரை வணங்கி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். *


UVIL HINDU COLLEGE

# Sukirtha teacher participates in K.H.C. centenary celebrations-2010












கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா
16 ஜுலை 2010


THAJENTHINI MULTI SHOP
Dialog
Munchee
THAJENTHINI MULTY SHOP
ஆனந்தா படமாடம்
ANANTHAA


இந்துக் கல்
1910 - 2010
விப்பு நிகழ்வு


கல்லூரி


2010










1910













































# Witnesses K.H.C. centenary postal stamp release-2010












இந்துக் கல்லூரி









# எம் நெஞ்சத்து நினைவலைகளில் நீங்காத நூற்றாண்டு விழா

● திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்
மாணவி, 1927 - 1937
ஆசிரியை, 1942 - 1983
கொக்குவில் இந்துக் கல்லூரி

காலச் சக்கரத்தின் கனதியான வேகச் சுழற்சியில் காற்றில் பஞ்சாகிக் கலைந்து போனவை ஏராளம். ஒரு சிலவே சாதனைகள் படைத்து சரித்திரங்களாகி நீடூழி வாழ்கின்றன. நிலைபேறும் அடைகின்றன. இதனாலேயே உலகம் காலப்பதிவேட்டில் அவற்றை விழாக் களாகக் கொண்டாடி மகிழ்ந்தேற்றுகின்றது. இந்தவகையில்

25 ஆண்டு நிறைவு வெள்ளி விழா

50 ஆண்டு பூர்த்தி பொன் விழா

60 ஆண்டு நிறைவு வைர விழா

75 ஆண்டு பூர்த்தி பவள விழா

100 ஆண்டு நிறைவு நூற்றாண்டு விழா

என விழாக்கள் பல பெறுமதிமிக்க பெயர் களால் பெரிதும் நினைவுகூரப்படுகின்றன.

எம் கல்லூரித்தாய் என நாம் பெருமையுடன் ஏற்றிப் போற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னை முதல் நான்கு விழாக்களையும் முனைப்புடன் கொண்டாடி அகவை நூறு கண்ட அளவில்லா ஆனந்தக் களிப்பை 2010 ஜூலை 16, 17, 18களில் சிறப்புடன் கொண்டாடினார். இவ்விழாவில் அன்னையின் அரவணைப்பில் வளருகின்ற மாணவர்களும், அன்னை மடி தவழ்ந்து இன்று இலங்கை மட்டுமன்றி உலகெங்கும்



உயர்வோடு வாழ்கின்ற பழைய மாணவர்களும் பங்குபற்றி அன்னையை உளமார வாழ்த்திச் சிறப்பித்தமை கண்டு அளவில்லாப் பெருமையும் பேருவகையும் அடைகின்றோம்.

கல்லூரியின் வெள்ளி விழா 1937இல் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வானளாவும் உயர்ந்த கம்பம் ஒன்று முன்றலில் நடப்பட்டது. அதை மையமாகக் கொண்டு வர்ணக் கடதாசிக் கொடிகள் எங்கும் தொங்க விடப்பட்டிருந்தன. அவை காற்றில் லாவகமாக அசைந்து எழுப்பிய சலசல எனும் ஓசை இன்றும் என் காதில் கேட் கின்றது. அன்று கல்லூரி ஸ்தாபகர் திரு.E.செல்லையா வினை நன்றியுடன் நெஞ்சிருத்திக் கொள்ளுமுகமாக அவரின் திருவுருவப்படம் அவரின் பெயரைத் தாங்கி நிற்கும் செல்லையா மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. கூட்டமும் நடைபெற்று ஒருநாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது. அந்தக் காலத்தில் வசதி வளங்கள் குறைவாக இருந்தபோதும் அவ்விழா ஒரு பெருவிழாவாகவே சிறப்புடன் அமைந்திருந்தது. 1935இல் நடைபெறவேண்டிய விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் இரண்டு வருடங்கள் தாமதமாக 1937இல் தலைமை ஆசிரியர் திரு.M.கார்த்திகேசு தலைமையில் நடந்தேறியது. இவ்விழா இன்றும் என் மனதில் பசுமையான நினைவலைகளாக நீங்கா இடம் பெற்று விட்டது. அந்த வருடம் J.S.C. வகுப்பு மாணவியாக இருந்து பங்குபற்றிப் பெருமையும் பேருவகையும் அடைந்தேன். இன்றுவரை 84 ஆண்டுகள் கல்லூரி வாழ்வுடன் பிணைந்திருக்கும் எனக்கு என் மாணவப் பருவத்தில் பார்த்து மகிழ்ந்த நிகழ்ச்சி இவ்வெள்ளி விழா.

“மாற்றம் ஒன்றே மாறாதது” என்பதற்கிணங்க காலவோட்டத்தில் பல்வேறு மாற்றங்களையும் படிநிலையான வளர்ச்சிகளையும் கல்லூரி அன்னை கண்டார். கல்லூரி வளர்ந்தது நாங்களும் வளர்ந்தோம். நல்லாசான்கள், ஆற்றல் மிகு அதிபர்கள், அன்பும் அக்கறையும் கொண்ட பெற்றோர்கள் முதலானோர் கல்லூரியை உயர்வடையச் செய்தனர். பொன்விழா, வைரவிழா, பவளவிழா எனச் சிறிய அளவில் கொண்டாடி 2010இல் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது கொக்குவில் இந்துக் கல்லூரி. நூறு ஆண்டுகள் ஒரு மைல் கல். இவ்வாண்டு ஜூலை 16ஆம் (வெள்ளி), 17ஆம் (சனி), 18ஆம் (ஞாயிறு) திகதிகளில் நூற்றாண்டு விழா வரலாறு காணாதவகையில் வெகு விமரிசையாகக் கொண் டாடப்பட்டது. தற்போதைய மாணவர்கள், பெற்றோர், இந்நாள் ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற அதிபர்கள் எனப் பலரும் பங்குபற்றிப் பார்த்து மகிழ்ந்த கல்லூரியின் சரித்திரத்தில் பொன்னான நாட்களாக இம்மூன்று நாட்களும் ஆயின. எம் எல்லோருக்கும் இது ஒரு கிடைத்தற்கரிய பேறு.

நூற்றாண்டு விழாவினை வரவேற்கும் வகையில் கல்லூரி அன்னை புதுப்பிக்கப்பட்டு கண்ணூறு படத்தக்க வகையில் புதுப்பொலிவு கொண்டாள். கட்டிடங்கள், மதில்கள் என்பன புதுப்பிக்கப்பட்டு வர்ணங்கள் பூசப்பட்டன. மதில்களில் **K.H.C.**என்னும் பெயர் செந்நிற எழுத்தினைத் தாங்கி கண்கவர் காட்சியாக மிளிர்ந்தது. நான்கு பக்க மாடிக் கட்டிடங் களும் நூற்றாண்டு காணும் கர்வத்துடன் கம்பீரமாகக் காட்சி தந்தன. இக்காட்சியைக் காணும்போது “ஓங்கி உலகளந்த உத்தமன் பெயர் பாடி'' என்னும் ஆண்டாளின் பாசுர வரிகளே என் சிந்தையில் வந்து போயின. இப்பகுதி கல்லூரியின் வடபகுதி வளாகம். கொண்டாட்டங்கள் இப்பகுதியிலேயே நடந்தேறின. கம்பீரமாகக் கலைநயத்துடன் காட்சி தரும் நுழைவாயிலின் அழகே தனித்தன்மை வாய்ந்தது. விழிவிரிய நோக்க வைக்கும் இவ்வாயிலினூடே செல்லும் போது ஒரு கோவிலுக்குள் நுழைவது போன்ற அனுபவம் ஏற்படும். அப்போது நான் ஆசிரியையாக இருந்த காலத்தை எண்ணிப் பார்த்தேன். இம்மாற்றத்தையும் எழில்மிகு தோற்றத் தையும் ஏற்படுத்த உதவியவர் எம் கல்லூரியின் பழைய மாணவி சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம் அவர்கள். அன்னாரின் பேருதவியை நினைந்து கல்லூரி பெருமைப்படுகிறது. காலத்தால் செய்த உதவி ஞாலத்தையும் விஞ்சி நிற்பதனை இவ்விடத்தில் அவதானித்தேன். பல இலட்சம் ரூபா செலவில் அவரது தாயாரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இத்தோரண வாயில் எல்லோரையும் அன்னையைப் போல வரவேற்கிறது. விழாவின் போது இருவரும் கௌரவிக்கப்பட்டனர்.

வளாகத்தின் மேற்குப் பக்கமாக காங்கேசன்துறை வீதியை நோக்கியபடி மற்றொரு வாயிலின் வளைவு தலைநிமிர்ந்து பெருமையோடு வீதியில் செல்வோரை நோக்குகிறது. இதனை அமைத்துக் கொடுத்தவர் யசோதரா ஜெயபாலதேவன். இவர்கள் இருவரும் கல்லூரியின் பழைய மாணவர்கள். இத்தகைய சேவைகள் மூலமாகத் தமது நன்றியைக் காணிக்கை யாக்குகின்றனர். விழா நடைபெறும் வளாகம் இந்திரலோகத்தில் நுழைந்து விட்டோமோ என்று பிரமிக்க வைக்கிறது. எல்லா இடங்களும் புதுப்பொலிவுடன் விளங்கின. வெள்ளை, செந்நிறக் கொடிகள், கடதாசி மாலைகள் தெருவீதிகளை அலங்கரித்தன. வெளிப்புறச் சூழல் இவ்வாறாக அமைந்திருக்க உள்ளே நடு முற்றத்தில் பலவர்ணப் பூக்கள் நிறைந்த செடிகள், கொடிகளோடு இயற்கை என்னும் இளைய கன்னி பச்சைப் பாவாடை உடுத்திப் பரந்து விரிந்து நின்றாள். “கண்கொள்ளாக் காட்சி” என்று சொல்லுவார்களே, அதன் அர்த்தத்தை

அன்றுதான் நான் பூரணமாக உணர்ந்து கொண்டேன். அத்தனை அழகு. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வண்ணமிகு எழில்கோலம் கொக்குவில் இந்து அன்னையின் திருக்கோலம்.

நூற்றாண்டுவிழா ஒழுங்குகளைச் சரிவர நடை முறைப்படுத்துவதற்கெனக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை திறம்படச் செயலாற்றின. குழுவினரின் வழிநடத்தலால் மூன்று நாள் நிகழ்வுகளும் சீராகவும், சிறப்பாகவும் நடைபெற்றன. நிகழ்வுகளைக் கண்டவர், கேட்டவர் என அனைவரும் மனந்திறந்து சிலாகித்துப் பேசினர். யாழ்ப்பாண மண்ணில் இத்தகைய பெருவிழாவினை அனுபவித்த பேரின்பம் அனைவரது நெஞ்சங்களையும் நிரப்பியிருந்தது. கலைமகள் இலட்சுமி கடாட்சத்துடன் கொலு வீற்றிருந்ததை இங்குதான் காண முடிந்தது. ஆளுமை கொண்ட மனிதர்களாலேயே எதனையும் திறம்பட நடாத்திட முடியும் என்பதை நான் நன்கு அறிவேன். இந்த வகையில் ஆளுமை, ஆற்றல் மிகு அதிபரான திரு.அ.அகிலதாஸ் அவர்களை, அவர்களது செயற்திறனை உளமார மெச்சிக் கொண்டேன்.

காலை நிகழ்வுகள் முற்பகல் 9:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணிவரை பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்திலும், மாலை நிகழ்வுகள் பிற்பகல் 5:00 மணி தொடக்கம் இரவு 8:30 மணிவரை மாலதி கலையரங்கிலும் நடைபெற்றன. ஸ்தாபகர் திரு.E.செல்லையா, முன்னாள் அதிபர் திரு.M.கார்த்திகேசு அவர்கள் பெயர்களைத் தாங்கிய அரங்குகளில் முதல்நாள் நிகழ்வுகளும், திரு.V.நாகலிங்கம், திரு.ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் பெயர்களைத் தாங்கிய அரங்குகளில் இரண்டாம் நாள் நிகழ்வுகளும், திரு.C.K.கந்தசுவாமி, திரு.M.மகாதேவா பெயர்களில் அமைந்த அரங்குகளில் மூன்றாம் நாள் நிகழ்வுகளும் ஒழுங்காக மிகச் சிறப்பாக நடைபெற்றன. கல்லூரியின் இன்றைய நிலையின் உயர்வுக்கும், வளர்ச்சிக்கும் தம்மை உரமாக அர்ப்பணித்த பெரியோர்கள் இவர்கள் என்னும் வகையில் இப்பெரியார்களின் அளவிடற்கரிய பணிகளை நன்றியுடன் கண்ணீர்ப் பெருக்கோடு நினைவு கூர்ந்தோம். இப்பெரியோர்களை மேலும் சிறப்பிக்கும் வகையினவாக ஒவ்வொரு நாளும் விதவிதமான அலங்காரத்துடன் இவர்களின் பெயரிலான அரங்க மேடைகள் காட்சி தந்தன.

இந்துப் பாரம்பரியங்களைப் பேணி மதிப்பவர்கள் நாங்கள் என்ற வகையில் ஒவ்வொரு நாள் விழாவும் காலையும் மாலையும் கல்லூரியின் காவல் தெய்வமான கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் தரிசனத்துடன் ஆரம்பமாகியது. அதிபர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள், சாரணர்கள், வழிகாட்டிகள் எனப் பலரும் கோவில் வாசலில் குழுமினர். அதிபர் விருந்தினர்களை அழைத்து உள்ளே சென்று வழிபாடு செய்து காளாஞ்சி பெற்ற பின் வாயிலில் வைத்து அவர்களுக்கு மாலை அணிவித்து விருந்தினர்கள் வீதி வழியே கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். பாண்ட் வாத்திய இசையணியில் ஆண், பெண் இரு பாலாரும் மாறி மாறி இசை மழை பொழிய, வீதிகளின் இருமருங்கிலும் மாணவச் செல்வங்களும், விழாக்காண வந்திருந்த மக்கள் கூட்டமும் நிறைந்திருந்த அக்காட்சி மட்டற்ற மகிழ்ச்சியை எனக்குள் ஏற்படுத்தியது.

ஊர்வலம் தெற்குப் பிரதான வாசலினூடாகச் சென்று தேசியக் கொடி, கல்லூரிக் கொடி என்பன ஏற்றப்பட்டு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தை அடைந்தது. அதிபர், விருந்தினர்கள் மங்கள விளக் கேற்றலைத் தொடர்ந்து தேவார பாராயணத்துடன் அன்றைய நிகழ்வுகள் ஆரம்பமாகின. அன்று செல்லையா அரங்கு. அதில் அமைந்த பெரியாரின் படம் எல்லோரையும் ஈர்த்தது. அவர் காலத்துக் கல்லூரி நினைவுகளை எழுப்பியது. நூறு வருடங்களான நினைவுகள் நீண்ட பாதை. நல்லன, தீயனவான சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக சுருள் விரிந்தது போன்ற காட்சிகள் மனதில் எழுந்தன. அவரது நினைவுப் பேருரையைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்பட்டது. இம்மலர் ஒரு வரலாற்றுப் பதிவு. பொக்கிஷமாகப் பேணப்பட வேண்டிய ஆவணம். கல்வித் திணைக்கள அதிகாரிகள் அன்று பிரதம விருந்தினர்களாக விழாவினைச் சிறப்பித்தனர்.

மாலை நிகழ்வுகள் மாலதி கலையரங்கில் நடைபெற்றன. காலை நேரம் நடந்தது போலவே ஊர்வலம் புறப்பட்டு K.K.S. வீதியில் அமைந்துள்ள வாசல் வழியே நாகலிங்கம் மைதானத்தை அடைந்தது. கார்த்திகேசு அரங்கில் பிரமுகர்களின் உரை, சிறப்புரை, வாழ்த்துரை, நிறைவுரை என்பன நடைபெற்று ஈற்றில் கலை நிகழ்வுகளுடன், கல்லூரி கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. இவ்வண்ணம் மறுநாள் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை நாகலிங்கம் அரங்கு, மாலை ஹன்டி பேரின்பநாயகம் அரங்குகளில் பேருரைகளுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 18ஆம் திகதி ஞாயிறு காலை C.K.கந்தசுவாமி அரங்கில் நிகழ்வுகள், உரைகளைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா நடை பெற்றது. இவ்விழா வித்தியாசமான முறையில் அமைந் திருந்தது. பரந்த அளவில் யாழ்ப்பாணத்திலுள்ள வேறு பல பாடசாலைகளும் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமையால் பரிசுகளைப் பெற்றார்கள். இச்செயற்பாடு அனைத்துப் பாடசாலைகளும் சிநேக

பூர்வமாகக் கைகோர்த்துச் செல்லக்கூடிய முன்மாதிரி யான சிறப்பம்சமாக எனக்குத் தோன்றியது. பேச்சு, கவிதை, கட்டுரை, சித்திரம், பண்ணிசை, சிந்துநடைக் கூத்து, சதுரங்கம், மெய்வல்லுநர் போட்டி, உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், எல்லே, கூடைப்பந்தாட்டம், கரம், உடற்பயிற்சி எனப் பலதரப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றுப் பல பாடசாலை மாணவர்கள் பரிசு பெற்றனர். சில பாடசாலை அதிபர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வில் நினைவுப் பேருரையை ஆற்றியவர் பழைய மாணவி, முன்னாள் ஆசிரியர், எம் முன்னாள் அதிபர் திரு.V.நாகலிங்கம் (Shakespeare) அவர்களின் புதல்வி திருமதி.நித்தியலட்சுமி குணபாலசிங்கம் அவர்கள். இவர் இன்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளார். மாலை மகாதேவா அரங்கில் சிறப்பு அதிதியாக மேடையில் அமர்ந்திருந்த திருமதி.நாமகள் சிவகுமார் பழைய மாணவர் சங்க கனடா கிளை உறுப்பினராக எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வண்ணம் நூற்றாண்டு விழாவின் மூன்று நாள் நிகழ்வுகளும் சிறப்புடன் நடந்தேறின. 'தேவர்கள் அமுதுண்டு களித்த மகிழ்வினை' விழா வில் கலந்து கொண்டோர் அனைவரும் பெற்றனர். நமது கல்லூரி அன்னையின் விழாக்கால நிகழ்வு களும் சிறப்புக்களும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை எனில் மிகையல்ல. கிராமத்து ஒண்மணி மகுடமாக மட்டுமல்ல, இலங்கையின் ஒண்மணி மகுடமாகவும் நமது கல்லூரி வருங்காலத்தில் வளர்ந்தோங்கிப் புகழ் பரப்பும் என்பதற்கு இந்நிகழ்வுகளே உரை கற்களாகும்.

நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்குமுகமாகவும் கல்லூரி அன்னையைக் கௌரவப்படுத்தி உலகெங்கும் அன்னையின் புகழைப் பரப்பிடும் வகையிலும் ''முத்திரை வெளியீட்டு நிகழ்வு'' தனிப்பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டமையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். ஜூலை 22ஆம் திகதி வியாழக்கிழமை அன்று நூற்றாண்டு விழா முத்திரை வெளியீடும், ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் 110ஆவது வயது பூர்த்தி ஞாபகார்த்த முத்திரை வெளியீடும் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவர் திரு.K.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் திரு.காமினி, அஞ்சல் திணைக்கள முத்திரை வெளியீட்டுப் பணிப்பாளர் திரு.ஜெயமான, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சரவணபவன், யாழ். மாவட்ட அஞ்சல் அதிபர் திரு.ஜெயரட்ணம் மற்றும் பல விருந்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அஞ்சல் தலைகளை இலங்கை அஞ்சல் திணைக்கள பிரதிமா அதிபர் திரு.காமினி அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

நூற்றாண்டு முத்திரை வெளியீடு, முதல் நாள் தபால் உறை வெளியீடு என்பனவற்றை உள்ளடக்கிய நிகழ்வு பலர் பங்குபற்றிய நிகழ்வாக இருந்தது. எம் கல்லூரி தென்னிலங்கையில் பிரபல்யம் அடையவும் பெயர் விளங்கவும் வழி செய்த பெருமைக்குரியவர் திரு.S.H.பேரின்பநாயகம் அவர்கள். அவர் மார்ச் 28, 1899இல் பிறந்து டிசெம்பர் 11, 1977இல் மறைந்தார். அன்னாரின் கல்லூரிக் காலப் பணிகள் அளவிடற்கரியன. நன்றி மறவாப் பண்பில் வளர்ந்த தமிழர்களாகிய நாம் அவரது செயற்திறனைக் கௌரவிக்கும் வகையில் அவர் நினைவாக நூற்றாண்டு விழாக்காலத்தில் முத்திரை வெளியீடு செய்தமை சாலப் பொருந்தும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரு குடும்பம். குடும்ப உறுப்பினர்கள் காலச் சூழலில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வந்தாலும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒன்றுகூடி மகிழ்வதைப் போல், கல்லூரி அன்னையின் பிள்ளைகளும் அவள் மடியில் ஒன்று சேர்ந்து களிக்க இவ்விழா நிகழ்வுகள் உறுதுணையாக அமைந்தன. நூற்றாண்டு விழாவின் மூன்று நாள் நிகழ்வுகளோடு இணைந்து, தனியொரு நாள் நிகழ்வாக நடைபெற்ற முத்திரை வெளியீட்டு நிகழ்வுநாளும் சேர்ந்து நான்கு நாட்களும் அன்னையின் முற்றத்தில் அவளது அரவணைப்பில் பழைய மாணவர்கள் பலரும் வந்து சேர்ந்து உணவுண்டு தமது இல்லம் போல் உலாவி மகிழ்ந்து, பழைய பசுமையான நிகழ்வுகளில் மூழ்கி, கல்லூரியின் வளர்ச்சி, உயர்ச்சிகளைப் பார்த்துப் பூரிப்படைந்தனர். விழாவிற்கு வந்தவர்களுக்கு சிற்றுண்டி, பானங்கள், மதிய போசனம் என்பன வழங்கப்பட்டன. அனைவரும் உண்டு களித்து, கண்டு களித்துச் சென்றனர். இவ்விழாவினைக் காணவும், பங்குபற்றவும் எம்மில் பலருக்கும் கிடைத்த வாய்ப்பு கிடைத்தற்கரிய பெரும்பாக்கியமே. அவ்வரிய வாய்ப்பை எமக்களித்த எம் கல்லூரித் தாய்க்கும், நீண்ட ஆயுட்காலத்தைத் தந்த எம் பெருமானுக்கும் உளமார நன்றிப் பெருக்குடன் வணக்கம் கூறுகிறோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி வாழ்க, வளர்க.

**(திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களால் 2011ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடாக் கிளையினரின் "மகுடம்" சஞ்சிகையில் எழுதப்பட்ட இக்கட்டுரையானது மீள் பிரசுரமாக இம்மலரினை அலங்கரிக்கின்றது.)**

*



# A Humble Tribute to A Former Colleague


It gives me great pleasure to pay tribute to a noble woman whose life was closely intertwined with the growth of an educational institution – Kokuvil Hindu College. The late Mrs.Sukirthalakshmy Supramaniam's association with Kokuvil Hindu College spans a period of 52 years as a student, teacher and Deputy Principal. It was during her years as a student that I first came to know her. She was a senior schoolmate of mine during the late nineteen thirties. Later on, during the nineteen sixties I had the good fortune of being her colleague on the staff of Kokuvil Hindu College.

It was during those years as a teacher at Kokuvil Hindu College that I came to know her intimately. She struck me as one who was highly dedicated and motivated in her profession. She was a teacher of Mathematics and English. She took great care in drilling the finer points of grammar and syntax of the English language into the minds of her students with clarity and precision. She did not believe that the teacher's job ends with the finishing of the syllabus for the class. She taught human values and inspired her students with a feeling of confidence and discipline which stood them in good stead when they ventured out in the world. She taught especially the girl students how they should observe modesty in their dress and manners, in keeping with the culture. In short, she not only taught but also inspired her charges. When I write about Mrs.Supramaniam, the following lines from Ward come to my mind. "The mediocre teacher tells, the good teacher explains, the superior teacher demonstrates and the great teacher inspires". Mrs. Supramaniam was, indeed, a great teacher – a fact borne out by the thousands of students who flocked to her funeral and the flood of messages received from her students all over the world.

Mrs.Supramaniam did not stop her association with Kokuvil Hindu College after her retirement. She was the live wire at the school's Old Students' Association both in Sri Lanka and Canada. In Canada she took an active interest in the work of the Old Students' Association by organizing singing and oratorical contests, collecting funds for the expansion of the school and instituting scholarships for deserving students in Kokuvil Hindu College. She generally acted as counsellor to her old students. She would not miss a marriage or funeral ceremony of her students or their families. Her loyalty and love to her school was so immense that she considered Kokuvil Hindu College as her second home. It is an accident or an act of God – I don't know – that her final illness started at a picnic organized by the old students of Kokuvil Hindu College in Toronto.

On a personal note, I would like to add how my family was touched by Mrs. Supramaniam's attendance at my sister-in-law Suthamathy's funeral. She even brought copies of printed messages of sympathy from the Old Students' Association of Canada for distribution to the people who attended the funeral in Woodstock. At the 31st day memorial to Suthamathy in Toronto, Mrs.Supramaniam spoke of her student's ability and her courage in battling the deadly disease cancer which took away her life. My wife, children and the Sangarasivam family who were all students of Mrs. Supramaniam join me in concluding this tribute to this remarkable woman with these words – **'Life well lived and service nobly rendered'.**

May her soul rest in peace!



**Venasithamby Rajasekaram (Canada)**

Former student, teacher

Kokuvil Hindu College



# Sukirtha Teacher
## - An Exemplary Colleague

**S**ukirtha teacher taught Mathematics in my upper-six class. She was a devoted teacher and she took care to explain everything in detail so that all students got a clear understanding of Mathematics. Not only she had been a brilliant teacher but also she cared for all her students. I still remember one incident which displayed her compassionate concern for her students' progress. It was about 3:20 p.m. and she wrote three sums on the black board and asked us to copy. By the time we copied one or two sums college bell rang and most of the students ran out of the class. I was still trying to copy the third sum. Sukirtha teacher sat next to me and told me that she would copy the last sum so that I could leave early. She had such a kind heart.

In 1949 I was in Form 11 with Rajachandran (who is a GP in the U.K. now) and there were three other boys and 25 girls in that class. Sukirtha teacher taught us English in that class. She explained very clearly the text book "English grammar and composition" by Wren and Martin chapter by chapter. Because of her excellent teaching I hardly make grammatical or spelling mistakes in my writing. Though I am not a gifted or veracious writer, Sukirtha teacher's foundation made my university education and teaching career a pleasant one.

Even after she got married to Mr.Supramaniam, most of us continued to call her Sukirtha teacher rather than Mrs.Supramaniam as with other lady teachers. She and Mrs.P.P.Bhargaviammah another veteran English teacher were in charge of girls' discipline in the school. They did an exemplary work in maintaining discipline among girls; they commanded the respect of girls not by dictating.

On graduating from the University of Ceylon in 1959 Mr.Handy Perinbanayagam, then Principal of Kokuvil Hindu College, invited me to join the staff of the college. I then became a colleague of Sukirtha teacher. I had a cordial relationship with her as a colleague. In 1961 and 1962 I was the treasurer of Kokuvil Hindu College Teachers' Guild. The secretary and I were given a room where all teachers came and collected their monthly salary. Every time Sukirtha teacher came to collect her salary, she never failed to enquire about my family, brothers and sisters. All my sisters and brothers had the privilege of studying under this great teacher. When my older sister died in Canada in 2009 Sukirtha teacher came a few times to the funeral home and had been a great comfort.

I taught three of her children. I taught Chemistry to Sukanya and Chanthrika in their G.C.E. 'A' level class. In 1979 I taught Pure Mathematics to her son Suthaker for his G.C.E. 'A' level exams and he got a distinction ("A") for that subject. 18 out of 30 in that class got distinction ("A") in Pure Mathematics that year and the rest got good grades like "B" and "C". This was the best performance of my students in my teaching career.

In 1979 the department of education instructed all Principals to form school development society

**K.Chanthramowleesan (England)**

Former student, teacher

Kokuvil Hindu College



consisting of tutorial staff, old students and parents. The Principal would be the ex-officio president while all other office bearers were to be elected. The name of a candidate favourable to the college administration was proposed for the post of secretary and he was duly elected. According to the constitution, the treasurer of the society should be a member of the tutorial staff. The name of a teacher was proposed. Suddenly late Mr.Balayogan, a colleague got up and proposed my name to the surprise of all including me. When the votes were taken, all female teachers except Sukirtha teacher voted for the other candidate. However I won the election with a good majority. All female teachers had a cordial relationship with me but they did not have the courage to speak their minds. But Sukirtha teacher stood for her principles and did what was good for the school without personal interests. This is one of many examples in her life which shows her good nature, honesty, fearlessness and sincerity. My admiration for her grew stronger and stronger after this event not because she supported me but for her willingness to see things are done properly in college administration.

I left school in 1981 to take up an appointment in Nigeria. The Kokuvil Hindu College Teachers' Guild gave a farewell tea party. It was customary for the Principal to say few words about the leaving teacher. Sukirtha teacher who was then Deputy Principal spoke few words about me. She spoke about my capabilities, good qualities and teaching ability quoting incidents in my school days.

In 2008 I went to Canada to visit my sister. The next day, I went to a temple in Canada. There I met Mr.Supramaniam and had a chat with him. He said that Sukirtha teacher would call that night. As he said she called me over the phone and inquired about my health and family. She further said that they would organize an evening tea party. Subsequently Mr.Shanmuganathan, president of K.H.C. O.S.A. Canada branch spoke to me and requested me to give a suitable date to have the tea party and a date was agreed upon. When I went to the tea party, Sukirtha teacher was in the forefront to receive me. The tea party was well organized and it was well attended. Photos were taken during and after the tea party and it was the last time I met her. Even though she left us all, her relentless services to the school and the community will not be forgotten by thousands of students and colleagues at Kokuvil Hindu College.

*





# என் உள்ளம் குடிகொண்ட ஆசிரியை

இந்துவின் முத்தென இலங்காபுரியின், நந்திக்கொடி ஓங்குபுகழ் யாழ்நகரின் வடபால், சைவமும் தமிழும் தழைத்தோங்கும், கொக்குவில் பதியில் 1923ஆம் ஆண்டு பிறந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று அக்கல்லூரியின் ஆசிரியராக, பிரதி அதிபராக 42 வருடங்கள் கடமையாற்றிய மூத்த பெருமாட்டி, கல்விச்சுடர், தூண்டா மணிவிளக்கு, ஒளி இழந்த செய்தி கொக்குவில் இந்துக் கல்லூரியை நேசித்த, பூசித்த பல்லாயிரம் பழைய மாணவர்களை அதிர்ச்சியிலும் ஆழ்ந்த கவலையிலும் ஆழ்த்தியது.

தான் மட்டும் மணம் பரப்பாமல் சார்ந்தவற்றையும் மணம் வீசச்செய்யும் சந்தன மரம் போல தன்னையும், சார்ந்தவர்களையும் உயர்த்தி நின்ற ஒரு உன்னதமான பெருமாட்டி. ''தன்னடக்கம் சான்றோர்க்கழகு'' என்பதற்கு உதாரணமாக தன்னடக்கம், அமைதி, ஆளுமை நிறைந்து சான்றாண்மையைத் தனதாக்கிக் கொண்ட உன்னதமான மனிதர்.

அறிவு, ஆற்றல், அர்ப்பணிப்பு என்பவற்றை அணிகளாகக் கொண்ட அன்னை எம் ஆசிரியை. அன்பு, பரிவு, ஒழுக்கம், பொறுமை, நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, அஞ்சாமை என்னும் மனித விழுமியங்களை மாலைகளாக அணிந்தவர். வயது முதிர்ச்சியிலும், செயலில் தளர்ச்சியின்றி சேவைகள் பல புரிந்த ஒரு தியாகி எம் ஆசிரியை.

''சுகிர்த ரீச்சர்'' என்று நாம் அன்புடனும் மரியாதையுடனும் பயபக்தியுடனும் அழைத்த எமது கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவியும், ஆசிரியையும், பிரதி அதிபருமாக இருந்து எம் எல்லோர்க்கும் அன்னை போல் விளங்கிய திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள், மறைந்த செய்தி என்னை ஆறாத்துயரத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியது. அன்னார் 88 வருடங்கள் பூரண ஆயுளுடன் வாழ்ந்து மறைந்தாலும் அவரை 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் பலவருடங்களின் பின் பார்த்தபோது அன்றுபோல் அதே நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, சுறுசுறுப்பான பேச்சு, அன்பாக எம்முடன் அளவளாவிய நிலை கண்டு அவர் மேலும் பலவருடங்கள் சுகமாக வாழ்வார் என நினைத்தோம். எம்முடைய கண்திருஷ்டியோ என்னவோ அவர் ஒரு வருடத்தினுள் இறைவனடி சேர்ந்து விட்டார். இதுதான் என் போன்றவர்களின் அதிர்ச்சிக்குக் காரணம். கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவி மட்டுமல்ல கொக்குவில் கிராமத்தில் எல்லோரையும் நன்கு அறிந்த அரவணைத்த ஒரு மூத்த மனிதர். இவருடைய மறைவை அறிந்ததும் அவருக்கு இறுதி அஞ்சலி நேரில் செலுத்த முடியாமல் என் மனம் வேதனைப்பட்டது. அவ்வேதனையை நண்பர்களுடனும், உறவினர்களுடனும் பகிர்வதைத் தவிர வேறு வழியில்லாமல் இருந்தது.

இந்நிலையில் சென்ற ஒக்ரோபர் 9, 2011 அன்று

**ப.ஜெகநாதன்** (JP) (Colombo)
முன்னாள் மாணவன்,
ஆசிரியர், பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி





அன்னாரின் மருமகன் திரு.ரகு தேவராஜா அவர்கள் கனடாவில் இருந்து என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவருடைய நினைவு மலர் ஒன்று வெளியிட இருப்பதாகவும் அதில் நீண்டகாலம் அன்னாருடன் தொடர்புடையவர் என்ற வகையில் அவர் பற்றிய எனது நினைவுகளை எழுதி அனுப்புமாறும் கேட்டுக்கொண்டார். இறுதி அஞ்சலி செலுத்த முடியாமல் போய்விட்டதே என்ற எனது மன ஆதங்கத்தைத் தீர்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என உடனடியாக நான் சம்மதம் தெரிவித்தேன்.

### மாணவனாக எனது பார்வை

அன்னையின் மாணவன் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அன்னார் எனக்கு 7ஆம், 8ஆம் வகுப்புக்களில் கணித பாடம் கற்பித்த ஆசிரியை. பாடத்தைத் தனக்கே உரித்தான அச்சுறுத்திய மொழிநடையிலும், ஆழமாகப் பதியுமாறும் பயிற்றுவித்த ஒரு வித்தகி. அவருடைய அடித்தளமான கற்பித்தல்தான் என்னைப் பிற்காலத்தில் ஒரு கணித ஆசானாக்கியது என்றால் மிகையாகாது. வகுப்பில் எந்த ஒரு மாணவனையும் “எடே”, “மடையா”, “பேயா” என்று ஏசியதை நானறியேன். அழைக்கும்போது இங்கு “வாமோனே”, “வாபிள்ளை” என்று அன்புடன்தான் அழைப்பார். தவறு செய்துவிட்டால் அவருடைய இறுக்கமான கண்பார்வை எம்மைக் கலங்கச் செய்துவிடும். ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பானவர். கல்லூரியின் ஒழுங்கு கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பாக இருந்த மூத்த ஆசிரியர். சமய நிகழ்வுகளிலும், கலை நிகழ்வுகளிலும் மாணவரை உற்சாகப்படுத்திப் பங்குபற்ற வைக்கும் ஒரு அர்ப்பணிப்பான ஆசிரியராகத்தான் என் பார்வையில் அவர் காணப்பட்டார்.

### ஆசிரியனாக எனது பார்வையில்

1981ஆம் ஆண்டு ஏப்ரல் 01ஆம் திகதி நான் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஆசிரியனாக திருகோணமலையில் இருந்து மாற்றலாகி வந்தேன். அப்பொழுது அதிபராக திரு.அ.பஞ்சலிங்கமும், பிரதி அதிபராக அன்னாரும் இருந்தார்கள். அதிபரும் எனது குரு, பிரதி அதிபரும் எனது குரு. இது எனக்கு சற்றுத் தயக்கத்தைத் தந்தாலும் ஒரு தைரியத்தையும் தந்தது. என்னை இருவரும் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். “சுகிர்த ரீச்சர்” அவர்கள் “ஜெகநாதன் நீர் வந்தது நல்லது. இனிமேல் உங்களைப் போன்றவர்கள்தான் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்” என்று கூறி பழைய மாணவர்கள் ஆசிரியர்களாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வரவேண்டும் என்ற தன் விருப்பத்தை வெளிப்படுத்தியதை நான் உணர்ந்தேன். அவர் உரிமையுடன் பல பொறுப்புக்களை எனக்குத் தந்து என்னை நல்லாசிரியனாக வரவேண்டும் எனப் பலமுறை கூறாமல் கூறியுள்ளார். அவரிடம் எல்லாப் பிள்ளைகளையும் தன்பிள்ளைகள் போலும் தன்பிள்ளைகளை எல்லாப் பிள்ளைகள் போலும் நோக்கும் சமநிலை ஆசிரியத்தை நான் கண்டேன். இதற்கு ஒரு உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

நான் நினைக்கிறேன் 1983ஆம் ஆண்டு என்று. அப்பொழுது அவருடைய இரண்டாவது மகன் தென்பகுதியில் ஒரு வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தார். ஒருநாள் இடைவேளையின் போது மாணவர்களுடன் ஓடி விளையாடும் போது அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டு மண்டை உடைந்து இரத்தம் பெருகியது. நான் சுகிர்த ரீச்சரை



தேடிப் பார்த்தேன். அவர் அதிபர் அறையில் வடபகுதியில் அதிபருடன் கதைத்துக் கொண்டிருந்தார். நான் அவரிடம் சென்று உங்கள் மகனுக்குத் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிகிறது என்றேன். அவர் எந்தப் பதட்டமும் படாமல் மற்றப் பிள்ளைகளுக்கு என்ன செய்வீர்களோ அதைச் செய்யுங்கள் என்று கூறிவிட்டு அதிபருடன் பேச்சைத் தொடர்ந்தார். இது அவருடைய தன் பிள்ளைகளையும் மற்றப் பிள்ளைகள் போலக் கணிக்கும் ஆசிரியப் பண்பிற்கு எடுத்துக்காட்டாகும். இந்நிகழ்வு என் மனதிலும் ஆழப்பதிந்துவிட்ட ஒரு நிகழ்வாகும். இவ்வாறு ஆசிரியத்தை அணிகலனாகக் கொண்ட ஒரு பெருந்தகை.

## அன்னார் ஓய்வு பெற்றபின் எனது பார்வையில்

வயதின் முதிர்ச்சியினாலும் காலத்தின் கட்டாயத்தாலும் அன்னார் 1983ஆம் ஆண்டு பிரதி அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் சேவை செய்வதிலிருந்து ஓய்வு பெறவில்லை. தொடர்ந்து பழைய மாணவர் சங்கத்தில் தலைவராக, உபதலைவராகப் பலவருடங்கள் சேவை செய்த ஒரு உத்தமி. மேலும் கொக்குவில் கிழக்கு வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் மகளிர் குழுத் தலைவியாகவும் செயற்பட்டு, கிராமத்தின் இளம் பெண்களின் முன்னேற்றத்தில் பல சேவைகளைப் புரிந்து எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பிடித்த ஒரு உன்னத பெண்மணியாவார்.

இவர் கனடாவில் குடிபுக நேரிட்டாலும் கொக்குவில் இந்துக் கல்லூரியை மறக்கவில்லை. அங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவியாக இருந்து அங்குள்ள பழைய மாணவர்களை இணைத்துக் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல சேவைகளைப் புரிந்துள்ளார்.

## கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் காலை, மாலை என இரு அரங்குகளில் மிக விமரிசையாக நடைபெற்றது. அன்னார் கனடாவிலிருந்து தனது கணவர் திரு.சுப்பிரமணியம் அவர்களுடன் தனது வயது முதிர்விலும் வந்து கலந்து சிறப்பித்தமை அவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மேல் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்துள்ளார் என்பதை எடுத்துக்காட்டியது. மேலும் அங்கு முன்னாள் அதிபர்கள் திரு.நாகலிங்கம், திரு.கார்த்திகேசு போன்றவர்களின் நினைவுப் பேருரைகளை ஆற்றிப் பலருக்குத் தெரியாத பல வரலாற்று உண்மைகளையும் அவ்வதிபர்களின் சிறப்பான சேவைகளையும் எடுத்துக்கூறிப் பல அறியாத விடயங்களையும் அறியச் செய்த பெருமைக்குரியவர். நூற்றாண்டு விழாவின் மூன்று நாட்களும் காலை, மாலை நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்து உரையாற்றி கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுடன் அளவளாவி அன்பு பாராட்டி மகிழ்ந்த நினைவுகள் என் கண் முன் இன்றும் நிற்கின்றன. இத்தகைய பெருந்தகையின் இழப்பு கல்லூரிச் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

''பிறப்பவர்கள் ஒருநாள் இறப்பது திண்ணம்'' என்றாலும் சிலர் இறந்தாலும் மற்றவர்கள் மனதில் என்றும் வாழ்பவர்கள். அந்தவகையில் எம் அன்புக்குரிய ஆசிரியை, பிரதி அதிபர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருப்பார். அவருடைய சேவை என்றென்றும் போற்றப்படும்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்ற வள்ளுவனின் வாக்கிற்கமைய அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

*



# Sukirtha Teacher

## In The Eyes Of A Long Time Colleague




What struck me most about Sukirtha teacher was her witnessing attitude to whatever happened. Whatever may be the event, good or bad, the witness does not change. This attitude, it seems to me, had got fused into person of Sukirtha teacher.

An expression of this attitude was revealed in her very physical appearance. Anyone who had seen her in her twenties and then seen her, after a lapse of fifty or sixty years, would not have had any difficulty in recognizing her. It was as though her body witnessed, undergoing almost no change. This is not the case with many of us.

Her period of service of 42 years at Kokuvil Hindu College also reflected this attitude. Periods of calm and periods of strife came and went but she remained a witness, detached though not unconcerned, to events.

Again her career as a teacher also revealed the same attitude in her. She was made Vice – Principal (blessed be the soul that did it) only towards the end of her career. But this, long and undue, delay did not in any way affect her composure. She was again just a witness.

This attitude of being an alert witness to events, private or otherwise, stems from the conviction that everything happens as per will of God.

If unselfish service and placidity of temperament are means to reaching higher levels of consciousness, our Sukirtha teacher had surely travelled a long way in that direction.

All who had known her would feel the void she has left behind, but will still cherish the good memories of her.



**M.Kanthasamy (Texas, U.S.A.)**
Former student, teacher
Kokuvil Hindu College



# The Selfless and Tireless Teacher




I have known Sukirtha teacher for well over seven decades. She lost her father quite early but thanks to the enduring loving care of her beloved mother, the family was well guided and it lived an exemplary life – modest, peaceful and simple – and was well respected.

As I happened to live close to them then, I was impressed and inspired by the academic successes of the youngest in their family, Sukirtha acca. She matriculated from the London University quite early and soon got appointed as teacher at Kokuvil Hindu College. She relentlessly pursued her further studies privately from home. Her determination and perseverance helped her pass the London Bachelor of Arts degree – a rare achievement for a lady those days. She worked hard as a teacher, attending school regularly and punctually, paid careful attention to the advancement of her students and also helped maintain good discipline. She was one of the popular teachers of the time and all had high regards for her.

She had been a tireless selfless worker in the service of her Alma Mater. She helped the school organize fund–raising activities. Her contribution towards arranging concerts, entertainments has been of invaluable assistance.

Her long period of hard work was well rewarded, when Principal Panchalingam elevated her to the post of Vice Principal – a position she well deserved.

When she retired, she immigrated to Canada. The Old Students' Association there had been getting her help to organize work, and to coordinate with O.S.A branches in other countries. Despite her age and the delicate nature of her health, she was determined to make the long haul flight to Jaffna and be with the Principal, teachers, students and the parents to celebrate the Centenary of the Alma Mater. She was naturally excited and thrilled to see the changes taking place there and came back greatly satisfied. The trip she had undertaken speaks volume for her love for the Alma Mater.

Her passing away so unexpectedly has been a great blow to her dearest husband Mr.Supramaniam, her children and to all others near and dear to her. Our Alma Mater has lost a great champion.


**K.Kanthapillai**
**(London, England)**
Former student, teacher
Kokuvil Hindu College






# என் ஆசிரியர்,
# என் நண்பர்,
# என் வழிகாட்டி,
# என் தெய்வம்

# திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்



ஆரம்பக் கல்வியை ஆங்கில மொழிமூலம் கற்று மலேசியாவிலிருந்து வந்த எனக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் 6ஆம் வகுப்பில் அனுமதி கிடைத்தது. என்னுடன் திரு.க.இராஜநாயகத்திற்கும் அனுமதி கிடைத்தது. ஆங்கிலம் மூலம் கல்வி கற்றதனால் எனக்கு தமிழ் படிக்க வீட்டில் மட்டும் வாய்ப்புக் கிட்டியது. அதே போல பல வகுப்புக்கள் முன்னோக்கிச் சென்றதால் கணித அறிவு அதிகம் குறைவாக இருந்தது. எனக்குப் பேறாகக் கிடைத்த ஆசிரியை திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம். இவரை ''சுகிர்த ரீச்சர்'' என்று அன்போடு அழைப்போம். இவர் ஒரு கலைப் பட்டதாரி (லண்டன்). தமிழ், கணிதம் போதிப்பதில் வல்லவர். தமிழை இலகுவாகப் போதிப்பதில் வல்லவர். மாணவர்களுடன் அன்புடன் பழகுவார். கடினமான விடயத்தையும் விளக்கமாகச் சொல்வார். எனது தமிழ் அறிவு அவரால் கூடத்தொடங்கியது. J.S.C. வகுப்பில் ''நான் கண்ட விபத்து'' என்னும் விடயத்தை வைத்துக் கட்டுரை எழுதும்படி பணித்தார். நான் எனது கட்டுரையில் விபத்து நடந்த இடத்து சூழ்நிலையை விபரித்து எழுதியிருந்தேன். எனது கட்டுரையை எனது சக மாணவர்களுக்கு வாசித்துக் காட்டியதுமல்லாமல் கல்லூரி முழுவதற்கும் தெரியப்படுத்தினார். என்னையும் மனதாரப் பாராட்டினார்.

கணித பாடத் தரத்திலும் மிகவும் குறைவாகவே மாணவர்கள் காணப்பட்டனர். அதனால் அதில் அதிக கவனம் செலுத்தினார். மணி அடிப்பதற்கு முன் வகுப்பிற்கு வருவார். எமக்கு வகுப்பு முடிந்து மணி அடிப்பதும் கேட்காமல் போய்விடும். அவ்வளவு சிரத்தையாய் எமது வேலையில்


**தம்பிஜயா தேவராஜா** (JP)
முன்னாள் மாணவன்,
விளையாட்டுப் பொறுப்பாசிரியர்,
பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி







மூழ்கியிருந்தோம்.

தூய்மையான, எளிமையான உடையணிந்திருப்பார். அவர் நடப்பதும் தெரியாது. மாணவர்களிடம் நண்பனாகப் பழகினார். J.S.C. வகுப்பில் Selective Test என்ற பரீட்சை அறிமுகமானது. 1956ஆம் ஆண்டு அதற்குத் தயார் செய்யும் பொறுப்பு இவரிடம் கையளிக்கப்பட்டது. கல்லூரி முடிந்ததும் மேலதிக வகுப்புக்களை நடாத்தியும், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மேலதிக வகுப்புக்களை நடாத்தியும் மாணவர்களைத் தயார் செய்தார். பலரும் சித்தியடைந்தனர். பின்பு அப்பரீட்சை மீள் பெறப்பட்டது.

பெண்களின் ஒழுக்கத்திற்குப் பொறுப்பாக இருந்து சிறப்புற சேவை செய்தார். பெண்பிள்ளைகள் ஆங்கிலம், தமிழ், சமயப் போட்டிகளில் வெற்றிபெற அயராது உழைத்தார். இவரது காலத்தில் பேச்சுப் போட்டிகளிலும், இசை, நடனப் போட்டிகளிலும் பெண்கள் வெற்றி பெற்றனர். இவர் தாம் எடுத்த வேலையைத் தனது வெற்றியாகக் கருதி மகிழ்ந்தார்.

சக ஆசிரியர்களிடம் அன்பாகப் பழகி மதிப்புப் பெற்றார். அதிபர்கள் இவர்மேல் அதிக அன்பு செலுத்தினர். பல பொறுப்புக்களையும் கொடுத்தனர். "லிங்கா லைட்ஸ்" காணிவேல் நடைபெற்ற பொழுது அயராது உழைத்துப் பாராட்டையும் பெற்றார்.

இவரது திருமண வாழ்வு மகிழ்வு நிறைந்ததாக அமைந்தது. இவரது கணவர் திரு.சுப்பிரமணியம் இவரது கடமைக்கு ஊறு விளைவிக்காமல் ஊக்கம் கொடுத்தார்.

இவரது குழந்தைச் செல்வங்கள் உயர்கல்வி கற்று நல்ல நிலையில் உள்ளார்கள். அவர்களும் இவரைப் போன்று கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றனர்.

திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தென்பகுதிக்கு பிரதி அதிபராகக் கடமையாற்றினார். பல புதிய எண்ணங்களைச் செயற்படுத்தினார். அவரது இருக்கையில் நான் அமர்ந்தபொழுது எனக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. அவர் வழியிலேயே என்னாலும் கடமை செய்ய முடிந்தது.

கல்லூரியின் நூற்றாண்டு விழாவுக்கு வருகை தந்திருந்தபொழுது அவரைச் சந்தித்துக் காலில் விழுந்து வணங்கினேன். தனது ஆசிகளைத் தெரிவித்து வாழ்த்தினார். கனடாவிற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சந்தர்ப்பம் வரும் பொழுது வருவேன். வரமுயற்சிப்பேன். என்னோடு பயின்றவர்கள், கற்பித்தவர்கள் அங்கு இருக்கின்றார்கள். எனவே கட்டாயம் வர முயற்சிப்பேன் என்று பதில் கூறினேன். வரும்பொழுது தன்னுடன் தங்கியிருக்கலாம் என்று கூறினார்.

இவ்வளவு சிறப்பு மிக்க ஆசிரியை எம்மைவிட்டுப் பிரிந்தார் என்னும்பொழுது கல்லூரிச் சமூகமே அழுகின்றது. கிராமமும் அழுகின்றது. அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*



# Remembering Sukirtha Teacher

Mrs.Sukirthalakshmy Supramaniam was well known as Sukirtha teacher among everyone of Kokuvil. I joined Kokuvil Hindu staff in 1951, after that only I had the privilege of mixing in her midst. I noticed how she maintained tradition, culture and prestige and played an important role in educational advancement and cultural development of Kokuvil village. I admired her simplicity and had high respect towards her. She was quietly dignified and unobtrusive in manner.



She had her education at Kokuvil Hindu that gave her early mental nourishment and she took it as a life-long mission to serve Kokuvil Hindu College. She had her first career as a teacher at Kokuvil Hindu College and ended as the Vice – Principal of Kokuvil Hindu College. She was a good teacher and well respected by her students. She was a good friend to her co-staff. She taught Latin among other subjects.

She sacrificed her thoughts, words and deed to Kokuvil Hindu until she left us. Her duty consciousness played a significant role in what Kokuvil Hindu College is today.

She loved her school dearly. Besides being a very successful and efficient teacher, she helped in maintaining discipline among the students. By being the president, later the vice president of Canada's old students' association of Kokuvil Hindu College, she helped to work in unison with one goal maintaining the honour and dignity of Kokuvil Hindu College. She dedicated her life in many corners to uplift the school.

I recollect the day of the "get together" of Kokuvil Hindu College (2011) at the park, still my heart aches when I think of it. That day she was chatting with me for a long time. I never thought that would be her last chat with me. Her memories will never fade from my heart.

May her soul rest in peace!

**Mrs.Nageswary Thurairajasingam (Canada)**
Former student, teacher
Kokuvil Hindu College





# AN EDUCATOR AND MENTOR

It is my proud privilege to have been a student and colleague of Mrs.Sukirthalakshmy Supramaniam ………… to all "Sukirtha Teacher". She was a student, teacher and finally retired as Deputy Principal after a successful career of 42 years at Kokuvil Hindu College. She grew with the school and lives of both were inter-twined.

She did her duty with passion and enthusiasm. A person with easy going demeanour, she earned the respect of all through her easy going mannerisms. During my student days and later as a colleague have never seen nor heard raise her voice or reprimand any student but still had full class control……. just a silent look conveys the message. A meticulous teacher who could make her teaching of any subject Mathematics, Tamil or English effective and could reach the students at any level.


Every good action inspires one for another. This very aptly defines and fits Sukirtha teacher. One must do his / her work with a sense of sanctity and not feel that it is boring work, dragging you. Do it in silence without blowing your own trumpet. Must not talk of it and make much of it. Never bring a critical attitude towards it. It is better not to work at all than to work with the wrong spirit. Nothing is more purifying than unselfish work.

Sukirtha teacher had all these qualities as a teacher, administrator, later as a guide and leader to her Alma Mater in Canada. My mind can no further go to enumerate her sterling qualities and her many merits. She was indeed a plus personality.

Without any reservation I could vouch that we who had the opportunity to go through her at Kokuvil Hindu College salute her for her classroom teaching, mentoring female students and others who sought help and the memories that go with it, until our memories fail due to age.



**V.Ganeshalingam**
**(Sydney, Australia)**
Former student, teacher
Kokuvil Hindu College





# நீங்காத நினைவுகள்

எனது ஆசிரியை திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் பற்றிய இனிய நினைவுகள் என் மனதிலே நிழலாடுகின்றன. கொக்குவில் இந்துக் கல்லூரியிலே முதன் முதலில் ஆறாம் வகுப்பில் எனது சமயபாட ஆசிரியையாக அவர் இருந்தார். இனிமையாகப் பாடுவார். நல்ல தேவாரங்களை இனிமையாகச் சொல்லித் தருவார். நீண்ட பின்னலுடன் அழகாகச் சேலை அணிந்து அவர் வகுப்புக்கு வருவதே ஒரு இனிய அனுபவம். அவரை ஒரு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவுமே நான் கருதினேன். பின்னர் அவர் மேல் வகுப்புக்களில் எனக்கு ஆங்கிலம் கற்பித்தார். ஆங்கிலம் கற்பிக்கும் போது அலுப்புத் தட்டாமல் சுவைபடக் கற்பிப்பார். அவர் திறமையான கணித ஆசிரியரும்கூட. ஆனால் எனக்கு அவரிடம் கணிதம் கற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. மாணவர்கள் எல்லோருக்கும் அவர்மீது மரியாதை கலந்த அன்பு இருந்தது.

அடுத்து அவருடைய திருமண வைபவம் நினைவுக்கு வருகின்றது. திருமண ஊர்வலம் அவருடைய வீட்டிலிருந்து ஆரம்பமானது. காங்கேசன்துறை வீதியில் (K.K.S. Road) வசிக்கும் கொக்குவில் வாசிகள் அனைவரும் தத்தம் இல்லங்களின் வாசலில் பூரண கும்பம் வைத்துத் தம்பதியினரை மரியாதை செய்தனர். இந்நிகழ்வு கொக்குவில் வாழ் மக்கள் எவ்வளவு தூரம் அவர்மீது அன்பு வைத்திருந்தனர் என்பதைக் காட்டியது.

எனக்கு அவருடன் சக ஆசிரியையாகப் பணியாற்றும் பேறு 1970இல் இருந்து கிடைத்தது. அவர் என்னை மிகவும் அன்போடும் பண்போடும் நடத்தினார். பிரதி அதிபராய் வந்தபோதும் அவருடைய அன்பும் பண்பும் மாறவில்லை. எந்த விடயத்தையும் அவருடன் துணிந்து கலந்துரையாடக் கூடியதாய் இருந்தது.

1927ஆம் ஆண்டு அவர் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மாணவியாகக் காலடி எடுத்து வைத்தார். 1942ஆம் ஆண்டு ஆசிரியராகச் சேர்ந்து பின்னர் பிரதி அதிபராகக் கடமையாற்றி 1983ஆம் ஆண்டு இளைப்பாறும் வரை கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் இணைந்திருந்தார். அவரது பிள்ளைகள் ஐவரையும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலேயே கல்வி கற்க வைத்தார். இளைப்பாறிய பின்னரும் அவரது பேச்சும் மூச்சும் கொக்குவில் இந்துக் கல்லூரி பற்றியதாகவே இருந்தது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவிலே அவர் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டார்.

அவரிடம் படித்த மாணவர்களை எங்கே கண்டாலும் எத்தனை வருடங்கள் கழிந்தாலும் அவர்களது பெயர், ஊர்ப்பெயர் எல்லாம் சொல்லி நினைவுபடுத்திக் கொள்வார். இது பழைய மாணவர்களைப் பெருமிதம் கொள்ளச் செய்தது.

அவரைப் பற்றிய இனிய நினைவுகள் என்றும் எனது மனதை விட்டகலாது.

**திருமதி.சுபத்திரா இராமநாதன்**
(Sydney, Australia)
முன்னாள் மாணவி, ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி





# எவராலும் மறக்க முடியாத எங்கள் சுகிர்த ரீச்சர்

**கொ**க்குவில் இந்துக் கல்லூரியின் புதல்வர்களில் ஒருவரான திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் என்றும் எவராலும் மறக்க முடியாதவர். இவரைத் தெரியாதவர்கள் கொக்குவிலில் கிடையாது. மனிதர்களில் பலர் வாழ்ந்து இறந்து விடுவர்; வேறு சிலர் இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் சுகிர்த ரீச்சரும் ஒருவர். இவர் கொக்குவிலில் பிறந்து 1927இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தன் கால்களைப் பதித்துக் கொண்டவர். அன்று தொட்டு 2011ஆம் ஆண்டில் இறக்கும்வரை கொக்குவில் இந்துவையே தனது மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்.

நினைவுகள் புரட்டிப் பார்க்க வேண்டியவையே. அன்று கல்லூரியில் நான் மாணவியாகக் கற்கின்ற காலத்தில் அவர் ஒரு நல்ல ஆசிரியராகத் திகழ்ந்தவர். அவருடைய நடை, உடை, புன்சிரிப்பு ஆகியன எனக்கு மிகவும் பிடித்திருந்தன. இவர் அதிகம் கதைப்பதை நான் கண்டதில்லை. நேரம் தவறாது வகுப்பறைகளுக்குச் சமூகமளிப்பார். இவர் கணிதம், ஆங்கிலம், சமயம் போன்ற பாடங்களைக் கற்பித்தவர். எங்கள் வகுப்பிற்கு கணிதபாட ஆசிரியராகப் பணி புரிந்தவர். அவரது வகுப்பில் மாணவர்கள் மிக அமைதியாக இருப்பார்கள். பலத்த சத்தம் போட்டுக் கற்பிக்க வேண்டிய தேவையே அவருக்கு இருந்திராது. விளங்காவிடின் மீண்டும் அமைதியாக நன்கு விளங்கப்படுத்துவார். ஒருவர் பற்றி வேறொருவருக்குக் கூற மாட்டார். வீண் பேச்சு வார்த்தைகளுக்கே இடமில்லை. அவர் மென்மையானவராக இருந்தும் அவரைக் கண்டதும் இனம்புரியாத பயம் எங்களுக்கு ஏற்படும். இதற்குக் காரணம் அவர் பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டு ஆசிரியராக இருந்தமையே. அவர் பார்வையிலேயே எங்களுக்கு எங்களை அறியாமல் ஒரு பயம் வரும்.

அவர் வாய் திறந்து வார்த்தைகளால் புண்படுத்தாதவர். அன்பு, இரக்கம், நட்பு, பரோபகாரச் சிந்தையுடையவராகத் திகழ்ந்தார். பிறருக்கு உதவும் மனப்பாங்குடையவர். கல்லூரியின் ஒழுக்கத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறு பாதுகாத்தவர். அவரால் கட்டிக் காப்பாற்றப்பட்ட ஒழுக்கமே இன்றும் ஒழுக்கத்திற்குக் கொக்குவில் இந்துக் கல்லூரி எனக் கூற வைக்கின்றது. மாணவர்களுக்குத் துன்பங்கள் நேரிட்டபோதெல்லாம் தாயாக, தாதியாகச் சிறந்த முறையில் உதவி வந்தவர்.

இவர் 2010ஆம் ஆண்டு எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்கு வந்தபோது அவரது தோற்றம், நடை, உடை, பாவனை என்பன எங்களுக்குக் கற்பிக்கும்போது எப்படி இருந்தனவோ அப்படியே இருந்தமை எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இவர்தான் எமது கல்லூரியின் முதலாவது பெண் பிரதி அதிபர். இவர் ஓய்வு பெற்றபின் கனடா சென்று வாழ்ந்தாலும் கொக்குவில் இந்துவின் வளர்ச்சியையே கனவிலும், நனவிலும் சிந்தனையாகக் கொண்டவர். இவ்வாறான பண்பும் அன்பும் கொண்ட அன்னையை நாம் இழந்தது கொக்குவில் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு என்றே கூறலாம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.


**திருமதி.**
**சிவநேசரத்தினம் குணரத்தினம்**
முன்னாள் மாணவி, ஆசிரியை,
பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி






# அகமலர்ச்சி தரும் ஆசிரியர் மாணவர் தொடர்பு

எமது வாழ்வில் கிடைக்கும் சில தொடர்புகள் மனதிற்குப் புலப்படாத தூய்மையான பவித்திரமானவை. இவற்றை சொற்களால் வெளிப்படுத்துவது மிகவும் சிரமமானது. இத்தொடர்பால் வரும் சக்தி எம்மை ஆசீர்வதித்து வழிநடத்திச் செல்கின்றமையைச் சற்று நிதானித்து எம்மை நாமே உற்று அவதானித்தால் புரியும். இது எம்மை வாழ்வாங்கு வாழவைக்கும் வெளியில் புலப்படாத ஓர் அகமலர்ச்சியாகும். இத்தகைய தொடர்புகளில் ஒன்று ஆசிரிய மாணவ தொடர்பாகும்.

அர்ப்பணிப்பு மிக்க இலட்சிய ஆசிரியர்களும், கற்பதில் ஆர்வம் மிக்க மாணவர்களும் இணையும் போது மேற்குறித்த இவ்வுயர்ந்த தொடர்பு ஏற்படுகின்றது. இவ்விலட்சிய ஆசிரியர்கள் பலரை கொக்குவில் இந்துக் கல்லூரி காலம் காலமாகப் பெற்றிருக்கின்றது. அவர்களில் ஒருவரே திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்.

1965ஆம் ஆண்டு '9B' (விஞ்ஞானம்) பிரிவில் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் "தூயகணித" பாட ஆசிரியராகக் கடமையாற்றினார். இந்த ஒரு வருடத்தில் தனது முத்திரையை எமது மாணவ உள்ளங்களில் பதித்துச் சென்றுள்ளார். இவ்வாசிரியரின் உயர்ந்த தாயன்பு, மாணவர்களின் இயல்புகளை நுட்பமாகப் புரிந்து கொள்ளும் திறன், மாணவர்களின் முன்னேற்றத்திலுள்ள மிகுந்த அக்கறை, அதற்கேற்ப மாணவர்களை வழிப்படுத்தும் பாங்கு என்பன இவரின் இயல்பான ஆற்றல்களாகும். இவ்வாற்றல்களே "நாம் கற்கின்றோம்" என்ற சுமை இல்லாமல் இலகுவாகவே எம்மைத் தூயகணிதத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொள்ளச் செய்தது. இவரது ஆளுமையால் மாணவர்களிடம் இயல்பாகவே ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன ஏற்பட்டுவிடும்.

எமது கல்லூரியில் மாணவியாகக் கல்வி பயின்று பின் ஆசிரியராக, உப அதிபராக சிறப்பாகப் பணிபுரிந்து இளைப்பாறிய திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் பல மாணவர்கள் நல்ல நிலைக்கு உயரக் காரணமாக இருந்தவர். மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றில் அவருக்கிருந்த கரிசனையை 1976ஆம் ஆண்டு கற்பித்தல் பயிற்சிக்காக இக்கல்லூரிக்கு வந்த வேளையில் நன்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அவரது பங்களிப்பு கற்றல் கற்பித்தல் பயிற்சிச் செயற்பாட்டிற்கு மிகுந்த உறுதுணையாக இருந்தது.

1990ஆம் ஆண்டு எமது கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினர்களாக திரு.K. சுப்பிரமணியம் அவர்களையும், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களையும் அழைத்துக் கல்லூரிச் சமூகம் பேருவகை அடைந்தது. திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் மிக்க ஆர்வத்துடன் கலந்து கொண்டார். அவ்வேளை அவரை மீண்டும் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இவரிடம் கற்ற மாணவர்களின் உள்ளங்களில் இவ்வாசிரியர் என்றென்றும் வாழ்வார்.

**க.மோகனதாஸ்**
முன்னாள் மாணவன்,
ஆசிரியர், பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி





# கடமை உணர்ச்சி கொண்ட
# எங்கள் சுகிர்த ரீச்சர்



புன்னகையே அணிகலனாகக் கொண்டவர். இன்பத்திலும் துன்பத்திலும் அவரது புன்னகையைத்தான் காணலாம். அவ்வாறான சந்தோஷமான ஆசிரியை.

இவர் கண்ணியம், கடமை உணர்ச்சி கொண்டவராகவும், கல்லூரியை ஒரு கோவிலாக நேசித்து வளர்ப்பதில் முக்கிய பங்கினை வகித்தவராகவும் விளங்கினார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியாகிய இவர் இக் கல்லூரியில் ஆசிரியையாக, ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பாசிரியராக, முதற் பெண் உபஅதிபராகப் பல்வேறு பதவிகளை வகித்துத் தனது கடமையைச் சிறப்பாக ஆற்றி வந்ததை யாவரும் அறிவர். இவருடன் எனக்கு சக ஆசிரியையாகக் கடமையாற்றும் பேறு கிடைத்ததை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

இவர் ஆங்கிலம், தமிழ், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பித்து வந்தவர். அக்காலங்களில் எமது பாடசாலைக்கு கோண்டாவில், இணுவில், தாவடி போன்ற இடங்களில் இருந்து பெண் பிள்ளைகள் நடந்தே வருவார்கள். சுகிர்த ரீச்சரும் நடந்தே வீட்டிற்குச் செல்வார். ஆனால் மாணவிகள் ரீச்சரை முந்திக் கொண்டு செல்லமாட்டார்கள். மெதுவாகச் சென்று அவர் வீடு சென்றதும் வேகமாக நடப்பார்கள். காரணம் ஆசிரியர் மீது கொண்டுள்ள குருபக்தியும், பயபக்தியும்தான் என்று நினைக்கின்றேன்.

சுகிர்த ரீச்சரின் கற்பித்தல் அன்பு கலந்த கண்டிப்பாகவே இருக்கும். எல்லா மாணவர்களும் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர். அதனால்தான் இவர் மாணவர்களின் இதயங்களில் குடிகொண்டுள்ளார் என்பது வெளிப்படை. இவருடைய பிள்ளைகள், மருமகனான ரகு ஆகியோர் என்னிடம் விஞ்ஞான பாடத்தைத் திறம்படக் கற்றனர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப அவர்கள் கடல் கடந்த தேசங்களுக்குச் சென்று சிறப்பான தொழில்களைப் புரிந்து பலரும் போற்றும்படி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தம் அன்னையாகிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு வாரி வழங்கிக் கொண்டே இருக்கின்றனர்.

ஆசிரியையின் புகழ் நிலைக்க!

பிள்ளைகளின் பணி மிளிரட்டும்.

**திருமதி.பரமேஸ்வரி சண்முகரட்ணம்**
**(சிவக்கொழுந்து ரீச்சர்)**
முன்னாள் மாணவி, ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி





# என் நினைவில் சுகிர்தம் ஆசிரியை

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து காட்டியவர் அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள். இவரின் இளமைப் பருவத்தில் கம்பீரமான தோற்றமும், கனிவான பேச்சும் என்னை மிகவும் கவர்ந்தன. இவர் கற்பிக்கும் காலத்தில் மாணவர்கள் எல்லோருடனும் ஏற்றத்தாழ்வு இன்றி அன்பும் ஆதரவும் நல்கிய ஓர் ஆசான். குறிப்பாகப் பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும், ஒழுக்கத்திலும் மிகவும் அக்கறை காட்டியவர். அதனால் போலும் இன்றும் கூட அவர் காட்டிய நெறியில் மாணவர்கள் ஒழுக்க சீலர்களாகத் திகழ்கின்றனர்.

பாடசாலை தொடங்குவதற்கு முன் வருகைதந்து பாடசாலையில் தனது கற்பித்தல் செயற்பாட்டை முடித்து பாடசாலை முடிவடைந்த பின்னரும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தி வந்தவர். கொக்குவில் இந்து அன்னை பெற்ற தவப்புதல்வியான இவர் தனது பிள்ளைகளையும் இக்கல்லூரியில் கற்க வைத்து பல்கலைக்கழகம் அனுப்பினார்.

இவர் கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்காக இலங்கையின் பல பாகங்களில் இருக்கும் கல்லூரி பழைய மாணவர்களிடமும், நலன்விரும்பிகளிடமும் இருந்து நிதியைப் பெற்று உதவியவர்.

அமரர் சுகிர்தம் ஆசிரியர் அவர்கள் செல்லையா இல்லத்திற்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் அவரோடு இணைந்து இல்ல வளர்ச்சிக்குச் சேவை செய்யக் கிடைத்தது எனது பாக்கியம் என்றே கூற வேண்டும். இல்ல விளையாட்டுப்போட்டி தொடங்கிவிட்டால் மாணவர்களில் ஒருவராக விளையாட்டு மைதானத்தில் நிற்பதோடு அல்லாமல் எங்களுக்கும் உற்சாகம் ஊட்டினார். கற்பித்த காலத்தில் இருந்த முகப்பொலிவும், வசீகரமும் வெளிநாட்டில் இருந்து நூற்றாண்டு விழாவிற்கு வருகை தந்தபொழுதும் இருந்தது கண்டு மகிழ்வுற்றேன். நூற்றாண்டு விழாவில் தலைமை தாங்கும் பேற்றை கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகம் அவருக்கு வழங்கி கௌரவித்தது.

நூற்றாண்டு விழாவிற்கு வந்தவுடன் கல்லூரியில் இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் அவரின் பாதத்தை வணங்கி ஆசீர்வாதம் பெற்றது எனக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இது என் மனதையும் உருக்கியது. இக்கால மாணவர் சமுதாயத்திற்கு இச்செயல் ஒரு அறிவுரை புகட்டும் பாடமாக அமைந்தது என்பதை சபையில் உள்ளோர் பலரும் பேசிக் கொண்டனர். "Mrs.Sukirthalakshmy Supramaniam was a Role Model and a Legend in the History of Kokuvil Hindu College" என அவரின் அபிமானி ஒருவர் எழுதியதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. இதிலிருந்து இவர் கல்லூரி வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளார் என்பது புலனாகின்றது. அவர் கற்பிக்கும் காலத்தில் எங்களோடு அன்பாகப் பழகியதும் அவர் கூறிய அறிவுரைகளும் அவர் அமரத்துவம் அடைந்தாலும் இன்றும் எமது உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றன. இவரது வழிகாட்டலால் இன்றும் அவரது குடும்பத்தினர் கல்லூரி சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவது பாராட்டத்தக்கது.

**செல்வி.உமா கந்தையா**
முன்னாள் ஆசிரியை
(1968 – 1995)
கொக்குவில் இந்துக் கல்லூரி





# நினைவில் நிறைந்து நிற்பவர்

அது ஒரு வசந்த காலம். கவலைகள் ஏதுமின்றி, வரவு செலவு அறியாது சிட்டுக்குருவிகளாய்ச் சிறகடித்த காலம். இப்படியான காலம் எல்லோர் வாழ்விலும் வந்து போவதுதான். அது போல்தான் என் வாழ்விலும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் எனது கல்விக் காலம். பல ஆசிரியர்கள் வகுப்புக்கள் தோறும் வந்து போனார்கள். பலர் நினைவில் நின்றார்கள். அவர்களில் சிலர் இன்றும் நினைவில் நிலைத்து நிற்கின்றார்கள். சிலர் மனதில் இடம் பிடிக்காமலேயே மறைந்தார்கள். நினைவில் நிற்பதற்கு ஆசிரியர்களுக்கேயுரிய கற்பித்தல் திறனும் தனி ஆளுமையுமே காரணம் எனலாம்.

எனக்கு நன்றாகவே ஞாபகமிருக்கின்றது. எட்டாம் வகுப்பு. சமய பாடம். ஆசிரியர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம். சமயபாடப் புத்தகம் தேவாரங்களாலும், சமய குரவர்களின் வரலாறுகளாலும் நிரம்பி இருந்தது. ரீச்சர் சமய பாடத்தில் தேவாரத்தைப் படிப்பித்து, கருத்தும் கூறிவிட்டு அடுத்த சமயபாட வகுப்பு வரும்போது பாடமாக்கிச் சொல்ல வேண்டும் என்ற கட்டளையோடு போய்விடுவார். சில தேவாரங்கள் பார்த்தவுடன் மனதில் பதிந்துவிடும். சில பல வரிகளைக் கொண்டிருந்ததால் கொஞ்சம் கடினம்தான். கடினமான பாடல்களை ஒப்புவிக்கும் போது நண்பிகளின் உதவிகள் ரீச்சருக்குத் தெரியாமலே கிடைப்பதுண்டு. ரீச்சரின் இரண்டாவது மகள் சந்திரிகாவும் எனது வகுப்பு என்பதால் வகுப்பில் என்ன குறும்பு செய்தாலும் சொல்லி விடுவாரோ என்ற பயமும் உள்ளூர இருந்ததுண்டு. அன்று கண்டிப்பினால், விரும்பியோ அன்றி விரும்பாமலோ பாடமாக்கியவை இன்றும் பயன்படுகின்றன.

பாடசாலைக் காலத்தில் ரீச்சரைக் கண்டாலே ஒருவகைப் பயம். பொதுவாகவே அக்காலத்தில் ஆசிரியர்கள் அவ்வளவு இலகுவாக, மனம்விட்டு மாணவர்களுடன் பழகமாட்டார்கள். அதிலும் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கென இருப்பவர்களைப் பாடசாலைக்கு உள்ளேயாயினும், வெளியேயாயினும் கண்டால் பயம்தான். தலை இழுப்பதில் இருந்து சட்டை வரை அவர்களது கண்காணிப்பிருக்கும். அக்காலத்தில் கலவன் பாடசாலைக்கான சூழ்நிலையில் அக்கண்டிப்பு அவசியம் என்று இப்போது உணரக்கூடியதாய் உள்ளது. இவர்களது கண்டிப்பும், கட்டுப்பாடும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கான உயர்ந்த கட்டுக்கோப்பை உருவாக்கியதென்பதில் ஐயமில்லை.

1999இல் நான் கனடா வந்தபோது தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்த நாள்முதல் அவர் மீதான அன்பும், மரியாதையும் வளர்ந்தன. கனடா கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழுவில் நான் அங்கத்துவம் வகித்த சில ஆண்டுகளில் அவருடனான உறவு மேலும் வலுவடைந்தது. எதைச் செய்வதென்றாலும் ஒரு தடவை அவரைக் கேட்டே செய்வேன். அந்தப் பொழுதுகளில் அவரிடமிருந்து பலவற்றைக் கற்றும், கண்டறிந்தும் கொண்டேன். ஞாபகசக்தியில் அவரை யாருமே


● திருமதி.நாமகள் சிவகுமார்
(Canada)
முன்னாள் மாணவி, ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி







வெல்ல முடியாது. தமிழ், ஆங்கிலம் இதில் எந்தச் சந்தேகத்தைக் கேட்டாலும் உடனுக்குடன் தீர்க்கும் ஆற்றல் அவருக்கே உரியது.

ஒரு காலத்தில் அவரைக் கடந்து செல்வதற்கே பயந்த எனக்கு பழகுவதற்கு இனியவராக மாறியிருந்தமை மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. கிழமையில் ஒரு தடவையாவது அவர் என்னை அழைத்து சுகம் விசாரித்தால் நான் அந்த வருத்தம், இந்த மருந்து எடுத்தேன் என்று ஒரு பல்லவியே பாடி முடித்து விடுவேன். ஆனால் அவரோ இத்தனைக்கும் தனது இறுதி நாள்வரை தனக்குத் தலைவலி என்றுகூட ஒருநாளேனும் கூறியதில்லை. மிகப்பெரிய மனோதிடந்தான் அவரை வாழவைத்திருக்கின்றது. மயக்கநிலையில் இருந்து திரும்பிய அவரைப் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றபோது அவரிடமிருந்த தெளிவு, ஞாபகசக்தி, உற்சாகம் என்பவற்றை இப்பொழுதும் எண்ணிப் பார்க்கின்றேன்.

கனடாவிலும் ஏனைய நாடுகளிலும் வாழும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் தொடர்பு ரீச்சருக்கு இருந்து கொண்டே வந்தது. இதனால் அக்குடும்பங்களின் நன்மை, தீமைகளை அறிவதோடு மட்டுமன்றி கனடாவாயின் அவற்றில் பங்குபற்றாமலும் விடமாட்டார். பொது இடங்களில் பழைய மாணவர்களைக் கண்டால் தேடிச்சென்று உரையாடுவார். அவர் தள்ளாடிச் சோர்வாக நடந்ததைக் கண்டதில்லை. துள்ளி ஓடும் புள்ளி மானாகவே இறுதிவரை வாழ்ந்தார்.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்"

கொண்ட பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவே வாழ்ந்து காட்டினார்.

2010ஆம் ஆண்டு கொக்குவிலில் நடைபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாபெரும் நூற்றாண்டு விழாவில் அவரோடு சேர்ந்து நானும் கலந்து கொண்ட மகிழ்ச்சி வாழ்வில் பெரும்பேறே. அந்த மூன்று நாட்களில் ஆறு இனிய நிகழ்வுகள். ஒவ்வொரு நாள் நிகழ்வும் ஆரம்பமாகுமுன் பிரசன்னமாகி நிகழ்ச்சிகள் முடிந்தபின்தான் வீடு செல்வார். இதனை அதிபர் திரு.அகிலதாஸ் அவர்களே பெருமையுடன் குறிப்பிட்டுச் சொன்னார். இறுதிநாள் நூற்றாண்டு விழா நிகழ்வில் ரீச்சரின் மிக நெருங்கிய நண்பியான திருமதி.சரஸ்வதி பாக்கியராசா ''குயிலே உனக்கு அனந்தகோடி நமஸ்காரம்...'' என்ற பாடலைப் பாடியது ரீச்சருக்காகவே பாடப்பட்டுள்ளது போலவே உள்ளது. அவர் மனதில் அளவற்ற மகிழ்ச்சியோடு வாழ்ந்தபோதே திடீரென ஏற்பட்ட நோயும் அவர் இறப்பும் எமக்கெல்லாம் பேரிழப்பே. எனினும் என் வாழ்வில் எனது குருவாக மட்டுமன்றி, எனது தந்தையார் கணேசு சோமசுந்தரம் அவர்களது குருவாகவும், எனது கணவர் சிவகுமார் அவர்களது குருவாகவும் மற்றும் கனடாவில் எனது மகனின் பிரத்தியேக ஆங்கில ஆசிரியராகவும் இருந்த பெருமையை என்றுமே மறக்க முடியாது.

*



# கொக்குவில் இந்துவின் ஆசிரிய மாணிக்கம்

“பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்”

நான் 1980ஆம் ஆண்டு பயிற்சி ஆசிரிய மாணவனாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வந்தபோது அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் என்னைக் கல்லூரியின் தெற்குப் பகுதிக்கு ஒரு வகுப்பிற்கு அனுப்பி வைத்தார். அப்பொழுது தெற்குப் பகுதியில் பிரதி அதிபராக இருந்த திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன்.

அன்னாரின் உறவினர் G.G.E. (A/L)கணிதப்பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு நான் பிரத்தியேகமாகக் கணிதம் கற்பித்துக் கொண்டிருந்ததால் என்னை அவர் நன்கு அறிந்திருந்தார். என்னை மிக அன்பாக நடத்தினார். திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் கண்ணியமாகப் பழகுவார், பேசுவார். மாணவிகளின் ஒழுக்கத்திற்கும் பொறுப்பாக இருந்தார். கண்பார்வையாலும், மென்மையான பேச்சாலும் மாணவிகளை சிறப்பாக வழிநடத்தினார். ஆங்கில அறிவில் அவருக்கு நிகர் அவரே என்பது மிகையல்ல. அத்தகைய மொழிப்புலமைமிக்க ஆளுமையாளராக விளங்கினார்.

இப்பாடசாலையில் மாணவியாகவும், அவர்களில் முதல் பெண் ஆசிரியையாகவும் தன் வாழ்நாள் முழுவதையும் பாடசாலைக்கே அர்ப்பணித்தவர். கனடா சென்ற பின்னரும் பழைய மாணவர்களை ஒன்றுசேர்த்து பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் அதன்பின் இறுதிவரை உபதலைவராகவும் இருந்து பாடசாலைத் தேவைகளைப் பூர்த்தி செய்தார். கல்லூரி அன்னையின் கனவுகளுக்கு விழியாக இருந்து ஒளியூட்டியவர். அன்னாரின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளை எண்ணும்பொழுது என் மனதில் அவர் இமயத்தையும் வென்று உயர்ந்து நிற்கின்றார்.

பாடசாலை நூற்றாண்டு விழாவில் எமது பாடசாலை முன்னாள் அதிபர் திரு. அ.பஞ்சலிங்கத்தை அணுகி “நூற்றாண்டு விழாவில் உங்களைக் கௌரவிக்க உள்ளோம், யார் உங்களைக் கௌரவிக்க வேண்டும்?” எனக் கேட்டபொழுது கணப்பொழுதில் ‘‘திருமதி.சுகிர்தலக்ஷமி சுப்பிரமணியம்’’ எனக் கூறினார். இதிலிருந்து அன்னாரின் மதிப்பு, மரியாதை, கௌரவம் எத்தகையது என்பதை அறிந்து கொள்ளலாம்.

நூற்றாண்டு விழாவுக்கு பாடசாலைக்கு வந்த போது பாடசாலையின் வளர்ச்சி கண்டு மிக மகிழ்ந்து தற்போதைய அதிபர் திரு.அ.அகிலதாஸ் அவர்களைப் பாராட்டினார். கொக்குவில் இந்துக் கல்லூரியின் கௌரவத்திற்கும், மதிப்பிற்கும் உரியவர். பாடசாலைக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தவர். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

● க.வேலாயுதம்
பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி






**Mrs. Sukirthalakshmy Supramaniam**
and
**Mr. Kathirgamer Supramaniam**
as chief guests
at the K.H.C. centenary celebrations
in Germany March 05, 2011










அனைவரும் வருக!


கொக்குவில் இந்துக்கல்லூரி
100 YEARS
நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!






கொக்குவில் இந்துக்கல்லூரி
100 YEARS
நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!


கொக்குவில் இந்துக்கல்லூரி
100 YEARS
நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!




நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!










கொக்குவில் இந்துக்கல்லூரி
100
நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!






அனைவரும் வருக!
5.3.2011


5.3.2011 சனிக்கிழமை
















அனைவரும் வருக!
5.3.2011


நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!
YEARS
5.3.2011


5.3.2011 சனிக்கிழமை மாலை 4.00 மணி
இந்துக்கல்லூரி பழைய மாணவர்
யேர்மனி






YAMAHA


கொக்குவில் இந்துக்கல்லூரி
நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!
100 YEARS


நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!
100 YEARS


அனைவரும் வருக!
5.3.2011
சனிக்கிழமை மாலை
4.00 மணி


அனைவரும் வருக!
5.3.2011
சனிக்கிழமை மாலை
4.00 மணி


5.3.2011
சனிக்கிழமை மாலை
4.00 மணி


5.3.2011
சனிக்கிழமை மாலை


5.3.2011
சனிக்கிழமை மாலை
4.00 மணி


அனைவரும் வருக!
5.3.2011
HINDU COLLEGE


அனைவரும் வருக!
5.3.2011 சனிக்கிழமை மாலை 4.00 மணி


அனைவரும் வருக!
5.3.2011 சனிக்கிழமை மாலை 4.00 மணி
கல்லூரி பழைய மாணவர் சங்கம் - யேர்மனி






இந்துக்கல்லூரி பழைய மாணவர்


இந்துக்கல்லூரி பழைய மாணவர்
YAMAHA
Tyros


விழா (1910-2010)
5.3.2011
YAMAHA
Tyros


அனைவரும் வருக!




நூற்றாண்டு விழா (1910-2010)
அனைவரும் வருக!
100 YEARS
5.3.2011

















# கொக்குவில் தந்த கலங்கரை விளக்கு

## *எனது சுகிர்த ரீச்சர்*

**"தோ**ன்றின் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமானவரே எனது சுகிர்த ரீச்சர். ஆண்களுக்கே உத்தியோகம், கல்வி என மேலோங்கியிருந்த காலத்தில் ஒரு சில புதுமைப் பெண்களும் உருவாகினார்கள். "வீட்டினுக்குள் பெண்ணைப் பூட்டி வைக்கும் மடமைதனை கொழுத்த வேண்டும்" என பாரதி குரல் கொடுத்ததை ஒத்த காலமது. அந்த விலங்கை உடைத்து கொக்குவிற் பெண்களுக்கும் உரிமை உண்டு என எடுத்துக்காட்டியவர் சுகிர்த ரீச்சர். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று, அக்கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமையாற்றி உப அதிபராக இருந்து தனது ஓய்வினைப் பெற்றுக்கொண்டவர். ஆயினும் எங்கிருந்தாலும் தன்னை வளர்த்த தாயையும், தாய் நாட்டையும் என்றும் மறக்கக்கூடாது என்ற கருத்திலே ஊறி இறுதி மூச்சுவரை தன்னை வளர்த்தெடுத்த கல்லூரித்தாயையே நினைவாகக் கொண்டு வாழ்ந்தார்.


உயர்கல்விவரை கற்று, தனது ஆசிரியப் பணியை சிறப்பாக நடாத்தி கல்லூரிக்கு உரித்தான பாரம்பரியங்களைக் கடைப்பிடித்து ஒழுக்கத்தைப் பேணி வந்தவர். அவரால் நிலைநாட்டப்பட்ட ஒழுக்கமே இன்றுவரை பேணிவரப்படுகின்றது. மாணவர்களிடையே நன்மதிப்போடு வாழ்ந்தவர். அவர் கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை எளிமையாகவும் மாணவரைக் கவரும் வகையிலும் கற்பித்ததினால் சமூகத்தில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

என்ற பாரதியின் பாடலடிகளை மாணவர்களிடையே கூறி மாணவர்களுக்கு கல்லூரியிலும், சமூகத்திலும் தங்களை உணர்ந்து நடக்கக் கற்றலை விருப்புடன் மேற்கொள்ள வழிகாட்டியவர்.

தனது சக ஆசிரியர்களுடன் சிரித்து மகிழ்ந்து அவர்கள் உரையாடுவதைப் பார்க்கும்போது நல்ல நண்பியாகவும் விளங்கியிருக்கின்றார் என்பதை ஊகிக்க முடிகின்றது. ஏனெனில் "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" எனப் பெண்களின் ஒழுக்க நடவடிக்கையில் கண்டிப்புடன் இருக்கும் எமது ஆசிரியரிடம் அன்பும் இருக்கின்றதா? என எண்ணத்தோன்றும். மாணவிகள் ஒற்றைச்சடையிட்டு கறுப்பு ரிபன் மடித்துக்கட்டி "ரை" கட்டி நீளமான தாழ்வான வெள்ளைச் சட்டையோடுதான் வர அனுமதித்தவர். சீருடை என்ற ஒன்றினைக் கடைப்பிடித்த காலத்தில் இவ்வாறு நடந்துகொண்டவர். அந்த நிலையை இன்றுவரை கடைப்பிடிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த நிலை தொடர வேண்டும், ஒழுக்கத்தில் என்றும் கொக்குவில் இந்து தளராது இருக்க வேண்டும் என்பது எமது விருப்பம். எனது ஆசிரியர்,


**மு.வேலாயுதபிள்ளை**
முன்னாள் மாணவன்
தற்போதைய ஆசிரியர்
பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி




"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்"

என்று பாரதி கூறுவது போல நிமிர்ந்த நடையுடன் வெளியில் சத்தம் கேட்காமல் தென்பகுதியில் நடந்து திரிவார். ஒவ்வொரு பாடவேளை முடிவடைந்ததும் அவர் சுற்றி வரும்போது எந்த வகுப்பிலிருந்தும் சத்தம் வெளியே வராது. அவ்வளவிற்குப் பாடசாலையின் அமைதியைப் பேணியவர். திரு.C.K. கந்தசுவாமி அவர்கள் அதிபராக இருந்த காலம் தொடக்கம் திரு.அ.பஞ்சலிங்கம் அதிபராக இருந்த காலம்வரை பாடசாலை முகாமைத்துவத்தில் அங்கம் வகித்து கட்டுக்கோப்பைப் பாதுகாத்தவர். "சத்தியத்தில் நிற்பதென்பது அவ்வளவு எளிதல்ல, உண்மையைக் கடைப்பிடிக்க எவ்வளவு தியாகம் செய்ய வேண்டும்" என்பதை உணர்ந்து நடந்தவர். பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பணம் சேகரிக்க ஊரிலுள்ள தனவந்தர்களிடம் சென்று சிறுசிறு தொகை சேகரித்துக்கொண்டவர்களில் இவரும் ஒருவர். பாடசாலை சார்ந்த நிகழ்வுகளில் எல்லாம் சளைக்காமல் முதுகெலும்பாய் நின்று பாடுபட்டவர். இல்ல விளையாட்டுப் போட்டியாயினும், கலை விழாக்களாயினும் ஒத்துழைத்து ஒன்றிணைந்து சிறப்பாக நடாத்தியவர்.

எல்லாப் பிள்ளைகளையும் பெற்ற பிள்ளையைப் போல் பேணிப்பாதுகாத்தவர். தான் பெற்ற பிள்ளைகளை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்கவைத்தபோதும் அவர்களை எல்லாப் பிள்ளைகளையும் போலவே நடத்திக்கொள்வார். ஒருமுறை அவரது மகன் மைதானத்தில் விளையாடும் போது தலையில் காயம் ஏற்பட்டதும் அங்கு கற்பித்த ஆசிரியர்கள் சென்று தகவலைக் கூறிய போதும் சலனமில்லாது பதற்றப்படாத மனநிலையில் நிதானமாக அதற்குரிய நடவடிக்கை எதுவோ அது அவ்வாறே நடக்கும் என்று கூறியவர். அவ்வாறு அன்பும் பண்பும் தளராத மனவுறுதியும் நிறைந்த வாழ்க்கை முறைப்படி வாழ வழிசெய்தவர்.

இன்றைய கல்விச் சமுதாயம் பல ஆய்வுகள் மூலம் விடயங்களை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் அன்றே யாவருக்கும் முன்மாதிரியாக தாம் நடந்து தமது மாணவர்களையும் நடக்கச் செய்த அம்மையாருக்கு என்றும் நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அவர் அமரரான செய்தி கேட்டு கொக்குவில் இந்து மட்டுமல்ல, கொக்குவில் பதி மட்டுமல்ல, உலகில் பல பாகங்களிலும் அவரை அறிந்த அன்பர்கள் உளம் நெகிழ்ந்து விழிநீர் சொரிய வேதனை தெரிவித்தார்கள். அந்தளவிற்கு மாணவர்கள் மட்டுமன்றி எல்லோர் மனதிலும் நிறைந்த அம்மையாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

ஓம் சாந்தி.

*



# மானிட இலக்கணத்தின் ஒரு
# மாண்புமிகு மாணிக்கம்!





**“தோ**ன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.”

இது வள்ளுவனார் தந்த வாய்மொழி. உலகில் மனிதராகப் பிறந்த யாவருமே மானிட இலக்கணத்திற்கமைய மாண்புடன் வாழ்வதென்பது அரிதாகும். மானிட இலக்கணத்துள் நின்று மண்ணின் மணிகளாகப் பெரும்பேறு பெறுவது சிலருக்கே வாய்க்கப் பெறுகின்றது.

இத்தகைய பெரும்பேறு பெற்றவர் எங்களுடைய அமரர் சுகிர்தலக்ஷ்மி ரீச்சர் அவர்கள். நான் கல்விகற்ற கொக்குவில் இந்துவினை நினைக்கும் போது என் கண்முன் தோன்றுவது எனக்குக் கற்பித்த சுகிர்தலக்ஷ்மி ரீச்சரே.

கொக்குவில் இந்துவிற்கு மூன்று வயதில் காலடி எடுத்து வைத்த அம்மையார், இறக்கும்வரை அன்னையின் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் பற்றியே சிந்தித்த வண்ணம் இருந்ததைக் காணமுடிந்தது. இவர் கல்லூரியிலே நல்மாணவியாக, பின் நல்லாசிரியையாக, பின் உபஅதிபராக வகித்த பங்கு சொல்லில் அடங்காதது.

இவர் ஆசிரியராக இருக்கும்போது நான் அவரிடம் கல்வி கற்றது, அவரிடம் இருந்து நிறைய நல்ல தலைமைத்துவப் பண்புகளையும் பெற்றுக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இவரது வழிகாட்டலே நான் இன்று உயர் நிலையில் இருப்பதற்குக் காரணமாயிற்று. இவர் எமது குடும்பத்தோடு நெருங்கிய உறவு கொண்டவர்.

**செல்வி.ஞானலோஜினி சிவஞானம்**
முன்னாள் மாணவி
கொக்குவில் இந்துக் கல்லூரி






இவர் கல்லூரியில் பெண்பிள்ளைகளின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றில் மிகுந்த கண்டிப்புடன் செயற்பட்டார். பெண்பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பும் பெற்றோர்கள் கொக்குவில் இந்து கலவன் பாடசாலையாக இருந்தபோதிலும் அங்கு சுகிர்தலக்ஷ்மி ரீச்சர் இருக்கிறார் என்ற துணிவுடன் கல்லூரிக்குப் பெண் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பிய காலம் அதுவாகும்.

அன்னார் எமது கல்லூரி தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக, மாணவியாக இருந்த காலத்திலேயே விருத்தம் பாடிக் கல்லூரிக்குச் செல்வம் சேர்த்தவர். பின்னர் திரைகடல் ஓடி, புலம் பெயர்ந்த நாடுகளில் கல்லூரித் தாய்க்குச் செல்வம் சேர்த்தவர்.

தான் கல்வி கற்பித்த மாணவர்கள் ஆசிரியர்களாகக் கல்லூரிக்கு வந்தவுடன் அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களுடன் சேர்ந்து கல்வி கற்பித்த பெருமை கொண்டவர். அது மட்டுமல்லாமல், தனது மாணவனாகிய, நாடு அறிந்த கல்விமானும், சிறந்த கல்வி நிர்வாகியுமான திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கல்லூரி அதிபராக இருந்தபோது தான் உபஅதிபராகக் கடமையாற்றியது தனக்குக் கிடைத்த பேறு எனச் சொல்லி ஆனந்தமடைந்தவர். இப்படியான நல்ல குணத்தை எத்தனை பேரில் காண முடியும்!

கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்குத் தம்பதிகளாக வருகை தந்து அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்தவர். இவருடைய நடை, உடை, பாவனைகள் மிக எளிமையானவை. மிக்க தாய்மை நிறைந்தவை. இத்தனை பண்புகளையும் கொண்டவராக ரீச்சர் அவர்கள் வாழ்ந்தார்கள்.

தனது பிள்ளைகளையும் கொக்குவில் இந்துவுடன் இரண்டறக் கலக்க வைத்தவர். அத்தோடு தனது மருமகன் ரகு தேவராஜா இன்று கல்லூரி மாணவர்களின் வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்க வழிகாட்டிய பெருமைக்கும் உரியவர்.

இவ்வளவு சிறப்பும் பற்றும் கொண்ட எங்கள் ரீச்சர் அவர்கள், தனது இறுதி மூச்சுவரை கல்லூரித்தாயை நினைத்தபடியே சிவபதமடைந்தார். இவரது இழப்பு கல்லூரிச் சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். பிறந்தவரெல்லாம் இறப்பது ஒருநாள் நிச்சயம்! அதை மாற்றியமைக்க முடியாது. ஆனால் மனிதப்பிறவியை எடுத்தவர்கள் இப்பிறவியிலே தங்கள் வாழ்க்கையில் எதனைச் சாதித்தோம் என்பதுதான் முக்கியம்.

அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் தான் எடுத்த மனிதப்பிறவிக்கு இவ்வுலகில் ஆற்ற வேண்டிய நல்ல கடமைகளை எல்லாம் பூரணமாக நிறைவேற்றியுள்ளார். அவரின் நாமம் என்றும் கொக்குவில் இந்து அன்னையின் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கும் எனக் கூறி, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*



# வளர்மதி வளம் பெற தலைமை ஏற்ற தாயே!


மெலிந்த உடல், நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, முகம் மலர்ந்த புன்சிரிப்பு, அவரைக் கண்டால் கரம் கூப்பி வணங்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டும் விதமான நடை, உடை, பாவனைகள். இவைகள் அவரது அடையாளங்கள்.

கொக்குவில் இந்துவின் நல்மாணவியாக மலர்ந்து, அன்னையின் மடியில் தவழ்ந்து, கல்வியில் உயர்ந்து, உயர்கல்வி பெற்று உன்னத பணியாம் ஆசிரியப்பணியை விருப்புடன் பெற்று, தான் கற்ற கல்லூரியிலேயே பணியாற்றி பலராலும் போற்றப்பட்ட அன்னை அவர்கள் இன்று எம் மத்தியில் இல்லை என்ற வெற்றிடம் அவர் விட்டுச் சென்ற கல்விப்பணி, சமூகப்பணி, என்பவற்றால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

அன்னார் ஆசிரியப்பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட செய்தி அறிந்து வளர்மதி அங்கத்தவர்கள் சிலருடன் அவர் வீடு சென்று வளர்மதி மகளிர் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டுமென வேண்டி நின்றோம். தனக்கே உரித்தான புன்சிரிப்புடன் "தலைமைப்பதவி வேண்டாம். மகளிர் அமைப்பில் இணைந்து சேவை புரிகின்றேன்" எனக் கூறினார். நாம் அதனை ஏற்காது குடும்பத்தவர்களிடமும் அவரைச் சம்மதிக்க வைக்கும்படி கேட்டதற்கிணங்க அவரது கணவரும், பிள்ளைகளும் அவரைச் சம்மதிக்கும்படி கேட்டுக் கொண்டனர். மகளிர் அமைப்பின் தலைமை ஏற்ற நாளில் இருந்து அவ்வமைப்பின் மகளிர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருந்தது. அன்றைய மகளிர் குழுவின் மேற்பார்வையின் கீழ் சிறுவர் முன்பள்ளி சிறப்புடன் இயங்கி வந்தது. அத்துடன் கலை நிகழ்வுகள், நாடகங்கள் என மகளிர் எல்லோரும் மேடையேறி வளர்மதிக்கு மெருகூட்டினார்கள் என்றால் அது அன்னையின் தலைமையின் கீழ்தான் என்பதை பெருமகிழ்வுடன் கூறிக் கொள்கின்றேன்.

அன்னார் தனது சேவைக்காலத்திலும் சரி, ஓய்வு நிலையிலும் சரி, கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஆற்றிய சேவைகள் அளவிட முடியாதவை. பிற மண்ணில் பிள்ளைகளுடன் வாழ்ந்தபோதும் தான் பிறந்த மண்ணை மறவாத அன்னை தான் கற்ற, பணியாற்றிய அன்னையின் நூற்றாண்டு விழாவிற்கு வருகை தந்து அவ்விழாவை சிறப்பித்ததுடன் வளர்மதியால் சிறு கௌரவம் அளிக்கப்பட்டபொழுது கணவருடன் வருகை தந்து அந்நிகழ்வில் கலந்து எம்மைக் கௌரவித்துச் சென்றார். அன்றைய நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக அன்னையின் திருக்கரங்களால் வளர்மதி முன்றிலில் ஒரு தேக்குமரமும் நாட்டப்பட்டது. அம்மரம் அவர் மனம் போல் செழிப்புடன் வளர்ந்து வருகின்றது. இன்னும் சில ஆண்டுகளில் பலருக்கு நிழல் தந்து உதவும். அன்னையின் நாமம் என்றும் ஒலிக்கும், அவர் பெயரால் கல்விப் பணிக்கு வளர்மதி வழிவகுப்பாள் என்று கூறி வளர்மதி வளம் பெற தலைமை ஏற்ற தாயே! என்றும் மறவோம் உன் நாமம்.

செ.செல்வராசா (நாதன்)
தலைவர்
வளர்மதி நிறைவாழ்வகம்





# நான் கண்ட பெண் தெய்வம்

எனது சிறுவயதில் சுகிர்த ரீச்சரும் அவரது சகோதரிகளும் தங்கள் தாயாருடன் எனது வீட்டின் அருகில் இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கிழமைக்கு ஒருநாள் சாமான்கள் வாங்க வருவதைக் கண்டிருக்கிறேன். வரும்போது ரீச்சரின் தாயார் எனது தகப்பனாருடனும் எனது பேத்தியாருடனும் கதைத்து விட்டுத்தான் போவார். ஒருநாள் எனது ஆச்சி சொன்னா எனது அம்மாவும் ரீச்சரும் ஒரே மாதத்தில்தான் பிறந்தார்கள் என்றும், அத்துடன் என் அம்மா ரீச்சரைப் போல்தான் இருப்பா, ஆனால் மொத்தமாக இருப்பா என்றும். அன்று தொடக்கம் ரீச்சரைக் காணும்போது எனது தாயைக் கண்ட ஆனந்தம் ஏற்படும். பின்பு 6ஆம் வகுப்பில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்தபோது அங்கு ரீச்சர் இருப்பது கண்டு மிகுந்த ஆனந்தம் அடைந்தேன்.

நான் செல்லையா இல்லத்தில் சேர்க்கப்பட்டேன். சுகிர்த ரீச்சர் செல்லையா இல்லத்தின் முதுகெலும்பாக இருந்தார். அவர் எல்லாப் பிள்ளைகளுக்கும் புத்திமதி கூறி ஊக்கம் கொடுத்து விளையாட்டில் முன்னேற வழிகாட்டினார். அவரது ஊக்கத்தினால் நான் இல்லப் பொறுப்பாளராய் இருந்தபோது இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் செல்லையா இல்லம் முதலாம் இடத்தைப் பிடித்தது. அப்போது ரீச்சருக்கு இருந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ரீச்சர் செல்லையா இல்லத்துடன் இரண்டறக் கலந்திருந்தார்.

நான் பாடசாலையில் கற்கும்போது எங்களுக்கு ஒழுக்கம், பண்பு பற்றிய அறிவை ஊட்டிய ஒரு பெருந்தகை. அவர் அடித்ததை நான் காணவில்லை. நாங்கள் வகுப்பில் குழப்படி செய்தால் அவர் வந்து ஒரு மாணவனின் பெயரைச் சொன்னால் குண்டூசி விழும் சத்தம் கேட்கும் அளவுக்கு அமைதியாகி விடுவோம். அப்படியான ஒரு ஆளுமை பொருந்திய பெண் தெய்வம்.

நான் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தால் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் போவது வழக்கம். ஒருநாள் நான் அங்கு போகும்போது சுகிர்த ரீச்சரும், பஞ்சலிங்கம் மாஸ்டரும் வேறு சில ஆசிரியர்களுடன் விறாந்தையில் கதைத்துக்கொண்டு நின்றார்கள். என்னைக் கண்டதும் ரீச்சர் "பாலா" என்றார். நான் சிரித்தபடியே கிட்டப்போய் "ஒரு Good News கேள்விப்பட்டேன். உண்மையா?'' என்றேன். "என்ன Good News?" என்று கேட்டார். ''உப அதிபராக வரப்போகிறீர்களாம்'' என்றேன். உடனே பஞ்சலிங்கம் மாஸ்டரும் "ஆம், இது Good Newsதான்'' என்றார். ரீச்சர் நன்கு சிரித்துக் கதைத்தார்.

எனது தெய்வத்தை 2010ஆம் ஆண்டு கொக்குவில் இந்து அன்னையின் நூற்றாண்டு விழாவில் கண்டு கதைத்து அருகில் இருந்து சாப்பிட்டது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதினேன். பின்பு அவர் இறைவனடி எய்தினார் என்று கேட்டு எனக்குள் அழுது கொண்டேன், ஒரு உத்தம தாயை இழந்து போனோம் என்று.

● கா.பாலசுப்பிரமணியம்
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி





# நான் கண்டறிந்த சுகிர்த ரீச்சர்



சுகிர்தலக்ஷ்மி என்பதுதான் எங்கள் ரீச்சரின் பெயர். அப்பெயர் மருவி மாணவர்களாகிய எம்மால் "சுகிர்த ரீச்சர்" என அன்பாக அழைக்கப்பட்டார். எங்கள் கல்லூரியில் மாணவியாக 1927இல் இருந்து 1937வரை கல்வி கற்று, 1942இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தன் ஆசிரியப் பணியை ஆரம்பித்து 1983இல் பிரதி அதிபர் பதவியில் இருந்து இளைப்பாறும்வரை தன் அளப்பரிய சேவையினை உளமார நல்கி உளம் மகிழ்ந்த சுகிர்த ரீச்சர் இன்று எம்மிடையே இல்லை. "பூத உடல் அழிந்தாலும் புகழுடல் அழியாது" என்பார்கள் பெரியோர்கள். அவரது உடல்தான் அழிந்ததே தவிர அவர்தம் புகழ் அன்றும், இன்றும், என்றும் அழியாது எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும்.

நான் இந்தக் கல்லூரிக்கு வந்தது 1965ஆம் ஆண்டு. 1965 தொடக்கம் 1975 வரை இக்கல்லூரியில் கல்வி கற்றபோதும் சிறு பிராயத்தில் ரீச்சருடன் பழகும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டவில்லை. ஆனால் நான் கல்லூரிக்கு வரும்போதும் போகும்போதும் கே.கே.எஸ் வீதியில் அவரைக் காண்பேன். சிறுவயதில் அவரிடம் எமக்குப் பயம்தான் கூட இருந்தது. அவர் தெருவில் நடந்து போய்க்கொண்டிருக்கும்போது அவரை முந்திக் கொண்டு ஒருபோதும் நடந்து போனது கிடையாது. அது ரீச்சருக்கும் தெரியும். ஏனெனில் ரீச்சரும் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டேதான் நடப்பார். கையில் ஒரு குடை, இடுப்பில் புத்தகங்களுடன்தான் ரீச்சரைக் காண முடியும். ரீச்சர் சிரிப்பது ஒரு தனி அழகுதான். மிக மகிழ்ச்சியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அவர் தன் இரு கைகளையும் தட்டியும் சிரிப்பதுண்டு.

நான் சின்ன வகுப்பில் படிக்கும்போது ரீச்சர் மாணவிகளின் ஒழுங்கு, கட்டுப்பாட்டில் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வதைக் கண்டிருக்கிறேன். பெண்கள் கல்லூரிச் சீருடை அணியும்போது முழங்காலுக்குக் கீழ்தான் இருக்க வேண்டும். அப்படி இருக்காவிட்டால் அதற்கான தண்டனையை ஏற்க வேண்டும். நான் ஒன்பதாம் வகுப்பில்


**திருமதி.ரதி சந்திரநாதன்**
முன்னாள் மாணவி
தற்போதைய ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி




படிக்கும்போது ரீச்சரிடம் மாட்டுப்பட்டுத் தண்டனை அனுபவித்தது என்னால் மறக்க முடியாத ஒரு விடயம். மாணவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றுடன் வளர வேண்டும் என்ற நோக்கில் அவர் மிகக் கண்டிப்புடன் நடந்து கொண்டபடியால் தான் இன்று நாம் நல்லதொரு நிலைக்கு வந்துள்ளோம் என்பதை மறுக்க இயலாது.

நான் க.பொ.த.(உயர்தர) வகுப்பில் கற்கும்போது 1973-1974 காலப்பகுதியில் எங்களுக்கு ஆங்கிலப் பாட ஆசிரியராக ரீச்சர் வகுப்பிற்கு வந்தார். வகுப்பில் மாணவர்கள் குறைவு. அக்காலத்தில் ஆங்கிலம் படிக்கிறதென்றால் எங்களுக்கெல்லாம் வேப்பங்காய்தான். இரண்டாம் மாடியில் இரண்டாவது அறைதான் எங்கள் வகுப்பறை. இருபக்க வாசலைக் கொண்டது எங்கள் வகுப்பறை. ரீச்சர் முன்பக்க வாசலால் வரும்போது பின்பக்க வாசலால் இறங்கி ஓடிப்போய் நூலகத்தில் இருந்துவிடுவோம். அப்போது மகேந்திரன் மாஸ்ரர்தான் எங்களுக்குத் தமிழ் கற்பித்தார். நூலகத்திற்குப் போகும் வழியில் அல்லது நூலகத்தில் அவரிடம் மாட்டிக் கொள்வோம். திரும்பவும் வகுப்பறைக்கு வந்து சேருவோம். ரீச்சர் ஒன்றுமே பேசமாட்டார். அப்போது எங்கள் பயமெல்லாம் போய்விடும். சின்ன வகுப்பில் ரீச்சரிடம் கல்வி கற்காதபோதும் பெரிய வகுப்பில் (A/L) ரீச்சரிடம் கல்வி கற்றதை மறக்க முடியாது.

கல்லூரியில் கண்டபடி திரிய இயலாது. ரீச்சர் தூரத்தில் நிற்பதைக் கண்டால் ஓடி ஒளிவோம். அவ்வளவு பயம். ரீச்சர் எங்களை அடித்ததில்லை, திட்டியதில்லை என்றாலும் அவரிடம் பயம் கலந்த மரியாதை. அதனால் அவர் நிற்கும் இடத்தில் நாங்கள் நிற்க மாட்டோம். கல்லூரியில் நடைபெறும் பூசைகள், விழாக்கள் எல்லாவற்றையும் ரீச்சர் முன்னின்று வழிநடத்துவார். ரீச்சர் ஓய்வுபெற்றது 1983இல். அது நான் வவுனியா மாவட்டத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை. ரீச்சர் ஓய்வு பெறுகின்றார் என்று அறிந்தேன். என் வீட்டிற்குக் கிட்டத்தான் அவரது வீடு. சம்பியன் லேனுக்கு அருகில் வீடுகட்டிப் போகும் வரை எனது பெரிய தாயாரின் பக்கத்து வீட்டில்தான் (ரீச்சரின் பெரியக்காவுடன்) வசித்து வந்தார். மதிலால் கூப்பிடும்போது ரீச்சர் சிரித்தபடி வருவார். கதைப்பார். ரீச்சரின் சிரிப்பிற்கு ஈடு இணை என்று எதுவுமே கூறமுடியாது.

கடந்த 2010இல் எமது கல்லூரி நூற்றாண்டு விழாவிற்கு வருகை தந்தபோது யாழ்ப்பாணம் வந்த மறுநாளே நான் அவரை அவரது சகோதரியின் மகள் திருமதி.ஞானகுமாரி இராஜேந்திரகுமார் (ஞானா ரீச்சர்) வீட்டிற்குச் சென்று சந்தித்தேன். இரண்டு கதிரைகளில் தம்பதிகள் இருவரும் அமர்ந்து என்னுடன் உரையாடினார்கள். பயணக் களைப்பு இருந்த போதிலும் தம்மை நாடி வந்தவர்களை அரவணைத்துக் கதைத்தவர்தான் எங்கள் ரீச்சர்.

நான் கனடா சென்றிருந்த சமயமும் ரீச்சர் வீட்டிற்கு எப்படியாவது போகவேண்டும் என்று விரும்பினேன். என் விருப்பம் அறிந்து கனடாவில் இருந்த என் நண்பி ஜெயா பரராஜசிங்கம் என்னைத் தனது காரில் அழைத்துச் சென்றார். ரீச்சர் மிக மிக சந்தோசத்துடன் எங்களை வரவேற்று உபசரித்து அனுப்பியதையும் என்னால் மறக்க முடியாது. நான் கண்ட சுகிர்த ரீச்சர் தனது கடமை நேரத்தில் கண்டிப்புடன் நடந்து கொண்டார். ஆனால் காலம் போகப் போக அன்புடன் அரவணைத்த பாங்கு மறக்க முடியாதது. கனடாவில் அவரைக் கண்டதும் "ரீச்சர் நீங்கள் அன்று பார்த்தது போல அப்படியே இருக்கிறீர்கள்" என்றேன். "ஊரை விட்டு வந்ததுதான் மற்றப்படி என்ன'' என்று சொன்னார். அவரது கணவரும் உடனிருந்தார். இருவருடனும் கதைத்து சந்தோசமாகத் திரும்பினேன்.

பின்பு ரீச்சரைக் கண்டது கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவின்போதுதான். 2003இல் கண்டபோது எப்படி இருந்தாரோ அப்படியேதான் 2010இலும் இருந்தார். எங்கள் கண்ணூறுதான் ரீச்சரைக் காவு கொண்டதோ என்று நினைக்காமலும் இருக்க முடியவில்லை. நூற்றாண்டு விழாவில் பங்குபற்றிய சந்தர்ப்பங்களில் எல்லாம் பெரிய "பட்ச்" (Badge)ஐயும் குத்திக் கொண்டு பட்டுச் சேலையுடன் அழகாக நடந்து வந்து எல் லோருடனும் மிகக் கலகலப்பாகச் சிரித்துக் கதைத்தார். பெரியவர்கள், சிறியவர்கள் என்ற பாகுபாடு ரீச்சருக்கு இல்லை. எல்லோரையும் கண்டு, கதைத்து நலம் விசாரித்ததை நான் கண்டேன்.

எனக்கு மிகவும் மனவருத்தம் தந்த விடயம் ரீச்சர் என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரி வீட்டிற்கு வந்துவிட்டுச் செல்லும்போது என் வீட்டு வாசலிலும் நின்று என் வீட்டிற்கு வர விசாரித்தபோது நாங்கள் வீட்டில் இல்லாத காரணத்தினால் அவர் திரும்பிப் போக நேரிட்டதுதான். இதுதான் எனக்கு மிகப்பெரிய கவலையாக இருந்தது.

எங்கள் சுகிர்த ரீச்சரைப் பற்றிப் பலரும் பல்வேறு கோணங்களில் பல்வேறு வடிவங்களில் கதையாக, கட்டுரையாக, கவிதையாக எழுதி விட்டார்கள். நான் கல்வி கற்ற காலத்தில் நான் கண்டறிந்த சுகிர்த ரீச்சரைப் பற்றி எனது ஞாபகத்தில் இருந்தவற்றைத் தருவதற்குச் சந்தர்ப்பம் அளித்த அவர்தம் குடும்பத்தாருக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*



# கொக்குவில் இந்துவில் நடமாடிய நட்சத்திரத் திலகம்

# திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்



எங்கள் குருநாதர் நன்றே வழிகாட்டினார். நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என வாழ்ந்து காட்டியவர்களை மறக்க முடியுமா? வாழ்நாளெல்லாம் உழைத்தும் குன்றாத இளமையுடன் காட்சி தந்தவரைத் தள்ளிவிட முடியுமா? வாழ்வாங்கு வாழ்ந்து கொக்குவில் இந்து அன்னையின் மடியிலே தன் இறுதிக்காலம் வரை கால்பதித்துத் தூர தேசம் சென்றிட்ட போதும் நினைவோடு உறவாடியவர். கல்வி கற்றுவிட்டோம், தேவை முடிந்து விட்டது; ஆசிரியராகக் கடமையாற்றினேன், வேலை முடிந்து விட்டது; பிரதி அதிபராக இருந்து புகழும் பெற்றுவிட்டேன் என்று சுயநலப் போக்கில்லாது "நன்றி மறப்பது நன்றன்று" என, வள்ளுவன் வாக்கிற்கு உதாரணமாக விளங்கிக் கல்லூரியின் செயற்பாடுகளுக்குள் தானும் உரிமையினைப் பகிர்ந்து கொண்டவர்.

எல்லோர் இதயத்திலும் மங்காத குலவிளக்காய் குடியிருப்பவர். நாங்களும் இவ்வாறு இருக்க வேண்டும் என எதிர்காலச் சந்ததிக்கு எண்ணம் தோன்றச் செய்த மங்காத் திருவிளக்கு சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் எமது ஆசான்.

பிறந்தவன் மண்ணில் வாழுகின்றான் என்றால் உயிருடன் இருப்பதல்ல. உயிர் இவ்வுலகை விட்டுச் சென்றாலும் உயிருள்ள ஜீவன்களில் வாழும் வாழ்வு, வாய் விட்டுப் பேசும் வாழ்வுதான் அவர் இங்கு விட்டுச் சென்றிருக்கும் பொக்கிஷம். கொக்குவிலில் வாழ்ந்த இவர் வாழ்விடத்திற்குப் பெருமை சேர்த்தவர். தனது வாழ்நாளில் 52 வருடங்களைக் கொக்குவில் இந்துவிலேயே கழித்தவர். 10 வருட காலம் மாணவியாய், 39 வருட காலம் ஆசிரியராய், 3 வருட காலம் பிரதி அதிபராய் இருந்து இளைப்பாறியவர்.



● திருமதி.கலா சுந்தரேசன்
முன்னாள் மாணவி
தற்போதைய ஆசிரியை
பகுதித் தலைவர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

தனது நீண்டகால வாழ்வில் கொக்குவில் அன்னையின் மடியில் வளர்க்கப்பட்டவராகையால் அன்னையின் வரலாற்றை முழுமையாக அறிந்தவர். எக்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் நடைபெற்றன, அதனைச் செய்தவர் யார் என்ற வரலாற்றுப் பின்னணியினைத் தனது 87ஆவது வயதை அடைந்தபோதும் இளமைத் துடிப்புடனே பதில் கூறித் தெளிவு பெற வைத்தவர். திடமான மனதோடு நூற்றாண்டு விழா மலர் பிரசுரிப்பதற்கு முயற்சிகளை எடுத்தபோது அதில் ஏற்படும் சந்தேகங்களுக்குத் தெளிவான விளக்கம் தந்து இயன்ற அளவு சிறப்பு மலராகப் பொலிவடைய, வேண்டிய உதவிகள் செய்தவர்.

பாடசாலையின் ஆரம்ப வரலாறு அழிந்துவிடக் கூடாது என்ற திடமான மனதோடு நூற்றாண்டு காண வந்தபோது பெருந்தகையார் தான் அறிந்தவற்றையெல்லாம் எடுத்துரைத்துச் சிக்கல் இல்லாத அன்னை வரலாற்றைச் சமர்ப்பித்தவர்.

ஜெர்மனியில் உள்ள கொக்குவில் இந்து பழைய மாணவர்கள் நூற்றாண்டைக் கொண்டாட பிரதம விருந்தினராக அழைத்தபோது கனடாவில் இருந்து பழுத்த பழமாகியும் பயமின்றிச் சென்று சிரத்தையுடன் சிறப்பித்ததுடன் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சரித்திரத்தைக் கட்டுரையாகச் சமர்ப்பித்தும் இருக் கின்றார்.

இவ்வாறான செயல்கள் யாவும் பாடசாலையில் அவர் கொண்ட ஈடுபாட்டையும் கொக்குவில் இந்து வளர்ந்து மகுடமாய்த் திகழவேண்டும் என்ற அவரது விருப்பையும் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

எமது சொந்த மண்ணில் நடைபெற்ற நூற்றாண்டுப் பொலிவு காண மிக்க மகிழ்வோடு அன்னையின் மூத்தமகளாய் தம்பதி சமேதராய் வந்திருந்து ஆறு நேர நிகழ்வுகளிலும் சலிக்காமல் கலந்தது மட்டுமல்லாது தானும் ஒருநாள் நிகழ்வில் தலைமையேற்று சளைக்காமல் மிடுக்குடன் நடத்திச் சென்றவர்.

இவை மட்டுமா? பார்ப்போர், நிகழ்வினைச் செம்மை செய்தோர் கூட இடையில் விட்டுப்பிரிவர். ஆனால் விழா தொடங்கும் நேரம் முதல் முடிவடைந்து கல்லூரி கீதம் பாடும் வரை தானும் இருந்து இணைந்து பாடி மகிழ்ந்து சென்ற அணையா விளக்கு அவர்.

பின்னோக்கியும் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. தனது பாடசாலை மாணவப் பருவத்தில் நல்ல மாணவியாகத் திகழ்ந்ததனால் கல்லூரி அன்னையிடமே ஆசிரியப் பணியையும் மேற்கொள்ளும் பேறு பெற்றார். இவர் கண்ணியம் மிக்கவராகவும் இருந்தார். மாணவிகளின் ஒழுக்க நடவடிக்கையில் மிகவும் அக்கறையுடையவர். பாடசாலைக்குரிய ஒழுக்க விதிகளில் இருந்து யாரும் தவறமுடியாது. அவ்வாறு தவறுபவர் வீடு செல்ல வேண்டிய நிலைமை. பின் பெற்றோரின் மன்றாட்டமான வேண்டுகோளினால் மீண்டும் பாடசாலை வரலாம். இவரைக் கண்டாலே மாணவ மாணவியர் பயப்படுவார்கள்.

ஒரு நல்லாசிரியருக்குரிய இலக்கணத்துடன் மிளிர்ந்தவர். அவர் சிரிக்கும்போதும் வாயைக் கையால் பொத்தியே அடக்கமாகச் சிரிப்பார். பெண்ணின் பெருந்தகை எங்கள் அம்மையவர். பாரதி கூறுவது போல் மக்களுக்கு வாத்தியாராய், வளர்ப்புத் தாயாய், வைத்தியனாய் ஒக்கநயங் காட்டியவர்.

பாடசாலையின் ஆசிரியராக இருந்து சாதித்தது மட்டுமல்லாது இல்ல மெய்வல்லுநர் போட்டி ஏற்பட்டால் மைதானத்திலே தானும் ஒரு மாணவியாக இறங்கி செல்லையா இல்லத்தை மேனிலையில் வைத்திருந்தவர். அன்று தொடக்கம் அணிநடை வெற்றி பெரும்பாலும் செல்லையா இல்லத்திற்கே அமைந்துவிடும்.

ஓடி ஆடி விளையாடும் நங்கையாகக்கூட விளங்கியவர். ஆடாமல் அசையாமல் அழகுப் பொம்மையாய் அவர் நடந்து வரும் காட்சி மனதில் நிழலாடுகின்றது. யாரிடமும் அவரைக் கேட்டால் பொல்லாதவர் என்று கூறவே மாட்டார்கள். கண்டிப்பானவர் என்பார்கள். அந்தளவிற்குப் பெருமை மிக்க பெண்மணியாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

தனது இளமைக் காலத்திலிருந்து இறக்கும்வரை கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். அன்னசத்திரங்கள் ஆயிரம் அமைப்பதிலும் ஆங் கோர் ஏழைக்குக் கல்வி கற்பிப்பதன் பெருமையை, தர்மத்தை உணர்ந்ததனால் அவரது பிள்ளைகளும், மருமகனும் இன்று கல்லூரியின் வளர்ச்சிக்காய்ப் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

சந்திரனின் ஜோதியாய் தனிப்பெரும் முதலாய் அன்னையின் கனவெல்லாம் எங்கணும் மறைந்தது கண்டிலேன்.... என்பதற்கு அமைய, கொக்குவில் இந்து மேலும் மேலும் மேலோங்கி வளரும். அது உள்ளவரை அன்னாரின் நினைவும் நிலைத்திருக்கும். பிரதி அதிபர்களில் முதலாவது பெண் பிரதி அதிபராகத் திலகமாக விளங்கினீர்கள். பாடசாலையில் நீங்கள் நடந்த பாதையில் நடந்துவரும் மக்களில் நீங்கள் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள் என்பது உண்மை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

*



# எனது நினைவகலா சுகிர்த ரீச்சர்...



**கொ**க்குவில் இந்து அன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வியாகவே எனது அன்பிற்கும், உயர் மதிப்பிற்குமுரிய அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைக் காணுகின்றேன். கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், வளமான வாழ்வுக்கும், தனது வாழ்வுக்காலம் முழுவதையும் அர்ப்பணித்து உழைத்த உயர் செய் உத்தமியாகவே எனது ஆசிரியையை என்றுமே என் நினைவகலாத உள்ளம் நேசிக்கின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த மாணவியாக, ஆசிரியையாக, பகுதித் தலைவியாக, உபஅதிபராக என்று உயர்வு பெற்று எமது கல்லூரி அன்னைக்குப் பெருமை சேர்த்த தவப்புதல்வியாகப் பரிணமித்தார். அன்னாரது வகிபாகம் கல்லூரியின் வாழ்க்கைப் பாதையில் என்றுமே நினைவகலாததாக நீடித்து நிலைத்து நிற்கவல்லது.

கல்லூரியின் தேவையையும், காலத்தின் தேவையையும் உணர்ந்து பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் ஊடாக பாடவிதானம், இணைப்பாடவிதானச் செயற்பாடு, பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, கல்லூரியின் பல்துறைசார் பௌதீக அபிவிருத்திப்பணி எனப் பல்பரிமாண நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அணிசெய்யும் ஆசிரியையாக முன்னின்று உழைத்த உத்தமியாகவே இவரை நான் காணுகின்றேன்.

புலம்பெயர்ந்து கடல்கடந்து கனடாவில் வாழ்ந்தாலும், தான் பிறந்த மண்ணையும், தான் கல்வி கற்ற கல்லூரித் தாயையும், என்றுமே அன்போடு நேசித்த காலமே அளவிடமுடியாதவை.

**தேவசகாயம் நடனகுமார்**
**(Victoria, Australia)**
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி






இவையாவும் அன்னாரின் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துரைப்பனவாகவுள்ளன.

நான் மாணவனாக இருந்த காலத்தில் அன்னாரது செம்மையான சீரிய பணிகள் என்றுமே நினைவகலாதவையாக உள்ளன. இவையாவும் நினைக்க நினைக்க இன்பம் தருபவையாகவும் உள்ளன. அதாவது அன்னார் கல்வி புகட்டிய விதம், நேர ஒழுங்கு, இறைபக்தி, கடமை உணர்வு, கண்டிப்புடன் கூடிய கட்டுப்பாடு என்பவற்றால் அன்னாரது வாழ்வியல் முறைமை என்னை மிகவும் ஆற்றுப்படுத்தியது. பாடசாலைவிட்டு வெளியேறிய பின்பும் என்றுமே அன்புரிமையுடன் அடிக்கடி தொலை பேசியில் அளவளாவுவார். இறக்கும்வரை அவருடன் இறுக்கமான பிணைப்பையே வைத்திருந்தேன்.

இதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. எனது பாலிய நண்பனின் தாயார் என்பதாலும் அவர்கள் மீது அன்பு கலந்த பாசத்தையும் உணர்ந்து இருக்கின்றேன். ஒரு சமயம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விக்டோரியா மாநிலத்தில் (மெல்பொர்ன்) கிளை ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை கேட்டபோது "இது ஒரு நல்ல விடயம், செய்யுங்கோ, இந்த விடயம் பழைய மாணவர்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்க உதவும்" என்று கூறினார். அத்துடன் சங்க அமைப்பு விதிகள் போன்றவற்றிற்கு திட்டங்களையும், கொடி, சின்னம் அமைப்பதற்கு ஆலோசனைகளையும் வழங்கி இருந்தார்.

எவரையும் நோகடிக்காத இன்சொல்லும், இனியவை கூறலும், கல்லூரியினதும் பழைய மாணவர்களினதும் நலன் பேணுவதும் அன்னாரின் உயர் பண்புகளுக்குச் சில உதாரணங்களாகும். இதனால் அன்னாரினது வாயிலிருந்து வரும் இனிய வார்த்தைகள் எமக்கு செவி நுகர் கனிகளாக இருக்கின்றன.

பழைய மாணவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று வருகின்ற போதெல்லாம் கொக்குவில் இந்து அன்னையின் சுகநலன்கள் பற்றி விசாரிக்க அவர்கள் ஒருபோதும் தவறியதேயில்லை. தனது வயதையும் பொருட்படுத்தாது கொக்குவில் இந்துக் கல்லூரித் தாயின் நூற்றாண்டு விழாவினைக் கண்டு தரிசிப்பதற்காக கனடாவிலிருந்து போனவர் என்றால், அவர் எங்கள் கல்லூரித்தாய் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பிற்கும், பாசத்திற்கும், அக்கறைக்கும் வேறு அடையாளப் படுத்தல்கள் தேவையில்லை எனலாம்.

பிறருக்குத் தீங்கில்லாத நினைப்பும், உதவுகின்ற உள்ளன்பும் கொண்ட எனது நினைவகலாத ஆசிரியைதான் அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம். கொக்குவில் இந்து அன்னைக்காக வாழ்ந்து காட்டிய தவப்புதல்வியின் நினைவுகள் என்றும் எங்கள் மனதில் பதிந்திருக்கும் என்ற அசையாத நம்பிக்கை உண்டு. அன்னாரினது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மணியர்பதி முருகனை நினைந்து இருகரம் கூப்பி வழிபடுகின் றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*



# FOND MEMORIES OF OUR
# Sukirtha Teacher

It was with profound distress that I learned that the remarkable human being we affectionately call our Sukirtha Teacher had passed away. She was a beacon to members of the teaching profession at Kokuvil Hindu College and to generations of its pupils. She was a dedicated teacher who followed the motto "We live by what we get; we make a life by what we give".

As I mourn her passing, vivid memories of her time with us come flowing into my mind……

I had the great good fortune to know our Sukirtha Teacher for over forty years. I met her for the first time at Kokuvil Hindu College (K.H.C.) in Grade Seven when she taught me Tamil literature for a year; after that she was a patron of the Senior Literary Association when I advanced. Her teaching was inspirational – after a class with her, or a meeting of the Literary Association, I was always excited to explore more of the pleasures and challenges of literature. When she taught the stories of Mahabharata, it was with such power as to inspire everyone listening to seek better understanding of the values depicted by the characters in the stories. Though I may not remember all the details of the stories she taught us, the essential points are still embedded in my memory, and I have come to realize that those are the values each of us needs to embrace and demonstrate in our own lives.

She was committed to ensuring that every student she taught was able to use both English and Tamil confidently at the Literary Association meetings. She took pains to nurture even the least self–confident amongst us to assure them success at the end. When I was the Secretary of the Literary Association it was my responsibility to deliver the welcome speech at the Annual Social Event; Sukirtha Teacher inspired me to such an extent that I was able to deliver that first speech in public with complete confidence. That success served as a stepping stone for me and empowered me to continue learning the skills of public speaking as an adult. Spending time with her was a joyful and enriching experience that will live on in my memory for the rest of my life.

One of the reasons for her success was that she taught her students the value of discipline and she did this not by harsh words or the cane, for they impose discipline but do not make the pupils realize the importance of disciplining oneself. Instead, she led by example. Time went by, and during the 1960s, facing a new generation of students – and teachers – with different ideas of discipline, duty, punctuality and teaching methods, she maintained her own standards while infusing into many of those students her enthusiasm for the traditional values and methods of her vocation. There was never anything sloppy or languid or perfunctory in her work. She

**Yogam Thamotharan**
**(Canada)**
Former student
Kokuvil Hindu College






was direct without being rude, focus-oriented and had a clear understanding of her own values and the gifts she had to offer generations of students.

She remembered each of her students by name (and the details of their lives and families) till the end of her life, so when she met any of them again she was able to ask how life had been treating them since they had last met. Perhaps that happy combination of memory and empathy form the key to how she maintained such apparently effortless rapport with her students till her last breath.

I kept in touch with her at every opportunity. It invigorated and uplifted me each time I spoke to her. When we talked in June of 2011 we had a long and far–ranging conversation, and I never expected that it would turn out to be my last conversation with her. Her warm and soothing voice still resonates in my memory and it grieves me that I will never be able to hear it again.

Sukirtha teacher lived her life to the fullest. Her interpersonal relationships, based upon loyalty, sincerity and compassion, enriched her own life and the lives of all around her. After she came to Canada, she earned the friendship of several hundred more people in the New World, and we were better off for having had her among us in this country, particularly in the Kokuvil Hindu College Old Students' Association, Canada in which she took an active part. I hope and believe that the goodwill and the blessings she bestowed on the Association will inspire us to work for its continued growth.

The intense emotions one saw on the faces of the throng attending her funeral provided ample testimony of the high respect and affection in which our beloved teacher was held. Behold the scene of her farewell journey! A proud assembly of her students bore her casket, draped in the K.H.C. flag and surrounded by blossoms in the school's colours of red and white, on their shoulders in the traditional manner, moving in solemn procession to the crematorium. Marching alone behind the casket was her youngest son, wearing the Air Force uniform denoting his new flying position that he achieved a little too late for her to see. His solemn military bearing throughout the ceremony, his reverential salute to his mother's casket and his slow march, followed by the family, friends and old students bearing floral tributes to the mother of K.H.C. … images brought tears to my eyes.… images that will be etched in my heart forever.

Her journey has ended. She was our guide, our teacher, our mentor, our coach, and we could not have achieved a tenth of our accomplishments without her. She had a vision for Kokuvil Hindu College and for us, her students, and the influence she exerted on us was profound. She has left an indelible mark on everyone with whom she came in contact with. We bow before her today to express our reverence and gratitude, and will always honour her memory in the way we live our lives.

With a deep sense of gratitude for the priceless gifts she bestowed on all of us, I remain her grateful student.

May her soul rest in peace and her name be blessed always. *



# Mrs.Sukirthalakshmy Supramaniam (Sukirtha teacher)

# STUDENT, TEACHER, DEPUTY PRINCIPAL (K.H.C.) AND A CLOSE RELATIVE

It is a great honour bestowed upon me to write this tribute to our beloved Sukirtha teacher for the magazine released in her memory by her family members in Canada.

Sukirtha teacher is a close relative of mine (her mother Muththachi Mami descends from the same line of ancestors as my grandmother – wife of Mr.Kanapathipillai Appakutti – at whose house the school, known as "Thinnai School" was initially started in 1909). Her parents' house was only 100 meters away from our house in Kokuvil. She was always proud to mention to me that Chellapah Master (K.Appakutti's son-in-law) was the "Founder teacher" (especially in Arithmetic and English) of Kokuvil Hindu College (K.H.C.). There was also Tamil Pandit Mr.Somaskanthar teaching with him at the Thinnai School which was located at 3rd Mile Post, before it moved to its present location in early 1910 (thanks to the land donated by K.H.C. Founder Head Master Mr.E.Chelliah). Sukirtha teacher told me that very few girls attended K.H.C. at that time and Chellapah Master used to come to her doorstep and took her to school every day when he went to teach.

She was a student of K.H.C. commencing from 1927 for nearly 10 years before started her career as a teacher at the school from January 1942 till 1980, nearly 39 years. She was an excellent teacher of English, Mathematics, Tamil and Latin. Mrs. Sukirthalakshmy Supramaniam was appointed as the first lady Deputy Principal in 1980 till she retired in 1983. She was therefore attached to K.H.C. for



**Dr.K.Ketheeswaran JP (Colombo)**
Former student
Kokuvil Hindu College






nearly 52 years as student, teacher and Deputy Principal. I joined the K.H.C. Junior school in 1955 and left the school in 1970 after my G.C.E. Advanced Level examinations. During this time she got married to Mr.Supramaniam from Araly East (Civil Engineer by profession) on December 9, 1956 and was blessed with five children, 2 sons (Suthaker & Sasitharan) and 3 daughters (Sukanya, Chanthrika & Sukesini) and later blessed with lovely grand children again 2 boys (Keshan & Roshan) and 3 girls (Roobiny, Nila & Roja). I still remember back in the days Mr.Supramaniam driving a black Morris Minor during the early 1960s when very few people owned cars in Kokuvil.

After her retirement she migrated in 1993 to Canada with her husband to join her children. Mrs. Sukirthalakshmy Supramaniam and Mr.N.Nagalingam (Old Student of K.H.C.) in Canada were instrumental in inaugurating the K.H.C. O.S.A. Canada branch in April 1994, the same year when K.H.C. (O.S.A.) Colombo branch celebrated its Golden Jubilee in Colombo in a grand and fitting manner – a dinner at Hotel Taj Samudra, and the major fund raising event musical fiesta "Ramya Ganangal" at the Sugathadasa indoor stadium with famous South Indian artists and singers.

Sukirtha teacher was elected as the first President of K.H.C. O.S.A. Canada branch at the inaugural meeting held on April 23, 1994 in Canada. She served as President for four years and vice President until her passing. She helped K.H.C. in numerous ways. Thus she associated herself with K.H.C. for another 17 years. In other words her association with K.H.C. spanned over seven decades. I strongly feel that she might be the first to be associated with the "Alma Mater" and dedicate time for its service for a long period as this.

As a relative from the beginning and as President of the K.H.C. (O.S.A.) Colombo branch from 1994 onwards, I've had the privilege to have known and associated with her till her demise on September 8, 2011. Our Association had an opportunity to honour her and her husband Mr.Supramaniam, at a felicitation dinner held on September 5, 2001 at Hotel Holiday Inn, Colombo during their visit to Sri Lanka. As a token of appreciation for her 42 years of teaching service at K.H.C., the Association presented her with a Gold Medal and a certificate of appreciation. We had the great opportunity to meet her in July 2010 when our school celebrated its Centenary year in a grand scale where our Association organized to release the K.H.C. Centenary Stamp and the First day cover along with Mr.Handy Perinbanayagam's 110th birthday stamp with the first day cover. We also organized a private dinner at our Association – treasurer S.Rajendran's residence to honour Sukirtha teacher and her husband during this visit.

Her entire life span of working life was devoted to building up Kokuvil Hindu College as one of the leading institutions in the Jaffna Peninsula. She was amidst Kokuvilites in Canada till her final day, as she was struck down with an ailment that led to her eventual passing away. Her memory will ever remain green amongst her students, teachers and all others at Kokuvil and will continue to inspire all of us.

*

K.H.C. (O.S.A.) Colombo branch bids farewell to

# Mrs.Sukirthalakshmy Supramaniam

on September 5, 2001 when she visited Sri Lanka







KOKUVIL HINDU COLLEGE
D STUDENTS' ASSOCIATION
COLOMBO BRANCH


UVIL HINDU COLLEGE
TUDENTS' ASSOCIATION
COLOMBO BRANCH


KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION
COLOMBO BRANCH



# A Legend in the History of Kokuvil Hindu College

I felt a deep sense of sorrow and personal loss when I first heard of the death of my teacher, Mrs. Sukirthalakshmy Supramaniam, fondly known to all her students as Sukirtha teacher.

Her contribution to Kokuvil Hindu College over a period of four decades, first as a teacher and then as the vice Principal, was to say the least, immense. Those of us who had the good fortune to be in touch with her, even after her retirement and migration to Canada, very well know as to what extent she, though physically far away, got herself involved with the progress of the school by her thoughts, words and deeds. So much was the love she had for the school and her students.



I consider it my good luck to have been a student of Sukirtha Teacher. She taught me English in grades nine and ten. I was a little taken aback when, on the first day I met her in class, she told me that she had taught my father too. This I found out later was true, but what amazed me was not the fact that she had also been my father's teacher, but that she had, in spite of her other numerous duties as a teacher and mother taken the time, effort and interest to know the family background of each of her students. This helped her understand the individual needs of each student and thereby be a better teacher to them. Teaching, for her, was not another job but a vocation and mission in life to serve her community to the best of her ability. She did not expect accolades or praise from her students or the parents. She measured her success as a teacher and mentor by the success of her students. By looking at her products, who are leading men and women of society today, it can be said without any hesitation that she accomplished this mission beyond measure.

It was Sukirtha teacher who made us all realize the importance of learning English. Since the medium of instruction at school level was Tamil, and English was not commonly used in the social life of

**S.Rajendran (Colombo)**
Former student
Kokuvil Hindu College





the people of Jaffna, the majority of the students did not find it easy to use English. Teacher understood this situation very well and adapted her teaching methods to suit this environment and got even the weaker student to get interested in the subject. She encouraged the students who were keen in developing their language skills by getting them nominated for various English language competitions held in other leading schools in the peninsula. It was this interest that she kindled in me for the English language and the firm foundation she laid in school that paved the way for me to develop my ability to use this language with confidence in my adult life.

Teacher played a pivotal role in the formation of the Canada branch of the Old Students' Association of Kokuvil Hindu College. This organization has helped the school in many ways. It was therefore very fitting and timely that the Colombo branch of O.S.A. K.H.C. organized a felicitation dinner for teacher when she was in Sri Lanka during her holiday in September 2001 and also presented her with a gold medal and certificate of appreciation for all what she had been doing for the school as well as the students of Kokuvil Hindu College.

Teacher last came to Sri Lanka in 2010 to participate in the Centenary Celebrations of the school. Past pupils from many countries were present in the school for these celebrations and most of them grabbed this opportunity to be photographed with their beloved teacher not realizing that this was the last time they would see her. The gleam in her eyes and smile on her face, to see so many of her past pupils doing so well in life, spoke volumes about the happiness she must have felt to see the success of her efforts.

I had been lucky enough to continue to be in touch with teacher even after I left the school because of my close friendship with her son-in-law Ragu and her daughter Sukanya, who were my classmates.

While she was in Colombo on her journey back to Canada, she honoured me by accepting my invitation for a dinner at my house. On the day prior to her flight back to Canada, teacher visited our house with her husband Mr.Supramaniam. There was a small gathering of old students with their spouses. Teacher was, as usual, very energetic and joyful during the whole evening discussing with us mostly about the school and about the Centenary Celebrations. After the dinner, we all bid "Good Bye" to teacher not knowing that it was the last time we were seeing her.

It was while teacher was attending an event organized by the old students in Canada, she had fallen sick and got herself admitted to the hospital. The news of her passing on 08th September 2011 shocked all of us and the entire school community mourned her death.

A legend in the history of Kokuvil Hindu College, her death was an irreparable loss to our "Alma Mater".

May her soul rest in peace!

*



# An appreciation of Mrs.Sukirthalakshmy Supramaniam

It is a matter of pride and gratification to write an appreciation of the loyal, dedicated and selfless service rendered to Kokuvil Hindu College (K.H.C.) by late Mrs.Sukirthalakshmy Supramaniam. She was the most respected, loved, trusted and illustrious teacher. She was a brilliant star in the galaxy of eminent English, Maths and Tamil teachers.

She worked hard to help K.H.C. to reach the height of glory. Her cherished dream to make K.H.C. a leading school in the Northern Province of Sri Lanka came to reality. She was a role model and a multifaceted teacher. She distinguished herself in various fields. She stamped quality in teaching English and Maths. She started to teach at the age of eighteen. She had been teaching at K.H.C. from 1942 to 1983.

She was an embodiment of affection, calmness and generosity. She spent more than 50 years at our school as a student and a teacher. Through her article "நான் கண்டு அறிந்த கொக்குவில் இந்துக் கல்லூரி" we are able to understand her attachment to Kokuvil Hindu College. Her children who were also students at K.H.C. continue their generous contributions to K.H.C. students to develop their talents. The annual (open) chess tournament for boys and girls separately has been sponsored by her eldest daughter Sukanya and son – in – law Ragu Thevarajah (Canada) since 2008, in recognition of her 42 years dedicated service as a teacher and deputy Principal at K.H.C. Gold medals and cash prizes are awarded by her second daughter Chanthrika and Ananda Nagendran (U.S.A.) to the winners of English Oratorical contest



(Juniors and Seniors), to honour her devoted service (1942 – 1983) as English teacher.

We will always remember her devoted service with love and gratitude.

**"Man is mortal but the meritorious deeds of man are immortal"**

She will live deep in the hearts of Kokuvil Hindu Community.

**Miss.R.Tharasutha**
Student
(Grade 12 – Commerce)
Kokuvil Hindu College





# கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு வரலாற்றுடன் தடம்பதித்த அன்னையே!

**நூ**று வருடங்களுக்கு முன் கொக்குவில் இந்துக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட சூழலை வரலாற்றுச் சான்றுகளுடன் கற்பனை செய்து பார்க்கின்றேன். பிரித்தானியரின் அந்நியராட்சிக் காலம், கிறிஸ்தவ மதத்துடன் திணிக்கப்பட்ட கல்வி முறை... மக்களிடையே கல்வியின் அவசியம் உணரப்படாத காலம்...இந்தக் காலகட்டத்தில் எமது பிரதேச பாரம்பரியம் பேணும் மதம், கலாசாரம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி கொண்டோரால் இப்பாரம்பரியங்களைப் பாதுகாத்துப் பேணும் வகையில் இந்துக் கல்லூரிகள் இப்பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் திண்ணைப் பாடசாலைகளாக ஒரு சில மாணவர்களை வலிந்து அழைத்து கல்வி புகட்டிய காலம். விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையான மாணவர்களே கல்வி கற்றனர். பின் மெல்ல மெல்லக் கல்வியில் நாட்டம், அதன் அவசியம் உணரப்பட, சுதந்திரத்தின் பின்னரான காலகட்டத்தில் தாய்மொழியில் கல்வி, சகலருக்கும் இலவசக் கல்வி என்பன சகல தரப்பினரும் கல்வி கற்கும் ஏதுநிலையைத் தோற்றுவித்தன.

இதன் பின்னணியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வளர்ச்சி கண்டது. பல கடினமான காலகட்டங்களையும் ஓலைக் கொட்டில்களாய் அமைந்த வகுப்பறைகள் எரியுண்ட சோகங்களுடன் பல சோதனைகளையும் நெஞ்சுறுதியுடன் முகம் கொண்டு தளராத மனவுறுதியுடன் வீறுநடை போட்டு சாதனைகளாக்கிக் கொண்டது.

யுத்த மேகங்கள் எமது தேசத்தைச் சூழ்ந்ததால் ஏற்பட்ட பல இன்னல்களிடையே உள்நாட்டினுள் இடப்பெயர்வு எனவும், வெளிநாட்டு இடப்பெயர்வு எனவும் சமூகக் கட்டமைப்பு சிதறுண்டு சூழல் மாறும் வரை எமது கிராமத்து மாணவர்கட்கான பாடசாலையாகத் திகழ்ந்த எமது கல்லூரி தனது முன்னைய அடையாளத்தைத் தொலைத்துக் கொண்ட போதிலும் புதியதோர் பரிணாமத்தில் மிளிரும் இன்றைய காலம் வரை நினைவுகள் விரிந்து செல்கின்றன. எமது கல்லூரி தனது நூற்றாண்டு வரலாற்றைக் கடந்துள்ள வேளையில் அவ்வரலாற்றுடன் தனக்கென ஓர் இடத்தைப் பதித்துக் கொண்ட எமது “சுகிர்தம் அன்னையின்” நினைவுகளுடன் கலக்கின்றேன்.

கொக்குவில் கிராமத்திலே பிறந்து அக்கிராமத்து மத்தியில் அமைந்துள்ள கொக்குவில் இந்துக் கல்லூரியிலே கல்வி கற்று அக்கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமையாற்றி, பின் உப அதிபராய்க் கடமையாற்றி, ஓய்வு பெற்ற பின்பு அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராகக் கல்லூரியின் அபிவிருத்திக்காகப் பணியாற்றி, பின் புலம் பெயர்ந்து கனடா தேசம் சென்று அங்கும் பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்து முதல் நான்கு ஆண்டுகள் அதன் தலைவராகவும், அதன் பின் இறுதிவரை உபதலைவராகவும் கடமையாற்றித் தன் இறுதி மூச்சுவரை கல்லூரி அன்னைக்குச் சேவகம் செய்யும் பாக்கியம் பெற்றவர்.

யாழ் மாவட்டத்தில் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது எமது கல்லூரி அன்னை குறுகிய காலத்தில் யுத்த அனர்த்தங்களின் மத்தியிலும் அதிக பௌதீக வளங்களைத் தன் தவப்புதல்வர்களால்

**ஆ.சத்தியமூர்த்தி**
செயலாளர்
வளர்மதி நிறைவாழ்வகம்
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி



பெற்றுக்கொண்ட பெருமைக்குரியவர். இவ்வாறு கொக்குவில் இந்துவின் நூறு ஆண்டுகள் வளர்ச்சிக்கு சிறிதும், பெரிதுமாகப் பலரின் கடின உழைப்புக்கள் காரணமாக அமைந்திருந்தன. அவ்வாறு உழைத்து கொக்குவில் இந்து வரலாற்றில் தனது பெயரைப் பதித்துக் கொண்ட சிலரில் சுகிர்த ரீச்சரின் பெயரும் பதிக்கப்பட்டுவிட்டது.

ஆசிரியத்துவம் ஆழமான வரைவிலக்கணம் கொண்டது. ஆசிரியராய் வாழ்வதென்பது தனித்துவமான பண்புகளைக் கொண்டது. வழிகாட்டியாய், துறைசார் புலமையாளராய், ஒழுக்க சீலராய், உளவியலாளராய், அறிஞராய், மாணவர்களின் எதிர்காலம் குறித்த கனவை அவர்கள் மனங்களில் பதித்துவிட்ட நாயகராய் இவ்வாறெனப் பல்வேறு முகங்களைப் பிரதிபலிக்கும் உதாரண புருஷர்களாய் வாழவேண்டியவர்கள் ஆசிரியர்கள். இவற்றை யெல்லாம் ஆசிரியத்துவத்தால் தன் காலத்தில் பிரதிபலித்ததால் அன்னையவர்கள் தன் மாணவச் செல்வங்களால் இறுதிவரை "சுகிர்த ரீச்சர்" என அன்பாக அழைக்கப்பட்டார்.

எல்லோரிடமும் பொறுமையாகப் பேசும் தன்மையும் ஆறுதலாக மாணவர்களின் குறைகளைக் காது கொடுத்துக் கேட்கும் மனப்பக்குவமும் எந்த வேளையிலும் உணர்ச்சிவசப்படாத நிதானமும், நெருக்கடிகளிலும் மனம் தளராத உறுதியும், எல்லோரிடமும் பண்பாகப் பழகும் குணமும், எந் நேரமும் எல்லோரையும் வேறுபாடின்றி இன்முகத்துடன் வரவேற்கும் நற்குணமும், தனித் துவமான தலைமைத்துவப் பாங்கும், இலகுவாக உறுதியாகத் தெளிவான தீர்மானங்களை மேற் கொள்ளும் ஆற்றலும் என இவரது திறமைகள் விரிந்து செல்கின்றன. இவரது இயல்பால் ஆகர்சிக்கப் பட்ட பல மாணவர்கள் இன்று அன்னையின் நிஜவிம்பங்களாய் எம்மிடையே அவர் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பெருமைக் குரிய விடயமாகும்.

1970களின் பிற்பகுதியில் அன்னை அவர்கள் எமது வகுப்பிற்கு ஆங்கிலப்பாட ஆசிரியராகக் கடமையாற்றினார். எனக்கு மற்றவர்கள் முன் எழுந்து நின்று பேசுவதென்றால் கூச்சம். அன்னை அவர்கள் என்னை வாசிக்க அழைத்த தருணம் எனக்கு உடல் எல்லாம் வியர்த்துக் கொட்டியது. எனது நிலையைப் புரிந்துகொண்ட அன்னை என்னை அன்புடன் அழைத்து அறிவுரை கூறி, நம்பிக்கை ஊட்டி அந்நிலை நீங்க நற்பணி புரிந்தார். ஏனையவர்கள் மத்தியில் எழுந்து நின்று பேச என்னைத் தூண்டிய முதற் சம்பவமாக அது அமைந்தது. அதனால் அச்சம்பவம் நடைபெற்று 35 வருடங்களின் பின் நூற்றாண்டு விழாவிற்கு அன்னை யாழ்ப்பாணம் வருகை தந்தபோது அவரைக் கொக்குவில் வளர்மதிக்கு அழைத்து விழாவொன்று நடாத்திய வேளை அவ்விழாவில் முக்கிய உரையாற்றும் அளவிற்கு என்னை ஆக்கிய சம்பவமாக அன்றைய அச்சம்பவம் அமைந்தது என அவ்வேளை எனது உரையில் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறு தன் அன்பாலும், பண்பாலும் மாணவர்களைத் தன்பால் கவர்ந்து அவர்களை வழிப்படுத்திய விதம் அற்புத மானது. தன் நடைமுறை வாழ்வால் பண்பட்ட குருவாக வாழ்ந்து காட்டியவர். இன்றைய ஆசிரியர்கட்கும், எதிர்காலத்தில் ஆசிரியராக வாழ விரும்புபவர்கட்கும் இவர் ஒரு முன்மாதிரியாக ஓர் இலட்சிய வாழ்வை வாழ்ந்து காட்டியவர்.

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்பாவது தான் தன் குடும்பம் எனப் பலர் போல் அவர் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் தன் இலட்சிய வாழ்வின் பயணத்தை இடை நிறுத்தாது ஓய்வு காலத்தில் இன்னும் தீவிரமாக சமூக உயர்விற்காய் மறையும் வரை ஓய்வின்றி உழைத்தார். அவ்வாறு தன் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் சிறப்புற வாழ்ந்து காட்டியவர் ஓய்வு காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து கல்லூரியினதும் கல்விச் சமூகத்தினதும் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டதுடன் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக மாதர் சங்கத்தின் முதல் தலைவியாகப் பொறுப்பேற்று கிராம முன்னேற்றத்திற்கும் பெரும் பங்காற்றி பின் கனடா தேசத்திற்குப் புலம் பெயர்ந்து சென்ற பின்னரும் அங்கிருந்தவாறு தான் பிறந்த மண்ணின் மகிமைக்காய் மாசற வாழ்ந்து மறைந்தார்.

கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்கு வருகை தந்தபோது தனது குறுகிய நேர அட்டவணை மத்தியிலும் கொக்குவில் வளர்மதியின் அழைப்பை ஏற்று விழாவில் கலந்து சிறப்பித்ததுடன் கல்லூரியின் நூற்றாண்டு நினைவாக வளர்மதி வளாகத்தில் ஒரு மரக்கன்றையும் நாட்டிச் சென்றார். அம்மரம் பெரிதாக வளர்ந்து நூற்றாண்டு நினைவுகளுடன் அவரது நினைவாகவும் காட்சி தருகின்றது.

அன்னாரது மறைவையொட்டி வளர்மதியாள் உணர்வுபூர்வமான அஞ்சலி நிகழ்வொன்றை நடாத்தியதுடன் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம், வளர்மதி நிறைவாழ்வகம் என்பவற்றால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் சர்வதேச ஆசிரியர் தின சிறுவர் தின நிகழ்வை "அன்னை சுகிர்தம்" நினைவாக நடாத்துவதாகத் தீர்மானித்து 2011ஆம் ஆண்டிலிருந்து அந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும் அன்னையின் பெயரில் எமது பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியை இலக்காகக் கொண்டு "அன்னை சுகிர்தம் கல்வி வளர்ச்சி நம்பிக்கை நிதியம்" ஒன்றையும் ஆரம்பிப்பதாக நினைவஞ்சலி நிகழ்வில் பிரகடனப்படுத்தி அந்நிதியம் தொடர்பான பணியில் ஈடுபட்டுள்ளோம்.

இச்சந்தர்ப்பத்தில் அன்னையின் பணியினை நினைவுகூர்ந்து அன்னையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னையின் பாதையில் அவர் பணி தொடர "அன்னை சுகிர்தம்" கல்வி வளர்ச்சி நம்பிக்கை நிதியம் ஊடாக வளர்மதியாள் தன் பணி தொடர திடசங்கற்பம் பூணுகின்றேன். *



# வரலாற்றுப் பொக்கிஷம் எங்கள் சுகிர்த ரீச்சர்

**கொ**க்குவில் இந்துக் கல்லூரித் தாய் செய்த தவப்பேறாய் அவதரித்து கல்லூரி வரலாற்றில் கலந்துவிட்டவரே அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள்.

மூன்று வயதுப் பிஞ்சுப் பாலகியாய் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பாதம் பதித்து மிகச் சிறந்த மாணவியாகவும், புகழ்பூத்த ஆசிரியையாகவும், நிர்வாகத்திறமை மிக்க பிரதி அதிபராகவும், கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்க ஸ்தாபகராகி, அதன் தலைவராக முதல் நான்கு ஆண்டுகளும் அதன்பின் இறுதிவரை உபதலைவராகவும் இந்த உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து, கல்லூரிக்காகச் சேவை புரிந்த கொக்குவில் இந்துவின் புதுமைப் பெண்ணே சுகிர்த ரீச்சர். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் மறக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளார்.

“ஆசிரியர்கள் உருவாக்கப்படுவதில்லை அவர்கள் பிறக்கிறார்கள்” என்ற கூற்றுக்கு இணங்க சிறந்த ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும் வாய்க்கப் பெற்றவராக அன்னை அவர்கள் விளங்கினார். எண்ணம், சொல், செயல் மூன்றினாலும் மாறுபாடில்லாத அவரது வாழ்க்கைநெறி மிகச்சிறந்த மானுட வாழ்க்கைப் பாடமாகும்.


கனிவு மிக்க பார்வை, தம்மிடத்தே வரும் எல்லா மாணவர்களையும் தம் பிள்ளைகளாக நோக்கும் உயரிய எண்ணம், மிகச் சிறந்த கல்வியாளர்களை உருவாக்கிவிட வேண்டும் என்னும் துடிப்பு, நற்பண்பும் நல்லொழுக்கமும் உடையவர்களாக அனைவரையும் மிளிரச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் முதலான பண்புகளின் இருப்பிடமாய் ஆசிரியை சுகிர்தலக்ஷ்மி விளங்கினார்.

கல்வியைப் போதிப்பதில் மிகச்சிறந்த ஆசானாக, அரவணைத்து அன்பு காட்டுவதில் தாயாக, ஆலோசனை வழங்கி வழிப்படுத்துவதில் நல்ல தோழியாக, தவறுகளைத் தண்டிப்பதில் சிறந்த தலைவியாக விளங்கி கொக்குவில் இந்துவின் புகழ்பூத்த மாணவச் செல்வங்களை உருவாக்கிய பெருமை அன்னை அவர்களையே சாரும். அவரால் உருவாக்கப்பட்ட பலர் எத்தனை எத்தனையோ அறிவாளர்களாக, கல்விமான்களாக, பட்டதாரிகளாக, சாதனையாளர்களாக, சமூக சேவையாளர்களாக, தொழிலதிபர்களாக, கொக்குவில் இந்துவின் புகழ்பூத்த ஆசிரியர்களாக, அதிபர்களாக விளங்கி கொக்குவில் இந்து அன்னையின் வளர்ச்சிக்காய் உழைத்தபோது பூரித்துப் போன பெருமை அன்னை அவர்களையே சாரும்.

“பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்'' என்னும் கூற்றுக்கிணங்க அன்னை அவர்கள் எத்தனையோ குழந்தைகளின் அறிவுக் கண்களைத் திறந்து வைத்த அறமே அவரது பிள்ளைகள் சிறப்புடன் வாழ வழிவகுத்தது.

அன்னை அவர்கள் 42 ஆண்டுகள் கல்லூரியின் வளர்ச்சிக்காய் பல வழிகளிலும் உழைத்து

**ச.திருக்குமார்**
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி
ஓய்வுநிலை பகுதித் தலைவர்
விக்ரோறியாக் கல்லூரி





ஓய்வுபெற்றார். கனடா சென்ற பின் அங்கிருந்தும் தனது எண்பத்தெட்டு வயதிலும் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்திருக்கின்றார். அவர் கொக்குவில் இந்துவிற்காய் இறைவனால் இப்பூவுலகிற்கு அனுப்பப்பட்டவர். அவரது பிறவிப்பயன் முடிந்த நிலையில் இறைவன் அவரைத் தம்மோடு சேர்த்துக் கொண்டார். ஆனாலும் கொக்குவில் இந்து உள்ளவரை அவரும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார் தெய்வப்புலவர். அன்னையின் அருமை, பெருமை அறிந்தவர்கள் துயருறுகின்றனர். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர் யாவரும் ஏங்கித் தவிக்கின்றோம். எனினும் இது நியதி என எண்ணி எனது சிறிய தாயாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*



# ஓர் இதயம் பேசியது!!!

ஜூலை மாதம் 30ஆம் திகதி அன்றுதான் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடா வருடம் நடத்திவரும் 2011ஆம் ஆண்டிற்கான வெளிக்கள ஒன்றுகூடல். எமது ரீச்சர் வழமை போல் காலை 8:30 மணியளவில் அவரின் அன்புக் கணவருடன் வருகை தந்திருந்தார். பச்சை சேலையுடன் பளிச்சிட்ட திருமுகத்தின் புன்சிரிப்பும் பண்பான பேச்சும் காலை நேரத்தில் அனைவரையும் உற்சாகத்தில் ஆழ்த்தின. அன்று வருகை தந்த நிர்வாக சபை அங்கத்தவர்கள், பழைய மாணவர்கள், மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் எமது ரீச்சருடன் உரையாடி மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் நேரமும் நெருங்கியது. கல்லூரி கீதத்தைப் பாடுவதற்கு பழைய மாணவர்களை அன்புடன் அழைத்தார். வருடா வருடம் பண்ணிசை, வெளிக்கள ஒன்றுகூடலுக்காக தான் வழங்கி வரும் நன்கொடையினை வழங்கி பற்றுச்சீட்டினையும் பெற்றுக் கொண்ட இவர், “இவ்வருடத்திலிருந்து என்னையும் ஆயுட்கால அங்கத்தவர்கள் பட்டியலில் பதிவு செய்து விடுங்கள்” எனக் கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் அவரது அன்பு மகள் திருமதி.சுகன்யா ரகு அவர்களின் தேவாரத்துடன் வைபவம் ஆரம்பமாகி எமது மதிப்பிற்குரிய ரீச்சரும், பழைய மாணவர்களும் சேர்ந்து கல்லூரி கீதத்தை இசைத்தனர். தொடர்ந்து எமது கல்லூரிக் கொடியினை அனைவரின் அன்புக் கட்டளைக்கு அமைய ஏற்றி வைத்தார்.

ஆரம்பித்து வைத்த வைபவம் முடிவிற்கு வருமுன் எமது ரீச்சரின் இதயம் ஏனோ களைத்து விட்டது. அவரும் மரநிழலில் ஒரு நாற்காலியில் அமர்ந்து இளைப்பாறினார். “கோடை கால உச்ச வெப்பத்தினால் சற்று களைப்பாக இருக்கின்றது” என்று கூறி, அனைவரையும் “உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்” என்று அனுப்பி வைத்தார். எமது ரீச்சரோ நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை அவ்விடத்தை விட்டு நகர விரும்பாது தனது இதயத்தோடு போராடினார். அப்பொழுதுதான் அந்த நல்ல இதயம் பேசத் தொடங்கியது.

1927ஆம் ஆண்டிலிருந்து மாணவியாய், ஆசிரியையாய், உப அதிபராய் இருந்து கல்லூரிக்காய் அரும்பாடு பட்டீர். கல்லூரியை விட்டு இளைப்பாறிய பின்னரும் நீர் நாடு கடந்து வந்தாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவியாய், இறுதிவரை உபதலைவியாய் இருந்து உமது கொக்குவில் இந்துக் கல்லூரிக்காய்த் துடித்தீர். நானும் உமக்காய் இந்த நிமிடம்வரை துடிதுடித்தேன். நூற்றாண்டு விழாக்காண இந்த வயதினிலும் ஈழம் செல்ல வேண்டும் எனத் துடித்தீர் அம்மா. உமது பெரும் தவத்தை நான் கலைக்காது உமக்காய் என் துடிப்பை இயக்க வைத்தேன். உமக்கு அது நன்கு தெரிந்திருந்தும் ஜெர்மனி நாட்டிற்குப் பிரதம விருந்தினராக மீண்டும் ஒரு நூற்றாண்டு விழாக்காண அரும்பாடு பட்டீர் தாயே! அப்பொழுதும் உமக்காய் நான் இயங்கிக் கொண்டேன். கொக்குவில் இந்துக் கல்லூரிக்காய் உமது அரும்பணி தொடர

**திருமதி.சாந்திலா ரவிச்சந்திரன்** (Canada)
முன்னாள் மாணவி
கொக்குவில் இந்துக் கல்லூரி



துடிதுடிக்கின்றீர். ஆனால் இன்றோ என்னால் முடியவில்லையே!

இன்றைய நாள் உமது வாழ்க்கை வரலாற்றில் பொன்னான நாளாக எனக்குத் தென்படுகிறது. உமது கொக்குவில் இந்துக் கல்லூரியின் கீதத்தை இசைத்து, கொடியினை ஏற்றி இறுதியாக அன்னையின் உணவையும் அருந்திவிட்டீர். இனியும் என்னால் உமக்காய் துடிக்க முடியவில்லையே என்று கூற என்னை வைத்தியசாலை வரை அழைத்துச் சென்றீர். அங்கும் என்னுடன் போராடி இறுதியாக என்னிடம் சிறிது காலம் Extension கேட்டீர். தந்தேன் தாயே இறுதி வரம் உமக்காய், உமது கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களையும், உறவினர்களையும் மீண்டும் சந்தித்து உரையாடி மகிழ்வதற்கு. இறுதிவரை கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பற்றியே சிந்தித்தீர். உமது பழைய மாணவர்களுடன் பேசி மகிழ்ந்தீர்.

அதன் பின்னர்தான் உங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய ரீச்சர் 'என்னைப்' பற்றிச் சிந்தித்து என்னுடன் பேசத்தொடங்கினார். "என் நல்ல இதயமே! எனக்காக, என் கொக்குவில் இந்துக் கல்லூரிக்காக இவ்வளவு காலமும் நீர் துடித்த துடிப்பு போதுமப்பா! என் கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்றெடுத்த என் பிள்ளைகள் என் வழி நிச்சயம் தொடருவர் எம் கல்லூரிக்காய்" என்று அவர் கூற, நானும் என் மூச்சை நிறுத்தி விட்டேன், உங்கள் ரீச்சரின் வழியில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் தொடர்வர் என்ற நம்பிக்கையில்...

**"என்றும் கொக்குவில் இந்து நமதே"**

*





# கொக்குவில் இந்துக் கல்லூரிக்குக் கிடைத்த

# அதிஷ்டலக்ஷ்மி

மனிதர்கள் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். இறந்தும் இறவாப்புகழ் கொண்டோர் ஒரு சிலரே. அந்த வகையில் எனது சுகிர்த ரீச்சரின் இறவாப்புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கவல்லது.

சுகிர்தம் என்பதன் பொருள் அதிஷ்டம். அந்த வகையில் எங்கள் கல்லூரிக்குக் கிடைத்த அதிஷ்டலக்ஷ்மியே சுகிர்தலக்ஷ்மி. நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, தளராத மனவுறுதி, எளிமைத்தன்மை, கணீரென்ற குரல் என்பன என்னை மிகவும் ஈர்த்தவை. எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றியபோது தமிழ், ஆங்கிலம், எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திரகணிதம், வரலாறு, சமயம் போன்ற பாடங்களைக் கற்பித்து வந்தமையால் பல்துறை ஆற்றல் கைவரப் பெற்றவராக விளங்கினார். கண்டிப்புடன் கூடிய கற்பித்தலை மேற்கொண்டிருந்ததால் பயபக்தியுடன் மாணவர்கள் கற்பது அவரது கற்பித்தற் திறமைக்குச் சான்றாகும். பயிற்சிகள் திருத்தம் மேற்கொள்ளும்போது சிவப்பு மைப் பேனாவினால் போடும் நீண்ட சரி அவரது தாராள மனப்பான்மையை வெளிப்படுத்தியது.

மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்குப் பொறுப்பாக இருந்து அவர்களை நல்வழிப்படுத்தினார். ஒழுக்கத்தைப் பேணுவதில் சுகிர்த ரீச்சருக்கு நிகர் யாருமே இல்லையென்றே கூறலாம். அத்துடன் செல்லையா இல்லத்தின் பொறுப்பாசிரியராக இருந்து அவ்வில்லத்தைச் சிறந்த முறையில் வழிநடத்தினார். அணிநடைக்குச் செல்லையா இல்லமே முத்திரை பதித்தது.

2010ஆம் ஆண்டு எமது கல்லூரி நூற்றாண்டு விழாக்கோலம் பூண்டமை பற்றி யாவரும் அறிவர். இவ்விழாவிற்கான மலரை எழுதுவதற்குப் பல தகவல்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டபோது பல சந்தேகங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. நான் அறிந்த வரையில் எனது ஆசிரியை மாணவியாக, ஆசிரியையாக, பிரதி அதிபராக அரை நூற்றாண்டிற்கு மேலாக இருந்தபடியால் அவரே எமது கல்லூரி அன்னையின் மூத்த மகள் என நினைத்து சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து கொண்டேன்.

ஜூலை 13, 2010 இளங்காலைப்பொழுது. மாணவர்கள் யாவரும் நாகலிங்கம் மைதானத்தில் காலைப் பிரார்த்தனைக்காகக் கூடி நிற்கின்றார்கள். தென்றலோடு தென்றலாகக் கலந்த கணீரென்ற ஒலியில் தன்னை அறிமுகப்படுத்திய குரல் இன்றும் அசரீரியாக ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. அக்காட்சியை என்றும் மறக்க முடியுமா?

கல்லூரி நூற்றாண்டு விழா தொடர்ந்து மூன்று நாட்களாகக் காலை, மாலை என ஆறு நிகழ்வுகளுடன் நடைபெற்றபோது சிவனும் சக்தியும் போல தமது துணைவருடன் விழாவை ஆரம்பம் முதல் இறுதிவரை ஆனந்தமாகக் கண்டுகளித்ததுடன் பார்வையாளர்கள் யாவரும் தத்தம் வீடுகளுக்குச் சென்ற பின்னர்தான் எனது ஆசிரியையும் வீடு

**திருமதி.சுசீலா திருச்செல்வம்**
முன்னாள் மாணவி
தற்போதைய ஆசிரியை
பகுதித்தலைவர்
கொக்குவில் இந்துக் கல்லூரி






சென்றதை நினைத்துப் பார்க்கின்றேன். தான் முன்னர் கல்லூரி நிர்வாகத்தை மேற்கொண்ட முறையைப் பின்பற்றினாரோ அல்லது மீண்டும் இம்மண்ணில் கால் பதிக்கமாட்டேன் என்றுதான் நினைத்தாரோ? என் சொல்வேன் இறைவன் முடிவை. ஆனால் தான் மீண்டும் கல்லூரிக்கு வருவதாகக் கூறிய வார்த்தையை என்னால் மறக்க முடியவில்லை.

**"பெருமைக்குரிய செயலை ஒருவன் செய்கின்றதால்**
**அவன் இறந்த பிறகும் வாழ்வதற்குத் தயாராகின்றான்"**

என்ற கூற்று இதனை மெய்ப்பிக்கின்றது.

சிறுபிராயத்தில் இருந்து மரணிக்கும்வரை எமது கல்லூரியுடன் இரண்டறக் கலந்தவர். மூத்த மாணவியாகவும், மூத்த ஆசிரியையாகவும், முதலாவது பெண் பிரதி அதிபராகவும், கனடா பழைய மாணவர் சங்கத் தலைவியாகவும் அவர் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைவில் நிலைத்து நிற்கக் கூடியவை. அன்னாரது பூதவுடல் மறைந்தாலும் அவரது இறவாப்புகழ் கல்லூரிசார் அனைத்து உள்ளங்களிலும் அழியா ஓவியமாய் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

*



# என் நினைவில் இருந்து சில துளிகள்...

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு" என்பது தமிழ் மறை.

சுகிர்த ரீச்சர் என்று நாம் செல்லமாய் அழைக்கும் எம்மிடையே வாழ்ந்த ஆசான், பிரதி அதிபர், மொத்தத்தில் உறங்காத ஒரு நல்ல உள்ளம், இன்று எம்மிடையே இல்லை. பருத்திப் புடவை அணிந்து நிமிர்ந்து கம்பீரமாய் எப்போதும் இருக்கும் எங்கள் அபிமான ஆசிரியையை 2010ஆம் ஆண்டில் சுமார் 25 வருடங்களுக்குப் பின்னர் கண்டவுடன் நான் பிரமித்து விட்டேன். அதே ஒளிவீசும் கண்கள், பிரகாசமான முகம், கம்பீரமான நடை, இனிமையான குரல் சகலதும் மாறாத நிலையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்காக வருகை தந்த எங்கள் ஆசிரியை சுகிர்த ரீச்சரைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

யாருடைய துணையும் இன்றி கல்லூரியின் சங்கீத அறையைத் தேடிவந்து என்னைச் சந்தித்து உரையாடியது என்னை மேலும் வியப்பிற்குள்ளாக்கியது. அவரது பழைய கால ஞாபகசக்தியை எண்ணி வியப்புற்றேன். எனது அண்ணர் ஸ்ரீகிருஸ்ணமூர்த்தியைப் (கண்ணன்) பற்றிய விபரங்கள், எனது அக்கா மங்கையற்கரசி பற்றிய விபரங்கள் மற்றும் எமது குடும்பநலன்கள் இப்படிப் பல விடயங்களை ஞாபகமாக வைத்து மிகத் தெளிவான ஞாபகத்துடன் பழையகால வசந்தங்களை என்னுடன் பகிர்ந்து கொண்ட அந்த நிமிடங்கள் இன்றும் என் நினைவை விட்டு அகலவில்லை.

நான் விஞ்ஞான வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்த போதிலும் சுகிர்த ரீச்சரிடம் சமயபாடம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமையை நினைத்து மகிழ்வடைகின்றேன். அவர் காலத்தில் கல்லூரியில் படித்தவர்கள், அவரிடம் கல்வி கற்கும் பேறுபெற்றவர்கள், அவரை என்றும் மறக்கமாட்டார்கள். கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். ஓர் ஆசிரியர் ஒரு பாடத்தை மட்டும்தான் கற்பிப்பார் என்பதற்கு எதிர்மாறாக ஆங்கிலம், எண்கணிதம், தமிழ், சமயம் எனப் பலதுறைப் பாடங்களையும் கற்பிப்பதில் தேர்ச்சியுடையவர்.

எமது கல்லூரிப் பேச்சுப் போட்டிகளிலும் மாணவர்களை ஊக்குவித்துப் பங்குபற்ற வைத்தார். நவராத்திரி தினத்தையொட்டி ஆண்டுதோறும் நடாத்தப்படும் Dr. இராஜச்சந்திரன் பேச்சுப் போட்டியிலும் மாணவர்கள் கலந்துகொண்டார்கள். இப்பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, சிரேஷ்ட பிரிவு என மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்டது. குறிப்பாக, சிரேஷ்ட பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவருக்கு Dr.இராஜச்சந்திரன் அவர்களால் வழங்கப்பட்ட தங்கப் பதக்கம் கிடைக்கப் பெற்றது. இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களும், ஏனைய பிரிவுகளில் பங்கேற்று முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களும் பல பரிசுகள் பெற்று கௌரவிக்கப்பட்டார்கள். இவர்


**திருமதி. கமலநாயகி தேவராஜா**

முன்னாள் மாணவி
தற்போதைய இசை ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி




இப்போட்டியையும் பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சுகிர்த ரீச்சர் இயல்பாகவே இசைஞானம் உடையவராகத் திகழ்ந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனது கல்வியைக் கற்று, இக் கல்லூரியிலேயே ஆசிரியப் பணியை ஆற்றி, உபஅதிபராக ஓய்வுபெற்ற பெருமையும் இவரையே சாரும். ஒழுக்கமே தனது முதற்கண்ணாகக் கொண்டு, மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணும் வகையில் மிகவும் கண்டிப்புடன் செயலாற்றியவர்.

மேலும் இவருக்கு திரு.A.R.இராஜநாயகம், திரு.A.பஞ்சலிங்கம், திரு.R.மகேந்திரன், திரு.M.சின்னத்தம்பி, திரு.N.சிவராசா, திரு.M.கந்தசாமி, திரு.K.சந்திரமௌலீசன், திரு.K.கதிர்காமத்தம்பி, திரு.V.கணேசலிங்கம், திரு.C.சிவசோதி, திருமதி.G.பஞ்சலிங்கம், திருமதி.M.பரமசாமி, திருமதி.B.கந்தப்பிள்ளை, திருமதி.S.ஏகாம்பரம், திருமதி.L.அரசன், திருமதி.G.மணிவாசகம், செல்வி.K.மயில்வாகனம், திருமதி.S.உமாமகேஸ்வரன், திருமதி.சரஸ்வதி பாக்கியராசா, திருமதி.R.சதாசிவம், திருமதி. நாகேஸ்வரி துரைராஜசிங்கம், திருமதி.S. இராமநாதன் போன்ற ஆசிரியர் குழாமுடன் பணியாற்றிய பெருமையுடன் சிறந்த ஆசிரியை என்ற பெருமையும் அன்று மாணவர்கள் மத்தியில் இருந்தது. பல அதிபர்களுடனும் பணியாற்றினார் என்ற பெருமையும் இவருக்குண்டு.

இக்கல்லூரியிலிருந்து திருக்கேதீஸ்வர திருவிழாவிற்கு சிறுவயதில் யாத்திரை செய்தபோது ஒரு நினைவு... திரு.C.K.கந்தசுவாமி அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய இறுதிக்காலப் பகுதியில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் திருப்பணியில் சுகிர்த ரீச்சர் தன்னையும் ஈடுபடுத்தி, மாணவர்களையும், கல்லூரியை அண்டிய கிராம மக்களையும் சேர்த்து திருக்கேதீஸ்வர யாத்திரை செல்ல முன்னின்று உழைத்தார். ஆலயத் திருவிழாவில் அன்னதானப் பணியிலும் ஈடுபட்டார். தேவாரப் பண்கள் பாடுவதிலும் ஈடுபட்டார். பக்திப் பாடல்கள், கீர்த்தனைகள் போன்றவற்றைப் பாடி எம்மையும் அதில் ஈடுபடச் செய்தார். நன்றாக இசையுடன் பக்தியுடன் இனிமையான குரலில் பாடுவதைக் கேட்டு நாம் உளம் மகிழ்ந்தோம். அவர் ஒரு இசைப் பிரியை எனக் கூறினாலும் அது மிகையாகாது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின்போது கல்லூரி கீதம் இசைக்கப்பட்ட நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் கீதம் துண்டிக்கப்பட சுகிர்த ரீச்சரும் அவருடன் அமர்ந்திருந்தவர்களும் சேர்ந்து விடாமுயற்சியுடன் கீதத்தைப் பாடி முடித்தமை அவரின் பாடசாலைப் பற்றை மிகைப்படுத்தியது. எம்மால் அவரின் செயற்பாட்டை எளிதில் மறந்துவிட முடியாது.



சொல்லப்போனால் மாணவர்களுக்கு ஆசிரியராக மட்டுமல்லாமல் அவர்கள் மீது அன்பையும், பாசத்தையும் காட்டியவர். கண்டிப்புடன் அன்பையும் சேர்த்து எம்மை எல்லாம் நல்வழியில் கொண்டுசென்ற எமது சுகிர்த ரீச்சரின் மறைவு தாங்கொணாத் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரிடம் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கையில் குடிகொண்டுள்ள கல்லூரி வாழ்வு எனும் நினைவலைகளில் சுகிர்த ரீச்சரின் நினைவுகளும் என்றும் இருக்கும். அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

“வானில் மிளிரும் ஆதவன் போல்
வாரி வழங்கும் கொண்டல் போல்
ஆற்றல் மிக்க உம் ஆசிரிய சேவை
போற்ற வேண்டும் நிதமும் நாமே
கற்றல், கற்பித்தல், கலந்துரையாடல்
இடர்களைந்து இன்னல் போக்கி
அறியாமை நீக்கிப் பலதுறை பரப்பிடும்
அறிவின் சிகரமாய் அன்பின் உருவமாய்
எளிமையாய் வாழ்ந்த என்னுயிர் ஆசிரியை...!

ஒளிமின் நிலவென
தேனிற்கினிய மொழி பேசி
கனிவான பார்வையோடு
கருத்தினில் சிந்தனையாய்
பொறுமையின் இருப்பிடமாய்
கருமமே கண்ணாய்
கருதி உழைத்து அருங்கலை பரப்பிய உம்
ஆசிரிய, உப அதிபர் சேவையை
அனுதினம் போற்றி வாழ்வோம் நாமே...!”

*



# A Rare Teaching Star



Mrs.Sukirthalakshmy Supramaniam known affectionately among students as Sukirtha teacher is not with us anymore. There were so many teachers who have come and gone but she would be remembered as the one who had made a significant impact in our lives.

I came to know her around 1968 when I joined the school in grade 9, then known as prep. S.S.C. She taught English to us. During that time the general English skills among our students were very low, and I was no different. Reading a simple paragraph was like doing a Himalayan task. Our teacher, knowing our poor standard, took serious interest to teach fundamentals to every student. Slowly, with her untiring efforts and dedication, she made a huge difference in many students' abilities, and I was one of them. The most crucial lesson she taught us was to have confidence in our own abilities in the English language. Today, many of us who had left our shores and came to work with English speaking people often remember her with gratitude and wonder where we would be if we were not taught by her.

My connection with her did not stop there. She came to know us when few of the old students in Melbourne, Victoria decided to start the Old Students' Association of our school for the benefit of all the old students living in Melbourne. She contacted one of our members and, not only congratulated him for organizing an association, but also sent money to make a banner for our association! Such was her heart! When I became the president of the association she called me and congratulated me enthusiastically. For her it was a step in the right direction to bring the Kokuvil Hindu Community together. We also became regular beneficiaries of the viewing materials (magazines and DVDs) regarding events held by the Kokuvil Hindu College Old Students' Association in Canada.

**R.Siriratnam (Victoria, Australia)**
Former student
Kokuvil Hindu College





# My Teacher, Role Model and Friend



**A** vision in a neatly pressed cotton saree, her hair pulled back in a tight but stylish bun – this is one of my most vivid memories of our beloved teacher. Sukirtha teacher always had an air of confidence about her. She would walk with her head held high, accompanied by Sukanya, Chanthrika and Suthaker. She would captivate any audience by her mere presence. At such times I used to look up to her in awe and think if I were to become a teacher, I should be like her. I knew her first as the "discipline teacher". Like most of the students at Kokuvil Hindu College (K.H.C.), I worked hard not to get disciplined. However, later on, when I became a prefect, I got to know the other side of her. While she was a strict disciplinarian, she was also gentle and kind hearted. She never failed to reward and appreciate good behaviour, or excellence in studies. When I got accepted into medical school, she shared her wisdom, and advised me on what to look out for and to be cautious while I lived away from home.

I later met her in the early eighties when I attended K.H.C. as chief guest for the GCE (Advanced Level) annual lunch. My husband could not make it that time because he was abroad. I was thrilled when she treated me as a mature adult, and not as one of her pupils. She also shared tips on how to raise my son, since I was a new mom at that time. During the following years and especially in 1991 /1992 when my husband was the president of Kokuvil Hindu College Old Students' Association, I met teacher on many occasions. During these times she transformed from being a teacher to being more of a second mother and friend to me.

Our relationship continued to grow in Canada. She showed her mental strength even during her last days. K.H.C. is truly lucky to have had a teacher like her who dedicated her whole life to the school she loved. Even during her last days, she was talking about how much still needed to be done for the school.

Teacher, I am proud to say that I was one of your pupils, and I am blessed to have been touched by some of your wisdom. Thank you for being my teacher, role model and friend.

**Dr.Srirani Rajeswaran (Canada)**
Former student
Kokuvil Hindu College





# CHERISHED *Memories*



**M**y very first memory of talking to Sukirtha teacher was in 1951 when I joined Kokuvil Hindu College in the 6th Standard where she was teaching. I never had the privilege to study under her tutelage but she was a relation of my father at that time. Although, there was very little in common for us to have a dialogue, Sukirtha teacher would talk to me occasionally about my studies in general but most of the time as a student I would just get a subtle acknowledgement, until I became much older.

Our mutual respect for each other grew stronger and recently when she visited London we had the opportunity to discuss in depth about our respective Old Students' Associations and eventually the relationship between both our families. To my surprise, she knew more about me and my family members, whereas I knew only a little about her but nothing about her family.


I enquired more about my Kokuvil Hindu College days between 1951 and 1958 and she was able to fill in the college affairs as well as the not so palatable, which I was not privileged to know at that time. We talked about our past teachers and in particular the then Principal, Mr.Handy Perinbanayagam and the Vice–Principal at that time Mr.C.K.Kanthaswamy who took over the helm as Principal when Handy master retired. We reminisced about their commitments and their foresight in setting standards for the college. I was able to visualize the guru shishia relationship between the above two principals and Sukirtha teacher.

In my opinion, Sukirtha teacher's commitment towards the welfare of the college was in her last breath up to her passing.

When my wife and I visited her in Canada in 2005 we spent the whole afternoon discussing more about the college matters and less about our relatives. Her memory of events and the details and connections of the family was astonishing and she was a living encyclopedia. We had a long and enjoyable conversation with her husband Mr.Supramaniam for the first time. I shall cherish these memories forever. Sukirtha teacher had earned a prominent and a unique place in the history of Kokuvil Hindu College and I doubt that few could ever overtake her record. This success in life for her was also enhanced by her husband's support over many decades. Sukirtha teacher's memory deserves a celebration and we shall celebrate.

May Her Soul Rest in Peace

**S.Kanagasundaram**
**(London, England)**
Former student
Kokuvil Hindu College





# EXCERPTS FROM WEBSITE

## Kokuvil Hindu College Old Students' Association (UK)

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை இது பாரதியார் புதுமைப் பெண்ணைப் பற்றி விபரிக்கையில் முதலில் கூறியது. சுகிர்த ரீச்சரைத் தெரிந்தவர்களுக்குப் பாரதியின் வரியைக் கேட்டவுடன் ஞாபகத்திற்கு வரவேண்டியவர் சுகிர்த ரீச்சர் என்று எல்லோராலும் அழைக்கப்படும் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அம்மையார். எமது கல்லூரியில் மிக நீண்ட காலம் 42 வருடங்கள் ஆசிரியையாக இருந்து சாதனை படைத்தகோடு மட்டுமல்லாமல், முதல் உப அதிபராக இருந்த பெண்மணியாவார். 2005ஆம் ஆண்டு பிரித்தானியாவிற்கு வந்தபோது அவரது ஆழ்ந்த அறிவு, பரந்த ஞானம், தெளிந்த உரையாடல், அற்புதமான ஞாபகசக்தி என்பன எம்மையெல்லாம் வியக்க வைத்தன.

**– கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)**

Miss.Sukirthalakshmy Chelliah's (now Mrs.S.Supramaniam) ties with Kokuvil Hindu was 52 years long a record few can excel. 10 years as a student, 39 years as a teacher and 3 years as Deputy Principal. She rose to the enviable position of Deputy Principal when she retired in September 1983. She was an excellent teacher in Latin, Tamil and English. Her commitment to the well – being of her students earned praise from parents. She identified with the life of the school, cheerfully undertaking extra responsibilities. She along with her five year old niece played a significant role in the school concert of 1947. The performance of that little child was marvelous. The little child's abinayam was graceful and enticing.

*- Mr.S.Ratnapragasam wrote about Mrs.Sukirthalakshmy Supramaniam in his book "(Hi)story of Kokuvil Hindu College"*

---

*பிரபல எழுத்தாளர் திரு.அ.முத்துலிங்கம் தனது பாடசாலைப் பருவத்தை இப்படி நினைவு கூருகிறார்...*

சுகிர்தம் ரீச்சர்தான் எங்கள் வகுப்பு ஆசிரியை. எங்களுக்கு சரித்திர பாடம் எடுத்தவர். எங்கள் வகுப்பு தரையிலிருந்து உயரத்தில் இருந்தது. படிகள் இல்லை. சுகிர்தம் ரீச்சர் ஒரு மான்குட்டி போலத் துள்ளிக்கொண்டு பாய்ந்து ஏறுவார் இறங்குவார். அவருக்கு அரைத்தாவணிக்குத் தகுதியான முகம். ஆனாலும் பூப்போடாத, கோடு போடாத பிளேன் பருத்திச் சேலையை உடுத்தி வருவார். அது அவர் உடம்பைச் சுற்றி இருக்க, ஒவ்வொரு மடிப்பும் அது அதற்கு விதித்த இடத்தில் அசையாமல் பள்ளி விடுமட்டும் காத்திருக்கும். இது எப்படி என்று எங்களுக்கு விநோதமாகப்படும். எங்களில் பலர் அவர் சாரியை உடம்பில் உடுத்திவிட்டு இஸ்திரி பண்ணுகிறார் என்பதைப் பலமாக நம்பினோம். இவர் வகுப்பில் தண்டிப்பதே இல்லை. குளப்படி மிஞ்சினால் அடிமட்டத்தை எடுத்து கூர்ப்பக்கத்தால் சிறு தட்டு தட்டுவார். அப்படித் தட்டிவிட்டு அவர் முகத்தில் தோன்றும் வேதனையைப் பார்த்தால் அவர் மனதை இப்படிக் காயப்படுத்தி விட்டோமே என்ற வருத்தம்தான் எங்களுக்கு ஏற்படும்.



# மதிப்பிற்கும் பாசத்திற்குமுரிய காலஞ்சென்ற ஆசிரியை திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியத்திற்கு ஒரு மாணவனின் சமர்ப்பணம்



இந்த மடலை எழுதும்போது எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் மனதில் ஒரு தவிப்பு. தனது வாழ்நாள் முழுவதையுமே நமது கல்லூரிக்காக அர்ப்பணித்த ஒரு பெண்மணி அவர். இந்தப் பெருந்தகையைப் பற்றி ஒரு சிலவற்றை மாத்திரம் இங்கு எழுதுகின்றேன்.

நான் 9ஆவது, 10ஆவது வகுப்பில் படிக்கும் போது எனது வகுப்பாசிரியையாகக் கடமையாற்றிவர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள்.

மாணவர்களினது கல்விக்கும், அவர்களுடைய ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களின் வருங்காலம் நன்றாக அமைய முழுமுயற்சி செய்தவர். நான் ஒரு நல்ல மனிதனாகத் திகழ்வதற்கு இவரின் பங்கு முக்கியமானதாகும். இவரால் மேம்பட்ட பல மாணவ மாணவிகள் இன்று உலகம் முழுவதும் உள்ளார்கள்.

பல தசாப்தங்களாக எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக அவரின் இறுதிநாட்கள் வரை அயராது உழைத்த பெருந்தகை இவர் என்று கூறினால் மிகையாகாது.

2005இல் இவர் கனடாவில் இருந்து தனது கணவருடன் இலண்டன் வந்தார். அவர்கள் இருவருக்கும், இளைப்பாறிய அதிபர் திரு.கமலநாதன் மற்றும் தொழிலதிபர் திரு.சுப்பிரமணியம் ஆகியோருக்கும் எமது வீட்டில் ஒரு விருந்துபசாரத்தை வைத்துக் கௌரவித்தோம். மேலும் எமது சங்கத்தின் ஆண்டு விழாவாகிய ''வசந்தம் 2005'' இற்கும் அழைத்து மேலும் கௌரவப்படுத்தினோம்.

தன்னலமற்ற சேவையைக் கல்லூரிக்கு ஆற்றிய காலஞ்சென்ற திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியத்தின் இழப்பு எமக்கும் எமது கல்லூரிக்கும் ஏன் எமது கிராமமாகிய கொக்குவிலுக்கும் மிகப்பெரிய இழப்பாகவே நான் கருதுகின்றேன். இவருடைய மகத்தான சேவைக்கு நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாகவும், கடமைப்பட்டவர்களாகவும் இருப்போம்.



**சி.சிறிரஞ்சன்**
(London, England)
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி

**Mrs.Sukirthalakshmy Supramaniam being honoured at the cultural event “Vasantham 2005” organised by K.H.C. O.S.A. (UK)**





















# நான் அறிந்த ரீச்சர்!

எம் கையில் இல்லை பிறப்பு இறப்பு! எதைச் சாதித்தோம் என்பது மட்டும்தான் எமது கையில்.

இப்பூமிப்பந்தில் எம் பிறப்பிற்கு நாம் பொறுப்பல்ல. அது தெரியாத, புரியாத நிகழ்வு. அதன் பின்னரான தொடரான நிகழ்வுகளுக்கு மாதா, பிதா, ஆசிரியர்கள், சகோதரர்கள், பாட்டன், பாட்டி, பூட்டன், பூட்டி, உற்றார், உறவினர் என்ற பெரிய குழாமே பொறுப்பேற்க வேண்டும். முக்கியமாக மாதா, பிதா, ஆசிரியர்களைக் கூறலாம். கல்வி அறிவானது ஒருவரின் வாழ்வின் ஆரம்ப காலத்தில் விதைக்கப்படும் விதை. தொடர்ந்து வருபவர்களில் ஆசிரியர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். அந்த வகையினரிலே எமது சுகிர்த ரீச்சரும் அடங்குகின்றார்.

ஆரம்ப பாடசாலை தொடங்கி, பல்கலைக்கழகம் என்ற படிப்பகம்வரை வாழ்வில் பல எண்ணிக்கையான ஆசிரியர்களைச் சந்திக்கின்றோம். இருந்தும் சிலரே எம் மனதை விட்டகலாமல் இருப்பர். அது அவர்கள் அந்தந்தக் காலத்தில் எமக்கு, எமது கிராமத்திற்கு, எமது பாடசாலைக்கு, எமது நாட்டிற்கு, இந்த உலகத்திற்குச் செய்த சேவைகளிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் சுகிர்த ரீச்சரும் அடங்குகின்றார்.

இதுவரை பலரிடம் நான் படித்திருந்தாலும், இன்றும் படித்துக் கொண்டிருந்தாலும், ஆரம்ப காலத்தில் என்னுடைய தமிழ்ப் பெயரை ஆங்கிலத்தில் எழுதத் தொடக்கி வைத்த அன்புமலர் ரீச்சர், பல்கலைக்கழகம் செல்ல அரச மானியத்திற்கு உத்தரவாத ஒப்பமிட்ட பத்மாவதி ரீச்சர், பிரயோக கணிதம் படிப்பித்த சீதா ரீச்சர், கணிதம் கற்றுத்தந்த சுந்தரலிங்கம் மாஸ்டர், வயது முதிர்ந்த காலத்திலும்




● ராஜா மகேந்திரன்
**(Canada)**
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி







இளையவர்களுடன் எவ்வாறு சேர்ந்து பழகலாம், அந்த வகையில் எவ்வாறு மக்களை அரவணைத்து அலுவல்களையும் நடத்தலாம், அவர்களுடன் எவ்வாறு நட்பாக இருக்கலாம் என்பதனைப் புரியவைத்த சுகிர்த ரீச்சர் ஆகியோரை வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாது.

நேற்று மாதிரி உள்ளது. பற்பல ஆண்டுகளுக்கு முன்பாக காங்கேசன்துறை வீதியில் பாடசாலைக்கு நாம் செல்லும்போது ரீச்சரைக் கண்டு அன்றைய பழைய மாணவர்கள், நடப்பு மாணவர்கள் யாவரும் வீதியில் ஒருவகை பயம் கலந்த மரியாதையுடன் வருவதனை இன்றும் மறக்க முடியாமல் உள்ளது.

இன்றைய வேகமான உலகில் 35 வருடங்களாக ஒரே இடத்தில் தொழில் புரிவதே குதிரைக் கொம்பாகக் காணப்படுகிறது. ரீச்சர் 40 வருடங்களுக்கு மேலாக (1942-1983) எமது பாடசாலையின் வளர்ச்சிக்குத் தன்னாலான முழுச்சேவையைப் புரிந்துள்ளார். இது போற்றப்படவேண்டிய விடயமாகும்.

கனடாவில் கொக்குவில் விளையாட்டுக் கழகம் 80களின் இறுதியிலிருந்து மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 1993இல் கனடாவிற்குக் குடிபெயர்ந்த ரீச்சரிற்கு, கனடாவில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இல்லை என்பது கவலையைக் கொடுத்தது. அதன் வெளிப்பாடாக 1994 ஏப்ரல் 23ஆம் திகதி கனடாவில் அவரின் தலைமையில் பழைய மாணவர் சங்கம் உருவாகியது. அந்த நிர்வாக சபையில் நானும் ஒரு அங்கத்தவராக இருந்ததால் அவருடைய செயற்பாடுகளை அண்மையில் இருந்து பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அச்சமயம் அவருடைய வயது 71ஆக இருந்த போதிலும் அவரின் ஞாபக சக்தி எம்மை எல்லாம் பிரமிக்க வைக்கும். அன்று தொடக்கம் அவர் சம்பந்தப்பட்ட முக்கியமான நிகழ்வுகளில் நானும் எனது குடும்பமும் ஓர் அங்கமாகி விட்டோம். அவரது 75, 80, 85ஆவது பிறந்த தின நிகழ்வுகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. 90, 95, 100ஐ எதிர்பார்த்தோம். காலன் எங்களைப் பார்த்துச் சிரித்திருப்பானோ?

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2011இன் கோடைகால வெளிக்கள நிகழ்வே எமது ரீச்சர் கலந்து கொண்ட இறுதி நிகழ்வாக அமைந்தது. எமது சங்கத்திற்கும் மறக்க முடியாத வரலாறாகப் படிந்து போயிற்று.

உலகில் கோடானுகோடி மக்கள் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். இவர்களில் எத்தனைபேர் மக்கள் மனதில் இடம்பெறுகிறார்கள்? பிறக்கலாம், இறக்கலாம். இறந்த பின்பும் மக்கள் மனதில் நிலைத்திருக்க வேண்டும். அந்த வரிசையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் ரீச்சரும் சேர்ந்துள்ளார். பாடசாலை இருக்கும்வரை ரீச்சரும் வாழ்வார். இது திண்ணம்.

*



# கொக்குவில் அன்னை பெற்றெடுத்த தங்கமகள்

**கொ**க்குவில் அன்னை பெற்றெடுத்த புதல்வர்களில் நூற்றாண்டு விழா கண்டவர்களில் முதன்மையானவர் சுகிர்தலக்ஷ்மி அம்மா ஆவார். இவர் தனது மூன்றாவது வயதில் கொக்குவில் இந்துவினுள் காலடி எடுத்து வைத்து 60 வயதுவரை அன்னையின் அரவணைப்பில் வளர்ந்தவர். பாடசாலையின் நூற்றாண்டு விழாவை ரசிக்கத் தனது 87ஆவது வயதிலும் தளராத மனவுறுதியுடன் கனடாவிலிருந்து வருகை தந்தார். இவரது பாடசாலைப் பற்றை எவ்வாறு வார்த்தைகளால் வர்ணிப்பது?

நூற்றாண்டு விழாவிற்கு முன்னதாக ஒருநாள் பாடசாலைக்கு காலைப் பிரார்த்தனையின்போது சமூகமளித்து மாணவர்களுக்கு ஆற்றிய உரையில், மாணவர்களின் கைகளிலேயே பாடசாலை வளர்ச்சி தங்கியுள்ளதெனவும், பெண்பிள்ளைகள் ஒழுக்கமாகவும் விழிப்புணர்வுடனும் நடந்துகொள்ள வேண்டுமெனவும், இந்த ஏமாற்றம் மிகுந்த சமூகத்திலே மாணவர்கள் அனைத்து விடயங்களிலும் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கினார். அத்துடன் அக்காலத்தில் பாடசாலையின் நிலையையும் நூற்றாண்டு விழாவின்போதிருந்த பாடசாலையின் நிலையையும் ஒப்பிட்டுக்கூறி பாடசாலையைப் பார்க்கையில் தான் ஆனந்தப் பரவசமடைவதாகக் கூறினார்.

நூற்றாண்டு விழா நிகழ்வுகளில் ஒருநாள் நிகழ்வுக்குத் தலைமை தாங்கி அந்நிகழ்வைத் திறம்பட நடாத்தி முடித்தார். அதுமட்டுமன்றி பாடசாலையில் கல்வி வளர்ச்சி, செயற்பாடு என்பவற்றில் மாணவர்கள் கலந்துகொள்ள வேண்டிய விதம் என்பன பற்றியும் ஆசிரியர் மாணவர்களோடு பழகவேண்டிய விதம் என்பன பற்றியும் அவ்விழாவில் எடுத்துரைத்தார். அத்தோடு மாணவர்களுக்கு எவ்வாறான உதவிகளையும் வழங்கத் தான் தயாராகவுள்ளதாகவும் கூறினார். இவ்வாறானதொரு பழைய மாணவியைப் பெற்றது கொக்குவில் இந்து செய்த தவப்பயனாகும்.

மேலும் இவர் பல வருடங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் சில வருடங்கள் பிரதி அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். நான் இப்பாடசாலைக்கு வந்த காலத்தில் இவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவரை 2010ஆம் ஆண்டு எமது பாடசாலை நூற்றாண்டு விழாவில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அதனை எனது பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

சுகிர்தலக்ஷ்மி அம்மா அவர்கள் பாடசாலைக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். இவரது வழிகாட்டலில் இவரது பிள்ளைகளும் பாடசாலை மாணவர்களின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் இவரது பிள்ளைகளும் எமது பாடசாலையில் கல்வி கற்று இன்று வெளிநாடுகளில் உயர்பதவிகள் வகிப்பதும் பாடசாலையை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமுமாகும். அன்னாரது மகன் கலாநிதி சுதாகர், நகுலேஸ்வரி சுதாகர் தம்பதியினர் (Canada)

**செல்வி.இ.திவ்யா**
மாணவி
(13E2 கலைப்பிரிவு)
கொக்குவில் இந்துக் கல்லூரி





திரு.சுப்பிரமணியம், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் ஆகியோரைக் கௌரவிக்குமுகமாக தரம் 12 இற்கான பரிசில்களை வருடா வருடம் பரிசளிப்பு விழாவின்போது வழங்கி வருகின்றனர். அதுமட்டுமன்றி அவரது மகளான சந்திரிகாவும் கணவர் ஆனந்தா நாகேந்திரனும் (U.S.A.) திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் தரம் 9 இற்கான பரிசில்களை வழங்கி வருகின்றனர். அத்துடன் மற்றுமொரு மகளான சுகேசினி, மகாதேவா சிவானந்தன் தம்பதியினர் (Australia) திரு.சுப்பிரமணியம் அவர்களைக் கௌரவிக்குமுகமாக தரம் 8 இற்கான பரிசில்களை பரிசளிப்பு விழாவின்போது வழங்கி வருகின்றனர்.

அன்னையவர்களின் மூத்த மகளான திருமதி.சுகன்யா தேவராஜாவும், மருமகனான திரு.ரகு தேவராஜாவும் (Canada) பாடசாலையின் விளையாட்டுத் துறையில் மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. துடுப்பாட்டத் துறையிலும் சதுரங்க விளையாட்டிலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வருடாவருடம் பணப்பரிசில்களை வழங்கி வருகின்றனர். அத்துடன் சங்கீதத்துறையை வளர்க்கவும், மாணவிகளின் உள்ளக விளையாட்டுத்துறையை மேம்படுத்தவும் சுகன்யா, ரகு தம்பதியினர் மாணவிகளுக்கான பெறுமதிமிக்க சங்கீத போதனா அறையையும், உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றையும் அமைத்து அதற்கான உபகரணங்களையும் வழங்கியுள்ளனர். அத்துடன் இவர்கள் அமரர் திரு.N.P. தேவராஜா ஞாபகார்த்தமாக தரம் 7 மாணவர்களுக்கான பரிசில்களையும் பரிசளிப்பு விழாவின்போது வழங்கி வருகின்றனர். இவ்வாறு பாடசாலைக்கு அன்னாரின் பிள்ளைகளின் பங்களிப்பு அளப்பரியது.

எமது பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த சுகிர்தலக்ஷ்மி அன்னை அவர்கள் 2011ஆம் ஆண்டு இப்பூவுலகை விட்டு நீங்கிவிட்டார். ஆனால் எமது பாடசாலையின் நூற்றாண்டு மகள் சுகிர்தலக்ஷ்மி அம்மா என்றென்றும் எமது பாடசாலையைச் சுற்றியே வலம் வருவார்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எனும் பொய்யாமொழிப் புலவன் கூற்றுக்கிணங்க இவ்வுலகில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதமடைந்த அன்னையின் புகழ் கொக்குவில் இந்து என்ற அன்னை உள்ளவரை அழியாது. இறைவன் அவரது குடும்பத்தையும் உறவுகளையும் சுகமாக வைத்திருப்பாராக.

*



# எனது கல்விப் பாதையில்
# சுகிர்த ரீச்சர்



**தி**ருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் (சுகிர்த ரீச்சர்) கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியின் முக்கிய காலகட்டத்தில் ஆசிரியராகவும், உபஅதிபராகவும் நீண்டகாலம் சேவையாற்றி கல்லூரியின் வளர்ச்சியில் தனக்கென ஒரு சரித்திரத்தை இயல்பாகவே பதியவிட்ட ஒரு சிறந்த நற்பண்புகள் கொண்ட ஆசிரியர்.

எனது கல்விப் பாதையில் சுகிர்த ரீச்சர் ஒரு நல்ல வழிகாட்டியாக அமைந்து எனது பாதையைச் சிறப்பிக்க வைத்தமை எனது அதிஷ்டமே எனக் கருதுகின்றேன். இளமையில் இவரைப்பற்றி எனது மூத்த சகோதரர்கள் மூலம் அறியப்பட்ட எனக்கு, நான் 9ஆம் தரத்திற்கு நுழையும்போது தூயகணிதத்திற்கான (Pure Mathematics) ஆசிரியராக வகுப்புக்குள் வந்தமை எனக்கு மிகவும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது. நான் வீடு சென்று "சுகிர்த ரீச்சர்தான் எனக்கு Maths teacher" என்று சொல்லும்போது எனது பெற்றோர்களும், சகோதரர்களும் சந்தோஷப்பட்டார்கள். ஏன்?........ என்ற வினாவிற்கு சுகிர்த ரீச்சரின் கற்பித்தல் திறமையையும், வழிகாட்டலையும் அவரிடம் கற்ற மாணவர்களே தெரிந்து கொள்வார்கள்.

கடினமான கணக்குகளை எவ்வாறு அணுக வேண்டுமென்பதற்குப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் எனக்கும், சக மாணவர்களுக்கும் கணித பாடத்தில் மேலும் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் கொடுத்த ஒரு சிறந்த ஆசிரியர். இன்று எனது துறை வேறாக இருந்தாலும் கணிதம் சம்பந்தமான விடயங்களில் நான் பின் நிற்பதில்லை என்றால் அதற்கு வழிகாட்டியாக அமைந்தவர் சுகிர்த ரீச்சர்.

**Dr.K.A. ஸ்ரீகிருஷ்ணராஜ்**
**(Canada)**
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி





மீண்டும் நான் 12ஆம் தரத்தில் படிக்கும்போது இவர் எனது வகுப்பாசிரியராகவும், ஆங்கிலமொழி ஆசிரியராகவும் இருந்தமை எங்கள் வகுப்பிற்குக் கிடைத்த ஒரு நற்பாக்கியமே எனக் குறிப்பிடுவேன். அன்றைய காலகட்டத்தில் பல்கலைக்கழக நுழைவுகளுக்கு ஆங்கிலமொழி அவசியமற்றதாக இருந்தபோதிலும் ஆங்கிலமொழியின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து வகுப்புகள் தவறாது எமக்கு கற்பித்தலைச் சிறந்த முறையில் மேற்கொண்டதுடன், ஒரு வகுப்பாசிரியராகக் கடமையாற்றி கல்லூரியை விட்டு வெளியேறும் எமக்கு ஒரு நல்ல ஆளுமையையும் ஏற்படுத்தியவர்.

சுகிர்த ரீச்சர் வகுப்புக்களின் தரத்திற்கும், மாணவர்களின் நிலைகளுக்குமேற்ப தன்னைத் தயார் செய்து கற்பித்தலை மேற்கொண்ட ஒரு சிறந்த ஆசிரியர் என்பதனைப் பிற்காலத்தில் என்னால் உணரமுடிந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இவருடைய நீண்டகால ஆசிரியர் சேவை எமது குடும்பத்திலுள்ள எல்லோருடைய கல்வி முன்னேற்றத்தில் மட்டும் நின்றுவிடாது எமது குடும்பத்தின் அடுத்த சந்ததியினருக்கும் கிடைக்கப்பெற்றமையால் நம் எல்லோருடைய நினைவுகளிலும் ஆழமாகப் பதியப்பட்டவராவார். எம் மனதில் பல நினைவுகள் ஆங்காங்கே வந்துபோகும். அவற்றில் ஒரு சில நினைவுகள் மட்டுமே நீண்டகாலம் தொடரும். அவற்றுள் ரீச்சரின் நினைவுகள் தனிச்சிறப்பானவை.

கற்பித்தலுடனும் மாணவர்களை மதிப்பீடு செய்தலுடனும் மட்டும் நின்றுவிடாது மதிப்பீடுகளின் அடிப்படையில் எவ்வாறு மாணவர்களின் தரத்தையும், கல்லூரியின் தரத்தையும் உயர்த்தலாம் எனச் சிந்தித்து, ஒழுக்கத்துடன் கூடிய ஒரு சிறந்த கல்விக்கூடமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியை நிலைபெறச் செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியரே சுகிர்த ரீச்சர். இந்த நோக்கங்களை அடைவதற்காக இவர் எச்சந்தர்ப்பத்திலும் தனது கைகளில் ஒரு தடியை ஏந்தியதை நான் அறியேன். மிகவும் அழுத்தமும், திருத்தமுமான பொருத்தமான தெளிவான வார்த்தைப் பிரயோகங்களே இவரின் சாதனங்களாக இருந்தன என நாம் எல்லோரும் அறிவோம்.

சுகிர்த ரீச்சரின் சுறுசுறுப்பான நடையும், தோற்றமும், சிரிப்பும், தெளிவான கருத்துகளும், வார்த்தைகளும் இன்றும் எம்முன்னே பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன.

*



# சுகிர்த ரீச்சர்
# நாவினால் நையப் புடைத்ததும் நையாண்டி பண்ணியதும்

1970ஆம் ஆண்டின் முற்பகுதி. 10 மாணவர்களுடன் 24 மாணவிகள் கொண்ட 9B என்னும் வகுப்பு. ஒரு வாங்கில் இரண்டு பேர் என்றபடி உயர வரிசையில் ஐந்து வரிசைகள். 5'3" உயரத்தில் நான் மூன்றாம் வரிசையில். திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் எங்கள் வகுப்பாசிரியர். தமிழ் பாடமும் அவரேதான்.

"நல்ல ரீச்சர், கண்டிப்பானவர், கவனம்" இவைகள் எமக்கு உயர்வகுப்பு அண்ணன்மார்களின் அறிவுரை. அக்காலம் தற்போதைய காலம் போலல்ல. சில ஆசிரியர்கள் குழப்படிகாரர்களுக்குக் கண்மூடித்தனமாக அடிக்கும் காலம். அப்படி அடித்தால் கூட வீட்டில் ஏன் எனக் கேட்க மாட்டார்கள். இப்படி இருக்கும்போது கண்டிப்பான ரீச்சராம் சுகிர்த ரீச்சர்.



சுகிர்த ரீச்சரின் முகத்தில் சிரிப்பில்லா நாட்கள் இருந்ததேயில்லை. பிரம்பிருந்த நாட்களும் இருந்திருக்கவில்லை.

அவர் எங்கள் தமிழ் ரீச்சர். எங்கள் வயதோ குறும்புத்தனம் பண்ணும் வயது. கலவன் வகுப்பு வேறு. ஒருநாள் மாதிரி வினாத்தாளிற்கான விடை எழுதும் புத்தகத்தில் இருந்த ஒரு வினாவின் ஒரு சொல்லை குறும்புத்தனமாக தமிழ் அகராதியில் இல்லாத சொல்லாக மாற்றி விட்டான் ஒரு தோழன். பயிற்சிப் புத்தகத்தைத் திருத்திய ஆசிரியருக்கு வந்ததே கோபம். அடித்தாரா? இல்லை. கேட்டாரே ஒரு கேள்வி. "இங்கு யார் என்னிலும் பார்க்க பண்டிதர் இருக்கினம்?" திருத்த சமர்ப்பித்த பயிற்சிப் புத்தகத்தையும் தன்னுடன் எடுத்துச் சென்று விட்டார். வகுப்பில் இருந்த 34 பேரில் நான்கு அல்லது ஐந்து பேரைத் தவிர வேறு யாருக்கும் அவர் ஏன் பேசினார் என்பது தெரியாது. இது அவர் நாவினால் நையப்புடைத்தது.

1970 தேர்தல் முடிந்த பின் கௌரவ ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார். இவ்விடயத்தைத் தலைப்பாகக் கொண்டு கட்டுரை எழுதப்


**Dr.வேதநாயகம் விக்னராஜா (Govoor)**
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி




பணிக்கப்பட்டோம். அது, ஒரு பாடம் 40 நிமிடங்கள் கொண்ட இரண்டுபாடவேளை. 30 நிமிடத்துள் கட்டுரை எழுதுதல். மீதி 50 நிமிடத்தில் அனைவரது கட்டுரைகளும் திருத்தப்படும். நான் எனது கட்டுரையின் முடிவில் “சீருந்திருவும் பொலிய ....” என்னும் திருப்பதிகத்தைத் திரிபுபடுத்தி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைத் தொடர்புபடுத்தி ஒரு கவிதையை எழுதிவிட்டேன். இதற்கு ரீச்சர் நையாண்டியாகச் சொன்னது, “ஓ புலவரே! தேவாரங்கள், திருப்பதிகங்கள் இறைவன் மீது பாடப்பட்டவை. அதைப் பிழையாக உச்சரித்துப் படிப்பதே பிழை. இதில் நீர் திரிபு வேறு பண்ணுகிறீரா?” ஆக மொத்தம் இவரிடம் இருந்த



பிரம்பு அவரது “நா” மட்டும்தான்.

தமிழில் கட்டுரை எழுதும் போது bracketஇல் ஆங்கிலப் பதங்களையும் போட்டு எழுதுங்கள் என்று கூறுவார். இவர் தமிழ் படிப்பிக்கும்போதே ஆங்கிலம், சமயம், சரித்திரம் போன்றவற்றையும் தொட்டுச் செல்வார். ஆசிரியர் என்பவர் நுண்மா நுழைபுலம் கொண்டவராகவும் பல்துறை விற்பன்னராகவும் இருக்க வேண்டுமென்பது அறிஞர் கருத்து. அப்படி இருந்த ஒரு சிலரில் எங்கள் சுகிர்த ரீச்சரும் அடங்குவார். தமிழ், ஆங்கிலம், சரித்திரம் போன்ற பாடங்களைக் கற்பித்தது மட்டுமல்லாது கல்விசாரா நடவடிக்கைகளிலும் (extra curricular activities) தன்னை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்தித் தன்னிடம் பயின்ற மாணவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக மிளிரச் செய்வதில் தனக்குரிய வகிபாகத்தை மனம், வாக்கு, காயத்தால் ஆற்றியவர்.

அவரது காயம் (பூதவுடல்) இன்று இல்லை. ஆனால் அவர் வகுப்பறையில் உதிர்த்த வார்த்தைகள் இன்றும் காதுகளில் ரீங்காரமிடும். இவரது மனம் “வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்று சுவாமி விபுலானந்தர் கூறியதைப் போன்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் சரித்திரத்தில் அதிபர் திரு.C.K.கந்தசுவாமி அவர்கள் ஓய்வு பெற்றபோது மேளதாளத்துடன் அவரை வீடுவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்தார்கள். அதன்பின், திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் ஓய்வு பெற்றபோது அவரை அவர்தம் கணவருடன் அவரது வீட்டில் இருந்து ஊர்வலமாக அழைத்து வந்து கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க, சனசமூக நிலையத்தில் கௌரவித்து இராப்போசன விருந்தும் அளித்தார்கள். இத்தகைய கௌரவம் அரசாங்கத்தில் சம்பளம் பெற்று வேலை செய்தவர்களுக்குக் கிடைப்பது முயற்கொம்பாகும்.

இந்த அம்மையாருக்கு இப்படிப்பட்ட கௌரவம் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தை நெறிப்படுத்தும் செயலாளராக நான் இருந்தமை குருவிற்குக் கொடுக்கும் தட்சணையாக எனக்கு இறைவன் தந்த அருட்கொடை போலும்.

‘‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’’ என்பதற்கேற்ப எண்ணையும் (Maths) எழுத்தையும் (Tamil and English) எமக்கூட்டிய இவரது ஆத்மா சாந்தியடைய அவர் வழி நின்று “செய்தொழில் தெய்வமென” பணி செய்து கொக்குவில் இந்துக் கல்லூரியையும் கொக்குவில் கிராமத்தையும் மிளிர்வுறச் செய்வதே எம்மாலானதொன்று. *



# A REMARKABLE AND FAVOURITE ENGLISH TEACHER



My favourite English teacher is no longer with us. I reacted to the demise of Mrs.Sukirthalakshmy Supramaniam with deep shock and grief. I could not trust my ears. She recently visited Sri Lanka for the Centenary Celebration of Kokuvil Hindu College. Her presence added glory to the function. Her passing was the saddest occasion for the village of Kokuvil. Kokuvil Hindu Community was plunged into deep sorrow.

Mrs.Sukirthalakshmy Supramaniam served as a role model for other English teachers. She was a dedicated and a committed English teacher. She had produced many worthy and distinguished citizens who are shining bright in all walks of life at home and abroad. She was a good and a modest teacher who had stamped quality in teaching. She belonged to a galaxy of eminent English teachers who served during a golden period of Kokuvil Hindu College during the tenure of offices of eminent Principals Mr.V.Nagalingam (Shakespeare) and Mr.S.Handy Perinbanayagam a leading educationist.

She rose to prominence in her profession due to her dedication, devotion and hard work. Simplicity is her forte; affection and sincerity are her virtues. She had many charms; a radiant smile, pleasant speech, a long single plait and pearly white teeth.

Today she is the architect of me being a prestigious English teacher. I was her pride and I made her proud. She made me a multifaceted English teacher.

I paid her a courtesy visit while she was in Sri Lanka for the centenary celebration. She spoke to me kindly and politely and said "Rasanayagam, I am really proud of you".

She admired me for being a good English teacher, a good speaker, a good writer and a good announcer. Her words of praise are still ringing in my ears.

Mrs.Sukirthalakshmy Supramaniam, my favourite English teacher will always live deep in my heart.

May her soul rest in peace!

**K.Rasanayagam**
Former student
Kokuvil Hindu College





# சுகிர்தம் ஓர் அமிர்தம்



**சை**வமும் தமிழும் செழித்திருப்பதுதான் கொக்குவில் எனும் கிராமம். இங்கு வேளாண்மையும், கைத்தொழிலும் சிறந்து விளங்கியதோடு கல்வியும் போட்டி போட்டு வளர்ந்திருந்தது என்றால் மிகையாகாது. இத்தகைய சிறப்புக்கள் மிளிர்ந்த கொக்குவில் கிராமத்திலேயே திருமதி.சுகிர்தலக்ஷ்மி அவர்கள் (சுகிர்த ரீச்சர்) இருபதுகளின் முற்பகுதியிலே பிறப்பெடுத்தார்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா- அவர்
பங்கயற் கைநலம் பார்தலமோ- இந்த
பாரில் அறங்கள் வளருமம்மா"

என்ற கவிமணியின் கவி வரிகளுக்கு உதாரணமாக வாழ்ந்தவர். இவர் சுப்பிரமணிய சுவாமிகள் மீது மிகு பக்தி கொண்டிருந்ததன் பயனால்தான் சுப்பிரமணியத்தைப் பதியாகப் பெற்றிருந்தார்.

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

நாலடியாரின் அமுத வாக்கிற்கு ஏற்ப ஆசிரியர் சேவையைத் தேர்ந்தெடுத்தார்.

● சு.வரதராசேஸ்வரமுதலி
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி





Mr. K. Supramaniam at his office

''கற்றதொழுகு'' என்ற எம் கல்லூரியின் ஆறெழுத்து மந்திரத்தை இறுதி மூச்சு வரை ஓதி வந்தார்.

நாற்பதுகளின் பிற்பகுதியில் மாணவர்களிடையே கலைக்குழுவை உருவாக்கி கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கு இக்குழுவை அழைத்துச் சென்று கலை விழாக்களை நடாத்தி நிதி சேகரித்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவினார். (ஓய்வுபெற்ற தபாலதிபர் குணபாலசிங்கம், கணக்காளர் அமரர் குமாரசுவாமி போன்றவர்கள் கூறியதன் மூலம் அறிய முடிந்தது).

அன்னாரது கணவர் மனிதாபிமானமிக்க ஒருவர். 1971ஆம் ஆண்டளவில் கட்டிடத் திணைக்களப் பொறியியலாளராக மட்டக்களப்பில் பணியாற்றினார். நானும் அவரின் கீழ் பணியாற்றினேன். திணைக்களத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணம் அரசிடமிருந்து உரிய நேரத்தில் வந்து சேராது எனும் நிலை தோன்றியிருந்தது. தொழிலாளர்கள் மீது கொண்ட அன்பினால் தனது சொந்தப் பணத்தை (ரூபா இருபத்தையாயிரம் வரை) தீபாவளிக்கு முன்பதாக தொழிலாளர்கள் கைகளில் கொடுத்தார் (அக்காலகட்டத்தில் தங்கப்பவுண் ரூபா 75/- மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது). அன்னார் பதவியுயர்வு பெற்று கொழும்பிற்கு மாற்றலானார். கொழும்பிற்குச் செல்வதற்கு மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்குச் சென்றபோது தொழிலாளர்கள் எல்லோரும் அழுது புலம்பி வழியனுப்பி வைத்தார்கள். இந்நிகழ்வின்போது நானும் அங்கு (புகையிரத நிலையத்திற்கு) சென்றிருந்தேன். இந்நிகழ்வு என் நெஞ்சை உலுக்கியது. இப்படி தொழிலாளர்கள் மீது அன்பு கொண்டவரைக் கணவராகப் பெற்றது, ரீச்சர் பெற்ற பெரும் பேறு.

சுகிர்த ரீச்சர் கொக்குவில் இந்து அன்னையின் முக்கியமான அருமைப் புதல்விகளில் ஒருவர் என்பதில் பெருமை கொள்கின்றோம்.

இறுதி மூச்சுவரை கல்லூரி அன்னைக்குத் தொண்டாற்றிய "சுகிர்தம் ஓர் அமிர்தம்". அன்னார் நாமம் என்றும் கல்லூரி அன்னையின் நாமத்தோடு வாழும் எனப் போற்றுவோமாக.

*



# வாழ்ந்த தெய்வம்

**தெ**ய்வமானது தனது குழந்தைகளான மானிடர்களுக்கு உதவுவதற்காக மனிதரூபம் பெற்று வருவதாக முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அவ்வாறு வாழ்ந்த என் கண்கூடாகக் கண்ட தெய்வம் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களே ஆவார்.

அன்னார் எமது பாடசாலையிலேயே கல்வி கற்று அங்கேயே ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வடைந்த பின்னரும் கல்லூரிக்குப் பல உதவிகளைச் செய்து வந்துள்ளார். அவர் தூரதேசம் சென்றபோது கூட எம் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தவர்.

இவர் தனது முதுமையையும் பொருட்படுத்தாது எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் காண்பதற்கு கனடாவிலிருந்து வந்திருந்தார். அங்குதான் நான் அவரை முதன்முதலில் சந்தித்தேன். அவ்விழாவிற்கு வந்திருந்த பலர் "சுகிர்த ரீச்சர்" என அன்போடு அழைத்ததிலிருந்தும் அவர் ஆற்றிய உரையிலிருந்தும் அவர் மாணவர்களோடு எவ்வாறு ஒன்றிப் பழகியிருப்பாரென உணர்ந்து கொண்டேன். எனக்கு இவரிடம் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் இவரைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும் கொடுப்பதற்கு மனம் வேண்டும். அப்பரந்த மனம் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியத்தின் குடும்பத்தினருக்கு உரியதொன்றாகும். அன்னாரின் பிள்ளைகள் கல்லூரி மாணவர்களின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பல உதவிகளைச் செய்து வருகின்றனர். அவரது மகளான சந்திரிகா, ஆனந்தா நாகேந்திரன் தம்பதியினர் (U.S.A.) தாயாரின் மறைவுக்கு முன் அவரைக் கௌரவிக்குமுகமாகவும் தற்போது அவர் ஞாபகார்த்தமாகவும் கல்லூரியில் வருடாவருடம் நடைபெறும் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளுக்கான ஆங்கிலப் பேச்சுப் போட்டிக்கான தங்கப்பதக்கங்களையும் பணப் பரிசில்களையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அன்னாரது மற்றொரு மகளான சுகன்யாவும், மருமகன் ரகு தேவராஜாவும் (Canada) அன்னாரைக் கௌரவிக்குமுகமாகவும் தற்பொழுது அன்னாரது ஞாபகார்த்தமாகவும் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக கல்லூரி ரீதியிலான வயது வேறுபாடற்ற (Open) சதுரங்க விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களையும், பணப்பரிசில்களையும் வழங்குவது சிறப்பம்சமாகும்.

திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் மறைவு எமது கல்லூரிக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் பேரிழப்பாகவே அமைந்தது. "பெரியோர்களின் உடல்கள் அழிந்தாலும் அவர்கள் இறப்பதில்லை" என்பதுபோல அன்னார் இறந்தாலும் அவருடைய நாமம் கல்லூரி அன்னை உள்ளவரை நிலைத்திருக்கும்.

**செல்வி.இ.டிலானி**
மாணவி (10A)
கொக்குவில் இந்துக் கல்லூரி



Mrs.Sukirthalakshmy Supramaniam is being feted by K.H.C. O.S.A. - Canada at the K.H.C. centenary celebration on March 27, 2010














J&J Swagat
Convention Centre






KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION - CANADA
1910 - 2010
































ESTD 1994
ESTD 1994
KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION - CANADA














KOKUVIL HINDU COLLEGE
OLD STUDE TS' ASSOCIATION - CANADA


OLD STUDE TS' ASSOCIATION - CANA




KOKUVIL


ESTD 1994
CANADA









# கல்வி அறிவைத் தந்த குரு

உலகில் சேவை மனப்பான்மையுடன் செய்யும் தொழில்கள் பல உண்டு. அவற்றில் கல்வியைப் புகட்டும் ஆசிரியத் (குரு) தொழிலானது உலகத்தில் மிகவும் சிறந்த தொழில் என்பதைப் பல அறிஞர்கள் கூறியுள்ளார்கள். கல்வியைப் பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை."

எனவே கல்விச் செல்வத்தைக் கொடுக்கும் ஆசிரியர்கள் உலகத்தில் சிறப்பானவர்களாகப் போற்றப்படுகிறார்கள்.

திருமதி.சுகிர்தலக்ஷமி சுப்பிரமணியம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியிலே கல்வி கற்று பின்பு அங்கு பல காலம் ஆசிரியராகப் பணிபுரிந்து இறுதியில் உப அதிபராகக் கடமையாற்றியுள்ளார். நான் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் இவரிடம் கல்வி கற்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவர் மாணவர்களுடன் அன்புடனும் அமைதியுடனும் பழகுவதைக் கண்டுள்ளேன். எல்லோரையும் மரியாதையுடன் அழைப்பார்.

அன்னார் ஓய்வுபெற்ற பின்பு கனடாவிற்குக் குடியேறினார். கனடாவில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் உருவாகுவதற்கு உறுதுணையாக இருந்து பாடசாலைக்கான தனது சேவையைத் தொடர்ந்து செய்து வந்தார்.

ஜெர்மனியில் உள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக நான் இருப்பதால் ரீச்சருடன் எனக்குப் பலவகையிலும் தொடர்புகள் ஏற்பட்டன. இவரது அன்பும் ஆதரவும் அறிவுரையும் எப்போதும் எனக்குக் கிடைத்தன. எப்போது அவரை நான் தொலைபேசியில் அழைத்தாலும் என் பெயர் சொல்ல முதல் என் குரலைக் கேட்டவுடனேயே "தேவகுமாரன் கதைக்கிறீர்கள். என்ன உதவி வேண்டும் சொல்லுங்கோ" என்று சிரித்துக் கொண்டே கேட்பார். எதற்கும் எந்த வேளையிலும் மனம் சலிக்கமாட்டார். எனக்கு வேண்டிய அறிக்கையோ கட்டுரையோ எழுதுவதற்கு மிகவும் உதவியாக இருந்தார். பாடசாலை சார்ந்த எந்த விடயமானாலும் ரீச்சருடன் தொடர்பு கொண்டு சரியான விளக்கம் பெற்ற பின்பே செயற்படுவேன். தற்போது ரீச்சரின் மறைவு பேரிழப்பாகவே தெரிகின்றது.

மார்ச் 5, 2011 அன்று ஜெர்மனியில் உள்ள Dortmund நகரில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடத் தீர்மானித்தபோது சுகிர்த ரீச்சரையே பிரதம விருந்தினராக அழைக்க விருப்பம் இருந்தது. இதை அங்கத்தவர்களுக்குத் தெரிவித்தபோது எல்லோரும் ஏகமனதாக ஆதரித்தார்கள். இவ்விடயத்தை ரீச்சரிடம் தெரிவித்தபோது சில நாட்களின் பின் பதில் கூறுவதாகக் கூறினார். அதேபோல் அவரிடம் இருந்து நல்ல பதில் கிடைத்தது.

அவரது மகள் சுகன்யாவும் மருமகன் ரகுவும் திரு.திருமதி.சுப்பிரமணியம் அவர்கள் ஜெர்மனி வருவதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார்கள்.

**● தே.தேவகுமாரன்** (Germany)
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி





இருவரும் ஜெர்மனியில் உள்ள Dusseldorf விமான நிலையத்தில் வந்திறங்கினார்கள். இவர்களை திரு. சாந்தநாதன், திருமதி.சாந்தநாதன், திரு.வசந்தராசா ஆகியோர் வரவேற்று திரு.சாந்தநாதனின் இல்லத்தில் தங்க வைத்தார்கள்.

நூற்றாண்டு விழாவன்று திரு.சுப்பிரமணியம், திருமதி.சுப்பிரமணியம் இருவரும் Dortmund நகரில் உள்ள விழா மண்டபத்திற்கு மேள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டார்கள். மண்டப வாசலில் அகல்யா தேவகுமாரன் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்க, பழைய மாணவர் சங்க உறுப்பினர் அனைவரும் ஒன்றுசேர்ந்து வரவேற்றனர். விழா மண்டபம் நிறைந்திருந்தது. வரவேற்பின்போது மண்டபத்தில் உள்ள அனைவரும் எழுந்து நின்று கைதட்டி இருவரையும் வரவேற்றார்கள். அக்காட்சியை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை.

விழாவின்போது இரண்டு ஞாபகார்த்த முத்திரைகளைத் தம்பதிகள் இருவரும் சேர்ந்து வெளியீடு செய்து விழாவைச் சிறப்பித்தார்கள். அத்துடன் நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டின்போது மலரின் முதற் பிரதியைத் தலைவர் விஜயேந்திரனிடம் இருந்து பெற்றுக் கொண்ட திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் 1000 Eurosஇற்கான காசோலையைத் தலைவரிடம் அன்பளிப்பாக வழங்கினார். மொத்தத்தில் ரீச்சரின் ஜெர்மன் வருகையானது ஜெர்மன் பழைய மாணவர் சங்கத்திற்குப் பெருமையையும், புகழையும் தேடிக் கொடுத்தது.

மேலும் ரீச்சரும் அவரது கணவரும் கனடா திரும்புமுன் Dortmund நகரில் உள்ள எனது வீட்டில் இரண்டு நாட்கள் தங்கினார்கள். இங்குள்ள தமிழர் கலையகத்தில் கல்வி கற்கும் பிள்ளைகள் முன்பாக ரீச்சர் சிறு சொற்பொழிவாற்றினார். அங்குள்ள பிள்ளைகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். பின்பு என்னுடன் சேர்ந்து இருவரும் Dortmund நகரைச் சுற்றிப் பார்த்தார்கள். என் வீட்டில் அவர்கள் தங்கியுள்ள விடயம் கேள்விப்பட்டுப் பல பழைய மாணவர்கள் வந்து அவர்களைச் சந்தித்து மகிழ்ந்தார்கள்.

கனடாவிற்குத் திரும்பி வர விமான நிலையம் செல்வதற்கு ஜெர்மன் புகையிரதத்தில் பயணம் செய்ய விரும்பினார்கள். அவர்களது விருப்பத்திற்கிணங்க எனது மனைவி அருள்மதி, மகள் அகல்யா ஆகியோருடன் புகையிரதத்தில் விமான நிலையம் சென்றோம். விமான நிலையத்தில் திரு.மனோகரன், திரு.வசந்தராசா ஆகியோர் காத்து நின்றனர். அனைவரும் சேர்ந்து இருவரையும் கனடா அனுப்பி வைத்தோம்.

எமக்குக் குருவாக இருந்தவர், ஜெர்மனி வந்து எமது விழாவிற்குத் தலைமை வகித்தவர், இங்கு எல்லோரது உள்ளத்திலும் நிறைந்து நிலைத்து இருப்பவர் கனடா வந்து ஒருசில மாதங்களிலே இறைவனடி சேர்ந்தார் என்று என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. அன்னாரின் மறைவு எம்மை எல்லாம் வாட்டுகின்றது. அவரது நினைவு எமது உள்ளங்களில் பசுமையாக நிறைந்துள்ளது.

*



# நான் அறிந்த நல்லாசிரியை

## அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

ஈழவள நாட்டில் இணையற்ற மேதைகளும், கலை வல்ல புலவர்களும் களித்து மகிழ்ந்த ஊர் கொக்குவில். சிங்கைச் செகராசசேகரனால் பாடப்பட்ட கைலாச புராணத்திற்குக் கொக்குவில் பண்டிதர் சச்சிதானந்த நமச்சிவாயர் சிறப்புக் கவிதை வழங்கிப் புகழ் பெற்றுள்ளார். கைலாசமாலையைப் பதிப்பித்த பெருமை கொக்குவில் பிரம்மஸ்ரீ.இ.சி.இரகுநாதஐயர் அவர்களைச் சார்ந்தது.

இத்துணைப் பெருமை வாய்ந்த ஊரில் அவதரித்தவர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி அவர்கள். “விளையும் பயிரை முளையிலே தெரியும்” என்ற முதுமொழிக்கிணங்க இளமையிலேயே கல்வியில் ஆர்வமும் கலைபயில் தெளிவுமுடையவராக விளங்கினார். “நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு” என வாழ்ந்தவர். London பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருந்தாலும் ஆங்கிலம் அன்றிக் கணிதம், தமிழ், சமயம் ஆகியவற்றிலும் வல்லவராக விளங்கியவர். அதனைத் தம் மாணவருக்குப் பயிற்றுவிப்பதிலும் மிகுந்த சாமர்த்தியம் படைத்து விளங்கியவர். நல்லாசிரியருக்கு இலக்கணம் வகுத்த பவணந்தி முனிவர் இதனைப் பின்வருமாறு கூறுகிறார்.

**“குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம், மலை, நிறைகோல், மலர் நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு இழிகுணம் இன்மையும்**
**அமைபவன் நூலாசிரியனே”**

இவ்வாறு வகுக்கப்பட்ட இலக்கணத்தில் அணுவளவும் தவறாத பெருமை இவருக்கு உண்டென்றால் மிகையல்ல. இவர் அல்லும் பகலும்



**ஆனந்தர் சுப்பிரமணியம்**
(Canada)






அனவரதமும் கல்விச் சமூகத்திற்கு அரும்பணி ஆற்றியவர் என்பது சாலப் பொருந்தும். தாயுமான சுவாமிகள் "அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்றார். இவ்வாறு அளப்பரிய பணியை ஆற்றிய பெருமை இவருக்குண்டு.

கற்பித்தல் தொழிலை விட்டு இளைப்பாறிய பொழுதும் பொதுப் பணியைத் தம் பணியாக ஏற்று இன்புற்று இறுமாந்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரிக்குத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவர். தான் அக் கல்லூரியின் ஆசிரியையாகவும், பிரதி அதிபராகவும் இருந்தும் தான் அக்கல்லூரியின் ஒரு மாணவி என்பதில் பெருமை கண்டவர். தன்னிடம் கற்ற மாணவ மாணவியரை வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுத்தவர். அவர்களை அறவழியில் ஒழுக வைத்தவர். கற்றவழி நிற்க வைத்தவர். இடம்பெயர்ந்து கனடா வந்தபோதும் பழைய மாணவர்களைக் கூட்டி, பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கிக் கல்லூரிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்.

அஃதன்றி நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய நிர்வாகத்தில் ஒருவராக இருந்து பணியாற்றியவர். அத்துடன் மாத்தனைக் கந்தசுவாமி ஆலயச் சூழலில் அமைந்த "வளர்மதி" சனசமூக நிலையத்துடன் இணைந்து மகளிர் அணியைத் திறம்பட நிர்வகித்தவர். கனடாவில் வருடா வருடம் நடைபெறும் இணுவில் திருவூர் ஒன்றியப் பேச்சுப் போட்டிக்கு நடுவராக இருந்து பல்லாண்டு பணியாற்றியவர்.

திருமூலர் திருமந்திரத்தில் "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்றார். அவ்வாறு அவருள்ளம் பெரும் கோவிலாகவே விளங்கியது பெருமைக்குரியதாகும். இவ்வாறு புகழொடு தோன்றிப் புகழொடு வாழ்ந்து புகழ் பொறித்து மறைந்த ஆசிரியப் பெருந்தகை அவர்களின் அரும்பணி உலகுள்ளளவும் அனைவராலும் போற்றப்படும். எமது வாழ்வில் அவர் சரிதை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது.

வாழ்க அவர் நாமம்!

வளர்க அவர் புகழ்!

*



# பெண் தலைமைத்துவம்

**மா**ணவனாய் இருந்தபோது கல்லூரி வாழ்வு...

நினைவழியா நாட்கள் அவை...

வர்த்தகப்பிரிவு மாணவனாய் கல்லூரிக்குள் காலடி எடுத்து வைத்த காலம்.

ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் ஏராளம். குழப்பங்களே மிகுந்து இருந்தன. அறியாத முகங்கள், தெரியாத இடங்கள், புரியாத மனிதர்கள்...

கால ஓட்டத்தில் கல்லூரியுடன் சங்கமமானேன்.

மாணவனாக இருந்த அந்த நாட்களில் "சுகிர்த ரீச்சர்".... உப அதிபராய் பெண் ஆசிரியர் ஒருவர். மெலிந்த தோற்றம், நேரான பார்வை, கம்பீரமான நடை. அவரது புறத்தோற்றத்தைப் பார்த்து அவர் ஒரு "வலிமை குறைந்த பெண்" என்பதே எனது கற்பிதம். ஆயினும் நாளாக நாளாக அவரது ஆளுமைத்திறன் எனக்குள் மெல்ல மெல்லப் பட்டவர்த்தனமாயிற்று. அவரது புறத்தோற்றத்தால் நான் ஏமாற்றப்பட்டேன் என்பதும் புரிந்தது.

மிகவும் நிதானமாக எதுவித சத்தமுமின்றி நடந்து செல்வார். வகுப்பறைக்குள் வந்து "என்ன பாடம்?" ''யார் ரீச்சர்?'' என்ற கேள்விகள்.... நறுக்குத் துண்டுகள் போல் வார்த்தைகள் வெளிவரும். ஆயினும் தாய்மை அதிலே இழையோடியிருக்கும்.

தனது வட்டமான மூக்குக் கண்ணாடியூடாக ஆழமாக நோக்குவதே அலாதியானது. மாணவர்களைப் பார்வையாலேயே கண்காணிப்பதும் ஒரிரு வார்த்தைகளாலேயே அவர்களைக் கட்டுப்படுத்த முனைவதும் மங்கலான திரைப்படக் காட்சிகளாய் என்னுள் விரிகின்றன.

ஆசிரியரின் ஆளுமைப்பண்பு பன்முகத்தன்மை வாய்ந்தது. குற்றவாளிகளை ஒடுக்கும் காவல்துறை போலவும், நீதியை வழங்கும் நீதிபதி போலவும், கட்டளைகளைப் பிறப்பிக்கும் படைவீரன் போலவும், வாஞ்சையுடன் அரவணைக்கும் தாயைப் போலவும், பன்முக ஆளுமையை, ஆசிரியத்தின் பெருமையை, வலிமையை, ஆற்றலை உணராத பருவம் அது. அன்றைய எமது குறும்புகளும் குழப்படிகளும் இன்று என்னைச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றன.

எமது துஷ்டத்தனங்களை அடக்கவும், கண்டிக்கவும் ஒருபோதும் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்ததை நான் கண்டதில்லை. மென்மையான அன்பு கலந்த சொற்களாலும், கடைவாயின் இறுதியில் மட்டுமே அடையாளம் காட்டும் அந்தப் புன்முறுவலாலுமே எம்மை ஆளுமைப்படுத்த முற்படுவார். மரியாதை கலந்த அவரது வார்த்தைகளே எம்மைக் கட்டிப் போட்டுவிடும். எங்கே செல்கிறாய் எனக் கேட்கும் அவரது முகபாவம்! ஏன் படிக்கவில்லை எனக் கேட்கும் அவரது கண்கள்!! மெலிந்த அந்தப் பெண் ஆசிரியர் சுகிர்த ரீச்சரை, அவரின் ஆளுமையை, வலிமையை இன்று என்னுள் உணர்ந்து ரசிக்கின்றேன் ருசித்து எழுதுகின்றேன்.

பாடசாலை வாழ்க்கையின் பெருமையை,


சு.பரமேஸ்வரன்
முன்னாள் மாணவன்
தற்போதைய ஆசிரியர்
கொக்குவில் இந்துக் கல்லூரி






மகிழ்ச்சியை, மனப்பதிவுகளை அதன் நிகழ்காலத்தில் எம்மால் மீட்ட முடிவதில்லை. காலங்கள் உருண்டோடி கடமைகள் பலவும் தோள்களில் ஏறிய பின்பே அவற்றை மீட்டவும், ஏங்கவும், பெருமை கொள்ளவும் துடிக்கின்றோம். மகிழ்வைத் தேடுதலே அப்பருவத்தில் எமது குறிஇலக்காக அமைந்து விடுகின்றது. இதனாலேயோ என்னவோ எம்மைச் சூழ நடப்பவை பற்றியோ, அதன் சுகானுபவங் களையோ, பெருமைப்பட்டுக்கொள்ளும் நினைவு களையோ எம்மால் உடன் உணர முடிவதில்லை. அவை எமது நாளாந்த வாழ்வின் சம்பவங்களாகவே எம்மால் நோக்கப்படுகின்றன.

அன்றொரு நாள் காலைப்பொழுதில்... மாணவ நினைவுகளிலிருந்து விடுபட்டு ஆசிரியராய் காலைப் பிரார்த்தனை வேளையில் “சுகிர்த ரீச்சர்” பாடசாலைக்கு வந்ததாக அறிகின்றோம். எங்களில் சிலருக்கு ஒரு புதுத்தெம்பு, பரபரப்பு. உற்சாகமான மனநிலையில் நாங்கள். பிரார்த்தனை நிறைவில் ஆரோகண முற்குறிப்புக்களுடன் மாணவர் முன் பிரசன்னமாகின்றார்.

“இவவுக்கு எத்தனை வயசு”

“எப்ப இவ படிப்பிச்சவ”

“நல்ல சிமாட்டாய் (smart) நிற்கிறா”

இவ்வாறு நம்மவர்கள் (ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்) பலர் தமக்குள் பேசிக்கொள்கின்றனர்.

கொக்குவில் இந்துவின் பழைய மாணவர்கள் எமக்குள் பேசிக்கொள்ளும்போது எமது மூத்த தலைவர்களின் குணவியல்புகள் பற்றி சிலாகிப்பதுண்டு. ரீச்சரைப் போன்றவர்களின் துணிவு, நேர்மை, கண்ணியம் போன்ற மேன்மைக் குணங்களே இன்றும் எமது பண்புகளாகவும், மரபுகளாகவும் பேணப்பட வேண்டியவை. இவ்வாறான நம்மரபுகளே கல்லூரியின் செழுமை மிகுந்த வளர்ச்சிக்குப் பெரும் தூண்களாய் அமைந்து விடுகின்றன.

சுகிர்த ரீச்சரின் புறத்தோற்றம் பற்றிய மனப்பதிவை எண்ணி இன்றும் என்னுள் சிரிக்கின்றேன். கண்டேன் பெண் தலைமையை. உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன் தங்கள் காலத்தில் நான் மாணவனாய்ப் பயின்றேன் என்ற வகையில். நான் மட்டுமல்ல என்னைப் போன்ற பலரும் அவ்வாறே பேசிக்கொள்கின்றனர். உண்மைதான். ஒரு பெண் தலைமைத்துவத்தின் சிறந்த அடையாளம். எமது வருங்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாகக் கூறிக்கொள்வோம். தங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். கல்லூரியின் ஆன்மாவோடு நீங்களும் இரண்டறக் கலந்துள்ளீர்கள்.

*



# அன்பு ஆசிரியையின் நினைவுகள் ஆயிரம் ஆயிரம்

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பது ஆன்றோர் கூற்று. திறமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் அணிகலன்களைத் தனதாக்கிக் கொண்டிருந்த எங்கள் அன்பு ஆசிரியை திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரை, அவரது நினைவுகளை எம்மால் என்றுமே மறக்க முடியாது.

ஒரு கட்டிடம் கட்ட அத்திவாரம் மிகமிக முக்கியமானதாகும். கணிதத்தில் எனக்குள்ள ஈடுபாட்டை மேலும் மேலும் வளர்த்தவர். அவரிடம் படிக்கும் ஒவ்வொருவரையும் மிகவும் கவனமாகக் கண்காணித்து முன்னேற்றுவார். இவர் தனது மூன்று வயதில் இருந்து இறுதியாக இறக்கும்வரை கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் இணைந்திருந்தார். அக்கல்லூரியிலே கல்வி கற்று பின்பு ஆசிரியையாகவும், உபஅதிபராகவும் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின்பும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மேன்மைக்காக அயராது உழைத்தவர்.

காலங்கள் கடந்து சென்றன. நானும் குடும்பத்தவனாக ஜெர்மனிக்கு வந்து குடியேறினேன். இங்கு இயங்கிவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் "கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா" கொண்டாடப்பட்டது. எங்கள் சுகிர்த ரீச்சர் இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக அவரது கணவர் திரு.சுப்பிரமணியம் அவர்களுடன் வந்திருந்தார். அப்போது அவரோடு மீண்டும் எமக்கு ஒரு நெருக்கம் ஏற்பட்டது. அவர்களது வருகையின்போது எங்களுடன் எம் வீட்டில் ஒரு கிழமை தங்கினார்கள்.

எங்களுடன் இருவரும் பல இடங்கள் சுற்றித் திரிந்தார்கள். அந்த வயதிலும் குளிரையும், மழையையும் பொருட்படுத்தாமல் எந்த நேரம் என்றாலும் மனத்திடத்துடன் எதற்கும் தளராமல் களைப்பை வெளிக்காட்டாமல் சேர்ந்து திரிந்து எங்களையும் சந்தோசப்படுத்தினார்கள்.

எனது மனைவியும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவி என்பதால் நான், என் மனைவி ஆனந்தி, ரீச்சர், அவரது கணவர் எல்லோருமாக கொக்குவிலில் இருந்த பழைய நாட்கள், ஊர்ப் புதினங்கள் என நிறையக் கதைத்தோம். இரவில் அதிக நேரம் விழித்திருந்து கொக்குவில் இந்துக் கல்லூரி பற்றியும் பல நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். எமது பிள்ளைகளுக்கும் ஆசிரியையினதும் அவரது கணவரினதும் கதைகள் மிகவும் பிடித்திருந்தன. ரீச்சர் எங்களுடன் தங்கியிருந்த அந்த ஒரு கிழமை எங்களால் மறக்க முடியாத இனிமையான நினைவுகளைக் கொண்டது.

அந்த திடகாத்திரமான, தளராதவரைப் பார்த்து நாமும் இப்படித்தான் வாழ்க்கையைத் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் கண்ணியமாக வாழவேண்டும் என்ற உணர்வுகள் எங்களுக்கு ஏற்பட்டன. ரீச்சரைப் பற்றி இன்னும் எவ்வளவோ எழுதலாம். ரீச்சரின் மறைவைக் கேள்விப்பட்டதும் இங்குள்ள பழைய மாணவர் சங்கத்தினால் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**S.சாந்தநாதன்** (Germany)
முன்னாள் மாணவன்
கொக்குவில் இந்துக் கல்லூரி





# AN IDEAL AND A PERFECT TEACHER

I have seen a number of great men and women and read the biographies of heros in one sense or another. But the person who captured a corner of my heart is Mrs.Sukirthalakshmy Supramaniam. She is no more, but she still lives in our heart. Her thoughts, words and deeds still remind us of her remarkable and worthy services during her long period of teaching at Kokuvil Hindu College. She was indeed great and noble and had been a person of plain living with high thinking and noble actions. Though I was not her student I heard much about her services from our elders, who were the students of her time.

It is my opinion that our former students were so lucky that they came across a teacher like her who had been an ideal teacher and a perfect person. They always say that she was like a parent, a friend and a guide to her students at K.H.C. Her mastery of the subjects and the way she taught made her students wonder at her skills. In fact she did her level best to those who were weak in studies. In the school community, she is unforgettable and she remains as a very popular teacher. She was a back-bone to the glory of the college. There is no doubt in saying that she had been a symbol of greatness to all the students of K.H.C. Her ties with the college continued even after her retirement. Her visit to Jaffna to grace the centenary celebrations in the presence of the past students and colleagues proved this.

Further, I would like to state that even if the students of her time forget all the valuable lessons they learned from her, they will always remember her with respect to the end of their days. Her valuable contribution to Kokuvil Hindu College as a student, teacher and Vice Principal will be in the history of the school. Following their mother's foot steps, her children also contribute to the development of curricular and other activities for the students of K.H.C. Prizes are awarded to students at the annual prize day by:-

-Dr.Suthaker (son) and Naguleswary Suthaker (Canada) for grade 12

-Chanthrika (daughter) and Ananda Nagendran (U.S.A.) for grade 9

- Sukesini (daughter) and Mahadeva Sivananthan (Australia) for grade 8

- Sukanya (daughter) and Ragu Thevarajah (Canada) for grade 7

as an incentive for students.

The centre for learning music and recreation in K.H.C. was developed by Sukanya and Ragu Thevarajah for the benefits of the female students. This centre houses a music room and facilities for indoor games like chess, carrom and table tennis.

In conclusion we are delighted about the contributions rendered by Mrs.Sukirthalakshmy Supramaniam's children and their spouses to honour her services to Kokuvil Hindu College.

**Mas.S.Sivanujan**

Student (Grade 12 – Bio Science)

Kokuvil Hindu College





# எனது பார்வையில்...
## திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்



திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி எனக்கு எழுதக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தைப் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். 1981ஆம் ஆண்டு 6ஆம் வகுப்பில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்தபோது அவர் தென்பகுதி பாடசாலையில் உபஅதிபராகப் பணியாற்றினார். அப்பொழுது அவரின் மிடுக்கான தோற்றம், ஒளிவீசும் கண்கள், கம்பீரமான குரல், அதிகமாகப் பேசாத தன்மை என்பன பாடசாலையில் மாணவ மாணவியரிடையே ஒரு பயபக்தியை உருவாக்கி இருந்தன. அதுமட்டுமல்லாமல் இவை யாவும் பாடசாலையை அமைதியாகவும், ஒழுக்கம் நிறைந்ததாகவும், மிகுந்த கட்டுப்பாட்டுடனும் நிர்வகிக்க உதவின. அவரிடம் கல்வி கற்ற ஒவ்வொரு மாணவ மாணவியும் அவர்மீது பயம் கலந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள்.

சொற்பொழிவொன்றில் ஒரு மகான் கூறினார் "பேசும் வார்த்தையைவிட பேசாத வார்த்தைக்கு சக்தி அதிகம்" என்று. அதை நான் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களிடத்தில் நேரடியாகக் கண்டு கொண்டேன்.

நான் மாத்திரமன்றி எனது தாயார், சகோதரர்கள், எனது மாமன்மார் அனைவரும் இவரிடம் கல்வி கற்றுள்ளார்கள். எனது தாயார்கூட அவரிடம் பேசும்போது சொற்கள் தடுமாறுவதை அவதானித்துள்ளேன். இதற்குக் காரணம் அவர்மீது கொண்டிருந்த பயபக்தியேயாகும்.

இவரிடம் நான் கண்ட ஆச்சரியமான விடயம் என்னவென்றால், 1981ஆம் ஆண்டு நான் கண்ட அதே தோற்றத்தையே அவர் 2010ஆம் ஆண்டு


● S.கோகுலன்
முன்னாள் மாணவன்
தற்போதைய ஆசிரியர்
கொக்குவில் இந்துக் கல்லூரி






நூற்றாண்டு விழாவிற்கு வந்தபோதும் கண்டேன். இதை நான் எனது தாயாரிடம் கூறியபோது அவர் கூறினார் தான் அவரிடம் கல்வி கற்றபோதும் அதே தோற்றத்தில்தான் இருந்தார் என்று.

இவர் பாடசாலையின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் எடுத்துக்கொண்ட அக்கறையானது ஒருவர் தனது குடும்பத்தின் வளர்ச்சியில் எடுக்கும் அக்கறையைவிட மேலானதாகவே காணப்பட்டது. இவர் ஓய்வுபெற்று வெளிநாடு சென்றபின்கூட பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பெரிதும் பாடுபட்டார்.

இவர் மாத்திரமல்ல இவர் பிள்ளைகள், மருமக்கள்கூட பாடசாலையின் வளர்ச்சியிலும் விளையாட்டுத்துறையின் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றி வருகின்றனர். விசேடமாக சுகன்யா ரகு தம்பதியினர் பாடசாலையின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். குறிப்பாகத் துடுப்பாட்ட விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக பெருந்தொகைப் பணத்தை நிதியத்தில் நிரந்தர வைப்பில் இட்டு அதிலிருந்து கிடைக்கும் பணத்தை பரிசில் தொகையாக 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகின்றார்கள். சதம் அடித்த வீரர்கள், அரை சதம் அடித்த வீரர்கள், ஐந்து விக்கற்றுகளுக்கு மேல் சாய்த்த வீரர்கள் என்று வகைப்படுத்தி அவர்களுக்குப் பெருந்தொகைப் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இப்பணப்பரிசில்கள் அமரர் திரு.V.C.இராமநாதன் (1951இல் துடுப்பாட்டத்தைக் கல்லூரியில் ஆரம்பித்து வைத்த எம் ஆசிரியர்), அமரர் திரு.C.பாலகிருஷ்ணன், அமரர் திரு.V.பவசிங், அமரர் திரு.N.P.தேவராஜா ஆகியோரின் ஞாபகார்த்தமாகவும் திரு.V.கணேசலிங்கம் அவர்களைக் கௌரவிக்குமுகமாகவும் வழங்கப்படுவது விசேட அம்சமாகும். மேலும் இத்தம்பதியினர் 2008ஆம் ஆண்டில் இருந்து பாடசாலையில் சதுரங்கப் போட்டிகளை நடாத்தி அதில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைக் கௌரவிக்குமுகமாகவும் தற்போது அவரது ஞாபகார்த்தமாகவும் பணப் பரிசில்களை வழங்கி வருகின்றனர். இப் பணப்பரிசில்கள் அம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இதைப் பல பெற்றோர்கள் நேரடியாகவே எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் கூறுவது அவர்கள் நன்றி கூற வேண்டியது இத்தம்பதியினருக்கே என்று.

இதில் இருந்து அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களும் அவரது குடும்பத்தினரும் பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

இவர் கடமையாற்றும் காலத்தில் நானும் கல்வி கற்றேன் என்று நினைக்கும்போது இது எனக்குக் கடவுள் கொடுத்த வரம் என்று தோன்றுகின்றது. இவரிடம் கற்றுக்கொண்ட பாடமே இன்று நான் சிறந்த ஆசிரியராகவும், சிறந்த துடுப்பாட்டப் பயிற்றுனராகவும் விளங்க உதவுகின்றது.

எனது பார்வையில் இவர் பாடசாலையின் அன்னையாகவே தென்படுகிறார்.

*



# வளர்ச்சிப் பாதையின் வழித்தடத்தில் வலம் வரும் கொக்குவில் இந்து அன்னை


**திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்**

*மாணவி 1927-1937*

*ஆசிரியை 1942-1983*

*கொக்குவில் இந்துக் கல்லூரி*


**கொ**க்குவில் இந்துக் கல்லூரியை நான் அறிந்தது 1927ஆம் ஆண்டு. அதற்கு முன்பாக அதன் கதை கேட்டும் வாசித்தும் அறிந்தவை. அன்றைய காலங்களில் பாடசாலையில் சேர்வதற்கு பிறப்புச் சான்றிதழ் கட்டாயமாக இல்லை. எனவே மூன்று வயது பூர்த்தியானதும் மூத்த சகோதரர்களுடன் பாடசாலை சென்றேன். அதே வருடம் பாடசாலை தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த தெல்லிப் பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சேனாதிராஜா தியாகராஜா அவர்கள் இரண்டு ஆண்டுகள் சேவையாற்றியபின் கல்வித் திணைக்களப் பாடசாலைப் பரிசோதகராய் பதவி உயர்வு பெற்று பாடசாலையை விட்டு விலகினார். அப்போது எடுத்த புகைப்படத்தில் கல்லூரி ஸ்தாபகர் திரு.E.செல்லையா, ஸ்தாபக ஆசிரியர் திரு.N.செல்லப்பா, திரு.A.அமிர்தலிங்கம், திரு.T.சின்னத்தம்பி, திரு.S.C.தில்லைநாதன், திரு.K.கந்தசாமி, தலைமை ஆசிரியர் திரு.S.தியாகராஜா ஆகியோருடன் பாடசாலை மாணவர்கள் எல்லோரும் உள்ளார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக நந்தாவில் வயல் அருகில் வசித்த திரு.K.அப்பாக்குட்டி (சாத்திரியார்) அவர்களின் வீட்டு முன் திண்ணையில் அவரின் மருகர் திரு.N.செல்லப்பா, தாவடியூரைச் சேர்ந்த பண்டிதர் திரு.சோமாஸ்கந்தர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. திரு.N.செல்லப்பா அவர்கள் சென்னை மற்றிக்குலேஷன் சான்றிதழ் பெற்றவர். பாடசாலைக்கு வித்திட்ட அம்மூவரின் பெயர்களும் பொன்னெழுத்திற் பொறிக்கப்பட வேண்டியவை.

கல்வி கற்கும் சிறார்கள் படிப்புக்காக நீண்டதூரம் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை. கொக்குவில் வாசிகள் கமத்தொழில், சுருட்டுக் கைத்தொழில், சிறு வியாபாரங்கள் ஆகியவற்றிலே ஈடுபாடு கொண்டவர்கள். தம் பிள்ளைகளையும் தம் தொழிலிலேயே ஈடுபடுத்தினர். ஒரு சிலரே கல்வியில் ஊக்கம் செலுத்தினர். இந்த ஒரு சிலருக்கு இப்பள்ளிக்கூடம் வாய்ப்பாகப் போய் விட்டது. அத்துடன் மிஷன் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்கள் மதமாற்றம் செய்யப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் இருந்தன. இவை காரணமாகவே இப்பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தனர். ஸ்தாபக ஆசிரியர் திரு.N.செல்லப்பா அவர்கள் மிகவும் கண்டிப்பானவர். கணிதம் கற்பிப்பதில் திறமை உள்ளவர். மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்தைப் பேணுவதிலும் அதீத அக்கறை கொண்டவர். இவரின் கற்பித்தல் திறமையாலும் ஒழுக்கம் பேணும் தன்மையினாலும் கவரப்பட்டு மாணவர்கள் அதிகமாக வந்து சேர்ந்தனர். மாணவர் தொகை அதிகரித்தது. திரு.N.செல்லப்பா அவர்களே ஒரு கடின உழைப்பாளி. அருகேயுள்ள தோட்டத்தில் பயிர் செய்வதிலும் ஈடுபட்டு தனது பிள்ளைகள் மட்டுமல்லாது பள்ளிப் பிள்ளைகளும் கல்வி அறிவு உள்ளவராகவும், கடின உழைப்பு உள்ளவராகவும் வர வழிவகுத்தவர். அவரது ஒரேயொரு மகன் நமசிவாயமும் ஐந்து பெண் பிள்ளைகளும் இப் பாடசாலையிலேயே கல்வி கற்றனர். 33 வருட காலம் பொறுப்பும் திறமையும் வாய்ந்த ஆசிரியப் பணியின் பின் தன் 57ஆவது வயதில் 1944ஆம்



ஆண்டு ஓய்வு பெற்றார். அவரிடம் கல்வி கற்ற மாணவியாகிய நான் அவர் காலத்தில் ஆசிரியையாக இரண்டு ஆண்டுகள் கடமை புரியும் பெருமையும் பெற்றேன்.

திண்ணைப் பள்ளிக்கூட மாணவர் தொகை அதிகரிக்க வேறிடம் வேண்டியதாயிற்று. கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் வடக்கு வீதியில் ஓலைக் கொட்டிலுக்கு மாணவர்கள் கொண்டு செல்லப்பட்டு பாடசாலை இயங்கியது. எமது பாடசாலையின் முதலாவது அதிபர் திரு.M.கார்த்திகேசு அவர்கள் எழுதிய கட்டுரையின்படி 1900 ஆகிய ஆண்டுகளிலேயே யாழ் இந்துக் கல்லூரிக்கு ஆதாரப் பாடசாலைகள் (Feeder Schools) ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கம் உண்டாகியது. இதன் பயனாக, தாவடி வாசியான திரு.V.சோமாஸ்கந்தர், திரு.N.செல்லப்பா அவர்கள் மேலும் அன்றிருந்த ஆர்வலர்களின் உழைப்பினால் உருவாகிய பாடசாலை யாழ் இந்துக் கல்லூரியின் ஆதாரப் பாடசாலையாகி யாழ் இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய திரு.E.செல்லையா அவர்கள் பொறுப்பேற்றார். கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை (K.H.E.S.) எனப் பெயரிட்டு திரு.E.செல்லையா அவர்கள் முதலாவது தலைமை ஆசிரியரானார். இது கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொன்னான நாள். காலக் கிரமத்தில் பெண்களும் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர்.

திரு.E.செல்லையா அவர்கள் பொறுப்பேற்ற பின் பாடசாலை வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்தது. சிறந்த கல்விமான், ஒழுக்க சீலர், கொடை வள்ளல் ஆகிய இவர் கோவில் தென்புறத்தே உள்ள தனக்கு உரித்தான காணியை நன்கொடையாகக் கொடுத்து அதில் வடக்குத் தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் இரு மண்டபங்களைக் கட்டுவித்தார். வடக்குத் தெற்காக அமைந்த மண்டபம் தமிழ்ப் பள்ளிக்கூடத்தையும், கிழக்கு மேற்காக அமைந்த மண்படம் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையையும் உள்ளடக்கி இருந்தன. பாலர் வகுப்பு, 1ஆம் வகுப்பு, 2ஆம் வகுப்பு, 3ஆம் வகுப்புக்கள் தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் இடம் பெற்றன. கிடுகுக் கூரை, மேற்குப் பக்கப் பத்தியில் மணல். இதில் நாம் எழுதிப் பழகுவோம். மாணவர்கள் மிகவும் குறைவு. வகுப்புகளைப் பிரிக்க ஒருவித தடுப்பும் இல்லை. 3 அல்லது 4 ஆசிரியர்கள்தான் பாடசாலையில். எழுதுவது சிலேற்றில் பென்சிலால். விழுந்தால் சிலேற் உடையும். பென்சில் துண்டாகும். இத் தமிழ்ப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் தாவடி வாசியான திரு.பொன்னையா அவர்கள். இவர் "சாவித்திரி பொன்னையா" என்ற பெயரைப் பெற்றவர். "சாவித்திரி சத்தியவான்" நாடகத்தில் சாவித்திரியாக நடித்தவர். அப் பாத்திரத்திற்குரிய தோற்றம் உடையவர். வட்ட முகம், அழகான பல் வரிசை, வெண்ணிற மேனி, பின்பக்கம் பாகவதர்கள் போல் சுருண்ட மயிர். இவரின் மகன் கமலநாதன் பின்பு பாடசாலையில் கடமை புரிந்தவர்.

திரு.பொன்னையாவின் பின் வேறு பலர் தலைமை ஆசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும் இத் தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் கடமையாற்றினர். இடைக்காடு திரு.N.கந்தையா, கரவெட்டி திரு. கணபதிப்பிள்ளை, திரு.குருசாமி, திரு.கனகசபை, திரு.நாகலிங்கம் எனப் பலர் தலைமை ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். ஆசிரியர்களாக திரு.சம்பந்தரும் வித்துவான் என அழைக்கப்படும் ஒருவரும் இருந்தனர். கிழக்கு மேற்காக அமைந்த மண்டபம் ஸ்தாபகர் காலத்தில் அமைந்தபடியால் "செல்லையா மண்டபம்" என அழைக்கப்பட்டது. காலத்துக்குக் காலம் இம்மண்டபத்தில் நாடகங்களும் நடாத்தப்பட்டு வந்தன. ஆண்டிறுதிப் பரீட்சை கல்வித் திணைக்களத்தில் இருந்து வரும் பரிசோதகராலேயே நடாத்தப்பட்டு மாணவர்கள் புள்ளி அடிப்படையில் வகுப்பேற்றப்படுவர். சித்தியடையாதவர்கள் மீண்டும் அதே வகுப்பில் படிக்க வேண்டும்.

ஆண்டிறுதிப் பரீட்சை அன்று ஒரு திருநாள். மாணவர்கள் மிகவும் கவனமாக உடை அணிந்து சிலேற் பலகையைக் கழுவிச் சுத்தமாகவும் பென்சில் புதிதாகவும் கொண்டு வருவர். சிலேற் தவறி விழுந்தால் குறுக்கும் நெடுக்குமாக வெடிக்கும். பென்சில் விழுந்தால் துண்டுகளாகிவிடும். மாணவர்கள் மாத்திரமல்ல ஆசிரியர்களுமே பரபரப்பாக இருப்பர். பரீட்சை முடிவில் காரியாலயத்தில் இருக்கும் பதிவேட்டில் கல்வியின் தரம், ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன், சூழல், சுத்தம் என்பவற்றின் குறிப்பு, கணிப்பு பதியப்படும்.



எல்லோருக்கும் ஒரு கலக்கம். பரீட்சை முறையும் விசித்திரமானது. எதிர் முகமாக நின்று சிலேற்றில் விடை எழுத வேண்டும். பார்த்து எழுதுவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த முறையும் பின்பற்றப் பட்டது.

திரு.E.செல்லையாவின் தலைமையில் பாடசாலை முன்னேறியது. எமது பாடசாலை கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை எனப் பதியப்பட்டு யாழ். இந்துவின் கிளைப் பாடசாலையாக Hindu College Board இன் கீழ் இயங்கி வந்தது. இப்பெரியாருக்கு நாம் தலை வணங்குகின்றோம்.

அவர் இளைப்பாறிய பின் தெல்லிப்பளை வாசியான திரு.S.தியாகராஜா அவர்கள் தலைமை ஆசிரியரானார். சட்ட வித்தகர் சேனாதிராஜாவின் மகனான இவர் ஈராண்டு காலம் கடமை புரிந்து பாடசாலைப் பரிசோதகராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றார். மீண்டும் பாடசாலைக்குப் பரிசோதகராக வந்தார்.

ஆரம்பப் பாடசாலையில் நவராத்திரி காலங்களில் “விருத்தம் பாடுதல்” என்ற ஒரு நிகழ்வு நடைபெற்று வந்தது. பாடக்கூடிய மாணவர்களை நவராத்திரி பாடல்கள் பாடக் கற்றுக் கொடுத்து மாணவர்களின் வீட்டுக்குக் கூட்டிச் செல்வார்கள் இரு ஆசிரியர்கள். முன்கூட்டியே அறிவிக்கின்றபடியால் எங்கள் வரவை எதிர்பார்த்திருப்பார்கள். திரு.சம்பந்தரும், திரு.கனகசபையும் எங்களை அழைத்துச் செல்வார்கள். காப்புப் பாடி, சக்தி கீதங்களும் பாடி வாழ்த்துப் பாவுடன் முடிப்போம். முடிவில் எமக்குச் சிற்றுண்டி வழங்கி ஆசிரியரிடம் அன்பளிப்புச் செய்வர். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் பாடசாலை அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும். மாணவர்கள் வீடுகளுக்கு மட்டுமன்றி வேறு பல பெரியார் வீடுகளுக்கும் சென்றுள்ளோம். மாவட்ட நீதிபதி திரு.C.குமாரசாமி அவர்கள் யாழ். கோட்டையின் உள்ளேயுள்ள வீட்டில் வசித்தவர். அங்கும் சென்றோம். பிரபல சட்டத்தரணி திரு.R.R.நல்லையா வீட்டுக்கும் சென்று விருத்தம் பாடி பணம் சேகரித்தோம். இதுவே பாடசாலைக்கு நிதி சேகரிக்கும் முறையாக இருந்தது.

தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் 3ஆம் வகுப்பில் தேறிய பின் மேல் வகுப்புகளில் முதலாவது தரத்தில் சேர வேண்டும். எங்கள் 1st year வகுப்பு ஒரு பதிந்த கொட்டில். ஸ்ரேசன் வீதிக்குச் சமாந்தரமாக கிழக்கு மேற்காக அமைந்த மண் தரையை உடைய ஓலையால் வேயப்பட்ட கொட்டில். சாவகச்சேரி வாசியான திரு.C.கந்தையா எம் ஆசிரியர். வகுப்பறையை அலங்கரித்தது மயிர் மாணிக்கக் கொடி. 1928இல் திரு.S.தியாகராஜா பதவியுயர்வு பெற்றுச் சென்ற பின் புலோலி மேற்கில் வசித்த திரு.M.கார்த்திகேசு தலைமை ஆசிரியரானார். அவர் காலத்திலே பாடசாலை வளாகத்திலே ஒரு சிறிய விடுதி (Boarding House) இருந்தது. இதைப் பராமரித்த மலையாள நாயர் தானும் சுத்தமாக இருப்பதோடு விடுதியையும் சுற்றுப் புறத்தையும் மிகவும் சுத்தமாகவே வைத்திருந்தார். இதிலே தங்கியிருந்த திரு.ஆ.கார்த்திகேசு அவர்கள் சிறிது காலத்தின் பின் தன் குடும்பத்தினரையும் கொக்குவிலுக்கு அழைத்து வந்து பூநாறி மரத்தடியில் இரட்டை வீடு (Twin House) ஒன்றில் தங்கியிருந்தார். அவரது ஒரே மகன் பத்மநாதன் பட்டதாரியாகி உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவரது கடைசி மகள் எங்கள் பள்ளிக்கூடத்தில் என்னுடன் படித்தார். அவரது 1928-1942 ஆண்டுகால சேவையில் பாடசாலை திறம்பட முன்னேறியது. தமிழ்ப் பள்ளிக்கூடத்தின் எதிரே அதற்குச் சமாந்தரமாக மற்றுமொரு புதுக் கட்டிடம் கட்டுவித்து தனது காரியாலயத்தை அங்கு இடம் மாற்றினார். அதுவே பின் பொது விஞ்ஞான அறையாக மாற்றப்பட்டு திரு.N.கணேசலிங்கம் அப்பாடத்தைக் கற்பித்தார். அவரின் பின் செல்வி P.சிவக்கொழுந்து (திருமதி.P.சண்முகரட்ணம்) பொறுப்பேற்றார். திரு.M.கார்த்திகேசு காலத்தில் பணிபுரிந்த ஆசிரியர்கள் திரு.N.செல்லப்பா, திரு.K.கந்தசாமி, திரு.A.அமிர்தலிங்கம், திரு.T.சின்னத்தம்பி, திரு.S.C.தில்லைநாதன், திருமதி.P.P.பார்கவிஅம்மா, திரு.N.கணேசலிங்கம், திரு.S.நாகலிங்கம், திரு.குமாரசாமி (சுதுமலை) என்போராவர். திருமதி.P.P.பார்கவிஅம்மாவை எல்லோரும் ‘Lady Teacher’என்றுதான் அழைப்போம்.

திருமதி.P.P.பார்கவி அம்மா அவர்கள் கேரளாவில் உள்ள திருவாங்கூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அன்றைய காலத்தில் ஆசிரியை கிடைப்பது அரிது.



கலவன் பாடசாலையான K.H.E.S."கலவன்" என்ற சொல் இல்லாமலேயே இயங்கி வந்தது. பெண் ஆசிரியர் கிடைக்காத காரணத்தால் "இந்து" பத்திரிகையில் விளம்பரப்படுத்த அதன் பலனாக எமக்கு ஒரு நல்ல தாய் போன்று செல்வி. பார்கவிஅம்மா வந்து சேர்ந்தார். அவரே எம் பாடசாலையின் முதற் பெண் ஆசிரியர் ஆவார். சரித்திரம், தையல் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். தலையாழியில் ஒரு வீட்டில் வசித்தார். தன் ஆடை அணியும் முறைகளையும் மாற்றி தமிழிலும் தேர்ச்சி பெற்று ஊரோடு ஒன்றி வாழ்ந்து அரும்பணியாற்றி மாணவிகளுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருந்தார். திரு.மாதவன்பிள்ளையை மணந்து பத்மாவதி என்னும் பெண்ணும், சந்திரசேகரன் என்ற ஆணும் மக்களாக வாய்க்கப்பெற்று நீண்டகால ஆசிரியரானார். அவரது இரு பிள்ளைகளும் கொக்குவில் இந்துவிலேயே கல்வி பயின்றனர். தங்கள் தாய்மொழி மலையாளத்தையும் மறவாமல் தமிழ், ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றனர். அவரது தம்பியார் இராமகிருஷ்ணநாயர் இவர்களுடன் கூட இருந்து தொழில் புரிந்தவர். 1957ஆம் ஆண்டு தன் 55ஆவது வயதில் இளைப்பாறியபோது யாழ்ப்பாணத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்ட காரணத்தால் பிரியாவிடை நடத்த முடியாமல் திடீரென தாய்நாடு போய்ச் சேர்ந்தார். இவர் கல்லூரிக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறு. இன்னும் அவரைப் பேரன்புடனும், பெருமதிப்புடனும் நினைக்கின்றோம். அவரிடம் கல்வி கற்று அவருடன் ஆசிரியத் தொழில் புரியக் கிடைத்தது எனக்கு ஒரு பெரும் பாக்கியம். அன்னார் 1975ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

திரு.M.கார்த்திகேசு அவர்கள் காலத்தில் தரம் 1 இலிருந்து 8 வரை வகுப்புகள் நடைபெற்றன. 8ஆம் வகுப்பில் (J.S.C.) Junior School Certificate சித்தி பெற்ற மாணவர்கள் மேற்படிப்புக்காக வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. இந்நிலை திரு.M.கார்த்திகேசுவின் காலத்தில் மாறி பாடசாலை "கொக்குவில் இந்துக் கல்லூரி" (K.H.C.) என்ற பெயர் மாற்றம் பெற்று உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று உயர் வகுப்புக்கள், உயர் கல்வி என்பன கிடைக்கப் பெற்றன. நான் J.S.C. வகுப்புச் சித்தியடைந்து 1938இல் மேற்படிப்புக்கு இராமநாதன் கல்லூரிக்குச் சென்று 1940 ஜனவரியில் London Matriculation பரீட்சை எழுதி திரும்பி வந்தபோது பாடசாலை கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயர் மாறி K.H.C. ஆனது. இதுவும் ஒரு பொற்காலம். K.H.C.இன் முதலாவது அதிபர் திரு.M.கார்த்திகேசு அவர்கள். இவரது பதவிக் காலத்திலேயே கல்லூரியின் வெள்ளிவிழா கோலாகலமாக நடைபெற்றது. செல்லையா மண்டபத்தில் ஸ்தாபகரின் படம் மண்டபத்தை அலங்கரிக்க, சரஸ்வதி நடுவே வீற்றிருக்க, ஓம் என்ற இலச்சினை "கற்றதொழுகு" என்ற வாசகத்தைத் தாங்கி நிற்க முற்றத்தின் நடுவே உயர்ந்து நின்ற கொடிக்கம்பம் பல வர்ணக் கடதாசிக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு கலை நிகழ்ச்சிகளுடன் விழா கொண்டாடப்பட்டது. கல்லூரியின் இத்துணை அரிய சேவைகளை 15 வருட காலம் ஆற்றி 1942இல் இளைப்பாறினார். கல்லூரி முற்றத்திலே அவரின் பிரியாவிடைக் கூட்டம் நடைபெற்றது. அவ்விழாவின்போது இசை வல்லார் குப்பிளான் செல்லத்துரை அவர்கள் இயற்றிய "இறைவா கார்த்திகேயா" என்ற பாட்டைப் பாடி பிரியாவிடை கூறினோம்.

ஸ்தாபகரின் குறிக்கோளை முதன்மைப்படுத்தி அடுத்தடுத்து வந்த அதிபர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அரிய பங்காற்றி வந்துள்ளனர். இந்துப் பாடசாலை என்ற பெயருக்கேற்ப சமயபாடம், சமய விழாக்கள் என்பன கிரமமாக நடைபெற்றன. அடுத்த அதிபராக திரு.S.சீனிவாசகம் பொறுப்பேற்றார். அவர் ஒழுங்கமைத்து நடாத்திய உணவு, சுகாதாரக் கண்காட்சி பலரது பாராட்டைப் பெற்றது. பாடசாலை அபிவிருத்திக்கென அவர் கண்ட கனவுகள் பல. எனினும் அவரது உடல்நிலை அதற்கு ஈடுகொடுக்கவில்லை. 1943-1946 காலப்பகுதி அவருக்குரியது. தற்பொழுது பல நாடுகளிலும் எமது கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் செயற்பட்டுக் கல்லூரியை விழுதுகளெனத் தாங்கி நிற்கின்றன. இவற்றின் முன்னோடியாக உள்ளதே கொழும்பு பழைய மாணவர் சங்கம். முதன் முதலாகவுள்ள இச்சங்கத்தை 1944இல் ஸ்தாபித்த பெருமையும் திரு.S.சீனிவாசகம் அவர்களுக்கே உரியது.

திரு.S.சீனிவாசகத்தைத் தொடர்ந்து திரு.V.நாகலிங்கம் (Shakespeare நாகலிங்கம்)



கல்லூரியைப் பொறுப்பேற்றார். யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த அவரை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அதிபராக அனுப்பினர். கல்லூரி வளர, மாணவர் தொகை அதிகரிக்க இடம் தேட வேண்டிய பொறுப்பு இவருக்கானது. புதுக்கோவிலின் வடக்கேயுள்ள காணியை வாங்கும் வசதி ஏற்பட்டது. இதற்குப் பணம் தேவை. சில மாணவ மாணவிகளை கலைநிகழ்ச்சிக்காகப் பழக்கி கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களுக்குக் கூட்டிச் சென்று நிகழ்ச்சிகளை நடாத்திப் பணம் சேகரிக்கப்பட்டது. பரத நாட்டியம், வசந்த நடனம், அரிவி வெட்டு நடனம், நாடகம், கும்மி, பாட்டு என பல்சுவை நிகழ்ச்சிகள் எங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றன. திருமதி.சரஸ்வதி பாக்கியராசாவின் வயலின் இசையுடனும் அவரின் சகோதரி பரமேஸ்வரியின் மிருதங்க வாத்தியத்துடனும் திரு.S.ஞானசேகரம் இந்நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். அவரும் கொக்குவில் இந்துவின் பழைய மாணவன். 14 ஆண்களும் 12 பெண்களும் இக்கலைக் கோஷ்டியில் அடங்கினர். அதிபர் அவர்கள், திரு.அமிர்தலிங்கம், திருமதி.P.P.பார்கவிஅம்மா, செல்வி.ஞானாம்பிகை, செல்வி.சுகிர்தலக்ஷ்மி, செல்வன்.A.K.சந்திரபாலன் ஆகியோர் மாணவர்களைக் கூட்டிச் சென்றனர். 1947இல் நடந்த இந்நிகழ்வுகள் காணிக் கொள்வனவுக்குப் பெரிதும் உதவின. துரதிஷ்ட வசத்தினால் எம் அதிபர் சுகவீனமுற்று 1949இல் அமரரானார். அவருடைய முயற்சியின் பலனைக் காணாமலேயே எம்மை விட்டுப் பிரிந்தார். அவரின் பெயரிலேயே அக்காணி "நாகலிங்கம் மைதானம்" என்ற பெயருடன் விளங்குகின்றது. இதே மைதானத்தில் இவர் பெயரில் "Linga Lights" களியாட்ட விழாவை இவரைத் தொடர்ந்து அதிபரான திரு.ஹன்டி பேரின்பநாயகம் நடாத்தி வைத்தார்.

திரு.V.நாகலிங்கத்தின் பிள்ளைகளும் கொக்குவில் இந்துவிலேயே கல்வி பயின்று உயர் பதவி வகித்தனர். விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத காலத்தில் கோவில் வீதியிலேயே உடற்பயிற்சி நடாத்தப்பட்டது. பழைய பள்ளிக்கூட முற்றத்தில் பலமுறை ஓடிப் பழகுவர் மாணவர். தற்பொழுது தொழில்நுட்பக் கல்லூரி அமைந்திருக்கும் இடத்திலேயே விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. கல்லூரிக்கென மைதானம் கிடைத்த பின் ஆண்டுதோறும் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்று வந்தது. மாணவர்களின் கல்வியும் மேம்பாடடைந்து வந்தது. மாணவர்கள் இல்லங்களிடையே பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறும். ஸ்தாபகர் பெயரில் செல்லையா இல்லமும், கொக்குவில் கல்விமானும் அதிபர் M.மகாதேவனின் பேரனும் அரசாங்கத்தினால் முதலியார் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவரும் கல்வியில் பெரும் பங்கு கொண்டவருமான திரு.சபாரட்ண முதலியாரின் பெயரில் சபாரட்ணம் இல்லமும், கல்லூரி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய திரு. சபாபதிப்பிள்ளை நினைவாக சபாபதி இல்லமும் என 3 இல்லங்களாக மாணவர்கள் சேர்விலக்க ஒழுங்கில் பிரிக்கப்பட்டு வந்தனர். திரு.M.கார்த்திகேசு அதிபரின் பெயரிலும் ஒரு இல்லம் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒவ்வொரு நிறம் வழங்கப்பட்டது. செல்லையா இல்லம் நீலம், சபாரட்ணம் இல்லம் பச்சை, சபாபதி இல்லம் இளஞ்சிவப்பு, கார்த்திகேசு இல்லம் மஞ்சள் என இந்த இல்லங்களுக்கு நிறங்கள் வழங்கப்பட்டன. திரு.V.நாகலிங்கம் அமரரான பின் அவர் பெயரிலும் இல்லம் பெயரிடப்பட்டு ஊதா நிறமும் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு அதிபரும் கல்லூரியை படிப்படியாக முன்னேற்றி கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் இவற்றுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்குவித்தனர். கல்லூரிக்கு உரிய நிறம் சிவப்பும் வெள்ளையும் ஆகும். இவ்விரு நிறக் கொடியுடன், மாணவத் தலைவர் முறை, ஆண், பெண் இருபாலாருக்கும் பான்ட் வாத்தியக் கோஷ்டிகள், சமய விழாக்கள் எனப் பல துறைகளிலும் பிரபல்யம் அடைந்து கிராமத்து ஒண்மணி மகுடமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரி திகழ்கின்றது. திரு.A.நாகலிங்கம் அவர்களால் இயற்றப்பட்ட கல்லூரி கீதம் எமது சங்கீத ஆசிரியை திருமதி. சரஸ்வதி பாக்கியராசா அவர்களால் அமைக்கப்பட்ட மெட்டுடன் பாடப்பட்டு வருகின்றது.

எமக்கென ஒரு கொடி அமைக்கப்பட்டதுடன் அதற்கென ஒரு கொடிக்கீதம் எம் முன்னைநாள் ஆசிரியர் அமரர் திரு.S.வேலாயுதபிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு எமக்கு அளிக்கப்பட்டது.



அழகான மெட்டில் அமைக்கப்பட்ட இக் கொடிக் கீதமும் கல்லூரியில் இசைக்கப்படுகின்றது. எம் கல்லூரி கீதம் பழைய மாணவர் சங்கங்கள் எங் கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒலிக் கின்றது. கொழும்பில் 1944இலும், யாழ்ப்பாணத்தில் 1950இலும், சிட்னி (அவுஸ்திரேலியா) யில் 1991இலும், ஐக்கிய இராச்சியத்தில் 1992இலும், கனடாவில் 1994இலும், ஜேர்மனியில் 2002இலும், நோர்வேயில் 2005இலும், விக்டோரியா (அவுஸ்திரேலியா) வில் 2008இலும் பழைய மாணவர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இங்கெல்லாம் கல்லூரி கீதம் ஒலிக்கின்றது. 2010இல் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் போது யாழ் பழைய மாணவர் சங்கம் வைரவிழாக் கண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் தீவைப்புக்கும் 1937இல் இருந்து நெருங்கிய தொடர்பு உண்டு. சாம்பலில் இருந்து (Phoenix) பீனிக்ஸ் பறவை உயிர்த்தெழுந்தது போல கொக்குவில் இந்துக் கல்லூரியும் புத்துயிர் பெற்று புதுப் பொலிவுடன் வானுயர வளர்ந்து நிற்கின்றது. அன்றொரு நாள் காலை வணக்கத்தில் மாணவர்களாகிய நாம் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கூரையில் புகை எழுந்தது. அதிஷ்டவசமாக உடனடியாக தீ அணைக்கப்பட்டுப் பாரிய சேதம் தவிர்க்கப்பட்டது. பின் ஒரு முறை விஷமிகள் Phosphorus வைத்து விட்டுச் செல்ல வெயில் சூட்டில் தீ ஏற்பட்டது. இதில் பாரிய சேதத்தை ஏற்படுத்திய தீ ஓலைக் கொட்டில்களை எரித்து மேசை வாங்குகளையும் தீக்காயங்களுக்குள்ளாக்கி வடுக்களை உண்டாக்கியது. 1940ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்கள் இல்லாத விடத்தில் தீப்பற்றி அயலவர்கள் அணைத்தனர். அதன்பின் ஓலைக்கூரை ஓட்டுக்கூரையானது. நாகலிங்கம் மைதானத்தில் வகுப்பறைகள் கிடுகுக் கூரையுடனும் தட்டிகளுடனும் அமைக்கப்பட்டன. இது திரு.ஹன்டியின் தலைமைப் பதவிக் காலம். காலை பாடசாலைக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் வந்துகொண்டிருந்த நேரம் கொட்டில்கள் எரிந்து கிடந்தன. அதிபர் வந்து பார்த்தார். அவர் எதையும் திடசிந்தையுடனும், ஆழ்ந்த அறிவுடனும், தத்து வார்த்தத்துடனும் அணுகும் இயல்புடையவர். சுருட்டுப் புகைக்கும் பழக்கமுடையவர். எவ்வித சலனமும் இல்லாமல் ஒரு சுருட்டை எடுத்து சாம்பல் குவியலுக்குள் கிடந்த நெருப்புத் தணலில் சுருட்டுப் பற்றவைத்த சம்பவம் மறக்கப்படமாட்டாது. அந்த நேரம் அவர் மனதில் ஒரு உறுதியான எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் ஓலைக் கொட்டில்கள் வகுப்பறைகளாவது இல்லை என்பதே அதுவாக இருந்திருக்கும். ஏனெனில் அதிபரும் அவரின் உதவி அதிபர் திரு.C.K.கந்தசுவாமி அவர்களும் மலேசியா சென்று நிதி சேகரித்தனர். அங்கும் அதிபரின் அமைதியான பொறுமையான குணம் வெளிப்பட்டு சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் பணம் சேகரிக்கப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் அவரின் வேண்டுகோளின் பின் ஒரு சிறுதொகைப் பணமே கொடுக்கப்பட்டதாகவும் உப அதிபர் தன் அதிருப்தியைத் தெரிவிக்க அதிபரின் பதில் எதிர்மாறாக இருந்ததாகவும் நன்கொடையாக வந்த பணம் பாடசாலைக்கே அன்றி தனக்கல்ல எனக் கூறியதாகவும் அறிந்தோம். அவரின் மனப்போக்கையும் அமைதியான பண்பட்ட குணத்தையும் அறிகிறோம். அவர் ஒரு அறிவு மேதை.

திரு.ஹன்டியின் காலத்தில் நாகலிங்கம் மைதானத்தில் அமைந்த மாடிக் கட்டிடம் அவரின் பெயரைத் தாங்கி நிற்கின்றது. அரசியல் ஞானம் உடையவர். தெற்கில் இருந்து கல்விமான்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரை பிரதம விருந்தினர்களாக அழைத்து சிரேஷ்ட மாணவர் ஒன்றிய வருடாந்த இராப்போசன விருந்து நடாத்தி பாடசாலையின் பெயரை தெற்கிலும் அறிய வைத்தார். திரு.ஹன்டியின் தலைமையின் கீழ் பாடசாலை மிகவும் முன்னேறியது. திரு.V.நாகலிங்கத்தின் பெயரை செம்மையாக விளங்கச் செய்தார். "Linga Lights" களியாட்ட விழாவை 1950இல் அவர் பெயரில் நடத்தியதுமல்லாமல் செல்லையா, கார்த்திகேசு, சபாரட்ணம், சபாபதி என்பவர்களின் பெயரில் அமைந்திருந்த 4 இல்லங்களுடன் ஐந்தாவது இல்லமாக, மறைந்த அதிபர் திரு.V.நாகலிங்கம் அவர்களின் பெயரில் நாகலிங்கம் இல்லத்தையும் உருவாக்கினார். கல்லூரியின் பெயரைக் கல்வித் துறையில் தெற்கிலும் விளங்கச் செய்தார். அவரது புகழினால் கொக்குவில் இந்துவும் புகழ் பெற்றது.



ஆசிரியராகிய நாங்களும் புகழ் பெற்றோம். ஒவ்வொரு அதிபரின் கீழும் கடமை புரிந்ததனால் பல அறிவுரைகளையும், அனுபவங்களையும் பெற்றோம். இவை எம் வாழ்க்கையில் உறுதுணையாக இருக்கின்றன. 1960இல் திரு.ஹன்டி ஓய்வு பெற்றுச் சென்றார்.

திரு.S.சீனிவாசகம், திரு.V.நாகலிங்கம் ஆகியோரின் பின்பும் அதிபர் பொறுப்பை ஏற்க மறுத்த திரு.C.K.கந்தசுவாமி அவர்கள் திரு.ஹன்டி அவர்களின் பின் தலைமைப் பொறுப்பை 1960இல் ஏற்று பத்து ஆண்டுகள் கல்லூரியைத் தான் பெற்ற அனுபவத்துடன் திறம்பட நிர்வகித்தார். “கல்லூரிக்காக எழுதப்பட்டவன்” என்று சொல்லியே கல்லூரியின் மேம்பாட்டுக்கு உழைத்தவர். முதலாவது விஞ்ஞானப் பட்டதாரி என்ற பெருமையும் அவருக்கே உண்டு. 1940இல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக வந்து சேர்ந்தபின் விஞ்ஞானப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இரசாயனம், பௌதீகம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். மாணவர்களும் சிரத்தையுடன் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றனர். பௌதீகம் கற்பிப்பதில் மிகத் திறமை உள்ளவர். ஒரு மாணவன் மலேசியாவில் இருந்து வந்து சேர்ந்தவர். அவரின் திறமையை அறிந்து மேலதிகமாகத் தன் வீட்டுக்கு அழைத்துக் கற்பித்து ஒரு வருடத்தில் G.C.E.A.L. வகுப்புப் பரீட்சையில் சித்தியடையச் செய்தார். அவர்தான் Dr.M.சுந்தரலிங்கம். Ohio மாநிலத்தில் Columbus பல்கலைக்கழகத்தில் புகழ்பூத்த பேராசிரியராக ஆராய்ச்சித் துறையிலும் உயர்பதவி வகித்தார். விடுமுறையைக் கழிக்கத் திருகோணமலைக்குச் சென்றபோது சுனாமி அனர்த்தத்தில் இறந்தார்.

எங்கள் ஆசிரியர்களில் ஒரு தனித்தன்மை உண்டு. மாணவர்களின் கல்வியிலும், நல்லொழுக்கத்திலும் விசேட கவனம் செலுத்தி மாணவர்களை நல்லாக்குவதில் அதீத கவனம் செலுத்துவர். B.A. (Lond.) பரீட்சைக்குத் தோற்றும் போது எனக்கும் கணித பாடத்தில் உதவியுள்ளார். வண்ணார்பண்ணையில் தன் அயல் வீட்டில் வசித்த எமது ஆசிரியர் திரு.S.நாகலிங்கத்தையும் குதிரை வண்டியில் அழைத்து வருவார். காலக்கிரமத்தில் துவிச்சக்கரவண்டியிலும், பின் மோட்டார் வண்டியிலும் வந்துகொண்டிருந்தார். மேல்நாட்டு உடையும் வேட்டி சால்வையாக மாறியது. ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்று பலர் போற்றும் பாடசாலையாக கொக்குவில் இந்துவை ஆக்கினார். ஸ்தாபகரின் குறிக்கோளை மனதில் இருத்தியே அதிபர்கள், ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். இத்தகைய அதிபர்களின் கீழ் பணிபுரிந்ததை ஒரு பெரும் பேறாக எண்ணுகின்றோம். தன் கடைசிக் காலத்தை அவுஸ்திரேலியாவில் மக்களுடன் வாழ்ந்து கழித்து 2004ஆம் ஆண்டு தன் 88ஆவது வயதில் இறைபதம் எய்தினார். கதைப்பதெல்லாம் கொக்குவில் இந்துவைப் பற்றியே இருக்கும். கொக்குவில் இந்துக் கல்லூரிக்காகவே வாழ்ந்தவர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களின் சிறப்பம்சங்களில் இதுவும் ஒன்று. மேலதிக உதவி எந்தத் துறையில் மாணவனுக்கு தேவை ஏற்படுகின்றதோ அந்தத் துறையில் அம்மாணவனுக்கு உதவியளிப்பர். பெற்றோர் அந்த நம்பிக்கையுடனேயே தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். ஆசிரியர்களும் பெற்றோர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருப்பர். இது ஒரு ஊர்ப் பள்ளிக்கூடம். எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும். மாணவர்கள் வழிதவறிப் போகச் சந்தர்ப்பங்கள் மிக அரிது. மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திரு.ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் கொக்குவில் வீடொன்றில் வசித்து தன் மக்களையும் கல்லூரியில் சேர்த்து கொக்குவில் மக்களுடன் தானும் ஒருவராக இருந்து அவர்கள் வீட்டில் நடைபெறும் வைபவங்களிலும் கலந்து தானும் ஒரு கொக்குவில் வாசியானார். பலரும் அவரை மதிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இம்முறையை திரு.C.K.கந்தசுவாமி அவர்களும் பின்பற்றினார். இப்பெரியார்களிடம் ஆசிரியர்களாக இருந்த நாங்கள் நல்லறிவு, நல்லனுபவங்களைப் பெற்று ஆசிரியத் தொழிலைத் திறமையாகச் செய்யப் பழகிக் கொண்டோம். இதற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றிக்கடன் செய்ய வேண்டும். மாணவர்கள் பயனடைந்தது போல நாமும் பயனடைந்தோம்.

திரு.C.K.கந்தசுவாமி அதிபர் இளைப்பாறிச் சென்ற பின் அடுத்த அதிபர் பொறுப்பேற்கும் வரை



திரு.C.குணபாலசிங்கம் அவர்கள் தற்காலிக அதிபராகச் சிறிது காலம் கடமையாற்றிய பின் திரு.P.S.குமாரசாமி அதிபராக நியமனம் பெற்று ஒரு வருடம் கடமை புரிந்தார். அவரின் பின் கல்லூரியின் பழைய மாணவனும் கொக்குவில் வாசியுமான திரு.M.மகாதேவா அதிபரானார். இவரே ஒரு பழைய மாணவன் அதிபரானவர்களில் முதலாமவர். 1972இல் இருந்து 1980 வரை அதிபராக இருந்த பொழுது திரு.A.பஞ்சலிங்கம் அவர்கள் அதிபருக்கு வலது கரமாக இருந்து கல்லூரியின் தரத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தார். 1972-1980 காலப்பகுதியில் கடமையாற்றி இளைப்பாறிய இவரின் இரு சகோதரிகளும் கொக்குவில் இந்துவின் ஆசிரியர்கள். இவர்களின் தாய்வழிப் பேரன் திரு.சபாரட்ண முதலியார், தகப்பன் வழிப் பேரன் திரு.ம.க.வேற்பிள்ளை (மட்டுவில் கதிரவேற்பிள்ளை). இருவழிப் பேரன்மாரும் தமிழ் அறிவுக்கடல். இப்புலமை மகள் திருமதி.A.சதாசிவம் அவர்களிடம் இருந்தது. சைவசமய நெறியை முழுமையாகப் பின்பற்றினர்.

நிர்வாகத் திறமை, நிதானமான அணுகுமுறை, ஆழ்ந்த அறிவு உடைய அதிபர்களின் வரிசையில் திரு.M.மகாதேவாவின் உப அதிபராகப் பணியாற்றிய திரு.A.பஞ்சலிங்கம் அவர்கள் 1980இல் அதிபர் பொறுப்பை ஏற்றார். சில மாணவர்கள் கல்லூரியை விட்டு விலகி வேறு பாடசாலைக்குச் செல்வதை நிறுத்த வழி செய்தார். முறைப்பாடு சொல்ல வரும் பெற்றோருடன் சாந்தமாக உரையாடி நியாயத்தை உணர வைத்து அவர்களை மன நிறைவுடன் செல்ல வைப்பார். பிரச்சனைகளை அவர் அணுகும் முறையே தனி. அவர் உப அதிபராக இருந்த காலத்தில் எங்கள் கலந்துரையாடல் எல்லாம் அவருடனே அன்றி அதிபருடன் அல்ல. Diploma பட்டத்துடன் மீண்டும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வந்து பல துறைகளிலும் கல்லூரியை முன்னேற்றினார். கல்லூரி மாணவனாக, ஆசிரியராக, உப அதிபராக பின் அதிபராக கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் பல ஆண்டு காலத் தொடர்புடையவர். இரசாயனவியலில் ஆழ்ந்த அறிவும் அதை கற்பிக்கும் திறமையும் உடையவர். அவரிடம் இரசாயனம் கற்போர் மேலதிகப் படிப்புக்கு வேறு ஆசிரியரைத் தேட வேண்டிய தேவையில்லை. 1985இல் அரசாங்க புலமைப்பரிசில் பெற்று புதுடெல்கி சென்று International Diploma in Educational Planning and Administration பட்டம் பெற்றார். இது அவருடைய திறமையை எடுத்துக் காட்டுகின்றது. பல பெரியார்கள் இவரைப் போற்றியுள்ளனர். திரு.C.K.கந்தசுவாமி, திரு.C.சுப்பிரமணியம் (Orator) திரு.சரவணபவன் (சிற்பி) ஆகியோர் இவரின் திறமையை வியந்து பாராட்டியுள்ளனர்.

அவரது காலத்தில் பரிசளிப்பு விழாக்கள், இல்ல விளையாட்டுப் போட்டிகள், கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றிய இராப்போசன விருந்து என்பன ஆண்டுதோறும் நடைபெற்று வந்தன. கல்வியிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். பழைய மாணவர்களை பாடசாலை விழாக்களுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கக்கூடிய தகுதியைக் கல்லூரி பெற்றிருந்தது. இப்பாரம்பரியத்தை பழைய மாணவர் சங்கங்கள் கைக்கொள்கின்றன. பல துறைகளிலும் எம் பழைய மாணவர் பல நாடுகளிலும் உயர்பதவி வகித்து கல்லூரியின் நன்மதிப்பை உயர்த்தியும் பேணியும் வருகின்றனர். தங்களை அந்த உயர் நிலைக்கு இட்டுச் சென்ற கல்லூரித் தாயை அவர்கள் மறக்கவில்லை. கல்லூரியின் வளர்ச்சிக்காக உதவுகின்றனர். திரு.பஞ்சலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்ற பின்பும் இன்று வரை பாடசாலை அபிவிருத்தியில் பங்குகொண்டு செயலாற்றி வருகின்றார்.

ஆசிரியராக கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்த திரு.R.மகேந்திரன் விளையாட்டுத் துறையில் பெரும் பங்காற்றியவர். உதைபந்தாட்டம், சாரணியம் என்பவற்றில் மாணவர்களைப் பயிற்றுவித்து பல வெற்றிகளைக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்தவர். மாணவர்களோடு ஒருவராக நின்று பயிற்றுவித்து அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். திரு.V.சிவசுப்பிரமணியம் ஆசிரியர் 1943இல் சாரணர் இயக்கத்தைத் ஆரம்பித்தார். 1965 வரை இவ்வியக்கம் பாரிய வளர்ச்சி கண்டது. திரு.R.மகேந்திரன் பின் இப்பொறுப்பை ஏற்க, சாரணர் பல விருதுகளைப் பெற்றுப் பாடசாலைக்கு உயர் ஸ்தானத்தைப் பெற்றுக் கொடுத்தனர். சாரணர் பெற்ற பயிற்சி பாடசாலைக் கட்டடம் எரிந்த



பொழுதும் வேறு சந்தர்ப்பங்களிலும் மிகவும் பிரயோசனப்பட்டது. பின் உதவி அதிபராகி திரு.A.பஞ்சலிங்கம் மாற்றலாகி யாழ் இந்துக் கல்லூரிக்குச் சென்றபோது அதிபரானார். மாணவர்களின் கல்வியில் மட்டுமல்ல நல்லொழுக்கம் பேணுவதிலும் கண்டிப்பாய் இருந்தவர். சிறந்த விளையாட்டு வீரர்.

இவ்வண்ணம் பாடசாலை கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் நல்லொழுக்கத்திலும் மேல்நிலை அடைந்து வந்தது. அடுத்த அதிபராக திரு.P.கமலநாதன் தனக்கு முன்பு கடமையாற்றிய அதிபர்களின் வழியைப் பின்பற்றி பற்றுறுதியுடன் பாடசாலையை நிர்வகித்து இளைப்பாறிய பின் திரு.A.அகிலதாஸ் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவர் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொள்ளாதபோதும் கொக்குவிலில் வசிக்கும் கொக்குவில் இந்துவின் பழைய மாணவியை மணந்த காரணத்தால் கொக்குவிலில் வசித்து கல்லூரி நிர்வாகத்தை திறமையாக நடாத்தி வருகின்றார்.

ஸ்தாபகர் திரு.E.செல்லையா, ஸ்தாபக ஆசிரியர் திரு.N.செல்லப்பா, தாவடி திரு.சோமாஸ்கந்தர் இம்மூன்று பெரியார்களுக்கும் எமது சமூகம் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். எம் ஊருக்கு ஒரு சிறந்த பாடசாலை, கிராமத்திற்கு ஒண்மணி மகுடம் எனத் திகழ்ந்து பல கல்விமான்கள், தொழில் வல்லுனர், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டவித்தகர்கள் எனப் பல திறமைகளைப் பெற்ற பழைய மாணவர்களைக் கொண்டதாக யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கல்விக்கூடமாக எம் கல்லூரி விளங்குவதையிட்டு நாம் பெருமையடை கின்றோம். கல்லூரியை சிறப்பான நிலைக்கு உயர்த்திய அனைவரையும் போற்றி வணங்கு கின்றோம்.

எமது கல்லூரியின் புலமைப்பரிசில் திட்டம் ஒரு நீண்ட சரித்திரத்தையுடையது. பல ஆண்டு காலங்களுக்கு முன் ஆரம்பித்தவர் தற்போது கனடாவில் வசிக்கும் எங்கள் மூத்த பழைய மாணவனான திரு.R.அரசரட்ணம் அவர்கள். தன் தந்தையின் பெயரில் "இராஜரட்ணம் புலமைப் பரிசில்" என ஒரு தொகைப் பணத்தை வருடா வருடம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அவரின் திறமை, வசதிக் குறைவு என்னும் அடிப்படையில் வழங்கினார். அவரின் அண்ணன் திரு.R.சிவரட்ணம் அதிபரிடம் கொடுப்பார். இதைத் தொடர்ந்து "கர்நாடக சங்கீத புலமைப்பரிசில்," "Dr.இராஜா புலமைப்பரிசில்," "இராஜேந்திரம் புலமைப்பரிசில்" எனப் புலமைப் பரிசில்கள் வழங்குவோர் தொகை அதிகரித்தது. இதை நடைமுறைப்படுத்த ஒரு புலமைப்பரிசில் சபை ஏற்படுத்தப்பட்டு பரிசில் வழங்குவதை நிர்வகித்து வந்தது. நாட்டின் குழப்ப நிலை காரணமாக இவை செயலிழந்து போயின.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்து நம்பிக்கை நிதியத்தில் பணத்தை வைப்புச் செய்தது. இத்திட்டத்தை வகுத்தவர் திரு.M.உமாகரன். அவருக்கு உதவியாளர்களாக இருந்தவர்கள் திரு.V.இராஜகுலேந்திரன், திரு.Y.தவலிங்கம் அவர்கள். இதைத் தொடர்ந்து கல்லூரியில் "கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்" சிறப்பாக இயங்கி வருகின்றது. இவ்வகையில் இன்னுமொரு பெரியாரைக் குறிப்பிட வேண்டும். ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வரும் வைத்திய கலாநிதி திரு.T.இராஜச்சந்திரன் அவர்கள். தமிழ் அறிவை வளர்க்கவும், பேச்சாற்றலை ஊக்குவிக்கவும் ஆண்டுதோறும் "இராஜச்சந்திரன் பேச்சுப் போட்டி" என்ற பெயரில், நவராத்திரி காலத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். அவரது தாயார் திருமதி.R.N.தம்பித்துரை கொக்குவிலில் வசிக்கும்வரை, இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விஜயதசமி விழாவன்று அவரே பதக்கங்களை அணிவிப்பார். திரு.இராஜச்சந்திரன் அவர்கள் உயர் பதவியில் இருந்து தான் கற்ற கல்லூரியை மறவாது இத்தகைய சிறப்பான செயலைச் செய்துகொண்டிருக்கின்றார். அவருக்கு எம் வாழ்த்துக்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்ட கொக்குவில் ஆரம்ப பாடசாலையின் பாரிய வளர்ச்சியை நினைக்கும்போது எமக்கே வியப்பாக உள்ளது. காரியாலயம் ஒரு சிறிய அறை. அதில் அதிபர் மாத்திரமே இருப்பார். உதவி அதிபர், பிரதி அதிபர், உப அதிபர் என்றொருவர் இல்லை.



காரியாலய வேலைகளும் மிகக்குறைவு. காலப் போக்கில் காரியாலய அலுவல்கள் அதிகரிக்க ஒரு சில ஆசிரியர்கள் அலுவலகத்தில் உதவி புரிந்தனர். திரு.C.குணபாலசிங்கம், திரு.S.மகேஸ்வரஐயர் ஆகியோர் பெரிதும் உதவினர். காலக்கிரமத்தில் நிரந்தரமான காரியாலய அலுவலர் நியமிக்கப்பட்டு ஒழுங்காக அலுவல்கள் நடைபெற்று வருகின்றன.

விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அப்போது இல்லை. உடற்பயிற்சி, தையல் இத்தகைய பாடங்களைப் பொதுவான ஆசிரியர்களே கற்பிப்பர். ஆனால் இப்போதெல்லாம் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களே அந்தந்தப் பாடங்களைக் கற்பிக்கின்றனர். தற்கால மாணவர்கள் இத்துணை வசதிகளைப் பெற்றுள்ளனர். இவ்வசதி வாய்ப்புகளை மாணவர்கள் பயன்படுத்தி நல்லறிவைப் பெற்று நல்லவர்களாக வாழப் பழக வேண்டும்.

2010இல் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் நாமும் பங்குபற்றக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதுகிறோம். இந்நூற்றாண்டு விழா ஜுலை 16, 17, 18ஆம் திகதி, வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மிகவும் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. காலை, மாலையென இரு அமர்வுகளும் கல்லூரியின் காவல் தெய்வம் கிருபாகர சிவசுப்பிர மணிய சுவாமி சந்நிதியில் அவர் அனுக்கிரகத்துடன் ஆரம்பமாகி, முன்னை நாள் அதிபர்களைக் கௌரவிக்கும் முகமாகப் பெயரிடப்பட்ட அரங்கு களில், காலை நிகழ்ச்சிகள் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்திலும் மாலை நிகழ்ச்சிகள் மாலதி திறந்தவெளி அரங்கிலும் நடந்தேறின. இவை எல்லாம் கண் கொள்ளாக் காட்சிகள். மண்டபங்கள் தினமும் ஒரு அலங்காரத்துடன் காட்சியளித்தன. இவை யாவும் எக்காலத்திலும் நினைவழியா மனதில் பதிந்த நிகழ்வுகள்.

முதல் நாள் நிகழ்ச்சிகளில் பொருத்தமாக, கல்வித் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழகப் பீடாதி பதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்– இவர்களில் சிலர் எம் பழைய மாணவர்கள்– முன்னை நாள் ஆசிரியர்கள், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் மேடையை அலங்கரிக்க கல்லூரி கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து, வழமைபோல் தேவாரம் என்பவற்றுடன் விழா ஆரம்பமானது. ஆதீன முதல்வரின் ஆசியுரை முதலாவதாக இடம்பெற, தொடர்ந்து கல்வி அதிகாரிகள் கல்லூரியின் வளர்ச்சி, செயற்திறன், வளங்கள் இன்னும் பல சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டுப் பேசினர். யாழ்ப்பாணத்தில் சுற்றிவர தேசிய பாடசாலைகள் இருந்தும் கிராமப்புறத்தில் அமைந் துள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி செழித்து வளர்ந்து ஏனைய தேசிய பாடசாலைகளுக்கு நிகராக விளங்குவதையிட்டுப் பாராட்டிப் பேசினர். அப்போது நாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தோம்.

அன்று நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்பட்டது. கல்விமான்கள் ஆய்வுரை, வெளியீட்டுரை ஆற்றும்போது அது ஒரு ஆவணப் பதிவென வியந்து சிலாகித்துப் பேசினர். மாலை வேளைகள் தரமான கலை நிகழ்ச்சிகளுடன் நிறைவேறின. முதல் நாள் நிகழ்ச்சிகள் ஸ்தாபகர் திரு.E.செல்லையா அவர்கள் நினைவாக செல்லையா அரங்கில், அன்னாரின் நினைவுப் பேருரையுடன் முடிவுற்றது. இவ்வண்ணமே அடுத்து வந்த நிகழ்ச்சிகள் திரு.M.கார்த்திகேசு, திரு.V.நாகலிங்கம், திரு.M.மகாதேவா, திரு.S.ஹன்டி பேரின்பநாயகம், திரு.C.K.கந்தசுவாமி ஆகிய முன்னை நாள் அதிபர்களைக் கௌரவிப்பதாக அமைந்தன.

நீங்காத நினைவாக, அழியாத ஓவியமாக மனதிலே பதிந்துள்ள நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களைக் கண்டு, களித்து, பங்குபற்றி மனநிறைவெய்த அருள்புரிந்த இறைவனை வணங்கி, எம் கல்லூரித் தாய் தழைத்தோங்கி சிறப்புற்று விளங்க கல்லூரியின் காவல் தெய்வம் கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானை வேண்டி வணங்குகிறோம்.

*(சுகிர்த அன்னையின் கைவண்ணத்தில் உருவாக்கம் பெற்ற இக்கட்டுரையானது கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா மலரிலும் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா தகவல்களுடன் ஜெர்மனி பழைய மாணவர் சங்கத்தினரின் நூற்றாண்டு விழா மலரிலும் வெளிவந்து தற்போது இம்மலரை அலங்கரிக்கின்றது.)*


கொக்குவில் இந்துக் கல்லூரி
KOKUVIL HINDU COLLEGE










PERINBANAYAGA


HANDY PERINBANAYAGAM BLOCK
C-K-KANTHASWAMI BLOCK


KAMALANATHAN BLOCK
HANDY PERINBANA


HANDY
PERINBANAYAGAM


MAHADEVA
BLOCK


HANDY
PERINBANAYAGAM


PANCHALINGAM
AUDITORIUM









NAGALINGAM PLAY GROUND






















KHC


N-P-THEVARAJAH HOUSE GIRLS SPORTS & STUDY CENTRE




G.S.S.C




G-S.S.C




INTHIRANY MUSIC ROOM






INTHIRANY MUSIC ROOM












KHC
KHC
KHC






MAHENDRAN BLOCK
YEAR MEMORIAL
BUILDING 1985










SUBRAMANIAM HALL




HINDU PRIMARY SCHOOL


IN MEMORY OF MANIKAM.PACKIAM




KHC
KHC


KHC


1910


HINDU





# KOKUVIL HINDU COLLEGE

## – The Centenarian School
## Contributors for its Progress

**B**eginnings of great significance herald the arrival of a new era. They symbolise a Principle, a goal and an experience that revitalize man in his pursuit of happiness. It is customary for humanity to joyously celebrate and adore such legendary beginnings and their founders. Beginnings are events of epic effort, sacrifice and faith. Kokuvil Hindu College (K.H.C.) that began small turned hundred in 2010. It has grown both vertically and horizontally. In the year of its birth Sri Lanka, Ceylon as it was then called, was a colony of the British Empire. Schools were established by the British Government explicitly for the purpose of grooming local boys to be servants of the crown. Royal College, established in 1835, was modeled on the traditions of the Public School system in England.

For a long time in Jaffna secondary education had been in the hands of Christian denominations. To them education was an avowed instrument of religious propaganda. In the 1930s Hindu children had either to become Christians or expose themselves to intensive Christian propaganda if they wanted a secondary education in English. Arumuka Navalar and Rajaratnam were responsible in providing Hindu children with education in a Hindu religious background. In 1872 Navalar set up a Hindu school in Vannarpannai. Saiva Pari Palana Sabai founded in 1888 took over the Hindu High school, set up by advocate Nagalingam, which later became Jaffna Hindu College – a premier Hindu school in Sri Lanka today. The board of directors, Jaffna Hindu College and affiliated schools was incorporated in 1902. Kokuvil Hindu English School (K.H.E.S.), the predecessor of Kokuvil Hindu College, was set up in 1910 as a feeder school to Jaffna Hindu College and was managed by the Jaffna Hindu College Board until state takeover in 1960s. Kokuvil remains grateful to Mr.N.Chellappah (1910 – 1944) the ***founder teacher*** who nurtured the primary English school in its incipient years and laboured tirelessly to raise it as a secondary institution. Our gratitude, though belated, is genuine. K.H.E.S. was a bi-lingual Junior Secondary School – 'C' grade with classes in English up to the Junior School Certificate (J.S.C.) level. Because of valuable services rendered to the school by dedicated band of Head-masters like Mr.E.Chelliah, Mr.S.Thiagarajah and Mr.M.Karthigesu in the early years, the school was elevated in 1940 as a Senior Secondary School – 'B' grade with classes up to London matriculation. There were about 400 students and 15 teachers then. Mr.Karthigesu with the help of parents, past-pupils and teachers so developed the English school that it was raised to collegiate status in 1941 and Mr. Karthigesu was made its first Principal. When he retired in 1942, Mr.S.Seenivasagam succeeded as Principal for a brief period. Because of ill-health he was transferred to another school in 1946 when Mr.V.Nagalingam from Jaffna Hindu College was made Principal of Kokuvil Hindu College.

In Kokuvil, the whole complexion dramatically changed in a year's time. Free education in 1945

**S.Ratnapragasam**
**Colombo**



opened the flood gates; student admissions increased and the new Principal admirably coped with the problems he faced. Mr.Nagalingam was a cheerful personality, and was much loved and respected by the students, teachers, old students and well-wishers of the school. He recruited talented teachers, put up buildings, acquired lands, got equipment for laboratories and above all he got the school recognized as a Grade '1' college. The crowning glory of his achievements was the purchase of two and a half acres of land for the school playground. Never has so much been done in so short a time. His sudden death in 1949 was a heavy blow. The grateful school commemorated his memory by naming the playing field as "Nagalingam Grounds", by setting up a house in his name in the school and by conducting a grand carnival called "Linga Lights" in 1950.

Mr.S.Handy Perinbanayagam was appointed as Principal of K.H.C. in April 1949. He was a dedicated teacher of Jaffna College, Vaddukoddai. Besides, he was in his time a leading figure in public life. With a brief interruption, he wound up his teaching career as Principal of K.H.C. His tenure of Principalship was the College's "Golden Era". A denominational school had distinctiveness and almost a personality of its own. It fostered high values and built up loyalties around it. These values which enriched national life almost vanished with the state takeover of schools. Until Mr. Perinbanayagam's time, K.H.C. was an insignificant dot in Ceylon's educational map in the denominational system of education at that time. He bequeathed his name and fame to the school. The **carnival** he organized in 1950 was one of the best school carnivals. The first three storied building at K.H.C. was built in his time with funds raised from parents, past-pupils and well-wishers, in Sri Lanka, Singapore and Malaysia. National unity in Sri Lanka was a life-long and tenacious pursuit of his. When his term at K.H.C. ran out, he left the college with a proud reputation derived from his devoted labours for its advancement. The valedictory brochure of 1960 and the "Homage to a Guru" published in 1978 by his old pupils presented the portrait of a rare spirit – "The Quiet Communicator".

Mr.C.K.Kanthaswami succeeded in 1960 as Principal. He had been on the staff of the school from 1940 and had grown with the school. He had been working tirelessly behind the scenes to raise the school to high standards. He had been an excellent teacher and an able administrator. He was modern and forward looking and was weaned in the ways and traditions of Kokuvil. The school's educational standards had been upgraded. The college attained excellent results in public examinations. In sports, football, cricket and scouting the college earned flying colours. When the school became a state school, he handled the transition deftly. He continued the building programme as well; the eastern wing of the northern campus was a result of his efforts. For thirty long years he had served the college as science teacher, Vice-Principal and Principal and was witness to its rapid growth and fulfillment. He took early retirement in 1971. After a while spent in Jaffna he immigrated to Australia in 1989 and died there on 21st April 2004. The college published a book styled "Homage to a Guru" on 20th June that year as a tribute to his memory.

When Mr.C.K.Kanthaswami retired prematurely in 1971, he selected Mr.C.Gunapalasingam to act as Principal, which position he held from January 1971 to May 1971. Mr.Gunapalasingam joined the staff of K.H.C. in 1954. He married Nithialakshmy of the staff and became the son-in-law of one time Principal Mr.V.Nagalingam. He succeeded A.R.Rasanayagam as Deputy Principal in October 1970. He took an active part in all activities of the college and was of tremendous assistance to Principal Kanthaswamy. He left Kokuvil to join Atchuvely Christian College as Principal. Later he was Principal of Velanai Central College for eight years from 1974. Mr. Gunapalasingam was moved to Vaitheeswara Vidyalayam in 1982 and he retired from there. He died on January 31, 2005.

Mr.P.S.Cumarasamy was the next Principal. His stay was brief from 1971 to 1972. Mr. Mahadeva succeeded. He was the first old boy to be Principal, K.H.C. He maintained the tone of the school and continued the building programme as well with active assistance from Messers S.Muthukumaraswamy in Jaffna and P.S.S.Ratnasabapathy, Secretary Colombo O.S.A. in raising funds. The school fared well in both education and sports during his period.

Mr.A.Panchalingam became Principal in 1980 when Mr.Mahadeva retired. He began as a student in 1941 and ended up as its Principal for eleven years until 1991 with 33 years of service as a teacher, Deputy Principal and Principal – all in the same school. His unswerving commitment and dedication to K.H.C. is unique. Fire had interrupted Kokuvil's progress in the early 1950s and war conditions in Jaffna had their turn in the years 1987 and 1995. Yet K.H.C. moves on unabated in its advances. Mr. Panchalingam performed his work with admirable competence and thoroughness. The school is second to none in academic excellence as well as

achievements in sports and games. Mr.Panchalingam left K.H.C. in April 1991 to be Principal, Jaffna Hindu College and retired from there. For those great Principals and dedicated teachers who are not in our midst today we would say *"They toiled to build up this school and received each in their memory, praise that will never die and won a home in the minds of men where their glory remains. Their story is not graven in stone but lives far away, woven into the stuff of other men's lives".*

Mr.R.Mahendran was appointed Principal in May 1991. He had served the school in various capacities for over 20 years. He maintained the standards set by his predecessors. Mr.A.Paramanantham was a major influence in the development of sports and games in the 1950s in K.H.C. His place was taken by Mr.C.Balakrishnan, Mr.V.Ganeshalingam, Mr.R.Mahendran and Mr.T.Vilvarajah in later years. Under Mr.Mahendran's stewardship the college secured high distinctions in soccer, athletics and scouting. Mr.Mahendran was transferred in 1996 as Principal of Jaffna Hindu College.

The absence of a permanent Principal at a crucial period was detrimental to the school. With the mass exodus of people from Jaffna in October 1995, Kokuvil Hindu College suffered heavy losses materialwise. Amidst difficulties Mr.T.Kanesapillai, as acting Principal from January 1996, admirably managed the affairs of the school until the appointment of Mr.P.Kamalanathan as permanent Principal from September 1996. Mr.Kamalanathan was another old boy to occupy the Principal's chair. The school gradually resumed normalcy beginning with only 50% attendance which gradually picked up and in 2007 the college had strength of over 1,760 students with 74 teachers and four volunteer teachers. His was a daunting task in attempting to reach the pre October 1995 status-quo in school and to his credit, he had not faulted. Sports and extra curricular activities had also progressed well in the college with annual prize giving and inter-house competitions. Mr.Kamalanathan came of age (60) and retired in May 2007 when Mr.S.V.Mahendran acted as Principal.

Mr.A.Ahiladas took charge of the college in September 2007. He worked with great enthusiasm mobilising the support of parents, past-pupils and teachers for the **grand centenary celebrations** held for three days **July 16th, July 17th and July 18th of 2010** in the college. Sponsored by the Colombo O.S.A. a centenary postage stamp (denomination Rs.10) of the college and First Day Cover were also released at the school by Sri Lankan Philatelic Bureau on July 22, 2010. In recent years the emphasis has shifted more to sports but it is equally important to maintain high educational standards. Unlike his predecessors, Mr.Ahiladas fortunately had no impediments and is working enthusiastically to develop the Centenarian School to greater heights. Advances in electronic technology introduced in the school may eliminate paucity of records for the future.

***Sukirthalakshmy's father Post Master Chelliah hailed from that learned Charavanamuthu family in Kokuvil. The "Arithmetic Book Series" by Charavanamuthu was famous in schools from early 20th century. Those books authored by him were published regularly for use at different levels in Junior Schools. Since they were prescribed by the Education Department the books were well in demand then. Mental arithmetic was the second in the series which were equally popular. The publication was later continued by his kinsman Mr.Edwards until 1950s with the title changed as "Edwards Arithmetic Series" to meet the needs of schools at that time. Sukirtha teacher belonged to the third generation of that noble family. She began her schooling at K.H.C. and learned the basic moral and spiritual values. This had been her guiding star in all her endeavours. She remained totally grateful for this initiation. Besides she often recalled her indebtedness to the benevolence of some of her early teachers who voluntarily helped her to circumvent her difficult years and continue uninterruptedly her higher education. She worked with nine of these Principals of K.H.C. (1942 – 1983). She was a teacher of exemplary dedication and was loyal and faithful to every one of her superiors. She undertook with cheer additional responsibilities in the school. She won the admiration of both her colleagues and students. Her significant contribution was her full time devotion and loyalty to her "Alma Mater" even after her retirement. By a strange twist of fortune her last conscious moment was also spent amongst Kokuvilites in Canada at the "Retreat" on July 30, 2011. Her life was interwoven with the history of the college.***

Jaffna has a tradition of rich cultural heritage, respected for its high intellect and a life of peace and harmony. It is our collective duty to rise from the ashes of destruction and to rebuild something better and grander than what has unfortunately been destroyed. The college is well equipped with computers, a good laboratory, a spacious library, an auditorium, a C.K.Kanthaswamy learning centre, an enlarged playground with an open air stage and a pavilion. Girl students have been provided with facilities to learn music, other traditional arts and



games (both indoor and outdoor) in the “Girls’ Sports and Study Centre” set up at great cost (5.1 million rupees) in the N.P.Thevarajah House by Sukanya and Ragu Thevarajah (daughter and son-in-law of Sukirtha teacher). Modern facilities have all been provided to the present generation of students who must make good use of them. Special mention should be made that from year 1990 the old students’ associations of the college in overseas countries have contributed and continue to contribute a major share in the development of their “Alma Mater”. The southern campus primarily of girl students had been given a face-lift with two new 2 storied buildings.

In December 2004, Colombo Old Students’ Association of the college commemorated its Diamond Jubilee by publishing the (Hi)Story of Kokuvil Hindu College (1910 – 2004). *“It is a book replete with interesting details of the growth of K.H.C., its Principals, its staff, past pupils and all those who contributed to the success story of this great school. The production of such a great and fascinating book was praiseworthy. It gives an insight into individuals and makes them come alive in readers’ minds. What is most refreshing is that this is not an intellectual book; rather it carries naturalism that is the telling of not just one life but many. What is more, the author had no need to create character because all his* ***characters*** *have created their own stories”*, remarked the reviewer.

The Tamil School, started in Kokuvil in 1926, had to be separated on departmental direction from the collegiate section in 1976 and named Kokuvil Hindu Primary School under a separate administration. With dedicated Principals and Teachers during the last three decades it has grown into a big Primary School now, producing excellent results in Grade 5 scholarship examinations. Some children even qualified for Presidential awards. It has fifteen classes up to Grade 5 level in two storied buildings, in different premises, and a staff of twenty eight teachers and a Principal. Mrs. S.Chahathevan is its present Head from the year 2003. Past pupils like us recall with gratitude the sound foundation laid in our formative years by its legendary teachers Mr.Sambanthar, Mrs.Muthammah Thambapillai, Mr.Kanagasabai, Mrs.Sathasivam and the great Headmasters Mr.Ponniah, Mr.Kandiah and Mr.Kanapathipillai in the early years of the Tamil School. The present generation of students have been provided with all modern facilities in this school as well.

K.H.C. is much more than a school. It is rich in tradition, characterized by a century of hard work, dedication and achievement, all embedded with the legendary Kokuvil Spirit. Being part of that Great Spirit we have become someone worth today holding responsible positions of power and trust. We have achieved great heights perhaps much more than we envisaged as a school boy. How great it was to go up one form every year, being impatient to grow up to be somebody one day. And today we are somebody whose walls are filled with framed certificates and cabinets with trophies. We are loved by family, respected by subordinates and awed by peers. It was worth the long and hard journey. As we climbed the ladder of success, our teachers were watching us, mighty proud of our achievements – the very same ones, whom we rebelled against, gave funny nicknames and tried to outsmart. Our teachers were truly the ladders which they held strong till all of us climbed over them to find our destinies and fortunes. They went beyond their line of duty to make us what we are, thanks to the dedication, devotion and determination on their part. Things well begun are not half done, but well done for ever. Commensurate with growth, the rich initiation passes on. Together our teachers brought Kokuvil Hindu College up. Now she stands like a Colossus bestriding the whole environment of Kokuvil. She became a centenarian school in 2010. The great days of K.H.C. are not of the past; the great days are yet to come.

*



# தன்னம்பிக்கை தந்த எனது தலைவி சுகிர்த ரீச்சர்!



**வெற்றிவேல் ராஜகுலேந்திரன்**
முன்னாள் தலைவர் (1998–2001)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

எமது வாழ்க்கையில் நாம் பலரையும் சந்திக்கின்றோம். அவர்கள் நம் வழியில் குறுக்கிடும்போது சில நன்மைகளையும், ஒரு சில தீமைகளையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. நான் எனது வாழ்க்கையை மேற்கூறியவாறு சிந்திக்கும்போது பல நிகழ்வுகள் என் கண்முன்னே பளிச்சென்று தெரிகின்றன.

அன்றைய தினம் கல்லூரி மணி அடித்துப் பத்து நிமிடங்களுக்கு மேலாகின்றது. நான் எனது சேர்ட்டை உள்ளே திணித்துக்கொண்டு ஓடி எனது வகுப்பறைக்கு (6ஆம் வகுப்பு) வருகின்றேன். "நில்" என்று ஒரு குரல் திடீரென ஒலித்தது. நான் அப்படியே அசந்து நின்றேன். ஒரு மெல்லிய உருவம். கடுமையான பார்வை. அப்படியே என் அருகில் வந்தார். "ஏன் லேற்" என்றார். நான் அமைதியாய் அப்படியே நின்றேன். "சரி போகலாம்" என்றார். நான் எனது வகுப்பறைக்குச் சென்றேன். அன்றுதான் ஜனவரியில் கல்லூரி ஆரம்பமாகிய முதல் நாள். சிறிது நேரத்தில் எனது வகுப்பறைக்கு ஒரு ஆசிரியை வந்தார். நாம் எழுந்து நின்று "Good morning" என்றோம். அந்த ஆசிரியை என்னைத் தன்னருகே கூப்பிட்டார். நான் பயந்து பயந்து சென்றபோது அவர் புன்முறுவலுடன் என்னை அணைத்து "ஏன் பயப்படுகின்றாய்" என்றார். எனக்கு அப்போது அவர்மீது அன்பும், மரியாதையும் ஏற்பட்டன. அவர் வேறு யாருமில்லை. எமது கல்லூரி அன்னை சுகிர்த ரீச்சர்தான். அன்று முதல் சுகிர்த ரீச்சர் எனக்குப் பிடித்த ஆசிரியையாகிவிட்டார். இந்த நெருக்கம் எனது கல்லூரி வாழ்க்கையில் உயர்தர வகுப்பு வரை (A/L) நீடித்தது. நான் கல்லூரிப் படிப்பை முடித்தபின் ரீச்சரைச் சந்திக்கும் வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. கல்லூரிக் காலங்களில் அவர் எமக்குக் கல்வியை ஊட்டியதோடு எப்படி வாழ்வது, அதன் தத்துவம் என்ன என்பதையும் உணர்த்தினார்.

இதன் பின்னர் கனடாவில் அவரை மீண்டும் சந்திப்பேன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. 1994ஆம் ஆண்டு சுகிர்த ரீச்சர் கனடாவில் இருப்பதாக சில நண்பர்கள் மூலம் அறிந்தேன். எனினும் உடனே தொடர்புகொள்ள முடியவில்லை. பின்னர் ஒருவாறு அவருடைய தொலைபேசி இலக்கம் கிடைக்கப்பெற்று அவருடன் தொடர்பு கொண்டேன். அன்றைய தினம் ரீச்சருக்கும் எனக்கும் இருந்த மகிழ்ச்சி சொல்லில் அடங்காது. இதன் பின்னர் நான் கொக்குவில் விளையாட்டுக்கழக விருந்திற்குச் சென்றிருந்தேன். அங்கே முதன் முதலாக கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களைச் சந்திக்கக்கூடியதாக இருந்தது. அங்கே வந்த ஒருசில நண்பர்களுடன் எமது கல்லூரிக்கு ஒரு பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்ய உத்தேசித்து பின்னர் திருமதி.சுப்பிரமணியம் அவர்களையும் சந்தித்து உரையாடிக் கூட்டத்திற்குரிய நாளையும் குறித்துப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தினோம்.



K.H.C. O.S.A. Canada Committee – 1994/1995

அக்கூட்டத்திற்கு 247 பேர் சமூகமளித்தனர். அன்றைய கூட்டத்தில் திருமதி.சுப்பிரமணியம் தலைவரானார். நான் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். அதைத் தொடர்ந்து நான்கு வருடங்கள் ரீச்சர் தலைவராகக் கடமையாற்றினார். அவருடைய தலைமையில் நாம் அனைவரும் அவரிடம் வகுப்பறையில் இருக்கும் மாணவர்களாகவே நடந்து கொண்டோம். எல்லாப் பணிகளிலும் அவர் மனம் கோணாமல் நடந்து கொண்டோம். அவருடைய நான்கு வருட தலைமைத்துவத்திற்குப் பின்னர் அவர் தலைமைப் பதவியை என்னிடம் ஒப்படைத்தார். நான் தலைவராய் இருந்தபோது ரீச்சர் என்ன விரும்பினாரோ அவ்வழியில் பழைய மாணவர் சங்கத்தை நடத்திச் சென்றேன். ரீச்சர் எனது சேவைகளை அடிக்கடி பாராட்டி உற்சாகப்படுத்தினார். எந்தச் சிக்கலையும் இலகுவாகக் கையாளக் கற்றுக் கொடுத்தார். என்னால் மறக்க முடியாத நிகழ்வு ஒன்று உண்டு. பழைய மாணவர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் (2000ஆம் ஆண்டு) நடைபெற்று இன்று வருடாவருடம் நடைபெறும் “மகுடம் நிகழ்ச்சி” நடாத்துவது பற்றியும், நிகழ்ச்சியின் பெயர் பற்றியும் ஆராய்ந்து அதன் முடிவை அடுத்த கூட்டத்தில் தெரிவிக்குமாறு முடிவெடுக்கப்பட்டது. அடுத்த கூட்டத்திற்கு ஒரு கிழமை இருந்தது. நான் பல கோணங்களிலும் சிந்தித்து எமது கல்லூரி கீதத்தை ஒருமுறை படித்துப் பார்த்தேன். அதில் கொக்குவில் இந்து “கிராமத்துக் கொண்மணி மகுடம்” என்ற வரிகளைப் படித்துவிட்டு ரீச்சரைத் தொலைபேசியில் அழைத்து அந்த வரிகளைப் படித்துக் காட்டி அதன் விளக்கத்தையும் கூறினேன். கொக்குவில் இந்துக் கல்லூரியில் கொக்குவில் மக்கள் மட்டுமே கல்வி கற்கவில்லை. கோண்டாவில், இணுவில், தாவடி, திருநெல்வேலி, நாச்சிமார் கோவிலடி ஆகிய இடங்களில் இருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்து கல்வி கற்பது மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையிலும் பங்குபற்றுகின்றனர். இந்த ஊர்களுக்கெல்லாம் மகுடமாகத் திகழ்வது எமது கல்லூரி. ஆகவே ‘‘மகுடம்’’ என்ற பெயர் பொருத்தமாக இருக்கும் என்று கூறினேன். ரீச்சர் உடனே தொலைபேசியில் சத்தமிட்டுச் சிரித்தார். நான் என்னவென்று வியந்தேன். ஆனால் அவருடைய சிரிப்பு இறுதியில் ஆனந்தக் கண்ணீராக மாறியதை உணர்ந்தேன். பின்னர் நடந்த கூட்டத்தில் “மகுடம்” ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மகுடம் இன்று உலகம் முழுவதும் வெற்றிநடை போடுவதையிட்டு என்னால் பெருமிதம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

என்னை வாழக் கற்றுக் கொடுத்த சுகிர்த ரீச்சர் இன்றும் என் மனதில் இருந்து என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கின்றார்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

# எனது இரண்டு வருட தலைமைத்துவத்தில்...



**சி.குகதாசன்**
முன்னாள் தலைவர் (2001–2003)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

**நா**ன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1958 முதல் 1965 வரை கல்வி கற்றபோது திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளையின் தலைவராக இருந்தபோது அவருடன் இணைந்து செயலாற்றும் பேறு கிடைத்தது. இக்காலகட்டத்தில் நாம் சாதித்தவை பல, சாதிக்க முடியாமல் போனவை சில. இவற்றையெல்லாம் இன்று சீர்தூக்கிப் பார்க்கையில் என்னோடு இணைந்து செயலாற்றிய பலரும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர். அவர்களில் காலம் சென்ற எங்கள் குரு திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது.

அன்று எமது சங்க நோக்கங்கள் பல அன்னாரது மனக்கண்ணில் உதித்தவையே. அவரது முக்கிய நோக்கம், பொது விடயமானாலும் பணத்துக்காகக் கையேந்துவதைவிட அதற்காக உழைப்பதே மேல் என்பதாகும். அதன்படி சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் சந்தா பணத்தின் மூலம் சங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தோம். இந்த நடவடிக்கையின்போது தானும் சளைத்தவரல்ல என்று எங்களுடன் படிபடியாய் ஏறியவர் அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள். அத்துடன் மூன்று திரைப்படக் காட்சிகளை நடாத்தியும் பணம் திரட்டினோம்.



K.H.C. O.S.A. Canada Committee – 1995/1996



K.H.C. O.S.A. Canada Committee – 1996/1997

கனடாவில் தமிழை வளர்க்கும் பொருட்டு எம் கல்லூரியின் கனடாவாழ் பழைய மாணவர்களின் வாரிசுகளுக்காக பண்ணிசை, கட்டுரை, பேச்சு ஆகிய துறைகளில் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. வெளிக்கள விருந்தும் விளையாட்டுப் போட்டிகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நான் தலைவராக இருந்த காலத்தில் "மகுடம்" நிகழ்வினை ஒரு சிறந்த கலைவிழாவாக நடாத்தத் திட்டமிட்டபோது பெரும் சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் ஒருசில சங்க உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பும், விடாமுயற்சியும் இவ்விழாவை Bathurst வீதியில் அமைந்த "Leah Posluns Theatre" இல் தரமான நிகழ்ச்சிகளுடன் நடாத்த உதவின. இதற்கு முதுகெலும்பாக இயங்கிய எமது குரு திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களின் சேவை இன்றும் என் மனதில் நிழலாடுகின்றது. பல மண்டபங்களைப் பார்வையிட்டு மேற்குறிப்பிட்ட மண்டபத்தைத் தேர்ந்தெடுத்த பெருமை திரு.K.T.M.விஜயகுமார் அவர்களையே சாரும். 2003ஆம் ஆண்டு "மகுடம்" நிகழ்வுக்கான அரங்கு ''மார்க்கம் மணியம் அரங்கு'' என்று பெயர் சூட்டப்பட்டது. அந்நிகழ்வில் உரையாற்றிய எமது உபதலைவர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் தனது உரையில் ''சென்ற வருடம் நாடகத்தில் ஒரு பாத்திரத்தை ஏற்று நடித்து எம்மை மகிழ்வித்த மார்க்கம் மணியமும் அவரது பாரியாரும் இன்றில்லையே" என்று மனமுருகிக் கூறியபோது எல்லோருமே கண்கலங்கினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்கள் கனடாவிற்கு வருகை தந்தபோது எமது சங்கம் அவரை வரவேற்றுப் பாராட்டிக் கௌரவித்தது. அத்தருணத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கிழக்கு எல்லையில் அமைந்திருந்த 2.5 பரப்பு காணியைக் கொள்வனவு செய்வதற்காகப் பெருந்தொகை நிதி திரட்டப்பட்டது. எமது பாடசாலையில் கல்வி கற்ற கனடாவிலுள்ள பல பழைய மாணவர்களைத் தெரிந்தவரும் அவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியவருமான திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் தனது செல்வாக்கைப் பயன்படுத்தியது மேற்படி பணத்தைத் திரட்ட உதவியாக இருந்தது.

எமது சங்கத்தின் மேம்பாட்டிற்காக, நான் தலைவராக இருந்த காலத்தில் பலர் எனக்குப் பக்கபலமாக விளங்கினர். எனது இரண்டு வருட தலைமைத்துவத்தின் வெற்றிக்கும் இவர்களே காரணமாக இருந்தார்கள். இவர்களில் ஒருவரே அமரர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள். இவர் அறிவில் சிறந்தவர், சாதனையாளர், கடமையுணர்வு மிக்கவர், அத்துடன் கண்டிப்பானவர். எம் சங்கத்தின் உயிர்நாடியாக விளங்கியவர். அன்னார் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும்



K.H.C. O.S.A. Canada Committee – 1997/1998

கல்லூரியில் பணிபுரிந்தோர் ஆகியோரின் நடமாடும் தொலைபேசி எண் புத்தகம் என அன்பாக அழைக்கப்பட்டவர். அப்படிப்பட்ட அன்னையை இழந்து இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தவிக்கின்றது. எமது சங்கத்தின் பணிகள் தொடர எம் அன்னை எமக்கு மனோபலமும் ஆசியும் தரவேண்டுமென்று கேட்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.



K.H.C. O.S.A. Canada Committee – 1998/1999

# பண்பின் சிகரம் எங்கள் சுகிர்த ரீச்சர்



**யோகராஜா தவலிங்கம்**
முன்னாள் தலைவர் (2003–2004)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

**நா**ட்கள், மாதங்கள் மறைந்து வருடங்கள் வந்து சேர்ந்தாலும் இன்றும் இப்பொழுதும் எங்கள் செவிகளில் தேனாய்ப் பாய்ந்து தெவிட்டாத தீந்தமிழாய் ஒலித்துக் கொண்டிருக்கின்றது சுகிர்த ரீச்சரின் குரல். எங்களுக்கெல்லாம் சுகிர்த ரீச்சர் ஒரு ஆசிரியை மட்டுமல்ல, இன்னொரு தாய்! அன்பின் உருவமாய்; அடக்கத்தின் உறைவிடமாய்; பண்பின் சிகரமாய்; பாசத்தின் மறுஉருவமாய் உலாவந்தவரே எங்கள் சுகிர்த ரீச்சர்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"



K.H.C. O.S.A. Canada Committee – 1999/2000



K.H.C. O.S.A. Canada Committee – 2001/2002

என்பது வள்ளுவன் வாய்மொழியாகும். இத்தனை சிறந்த பண்புகளையும் ஒருங்கமையப் பெற்றவர்தான் எங்கள் சுகிர்த ரீச்சர்.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வியழகே அழகு"

என நாலடியாரில் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய அறிவும் அழகும் உடையவர்தான் எங்கள் சுகிர்த ரீச்சர்.

1994ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் நாள் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்று சுகிர்த ரீச்சர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். நான் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். முதல் நான்கு ஆண்டுகள் தலைவராக இருந்து பின் தனது மூச்சை நிறுத்தும்வரை உபதலைவராக இருந்து சங்கத்தையும் எங்களையும் வழிநடத்தினார். வாரத்தில் குறைந்தது ஆறு நாட்கள் என்னுடன் உரையாடுவார்.

மூன்று மாதங்கள் தான் நான் அவரிடம் கல்வி கற்றிருந்தாலும் கனடாவில் எமக்குள் ஒரு தாய் பிள்ளை உறவே இருந்தது. வெளியூரோ, வெளிநாடோ எங்கு செல்வதாக இருந்தாலும் தன் பிள்ளையாகக் கருதி எனக்குத் தொலைபேசியில் சொல்லிவிட்டுத்தான் செல்வார். நான் பழைய மாணவர் சங்கத் தலைவராக வந்தபோது சுகிர்த ரீச்சர் உபதலைவராகப் பதவி வகித்தார். அக்காலப்பகுதியில் நிர்வாக அனுபவங்களை எனக்குக் கற்றுத் தந்தார். தன் மண்ணையும் தன் மாணவர்களையும் தனது இரு கண்களாகக் கருதிக் காத்து வளர்த்த சுகிர்த ரீச்சர் எமது வெளிக்கள விருந்தின்போது எனது மனைவி சாந்தியின் மடியிலேயே இளைப்பாறினார். அவரது மரணம் எமக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. ஏறக்குறைய ஆறு வாரங்கள் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இறுதி வாரத்தில் சுகமடைந்து எல்லோருடனும் அன்பாகப் பேசிக்கொண்டிருந்தவர் திடீரென எம்மை எல்லாம் பதைபதைக்க விட்டுவிட்டு மறைந்து போனார். உண்மையானதும் நிரந்தரமானதுமான நித்தியானந்தப் பெருவாழ்வு பெற்றுவிட்டார் எங்கள் சுகிர்த ரீச்சர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப சுகிர்த ரீச்சர் வானுறையும் தெய்வத்துள் தெய்வமாகி விட்டார்.

வாழ்க அவர் நாமம்

வளர்க அவர் புகழ்!

# தலைமை தந்த தாயே! உன்வழி என்பணி!



**சின்னத்துரை குகனேந்திரன்**
முன்னாள் தலைவர் (2004–2006)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

எனது குருவும் உறவினருமான அன்னை சுகிர்த ரீச்சரிடமிருந்து தொலைபேசி அழைப்பு மூலம் ஒரு அன்புக் கட்டளை. தனது வீட்டில் எனது குடும்பத்தவருக்கு மதியபோசன விருந்து, அதில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் தொடர்ந்து அன்று நடைபெறவுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் பொதுக்கூட்டத்திற்குத் தங்களையும் அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக் கொண்டார். மதியபோசன விருந்தின்போது 2004-2005ஆம் ஆண்டு தலைமைப் பதவியை ஏற்று சங்கத்தை வழிநடத்தலாமே என்று ஆலோசனை கூறினார். அன்றைய எனது சொந்த வேலைப்பளு காரணமாக எனது இயலாமையைக் கூறியபோது ஏற்றுக்கொள்ள மறுத்தார். அத்துடன் கடந்த காலங்களில் நிர்வாகத்தில் எந்தவிதமான பொறுப்பும் வகிக்காமல் வெளியில் இருந்து இயங்கி ஆதரவு தந்த ஒருவர் என்ற முறையில் சங்கம் வளர்ச்சிப் பாதையில் பயணிக்க, பணியாற்ற வேண்டும் என்ற அன்னையின் அன்புக் கட்டளையையும் தட்ட முடியவில்லை, பணிந்துவிட்டேன். என் இரண்டு வருட தலைமைத்துவ காலத்தில் செயற்திட்டங்களை நிர்வாகசபையின் ஒத்துழைப்புடன் திறம்பட செயற்படுத்த எம் தலைவி உறுதுணையாக இருந்து ஆக்கமும், ஊக்கமும் தந்தார் என்று கூறினால் அது மிகையாகாது. இக்காலகட்டத்தில் எழும் சிறுசிறு அபிப்பிராய பேதங்கள், மற்றும் சச்சரவுகளை உடனுக்குடன் தீர்ப்பதற்குக் கண்ணியமான, கண்டிப்பான உத்தரவுகளை வழங்கினார். கூட்டத்தில் முடிவெடுக்கப்படாத செயற்திட்டங்கள் பற்றி



K.H.C. O.S.A. Canada Committee – 2002/2003

அன்றிரவே சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து மாற்று வழிமுறை காண்பதில் மிக உறுதியாக இருந்தார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்துடன் ஒப்பிடுகையில், 2011ஆம் ஆண்டு பொதுக்கூட்டம் மண்டபம் நிறைந்த பொதுக்கூட்டமாக நடைபெற்றது எம் தலைவி உட்பட எல்லோரையும் மகிழ்வித்தது. அத்துடன் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்குப் பலர் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தமை பழைய மாணவர் சங்கம் எந்தளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது என்பதையும், எந்த நோக்கத்துடன் இப்பணியில் செயற்பட்டோமோ அந்த நோக்கம் நிறைவேறியுள்ளது என்பதையும் காட்டுகின்றது என அன்னையவர்கள் கூறி மகிழ்வடைந்தார் என்பதை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மானிடப் பிறவியின் பயன் மானிடருக்கு நற்சேவை செய்வதும் மண்ணின் மகிமையை உணர்ந்து செயற்படுவதும் என்பதற்கமைய பிறந்த மண்ணிலும் சரி வாழ்ந்த இடத்திலும் சரி கொக்குவில் இந்து அன்னையின் உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்தார். சங்கப் பெருவிழாவாகிய ஒன்றுகூடலில் முழுமையான பங்களிப்பினை நல்கி கொக்குவில் இந்து அன்னையின் கீதத்தையும் இனிமையாக இசைத்து இறுதியாக உறுதியாக இனிப்பாடமாட்டேன் என்பதுபோல் எல்லோருக்கும் பிரியாவிடை கூறி அங்கிருந்து வைத்தியசாலை சென்றார். வைத்தியசாலையில் சில வாரங்கள் தங்கியிருந்து இறுதி வாரத்தில் மறுபிறவி பெற்று தனக்கு நெருக்கமானவர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் தனக்கே உரித்தான புன்சிரிப்புடன் அளவளாவினார். மனநிறைவுடன் அவரது ஆத்மா ஆண்டவனடி சேர, பூதவுடல் பஞ்சபூதங்களுடன் சங்கமிக்க, புகழுடல் என்றும் அழியாது எல்லோர் மனதிலும் வியாபித்துள்ளது.

அன்னாரின் ஞாபகார்த்தமாக, கனடா பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தில் ஆரம்பித்த அறக்கட்டளையில் 12 இலட்ச ரூபாவை நிரந்தர வைப்பிலிட்டுள்ளது. இந்நிரந்தர வைப்பின் மூலம் பெறப்படும் வட்டியைக் கொண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் திறமைச் சித்தி பெற்று (ஐந்து துறையிலும்) எமது கல்லூரியில் உயர்தர வகுப்புப் படிக்கும் 7 மாணவர்களுக்கு தலா ரூபா 1000 மாதாமாதம் வழங்கப்படும். அதேபோன்று உயர்தர வகுப்பில் திறமைச்சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் (ஐந்து பிரிவிலும்) 7 மாணவர்களுக்கு தலா ரூபா 3000படி விசேட புலமைப்பரிசில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிதியத்தில் நிரந்தர வைப்பிலிடப்பட்ட தொகையின் அரைப்பங்கினை அன்னாரின் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கொடுத்துதவியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எனக்குத் தலைமை தந்த தாயே! எல்லோரையும் ஒன்றிணைத்து உம்வழியில் எம்பணி தொடர்வோம். இது உறுதி.



K.H.C. O.S.A. Canada Committee – 2003/2004

# கொடி சுமந்த கொடியாள்



**மாணிக்கநடராசா ஜெகன்மோகன்**
முன்னாள் தலைவர் (2006-2008)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

**"தோ**ன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றான் வள்ளுவன். தன் வாழ்நாள் முழுவதும் புகழோடு வாழ்ந்து, தன் மறைவிற்குப் பின்னரும்கூட புகழோடு வாழும் பெருமைக்குரியவர் எங்கள் பாசத்திற்கும், பேரன்பிற்கும் பாத்திரமான சுகிர்த ரீச்சர். அவரைப் பற்றிய ஆயிரம் ஆயிரம் நினைவலைகள் என் நெஞ்சில் பசுமையாய்ப் பதிந்திருந்தாலும் அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

பசுமையான என் கல்லூரி வாழ்க்கையை எண்ணிப் பார்க்கின்றேன். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனாகக் கல்வி கற்ற காலமது. அப்போது எமக்கு ஆங்கிலம் கற்பித்தவர் சுகிர்த ரீச்சர். அதனால்தானோ என்னவோ நான் கனடாவில் ஆங்கிலத்தைச் சமாளித்துப் பேசவும், எழுதவும் இயலக்கூடியதாக இருக்கின்றது.



K.H.C. O.S.A. Canada Committee – 2004/2005

பின்னர் நான் உயர்தர வகுப்பு கற்கும் காலத்தில் ரீச்சர் பெண்களுக்கான ஒழுக்க ஆசிரியராக இருந்தார். அப்பொழுது மாணவர்களுக்கு ரீச்சரிடம் மரியாதை கலந்த பயமிருந்ததை என்னால் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. அப்போது நான் மாணவ தலைவர்களில் ஒருவனாக இருந்தபடியால் ரீச்சருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அவரின் நிழலில் வளரும் பாக்கியமும் எனக்குக் கிட்டியது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வரலாற்றிலேயே ரீச்சர்தான் மாணவியாக இருந்து, ஆசிரியராகக் கற்பித்து, உபஅதிபராகக் கடமையாற்றி அதி கூடியகாலம் தன் வாழ்நாளைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அர்ப்பணித்து ஓய்வு பெற்ற பெருமைக்குரிய பெருந்தகையாக இருப்பார் என நான் எண்ணுகின்றேன். அத்துடன் தனது சேவையைக் கைவிட்டுவிடவில்லை. 1993ஆம் ஆண்டு கனடா தேசத்திற்குக் குடியேறிவந்து அடுத்த வருடமே கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பணிபுரிந்து தன் இறுதி மூச்சை நிறுத்தும்வரை சங்கத்தின் உப தலைவராகக் கடமையாற்றி எமது கல்லூரி வளர்ச்சிக்கு மேலும் சேவைகள் செய்து எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும் அரும் பாடுபட்டு உழைத்த பெருமைக்கு உரியவர் சுகிர்த ரீச்சர்.

2006,2007ஆம் ஆண்டுகளில் சங்கத்தின் தலைவராக நான் வரக் காரணமாக இருந்தவர்களில் ரீச்சரும் ஒருவர். "ஒன்றையும் யோசிக்க வேண்டாம், நாம் இருக்கின்றோம், நீர் இந்தப் பதவியை எடும், நாம் உமக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம்" எனக்கூறியது மட்டுமல்லாமல் அப்பதவியைச் சிறப்புற நடாத்துவதற்கு நல்ல வழிகாட்டியாகவும் இருந்தவர்களில் ரீச்சர் மிக முக்கியமான ஒருவர் ஆவார்.

1994ஆம் ஆண்டு எமது சங்கத்தின் முதலாவது நிகழ்வு வெளிக்கள விருந்து. ரீச்சரின் கனடா வாழ்வில் முதல் நிகழ்வு. அன்றைய தினம் எமது கல்லூரிக் கொடியை கனடா தேசத்தில் ஏற்றி வைத்த பெருமைக்குரியவர் ரீச்சர். தனது கனடா வாழ்வில் 2011ஆம் ஆண்டு வெளிக்கள விருந்தில் இறுதியாக ஏற்றிவைத்த கொடியும் எமது கல்லூரிக் கொடியே ஆயிற்று. எமது கல்லூரி வரலாற்றில் கனடாவில் முதன்முறையாகக் கல்லூரிக் கொடியை இறுதியாகச் சுமந்து சென்று மீளாத்துயில் கொண்ட பெருமையும் எமது மதிப்பிற்கும், பாசத்திற்குமுரிய சுகிர்த ரீச்சருக்கே உரியது.

இவ்வாறு தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் எங்கள் கல்லூரிக்காக அர்ப்பணித்து வாழ்ந்த ஓர் இனிய ஆசிரியை இன்று எங்களோடு இல்லை என்றாலும் வீசும் காற்றும் வீழ்கின்ற மழைத்துளியும் வாழுகின்ற காலம்வரை அவர் நாமம் வாழும்.



K.H.C. O.S.A. Canada Committee – 2005/2006

# 17 வருட நிர்வாகத்தில்...



**சி.சு.சண்முகநாதன்**
முன்னாள் தலைவர் (2008–2010)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

**1994**ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கனடாவில் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளுடன் நிர்வாகத்திறமை, நிர்வாகத்தை வழிநடத்தல், நிர்வாகத்திற்கு அறிவுரை என்பவற்றால் பழைய மாணவர் சங்கம் கனடாவில் மிகவும் திறமையாகச் செயற்பட்டது. உடலில் இருந்து உயிர் பிரியும்வரை பாடசாலையின் நினைவுடனேயே இருந்தார்.

1995ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை நிர்வாகத்தில் அங்கம் வகிக்கும் நான் உபகாரியதரிசியாக, காரியதரிசியாக, உபபொருளாளராக, பொருளாளராக, கலை கலாச்சார அங்கத்தவராக, தலைவராக (2008-2010) இருந்துள்ளேன். இவற்றிற்குக் காரணமாகவும், என்னை வழிநடாத்துபவராகவும் இருந்தவர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள். மேலும் அன்னார் தேவைப்படும்போது அறிவுரை கூறி நிர்வாகம் திறமையாகச் செயற்பட ஒத்தாசை தந்து தனது முழுநேரத்தையும் செலவு செய்தவர். இன்று சிறகு உடைந்த பறவைபோல் நாம் உள்ளோம்.

பாடசாலையின் நூற்றாண்டு விழா 2010இல் நடைபெற்றபோது, கனடாவில் அவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற அதனைச் சரியான வழியில் நெறிப்படுத்தி இரவு பகலாக என்னுடன் சேர்ந்து உழைத்தவர்.

எதைச் செய்தாலும் சரியாகச் செய்ய வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர். அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் காட்டிய வழியை நாமும் பின்பற்றுவோமாக.



K.H.C. O.S.A. Canada Committee – 2006/2007

# 17ஆவது ஆண்டில்
## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா



**சுடர்.இ.மகேந்திரன்**
முன்னாள் தலைவர் (2010–2011)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

நான் தலைவராகக் கடமையாற்றிய இக்காலப்பகுதியில் (2010 2011) உபதலைவராகச் சேவை செய்த சுகிர்த ரீச்சரின் அரவணைப்பையும் உறுதுணையையும் பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். ஆசிரியையாக, உபஅதிபராகக் கல்லூரியில் கடமையாற்றியது போல் அதிலும் மேலாக மிகுந்த பற்றுடனும் ஆர்வத்துடனும் செயலாற்றினார். நிர்வாகசபைக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் தவறாது பங்குகொண்டது அவரது சிறப்பாகும். தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வாரி வழங்கினார். குறைகளைச் சுட்டிக் காட்டுவதும், நிறைகளைப் போற்றுவதும் அவரது இயல்பாகும். வருடாந்த பண்ணிசைப்போட்டி, கல்விசார் போட்டிகள் என்பவற்றை அவரே பொறுப்பேற்று மிகவும் திறமையாக நடாத்தினார். தகுதி வாய்ந்த நடுவர்களை அழைத்து போட்டிகளைச் சிறப்பாகச் சிக்கல்களின்றி நடாத்தினார்.

ஒருமுறை வருடாந்த வெளிக்கள விருந்தும் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்ற தினம் அதிகாலை முதல் ஒரே மழை! ஆயினும் பூங்காவிற்கு எல்லோருக்கும் முன்னதாகச் சென்று, வந்தவர்களை வரவேற்று உற்சாகப்படுத்தியதை எவ்வாறு மறக்க முடியும்? “மகுடம்” கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறப் பெரிதும் காரணமாக இருந்தவர். எமது பழைய மாணவர்களைப் பற்றிய விபரங்களும் தொலைபேசி இலக்கங்களும் அவருக்கு மனப்பாடம்! அவரது சேவை மகத்தானது.



K.H.C. O.S.A. Canada Committee – 2007/2008

# இறுதி மூச்சுவரை சுகிர்த ரீச்சரின் பங்களிப்பு



**மா.வ.ஜெகநாதன்**
தற்போதைய தலைவர் (2011...)
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா

**நா**ன் சுகிர்த ரீச்சரிடம் படிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும், எனது சகோதரர்கள் ரீச்சரிடம் படித்ததுடன் மட்டும் நிறுத்தி விடாமல் அவருடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

ரீச்சருடன் என்னுடைய அனுபவங்கள் யாவும் கனடா பழைய மாணவர் சங்கத்தின் மூலமாகவே ஆரம்பமாகிய போதிலும் நான் அவரிடம் கற்றுக்கொண்ட பாடங்கள் பலவாகும். சுகிர்த ரீச்சரின் முற்போக்கான நடவடிக்கைகள், பொறுமை, எதற்கும் இல்லை என்று சொல்லாத தன்மை, எதையும் எப்படியாவது செய்து முடிக்க வேண்டுமென்ற இயல்பு போன்ற பல குணங்கள் அவருக்குப் பெரும் மரியாதையையும் புகழையும் தேடித்தந்தன.

எங்கள் கல்லூரிக்காக நிதி திரட்டும் பணியில் பல வழிகளில் பலரும் ஈடுபட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. ஆயினும் தனது வயதையோ, உடல்



K.H.C. O.S.A. Canada Committee – 2008/2009



K.H.C. O.S.A. Canada Committee – 2009/2010

நலத்தையோ பொருட்படுத்தாது இரவு பகலாய் அயராது உழைத்தவர் எங்கள் சுகிர்த ரீச்சர். இந்த வகையில் ஒருநாள் இரவு 10 மணியளவில் திரு.குகனேந்திரனுடன் (சின்னமணி) நிதி திரட்டுவதற்காக எனது வீட்டிற்கு ரீச்சரும் வருகை தந்தது என்னையும் எனது மனைவியையும் பெருமிதத்தில் ஆழ்த்தியது. இவரது இந்த ஆற்றலை பல சந்தர்ப்பங்களில் பிறருக்கும் கூறி



K.H.C. O.S.A. Canada Committee – 2010/2011

மகிழ்ந்துள்ளோம். தொண்டு செய்வதற்கு நேரம், காலம் இல்லை என்பதனை எங்கள் எல்லோருக்கும் தனது செயல்முறை மூலம் சொல்லித் தந்தவர் எங்கள் ரீச்சர் திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் ஆவார்.

எமது கல்லூரி வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்களில் ரீச்சரும் ஒருவராவார். தன் வாழ்நாள் முழுவதையும் பாடசாலைக்கு அர்ப்பணித்து எங்கள் எல்லோரையும் அவரது அன்பிற்கும் ஆதரவிற்கும் ஆட்படுத்தியவர் எங்கள் சுகிர்த ரீச்சர்.

பிறந்த மண்ணை விட்டு கனடா வந்தபோதிலும் பழைய மாணவர் சங்க கனடா கிளை ஆரம்பிக்க முன்னோடியாக இருந்து கடைசி மூச்சிருக்கும் வரை எங்கள் பாடசாலைக்கும், பழைய மாணவர் சங்கத்திற்கும் தனது தொண்டை இடைவிடாது செய்தவராவார்.

எமது சங்கத்தின் முதலாவது ஒன்றுகூடலில் கொடியேற்றி வைத்தவர் 2011 வெளிக்கள ஒன்றுகூடலிலும் கொடியேற்றியமை சந்தர்ப்ப சூழ்நிலையோ அல்லது அவருக்கு ஏற்ற பிரியாவிடையோ என்பது வியக்கப்படக்கூடிய ஒரு விடயமாகும்.

சுகிர்த ரீச்சர் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்து எங்கள் எல்லோருடைய மனதிலும் நீங்காத இடம் பெற்றுள்ளார். இவரது பிரிவு எங்களுக்கும் பாடசாலைக்கும் பேரிழப்பாகும். அவரது மறைவின் பின் அவருக்குக் கிடைத்த இறுதி மரியாதை அவரது பங்களிப்பின் பிரதிபலிப்பாகும்.

என்றும் நீங்காத நினைவுகளுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.



## கண்ணீர் அஞ்சலி

எமது வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் மகளிர் குழுத் தலைவியும், கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவியாகக் கல்வி கற்று பின்னர் ஆசிரியராக, உபஅதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பின்னரும் கல்லூரித் தாய்க்கு சேவைகள் பல புரிந்து கனடா சென்று அங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் தலைவர், உபதலைவர் ஆகிய நிலைகளிலும் சேவையாற்றி கொக்குவில் இந்து அன்னைக்கு அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக அரும்பணியாற்றியதுடன் கொக்குவில் கிராமத்திற்கும் அளப்பரிய சேவையாற்றி செப்ரெம்பர் 8, 2011 அன்று மறைந்த எமது அன்னைக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

*- வளர்மதி சமூகத்தினர்*
*சம்பியன் லேன், கொக்குவில்*

# BIOGRAPHIC
## GLIMPSES

Jaffna is the Northern capital of Sri Lanka. Just outside its Municipal limits, about 2km away in the north lies Kokuvil, a popular village with many Hindu temples around. The Jaffna K.K.S. main road separates the village into east and west. Chelliah, Sukirthalakshmy's father lived in a house along this road in the west close to the third mile post. He hailed from a noble Hindu family. Muththachi was her mother. They had a happy life and were blessed with five children. Sukirthalakshmy, born on September 30, 1923 was the youngest – others being Sivapakiam, Ratnasabapathy, Nagamma and Balasingam. She lived up to her 88th year, all others passed away earlier than her. After the demise of her father Chelliah, the family responsibility fell on her brothers and her



*Seated from left: Chelliah (Father), Balasundaram (Brother-in-law), Sivapakiam (Sister), Muththachi (Mother)*
*Standing from left: Nagamma (Sister), Ratnasabapathy (Brother), Guest 1, Guest 2, Guest 3, Balasingam (Brother),* ***Sukirthalakshmy***

brother-in-law Balasundaram all of whom guided her until her marriage. Balasingam sacrificially put off his own marriage till his younger sister Sukirthalakshmy was settled in marriage.

Sukirthalakshmy began her primary schooling in 1927 in the Tamil school at Puthukovilady. Here she memorized, understanding their meaning, most of the poems in 'Neethi Nool Koththu" *(நீதி நூல் கொத்து)* authored by the famous Tamil poet Auvayar. The great ideals contained in these works ran in her reins and made richer the quality of her thought and action in later years. Her teachers like Sambanthar and Muthammah (Mrs.Thambapillai) identified her talents and encouraged this promising student in her early years. She passed her 3rd standard in the Tamil school and gained admission to Kokuvil Hindu English School that was in the same premises, for her secondary education as from 1930. Here she learned under great dedicated teachers, progressed well in her studies securing annual promotions and passed the J.S.C. (Junior School Certificate) exam in 1937 from Kokuvil.



Education was in the English medium and only one period was allowed for Tamil. Chellappah master, noticing her keen interest in Tamil, introduced her to "Thirukural" *(திருக்குறள்).* It holds within its pages the remedy for many of the ills affecting humanity. It belongs to all mankind. Sukirthalakshmy enjoyed its study and had attempted all her life to walk in the path that the great sage and Law-giver had marked out for man's salvation. She was good in music and was an important member of the group of students taken annually by teachers to sing in chorus *(விருத்தம் பாடுதல்)* at parents' houses during the "Navarathri" period. The first song was always an invocation to Lord Vinayaga.

"சீரோங்கு கன்னிமதி சேர்ந்த நவராத்திரியில்
பேரோங்கு சீர்விருத்தம் பேசுதற்கு–ஏரோங்கும்
செல்வமுயர் கொக்குவில்வாழ் செய்யகிருபாகரன் நற்
கல்வியருள் ஐங்கரனே காப்பு"

In her time western education was necessary as far as worldly affairs were concerned. It was English education that paid then. The competition for jobs was so keen, that she chose English education despite having to pay fees monthly for education in the English medium. However she had the necessary home training in a Saiva atmosphere into the practical aspects of the Saiva system of religion as she grew up. Latin was one

of the subjects taught in the higher classes. She mastered the study of Latin under A.Amirthalingam. Mrs.Bhargaviammah gave her a good grounding in English. Mathematics she learned from A.Nagalingam. She benefited from the individual attention of these teachers, as there were only a few female students in senior forms in the mixed school. Her sound secondary education equipped her well for higher studies. As Kokuvil Hindu College (K.H.C.) did not have classes beyond J.S.C., she joined Ramanathan College (college for ladies) in 1938. She passed her London Matriculation exam in June 1940 from there. She often expressed her gratitude for those few generous teachers at K.H.C. who volunteered assistance to continue her higher education. During her two year stay at Ramanathan College she brought honour to the college by obtaining the first prize in the music competition conducted amongst schools in Jaffna by her melodious tuneful singing of the song –

“ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்அம்மை தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்”

Recognizing her talents Ramanathan College offered to send her to India to complete her education leading to a degree. But she declined this rare offer as she longed to serve as a teacher at K.H.C. to which she was deeply indebted. By a twist of fortune she was appointed to a teaching post in Kokuvil Hindu College in 1942 on the recommendation of the Principal M.Karthigesu. She was the first female student to rise to the position of a teacher in her old school. With the 2nd world war (1939-1945) on, and with an economic depression and heavy unemployment in the country she was lucky to have got this appointment. She was assigned to teach Mathematics, English, Tamil and Latin for the senior classes. She discharged her duties well with genuine dedication and earned the love and praise of her pupils. They fondly called her “Sukirtha teacher”. Besides she continued her own studies privately, registered as an external student in the University of London (England) and acquired the B.A. degree in November 1949. When “Lady Teacher” Mrs. Bhargaviammah left for India on retirement in 1957, she became the “guardian angel” for the female students at K.H.C.



Sukirthalakshmy married K.Supramaniam, a chartered engineer (civil and water management)



on December 9, 1956. He hailed from a Hindu family from Araly East Muthumari Amman Kovilady. Kathirgamer was his father whilst his mother was Annammah. They had four children and Supramaniam was their third child – the others being Vanithamalar, Vanithalakshmy and Theivendrasingam. The new couple had a pleasant married life and lived in Kokuvil in his wife's parental home which belonged to her sister Sivapakiam at that time. Supramaniam worked in Colombo, Anuradhapura, Trincomalee, Maskeliya, Ratnapura, Batticaloa, Galle and Kurunagala. But he was good enough to permit his wife to continue her teaching career uninterruptedly at K.H.C. He chose to live alone in those places and visited his wife and children periodically. During the school holidays in April, August and December, she and her children spent their time with their father at different locations outside of Jaffna wherever he worked. When Supramaniam retired in 1980 he was the Additional Director (Administration) in the Department of Buildings under the Ministry of Housing, Construction and Local Government.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

-these are the characteristics of an ideal wife says Thiruvalluvar. Mrs.Supramaniam was a model wife with those characteristics. In their married life, they had five children in rapid succession. Sukanya was born in 1957, Chanthrika in 1959, Suthaker in 1961, Sukesini in 1963 and Sasitharan in 1965. Children, the more the merrier, are regarded as the best wealth blessed on any family and Supramaniams were extremely lucky in that respect. Since most of Sukirthalakshmy's time was spent in her school, her sister Sivapakiam and her daughters with whom she was staying until 1971 helped tremendously in raising her children. This contributed in a large measure for her success in life.

All their children had their education at K.H.C. and they have now grown

big, holding responsible positions in life. Sukanya who immigrated to Canada in 1987 married Ragu Thevarajah from Puthukovilady, Kokuvil, Jaffna on November 7, 1987 in Canada and they have a son Roshan born in 1997. They are living in Richmond Hill, Ontario, Canada. Chanthrika who immigrated to Canada in 1990 married Ananda Nagendran from Sandilipay South, Jaffna on February 3, 2001 in U.S.A. and they are living in San Francisco, California, U.S.A. Suthaker immigrated to Canada in 1990. He married Naguleswary Sivalingam from Thambachetty, Point Pedro, Jaffna on August 27, 1995 in Canada and they have two children Nila born in 1997 and Roja born in 2001. They are living in Edmonton, Alberta, Canada. Sukesini married Mahadeva Sivananthan from Nanthavil Amman Kovilady, Kokuvil, Jaffna on January 27, 1989 in Sri Lanka and immigrated to Australia in 1989 and are living in Mount Isa, Queensland, Australia. They have two children Roobiny born in 1989 and Keshan in 1992. Sasitharan who immigrated to Canada in 1989 is living in Bowser, British Columbia, Canada. These children are providing numerous awards in the name of their parents to the students in K.H.C. for their best performance on the annual prize-day in college. As a beloved mother Sukirthalakshmy was versatile, dutiful, compassionate and caring. She fondly cherished the company of her loving grandchildren.

The faith she inherited from her life-long devotion to religion and Tamil learning existed in her through life. That was the code of ethics that Tamil poets of old had formulated for the guidance of man. Tamil poetry,



*Seated from left: Chanthrika, Supramaniam, **Sukirthalakshmy***
*Standing from left: Sasitharan, Suthaker, Sukesini, Sukanya*

especially the "Thirumurais" *(திருமுறைகள்)* praises a life of virtue, of self-denial, of living not for the life here, but for the life hereafter. It enforces the truth that this life in this world and all things connected with it, are temporary and short-lived.

At K.H.C. Sukirthalakshmy was a student for 10 years and served as teacher for 39 years and took a keen interest in the progress of her charges which earned respect of the parents. Besides she knew the family background of her students. She had a phenomenal memory and would connect the child to the sister or brother who had also been a student in her school. In recognition of her long teaching service, she was appointed Deputy Principal in 1980. She cheerfully worked with A.Panchalingam, one of her past pupils, when he was appointed Principal of K.H.C. in 1980. The college made a noted progress during this period. Although her career came to a close with her retirement in 1983 her ties with the college and her loyalty and devotion in working for its welfare did not cease but were sustained by her till she breathed her last.

Without living in seclusion in retirement, she involved herself in social work in her village. She assumed charge of the "ladies section" of Valarmathy Community Centre and helped in the development of the facilities provided by it. During that period Valarmathy's Montessori school was managed by the "ladies section". Under her guidance, ladies



took active part in cultural events (Dance, Drama etc.). She also joined the administrative team of her Kula Theivam *(குலதெய்வம்)* Nanthavil Amman temple and worked for the progress of the temple until she left for Canada in 1993. Since she was a teacher to both junior and senior members of the temple administration, she acted as a bridge between the members of different age groups. During this 10 year period in Kokuvil, she actively involved herself in the activities of the K.H.C. O.S.A. there. Her devotion and loyalty to K.H.C. was such that even in Canada she was the live-wire in the O.S.A. (established in 1994) activities. She served as President for four years until 1998 and as Vice-President thereafter. She was satisfied with the contribution K.H.C. O.S.A. (Canada) made for the progress of K.H.C. since 1994. The college has now risen to a foremost position in the Peninsula with two big campuses on either side of Kirupakara Sivasubramaniya Swamy Kovil popularly known as Puthukovil, with a separate big primary school in the southern campus. She was rejoiced to see the meteoric growth of the two schools when she visited K.H.C. for its centenary celebrations in 2010. She also visited her parental home and her other house, built in 1971, in Kokuvil and left in the hope that her children and their families retain their roots in Jaffna. During her stay in Canada she visited the old students' associations in Australia (Sydney), United Kingdom and Germany.



Sukirthalakshmy is no more; she passed away on September 8, 2011. Her contributions to her school that was close to her heart were such that her memory will persist for generations to come and remain enshrined in the hearts of grateful pupils – pupils with whom she was patient and kind and not being vain, or proud, nor selfish nor irritable.

May her soul attain the "Siva Patham" she richly deserves!

June 15, 2012



Recalls her birth and early living (1923-1971) on her visit in 2010
3rd Mile post, K.K.S. Road, Kokuvil West












Rejoices in 2010 her occupation of this house (1971-1993) with family
3rd Mile post, K.K.S. Road, Kokuvil East






















CITY MEDICALS


















194



Sukirtha teacher's stay at her niece's house  during her visit in 2010
Near church, K.K.S. Road, Kokuvil East









OUR BELOVED MOTHER'S

# LAST FEW DAYS

*(July 30th 2011 to September 12th 2011)*

The annual picnic arranged by the Kokuvil Hindu College Old Students' Association (K.H.C. O.S.A.) Canada was held at Milliken Park located at the intersection of McCowan Road and Steeles Avenue in Scarborough on July 30th 2011. It was a beautiful, bright, sunny and warm summer day in Toronto, Canada. My mother was her normal self that morning and was ready to go there. My parents left home very early to oversee the arrangements. Shanthila Ravichandran obliged the couple with a ride in her car. I joined them later when the events were about to commence. The chief guest commenced the proceedings by hoisting the Canadian flag. Since the President was absent, my mother requested Mr.Mahendran, the Vice-President, to hoist the red and white College flag. But he declined in favour of my mother who was also a Vice-President and she did hoist the flag that day. Little did we realize then that Devine Will had made it to be her last such act. Members will recall that my mother, as President of K.H.C. O.S.A. Canada, was privileged to hoist this flag in 1994 at the very inception of such picnics. As the events progressed, she was quite at ease moving around happily conversing with those present. After a while, I left the park hoping to be back in the evening.



*Her last cheerful moments amongst Kokuvilites at the picnic on July 30th 2011*

The morning events were over and lunch break was announced. She joined the members for lunch (we now know that it was her last full meal). After lunch she was resting in a chair when she felt some discomfort. She found it difficult to walk. Words went around about her condition and some members offered either to take her to a hospital or to call an ambulance. She declined the offer, expressing her desire to watch the proceedings till the end of all the events. She requested the members not to worry about her and to continue with the events. None dared to act against their teacher's wish and she was allowed to rest. When I returned in the evening I found her resting quietly without any complaints of difficulty in either breathing or speaking. She told me that it was the extreme heat that made her feel tired and she would be fine after a short nap. My father and I suggested to her that we go home. She did not agree saying that she was keen on seeing the winners and distribution of prizes. When I mentioned that I was already late to pick up my son from another location she consented to go home with me. The love for her grandson prompted her to change her mind. She had to be carried into the car. On observation I felt her deteriorating condition was serious enough for hospitalization. She was taken to York Central Hospital in Richmond Hill (currently Mackenzie Richmond Hill Hospital) by ambulance.

The doctors in the emergency section attended to her immediately and found her heart rate was low. The opinion of the doctors was that she had a "heart block" which was caused by the failure of electrical signal to the heart. Had she been allowed to lie in bed without any interference she might have peacefully passed away on the 30th July itself. But it was not to be! A temporary pacemaker was inserted to relieve her. We had the opportunity to see her briefly. We were encouraged with her usual smile in her face as we entered the emergency room. While she was under observation, her heart was reported to have stopped. However doctors were successful in reviving her and placed her on life support, kept in the intensive care unit ("ICU") sedated for the patient's comfort.

Her children who lived in distant places (Chanthrika from U.S.A., Suthaker from Edmonton, Sukesini from Australia and Sasitharan from Comox) hurried to the hospital to be at her bed-side. The ventilator enabled her breathing. When the doctor inquired into the details of the patient, we informed him that she was in Canada for the last 18 years and that she was involved in social work. Perhaps because of such involvement God had blessed her with "a second chance to live" said the doctor. In a few days the temporary pacemaker was removed and the need for a permanent pacemaker was ruled out. But it took long time for her to be free of sedation. In the mean time doctors reported another complication of secretion in her lungs and she had to be treated medically for this condition. After the lapse of a week she began to recognize the family members.

Later the doctor said that she had pneumonia and treated her for it. Since the breathing tube could not be left inside her system for a long time as it may damage the vocal cord and other areas, another procedure was recommended. The benefits and risks associated with this particular procedure, considering her age, were explained to us. The family members agreed for the adoption of that procedure relying on Lord's mercy. She was gradually released from the ventilator. The doctors were now concerned over her pneumonic condition. To their surprise she recovered from pneumonia also. Fortunately there had been no damage to her brain. The family was happy that she could sit comfortably in a chair. She spoke to us all. She was able to recall from memory even the long distance telephone numbers. Meanwhile physiotherapists assisted her to use a walker which helped her walk in the available space in the ICU to the surprise of the staff; they only knew her serious condition on admission and the eventual noticeable improvement. Doctors and nurses appreciated her determination to

live and often called her “a strong lady”. As she was the smallest patient in bodily size in the ICU she was also known as “little lady”. They all admired her knowledge of English, her willing co-operation with the hospital staff and her broad smile.

September 1st, 2011 was “Vinayagar Chathurthy”. As part of an annual feature, an “abishekam” was performed at Richmond Hill Hindu Temple and we went to the hospital with His prasath. There, she was being taken out of the ICU to another room where patients get treated with regular care. As more people were allowed to see the patient here she had a stream of visitors. She was very happy to see them. She said “I have come from a different world; this is a re-birth for me; God helped my recovery as perhaps my services to Kokuvil Hindu College remain incomplete”. Her thoughts were about her school even when she was in the hospital. A few days later she expressed her desire to go home. She appeared to be back to normal; she conversed with her husband, children, in-laws, grandchildren, relatives, friends and her students. The hospital arranged to send her to a re-habilitation centre for her to spend a few days there before being sent home. We were led to believe that she had at this stage completely recovered and she would be coming home soon. The so-called recovery was deceptive. Cruel fate intervened and on September 8, 2011 around 1:30 a.m., as mentioned by Shanthila Ravichandran in her article in this volume, her heart that cooperated with her in all her trials now decided to stop. She breathed her last peacefully. We remember with gratitude God’s mercy in giving 40 days extension to her life that gave us some comfort amidst an impending irreplaceable loss.

This hospital stay was the first and the last for her in Canada. Her wish was to pass away living active. Towards the end of her stay in the hospital she was walking with the help of a walker everyday in the morning; our thanks are due to the hospital staff for helping her to be back on her feet and making her feel happy.

Her mortal remains was kept for view by visitors on September 11, 2011 (Sunday) at the Elgin Mills Cemetery and Visitation Centre located at 1591 Elgin Mills Road in Richmond Hill at the intersection of Leslie Street and Elgin Mills Road from 4:00 p.m. to 8:00 p.m. A steady stream of mourners paid their last respects to their former teacher. Friends and relatives shared in the mourning. After completing funeral rites according to Hindu custom in the morning of September 12, 2011 (Monday), the casket was ceremonially draped with K.H.C. flag, carried by relatives up to the entrance of the Chapel and was placed on a bier (பாடை) decorated with beautiful red and white flowers. The day was bright with a clear blue sky. The bier was physically carried by her former students on their shoulders from the Chapel to the crematorium. Flowers were strewn on the casket along the path and the bier carriers walked on white cloth (நிலபாவாடை) spread along the path to the crematorium; this is a tradition followed in funeral processions in Jaffna, Sri Lanka for important personages. Her youngest son Sasitharan achieved the flying position as a “Flight Engineer” in the Canadian Air Force just a week before her passing away. She was rejoiced when he conveyed the happy news of his achievement to her while in hospital. He followed the bier in “slow march” in full uniform. She was finally honoured with a military salute and the casket was taken into the chamber. My mother had left with the satisfaction of having accomplished many a mission both in respect of the family and the school she loved. The void created by her demise is difficult to be filled. Nonetheless, the love and affection bestowed on us would remain embedded as a permanent imprint in our hearts and minds for ever. Death is an inevitable foe and is a leveller of humanity.

***“Scepter and crown***
***Must tumble down***
***And in the dust be equal made***
***With the poor crooked scythe and spade”***

# Sukirtha Teacher's Last Journey













OUR GRANDMA
OUR TEACHER


OUR GRANDMA
OUR TEACHER


EXIT
OUR GRANDMA
OUR TEACHER






OUR GRAND MA
OUR TEACHER


OUR GRAND MA
OUR TEACHER


OUR GRAND MA
OUR TEACHER


OUR GRAND MA
OUR TEACHER






OUR GRAND MA


OUR GRAND MA


OUR GRAND MA


OUR GRAND MA
COLLEGE




































Items that remain in her memory can be viewed
in a "niche" in this Mausoleum

On behalf of my mother's family, I extend my grateful thanks to:-

- all who attended to her needs when she fell ill at the picnic area
- all the visitors in hospital for cheering her up
- all those who made telephonic and E-mail enquiries about her health condition
- all those who attended the visitation and the funeral ceremony
- the organizations and individuals who sent condolence messages and floral tributes
- the past pupils who carried the "funeral bier" in her last journey
- the members of K.H.C. O.S.A. (Canada) for organizing "her last journey"
- the following institutions for conducting memorial functions in their respective places:-

  -Kokuvil Hindu College – School community

  -Kokuvil Valarmathy community centre

  -K.H.C. O.S.A. in Germany

Finally our sincere thanks are due to all those who contributed valuable articles and photographs to this illustrated "Memorial Volume".

**For and on behalf of the family**
**Sukanya (Daughter)**
**Canada**

**• Roobiny Sivananthan and Keshan Sivananthan**
**Loving Grandchildren**
**Mount Isa, Queensland, Australia**

# *Our Dearest Grandmother*

We were truly privileged to have her as our grandmother. When we look back upon our photos, we have nothing but happy memories and will forever cherish the time we shared. Her endless laughter and smile along with her warm welcoming nature and friendly face have made her unforgettable not only to us, but to the numerous others she touched.

One of her many admirable attributes was her charitable nature. She helped anyone who was in need without ever expecting anything in return purely for the reason that it was the right thing to do. Morals such as these have been passed down through her family and onto us, the grandchildren. Actions do truly speak louder than words and her actions taught us helping is a way of life and the feelings accompanying such acts are in themselves the best reward.



The amount of love she had for her family cannot be expressed in words. We were grateful for the yearly birthday cards and weekly phone calls. Though we lived far away, we always knew she was a part of our lives. Whenever we spoke she encouraged us to do our best.

Throughout her lifetime she was idolized and respected by the many students whom she taught. She instilled a passion for education and learning in many, including us. Her continuing interest and support throughout our studies meant a great deal to us and we know she would have been extremely proud at my (granddaughter) university graduation.

The active and healthy lifestyle she adopted throughout her life was highly admirable and an inspiration for the younger generations regarding the importance of healthy lifestyle choices. No matter what the occasion was, she always presented herself well by wearing beautiful sarees.

So we say thank you, but not goodbye to a grandmother, mother, wife, educator and friend as you will continue to live on in our hearts; cherished forever and remembered as the wonderful person that you are.



**Roshan Thevarajah**
**Loving Grandson**
**Richmond Hill, Ontario, Canada**

# An Ode to Ammamma Dear

*A teacher to all whom she had taught*
*A beacon of hope in the great night sky*
*To teach her students was all she had sought*
*To see her pass away shed tears in my eye*

*She always helped me and answered my plea*
*From the Halloween costume she made true*
*And when she had to look after me with glee*
*She always cheered me up when I was blue*

*For she helped me in times of good and bad*
*And she moulded me into who I am*
*She is the best of all teachers I have had*
*As she had turned me a lion from lamb*

*And so we say goodbye to our teacher*
*A woman whose life was sadly dismissed*
*Whose radiant smile was her best feature*
*My dear ammamma, you will be badly missed.*

*The above sonnet, in ammamma's favourite Shakespearean style, is an echo from my memory.*

To those around her she was a teacher loved by the many she touched with her knowledge. But to me she was always my Ammamma. She was a strong-willed person. Although she appeared weak physically due to her age, her brain was alert and sharp as a sword. She was very kind and she never yelled. She always spoke in a soft voice. Her involvement in the activities of the Old Students' Association of Kokuvil Hindu College (K.H.C.O.S.A.) Canada and her dedication in the development of her old school amazed me. She was always prompt in attendance at functions organized by K.H.C. O.S.A. (Canada) with a smiling face. That smile she retained even in her final days. But these qualities were not the only memories I have. I gratefully remember her for what she had done for me.

Ammamma always took care of me when I was young. When I was at a loss at the Rainbow Village Daycare Centre during the 2003 black-out, it was Ammamma who picked me up and kept me safe until my mother came to take me home the next day. Ammamma was always there to guide me whenever I needed help in Mathematics or English, or when I needed a homemade



costume for Halloween. When I was seven years old I wanted to have a custom made costume for Halloween. I designed a "Magnet Man" costume. Ammamma took me to the store "Fabricland" and bought the required clothe in different colours suitable for my design. That costume, her handy-work, proved her sewing talent. I shall cherish retaining it in her memory all my life.

It was so heartwarming to see her face light up with pride at seeing my accomplishments in my studies. Every time my school had a professional activity day or holiday Ammamma and Parta would come over to ensure I was not alone at home. She always ensured that I was well fed. Even though she is physically absent I know that her spirit will always be by my side.

Even during her final days, Ammamma was seen with the never failing smiling face. That mild smile, reassured my hope that she would recover. But none could stop that cruel fate. She was always positive in her thoughts; her resolve never faltered. A few hours before she passed away, I went to see her in the hospital. She looked at me from head to foot as I was wearing the clothes and the pair of shoes she gifted me for my first day at school in Grade 9. Her parting words were that I should do well in my studies. At that time I did not realize that those were her last words to me. My most loved Ammamma, I promise that I shall fulfill your expectations.

•Nila Suthaker and Roja Suthaker
Loving Grandchildren
Edmonton, Alberta, Canada

# Our Paaty



Clever,
determined,
generous, and
strong-willed;

A woman who climbed all mountains
and crossed all rivers;

Who loved her family, friends,
and students with all her heart;

Who gave everything she had
and asked for nothing in return;

Who would've liked to see the smiling faces
of her family every single day;

Who only feared disappointing the people around her;

Who needed only the barest necessities of life;

Forever a resident of Kokuvil Hindu College
and her family's hearts;

# மறைந்தும்...
# மறக்க முடியாத ரீச்சர்



**சுடர் மகேந்திரன் (Canada)**
முன்னாள் அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

**கொ**க்குவில் இந்துக் கல்லூரி எனும் கல்விப் பூங்காவின் மல்லிகை 'சுகிர்தமலர்' ரீச்சர். தான் கற்ற காலத்திலும், கற்பித்த காலத்திலும் அறிவுச்சுடராக விளங்கினார். எனக்கு அவரை 1960ஆம் ஆண்டிலிருந்து தெரியும். அவர் கல்லூரியைக் கண்ணெனக் காதலித்தவர் என்றால் மிகையாகாது. மாணவிகளின் நல்லொழுக்கத்தில் மிகுந்த கவனம் எடுத்தார். தேவையான நேரத்தில் கடுமையாகவும், அதே நேரத்தில் அன்பாகவும் கண்டிக்கத் தவறியதில்லை.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

என்ற வள்ளுவர் வாக்கை அவர் நன்குணர்ந்திருந்தார். எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன என்றிராமல் தாயினும் சாலப்பரிந்து மாணவிகளை வழிநடத்தினார். மாணவிகளைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மாத்திரமல்லாமல் சங்கீதம், நடனம் போன்ற கலைகளிலும், விளையாட்டுக்களிலும் பெரிதும் ஊக்குவித்தார் என்பது போற்றுதற்குரியதாகும்.

ரீச்சர் எமது கல்லூரி வரலாற்றில் தனக்கெனத் தனியிடம் பிடித்துள்ளார் என்றால் மிகையாகாது. எமது கல்லூரியின் முதலாவது பெண் ஆசிரியை திருமதி.P.பார்கவியம்மா அவர்கள். அவர் தென்னிந்தியாவிலிருந்து ஆசிரியப் பணிக்காக இங்கு வந்தார். ஆனால் சுகிர்த ரீச்சரோ கொக்குவில் இந்துவில் கல்வி கற்று கொக்குவில் இந்துவிலேயே ஆசிரியையாகிய "முதலாவது பெண் ஆசிரியை" என்பது பெருமைக்குரியதாகும். இளவயதிலேயே ஆசிரியையாகி தம்மைக் கல்விப் பணிக்கு அர்ப்பணித்தார். இவரது ஆசிரிய சேவைக்காகப் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையிலும் "முதலாவது பெண் பிரதி அதிபர்" என்ற பெருமையைப் பெற்றார். கனடாவில் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அச்சங்கத்தின் "முதலாவது தலைவர்" என்ற புகழினைப் பெற்றார். சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து தலைவராகவும் பின்னர் இறையடி சேரும்வரை பிரதித் தலைவராகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2010ஆம் ஆண்டு எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கனடா பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதியாக அவர் தாயகம் சென்றார். ஒரு நாள் நிகழ்விற்குத் தலைமை தாங்கினார். "இங்குள்ள பழைய மாணவர்கள் எல்லோரிலும் வயதில் மூத்த மாணவி நான்" என்று அவர் கூறியபோது மண்டபத்திலிருந்த எல்லோரும் எழுந்து நின்று வாழ்த்தினார்கள். மண்டபமே மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தது. கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் கொண்டாடப்பட்ட எல்லா விழாக்களிலும், முக்கியமாக, வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டு

விழா என்று எல்லா விழாக்களிலும் பங்குபற்றியவர் என்ற பெருமை அவருக்கே உரியதாகும். கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட பல்வேறு நிதி திரட்டும் நிகழ்வுகளில் மிகுந்த அக்கறையுடனும் கடமையுணர்வோடும் பணிசெய்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

கனடா பழைய மாணவர் சங்கம் 2011ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் திகதி, சனிக்கிழமை அன்று ஸ்காபரோவிலுள்ள Milliken Parkஇல் நடத்திய வெளிக்கள விருந்தும் விளையாட்டுப் போட்டிகளும் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை. நடப்பு வருடத் தலைவர் வெளிநாடு சென்றதனால் பிரதித் தலைவர்களே அன்றைய நிகழ்விற்குத் தலைமை தாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. திருமதி.சுப்பிரமணியமும் நானுமே பிரதித் தலைவர்கள். அன்றைய நிகழ்வுதான் அவர் பங்கேற்கும் கடைசி நிகழ்வென்பதை நாம் எப்படி அறிந்திருக்க முடியும்? அவரையும் அவரது துணைவரையும் அழைத்துச் செல்ல திரு. ரவிச்சந்திரன் சம்மதித்திருந்தார். அன்று காலை எட்டு மணிக்குச் சற்று முன்பாகவே திருமதி.சுப்பிரமணியம் தொலைபேசியில் அவர்களை அழைத்து, “என்ன? நான் ஆயத்தமாகி வெளியில் வந்து நிற்கிறேன், என்ன தாமதம்?” என்று கேட்டதாகக் கண்கலங்கக் கூறினார், திருமதி.சாந்திலா ரவிச்சந்திரன். ஆம்! எந்த நிகழ்ச்சியாயினும் முந்தியே சென்று விடுவது அவர் வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நான் அங்கு (Milliken Park) சென்றபோது அவர் அங்கிருப்பவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவித்துக் கொண்டிருந்தார். அவரது முகத்தில் எவ்வித சோர்வும் காணப்படவில்லை. நிகழ்வினை நேரத்திற்குத் தொடங்க வேண்டும் என்ற ஆர்வமே அவரிடம் மேலோங்கி நின்றது.

வழமைபோல் கொடியேற்ற நிகழ்வுடன் நிகழ்ச்சிகளை ஆரம்பித்தோம். தேசியக் கொடியினைப் பிரதம விருந்தினர் ஏற்றினார். அதன்பின் “எமது கல்லூரிக் கொடியினை திருமதி.சுப்பிரமணியம் ஏற்றி வைப்பார்” என்று அறிவித்தேன். ஆனால் அவரோ, “இல்லை நீங்களே ஏற்றி வையுங்கள்” என்றார். ஆனால் நானோ, “நீங்கள்தான் ஏற்ற வேண்டும்” என்று வேண்டினேன். அவர் எமது கல்லூரிக் கொடியினை ஏற்றினார். அப்பொழுது எவருமே எண்ணியிருக்கவில்லை, அவரது வாழ்வின் “கடைசி நிகழ்ச்சி”தான் அது என்று. ஆம், தான் நேசித்த தாயின் கொடியினைத் தன் வாழ்வின் கடைசி நிகழ்ச்சியாக ஏற்றிவைத்தார்.



July 30, 2011 **அன்று நடைபெற்ற வெளிக்கள விருந்தில் கொக்குவில் பழைய மாணவர் மத்தியில் மகிழ்ச்சிகரமாக இருந்தவேளை**



மதியபோசன இடைவேளையின் போது பல பழைய மாணவர்கள் அவரோடு உரையாடி மகிழ்ந்தனர். அவரது முகத்தில் சிறிது தளர்ச்சி காணப்பட்டது. ஆயினும் எல்லோருடனும் அவர் பேசி மகிழ்ந்தார். ஆனால் நிகழ்ச்சிகள் முடிவடையுமுன்பே அவரால் தொடர்ந்து பங்குகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அந்த நிலையில்கூட அவர் வைத்திய சாலைக்குச் செல்ல விரும்பவில்லை. மிகுந்த தன்னம்பிக்கையோடு "வீட்டிற்குச் செல்லலாம்" என்று கூறியது அவரது மனத்தைரியத்தினை எடுத்துக் காட்டுகின்றது. ஆயினும், இறுதியில் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க நேரிட்டது.

அவர் வைத்தியசாலையில், ICUஇல் இருந்த காலத்தில் மிகுந்த மனத்தைரியத்துடன் இருந்தார் என்பது கவனிக்கத்தக்கதாகும். அங்கு சில நாட்களின் பின் walkerஇன் உதவியுடன் அவர் நடமாடியதைக் கண்டு வைத்தியர்கள் எல்லோருமே வியந்தனர். இந்த வயதில் இத்தகைய நோயாளிகள் எவருமே ICUஇல் நடந்ததைத் தாம் காணவேயில்லை என்று வைத்தியர்கள் கூறினார்கள். ICUஇல் இருந்து தனியறைக்கு வந்தபோது அவர் முன்புபோல் எல்லோருடனும் கதைத்ததாகவும், எல்லோரையும் சுலபமாக அடையாளம் கண்டுகொண்டு, கல்லூரி நாட்களில் பேசிய அதே தொனியில்தான் தங்களுடன் அளவளாவினார் என்றும் அவரைப் பார்க்கச் சென்ற அனைவரும் வியந்து கூறினர். நானும் அவரைப் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றேன். என்னைக் கண்டதும், "Mr.மகேந்திரன், வாருங்கோ" என்று உற்சாகத்தோடு வரவேற்றார். அப்போது அவருடன் உரையாடிக் கொண்டிருந்த பெண்மணிக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவர் நோயைக் கண்டு பயப்படவில்லை. காலனைப்பற்றி அஞ்சவுமில்லை. மிகுந்த தன்னம்பிக்கை யுடன் இருந்தார். விளக்கு அணைவதற்கு முன்பு பிரகாசமாக எரிவதைப்போல் அவர் இருந்தார் என்பதை அப்போது நாம் உணர்ந்திருக்கவில்லை. அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார் என்று அவரது மருமகன் ரகு அறிவித்தபோது என்னால் நம்ப முடியவில்லை. அவர் தன் சுயநினைவுடனே தன் கடைசி மூச்சை விடவைத்த இறைவனின் கருணையை எண்ணி வியந்தேன்.

நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த அஞ்சலி நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்ட பலர், தமது சொந்தத் தாயை இழந்ததுபோல் துயரப்பட்டனர். கனடா பழைய மாணவர் சங்கம் தனது கடமையினைச் செவ்வனே செய்தது. முன்னாள் தலைவர்கள், நடப்பு வருடத் தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், சங்க அங்கத்தவர்கள் உட்பட, மற்றும் பலரும் மிகுந்த துயரத்துடன் இறுதி அஞ்சலி நிகழ்விற்கான உதவிகளை மிகுந்த பொறுப்புடன் செய்தனர். அச் சந்தர்ப்பத்தில் அவரைப் பற்றிச் சகலரும் மனவேதனையுடன் நினைவுகூர்ந்தனர்.

அன்னாரது பூதவுடல் தாங்கிய பேழை அவரது குடும்ப உறுப்பினர்களால் மண்டபத்திற்கு வெளியே கொண்டுவரப்பட்டதும், கண்ணீர் மல்க, பழைய மாணவர்கள் அப்பேழையைப் பொறுப்பேற்று, பூந்தண்டிகையில் அதனைப் பக்குவமாக வைத்து, அவரது பூதவுடல் தாங்கிய அப்பூந்தண்டிகையைத் தங்கள் தோள்களில் மாறிமாறிச் சுமந்து, தகனம் செய்யும் இடத்திற்குத் தூக்கிச் சென்றமை மறக்கமுடியாத வரலாற்றுச் சிறப்பாகும்.

தகனம் செய்வதற்காக அவரது உடல் தாங்கிய பேழை உள்ளே எடுத்துச் செல்லப்பட்டபோது நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் மனவேதனையுடன் "மறைந்தும் .. மறக்க முடியாத தங்கள் ரீச்சரின்" ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்தித்தனர்.

அன்னாரது சேவையை நினைவுகூர்ந்து "மகுடம் 2012" விழா அவருக்காக அர்ப்பணிக்கப்பட்டது. இதனையிட்டு நாம் அனைவரும் பெருமையடைகி றோம்.

# MAHUDAM 2012

# மகுடம் 2012

2012 K.H.C. O.S.A.
(Canada)
**“MAHUDAM”**
was dedicated to
Mrs.Sukirthalakshmy
Supramaniam
(Sukirtha Teacher)













ஓம்

## நமசிவாய

## மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில் குருநாதனுக்கு மங்களம்
உத்தம பக்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்(டு) உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்தமில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக்கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

**நற்சிந்தனை**
**தவத்திரு சிவயோக சுவாமிகள்**
**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| Title: | **Mrs.Sukirthalakshmy Supramaniam**<br>**Memorial Volume 2012** |
| Compiled by: | **Ragu and Sukanya Thevarajah (Canada)** |
| Size: | **18 cm x 25 cm** |
| No. of pages: | **268**<br>Complimentary Copy |
| Layout: | **Raja**<br>(Chennai,India)<br>*nandharaja@gmail.com* |
| Wrapper design: | **Bharathiraja**<br>(Chennai,India)<br>*lenabharathi@gmail.com* |
| Co-ordinated by: | **Geethapriyan**<br>(Chennai,India)<br>*gitapriyan@yahoo.com* |
| Printed by: | **Ragaa's Graphics**<br>(Chennai,India) |
| Published by: | **Members of Mrs.Sukirthalakshmy Supramaniam's family**<br>10 Remington Drive<br>Richmond Hill<br>Ontario L4S 2N8<br>Canada<br><br>905.883.0524<br>roshant@sympatico.ca |

CONTENTS

*திதி வெண்பா* ........................................ *001*
*விநாயகர் துதி* ........................................ *002*
*பஞ்ச புராணம்* ........................................ *003*
*அறிமுகம்* ........................................ *004*
*அறிவுக் கடலொன்று அமைதியானது (கொக்குவில் இந்துக் கல்லூரி)* ......... *006*
*Introduction* ........................................ *008*
*காவியமாய் நிலைத்திட்ட கலங்கரை விளக்கம்* ***(அ.அகிலதாஸ்)*** ..................... *009*
*கண்ணீர்ப் பூக்கள் (கொக்குவில் இந்துவின் பிள்ளைகள்)* ..................................... *011*
*சாதனைகள் சுமந்திட்ட சரித்திரம் ஆனவளே (பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி)* ................... *013*
*மாநிலம் புகழும் மாதவச் செல்வி* ***(அ.பஞ்சலிங்கம்)*** ........................................ *014*
*கொக்குவில் இந்து அன்னையின் மூத்தமகள்*
*(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொக்குவில்)* ........ *015*
*நினதடி ஏத்துவோம்!* ***(இ.மகேந்திரன்)*** ........................................ *016*
*கல்லூரி மகுடத்தின் மாணிக்கக் கல்லே...*
*(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா)* .................. *017*
*நான் அறிந்த சுகிர்தம் ஆசிரியை* ***(பொ.கமலநாதன்)*** ........................................ *018*
*Last of "THE OLD BRIGADE" (Kokuvil Hindu College*
*Old Students' Association, Colombo)* ........................................ *019*
*கொக்குவில் இந்துவின் "சுகிர்த ரீச்சர்"*
***(நித்தியலட்சுமி குணபாலசிங்கம்)*** ........................................ *020*

*வளர்மதியாள் விழி நனைந்து விம்முகிறாள்*
*(கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்)........ 025*
*அர்ப்பணிப்பிற்கு இலக்கணமான பிரதி அதிபர்*
*அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்* ***(க.தேவராஜா)***............................................. *026*
*The Shining Star Forever [Kokuvil Hindu College*
*Old Students' Association (Vic) Australia Inc.]*.......................................................................... *027*
*அஞ்சலி நிகழ்வு-கொக்குவில் இந்துக் கல்லூரி* ***(ப.இராஜேஸ்வரன்)***............. *028*
*அஞ்சலி நிகழ்வு-கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும்*
*சனசமூக நிலையமும்* ***(இ.சிவசங்கர்)***.................................................................................. *034*
*அஞ்சலி நிகழ்வு-கொக்குவில் இந்துக் கல்லூரி*
*பழைய மாணவர் சங்கம் ஜெர்மனி* ***(தே.தேவகுமாரன்)***...................................... *037*
*1910ஆம் ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியின்*
*தோற்றத்திற்கான பின்னணி பற்றிய ஒரு நோக்கு*
***(சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்)***.............................................................................................. *039*
*மேன்மையுறும் பணியால் மேதினியில் நிறைந்தவளே*
*(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், ஜெர்மனி)............. 040*
*எங்கள் சுகிர்த ரீச்சர்* ***(ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி)***.......................................................... *042*
*Sukirtha Teacher – A Role Model* ***(V.Ganeshalingam)***............................................... *045*
*கல்லூரித் தாயவளின் காவிய வித்தகி* ***(ச.சந்திரசேகர்)***........................................... *046*
*என்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும் திருமதி.சுகிர்தலக்ஷ்மி*
*சுப்பிரமணியம் (சுகிர்த ரீச்சர்)* ***(சு.நாகலிங்கம்)***.......................................................... *047*
*தாங்கிடுமா நெஞ்சம்? (கொக்குவில் இந்துக் கல்லூரி*
*பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம், கொக்குவில்)*..................................... *048*
*A distinguished Kokuvilite* ***(S.Ratnapragasam)***......................................................... *050*
*ஆலமரமொன்று அடியோடு சாய்ந்ததம்மா!* ***(ஜீவா தெய்வேந்திரன்)***.......... *053*
*பழைய புகைப்படம்* ***(அ.முத்துலிங்கம்)***........................................................................ *054*
*ஊர் போற்ற வாழ்ந்த உத்தமி*
***(பரராஜசிங்கம் ஜெயலோஜினி குடும்பம்)***................................................................ *057*
*Our Wonderful Teacher and Friend, Mrs.Sukirthalakshmy Supramaniam*
***(Saraswathy Packiarasa)***........................................................................................................ *058*
*A Great Life to Celebrate* ***(A.R.Arasaratnam)***........................................................... *059*

*யாழ் கொக்குவில் இந்து அன்னையின் அருமைப் புதல்வி*
***(செல்வராணி சகாதேவன்)*** ........ *060*
*கொக்குவில் இந்துக் கல்லூரியின் தவப்புதல்வி*
***(மா.சுப்பிரமணியம்)*** ........ *062*
*கொக்குவில் இந்துவின் புதுமைப்பெண்!* ***(சிவ ஞானநாயகன்)*** ........ *064*
*Sukirtha Teacher participates in K.H.C. centenary celebrations – 2010* ........ *065*
*Sukirtha Teacher witnesses K.H.C. centenary postal stamp release – 2010* ........ *078*
*எம் நெஞ்சத்து நினைவலைகளில் நீங்காத நூற்றாண்டு விழா*
***(சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்)*** ........ *081*
*A Humble Tribute to a Former Colleague*
***(Venasithamby Rajasekaram)*** ........ *085*
*Sukirtha Teacher - An Exemplary Colleague*
***(K.Chanthramowleesan)*** ........ *086*
*என் உள்ளம் குடிகொண்ட ஆசிரியை* ***(ப.ஜெகநாதன்)*** ........ *088*
*Sukirtha Teacher in the Eyes of a Long Time Colleague* ***(M.Kanthasamy)*** ........ *091*
*The Selfless and Tireless Teacher* ***(K.Kanthapillai)*** ........ *092*
*என் ஆசிரியர், என் நண்பர், என் வழிகாட்டி, என் தெய்வம்*
*திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்* ***(தம்பிஐயா தேவராஜா)*** ........ *093*
*Remembering Sukirtha Teacher* ***(Nageswary Thurairajasingam)*** ........ *095*
*An Educator and Mentor* ***(V.Ganeshalingam)*** ........ *096*
*நீங்காத நினைவுகள்* ***(சுபத்திரா இராமநாதன்)*** ........ *097*
*எவராலும் மறக்க முடியாத எங்கள் சுகிர்த ரீச்சர்*
***(சிவநேசரத்தினம் குணரத்தினம்)*** ........ *098*
*அகமலர்ச்சி தரும் ஆசிரியர் மாணவர் தொடர்பு* ***(க.மோகனதாஸ்)*** ........ *099*
*கடமை உணர்ச்சி கொண்ட எங்கள் சுகிர்த ரீச்சர்*
***(பரமேஸ்வரி சண்முகரட்ணம்)*** ........ *100*
*என் நினைவில் சுகிர்தம் ஆசிரியை* ***(உமா கந்தையா)*** ........ *101*
*நினைவில் நிறைந்து நிற்பவர்* ***(நாமகள் சிவகுமார்)*** ........ *102*
*கொக்குவில் இந்துவின் ஆசிரிய மாணிக்கம்* ***(க.வேலாயுதம்)*** ........ *104*
*Mrs.Sukirthalakshmy Supramaniam and Mr.Kathirgamer Supramaniam*
*as Chief Guests at the K.H.C. centenary celebrations in Germany - 2011* ........ *105*

*கொக்குவில் தந்த கலங்கரை விளக்கு எனது சுகிர்த ரீச்சர்*
***(மு.வேலாயுதபிள்ளை)*** ........................................ 117
*மானிட இலக்கணத்தின் ஒரு மாண்புமிகு மாணிக்கம்!*
***(ஞானலோஜினி சிவஞானம்)*** ........................................ 119
*வளர்மதி வளம்பெற தலைமை ஏற்ற தாயே!* ***(செ.செல்வராசா)*** .................... 121
*நான் கண்ட பெண் தெய்வம்* ***(கா.பாலசுப்பிரமணியம்)*** .................... 122
*நான் கண்டறிந்த சுகிர்த ரீச்சர்* ***(ரதி சந்திரநாதன்)*** .................... 123
*கொக்குவில் இந்துவில் நடமாடிய நட்சத்திரத் திலகம்*
*திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்* ***(கலா சுந்தரேசன்)*** .................... 125
*எனது நினைவகலா சுகிர்த ரீச்சர்* ***(தேவசகாயம் நடனகுமார்)*** .................... 127
*Fond Memories of Our Sukirtha Teacher* ***(Yogam Thamotharan)*** .................... 129
*Mrs.Sukirthalakshmy Supramaniam (Sukirtha Teacher)*
*Student, Teacher, Deputy Principal (K.H.C.) and a Close Relative* ***(K.Ketheeswaran)*** ...... 131
*K.H.C. (O.S.A.) Colombo branch bids farewell to Mrs.Sukirthalakshmy Supramaniam*
*when she visited Sri Lanka in 2001* ........................................ 133
*A Legend in the History of Kokuvil Hindu College* ***(S.Rajendran)*** .................... 135
*An appreciation of Mrs.Sukirthalakshmy Supramaniam* ***(R.Tharasutha)*** .................... 137
*கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு வரலாற்றுடன் தடம்பதித்த*
*அன்னையே!* ***(ஆ.சத்தியமூர்த்தி)*** ........................................ 138
*வரலாற்றுப் பொக்கிஷம் எங்கள் சுகிர்த ரீச்சர்* ***(ச.திருக்குமார்)*** .................... 140
*ஓர் இதயம் பேசியது!!!* ***(சாந்திலா ரவிச்சந்திரன்)*** .................... 142
*கொக்குவில் இந்துக் கல்லூரிக்குக் கிடைத்த அதிஷ்டலக்ஷ்மி*
***(சுசீலா திருச்செல்வம்)*** ........................................ 144
*என் நினைவில் இருந்து சில துளிகள்* ***(கமலநாயகி தேவராஜா)*** .................... 146
*A Rare Teaching Star* ***(R.Siriratnam)*** ........................................ 148
*My Teacher, Role Model and Friend* ***(Srirani Rajeswaran)*** .................... 149
*Cherished Memories* ***(S.Kanagasundaram)*** ........................................ 150
*Excerpts from Website*
*(Kokuvil Hindu College Old Students' Association, UK)* .................... 151
*மதிப்பிற்கும் பாசத்திற்குமுரிய காலஞ்சென்ற ஆசிரியை*
*திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியத்திற்கு*
*ஒரு மாணவனின் சமர்ப்பணம்* ***(சி.சிறிரஞ்சன்)*** .................... 152

*Mrs.Sukirthalakshmy Supramaniam being honoured at the cultural event*
*"Vasantham 2005" organised by K.H.C. O.S.A. (UK)*.................................................. 153
*நான் அறிந்த ரீச்சர்! **(ராஜா மகேந்திரன்)***.................................................. 157
*கொக்குவில் அன்னை பெற்றெடுத்த தங்கமகள் **(இ.திவ்யா)***.................................................. 159
*எனது கல்விப் பாதையில் சுகிர்த ரீச்சர் **(K.A.ஸ்ரீகிருஷ்ணராஜ்)***.................................................. 161
*சுகிர்த ரீச்சர் நாவினால் நையப் புடைத்ததும்*
*நையாண்டி பண்ணியதும் **(வேதநாயகம் விக்னராஜா)***.................................................. 163
*A Remarkable and Favourite English Teacher **(K.Rasanayagam)***.................................................. 165
*சுகிர்தம் ஓர் அமிர்தம் **(சு.வரதராசேஸ்வரமுதலி)***.................................................. 166
*வாழ்ந்த தெய்வம் **(இ.டிலானி)***.................................................. 168
*Mrs.Sukirthalakshmy Supramaniam is being feted by*
*K.H.C. O.S.A. – Canada at the K.H.C. centenary celebration - 2010*.................................................. 169
*கல்வி அறிவைத் தந்த குரு **(தே.தேவகுமாரன்)***.................................................. 177
*நான் அறிந்த நல்லாசிரியை அமரர்*
*திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் **(ஆனந்தர் சுப்பிரமணியம்)***.................................................. 179
*பெண் தலைமைத்துவம் **(சு.பரமேஸ்வரன்)***.................................................. 181
*அன்பு ஆசிரியையின் நினைவுகள் ஆயிரம் ஆயிரம் **(S.சாந்தநாதன்)***.................................................. 183
*An Ideal and a Perfect Teacher **(S.Sivanujan).***.................................................. 184
*எனது பார்வையில்... திருமதி.சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்*
***(S.கோகுலன்)***.................................................. 185
*வளர்ச்சிப் பாதையின் வழித்தடத்தில் வலம் வரும்*
*கொக்குவில் இந்து அன்னை **(சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்)***.................................................. 187
*Kokuvil Hindu College – The Centenarian School*
*Contributors for its Progress **(S.Ratnapragasam)***.................................................. 209
*தன்னம்பிக்கை தந்த எனது தலைவி சுகிர்த ரீச்சர்!*
***(வெற்றிவேல் ராஜகுலேந்திரன்)***.................................................. 213
*எனது இரண்டு வருட தலைமைத்துவத்தில் **(சி.குகதாசன்)***.................................................. 215
*பண்பின் சிகரம் எங்கள் சுகிர்த ரீச்சர் **(யோகராஜா தவலிங்கம்)***.................................................. 218
*தலைமை தந்த தாயே! உன்வழி என்பணி!*
***(சின்னத்துரை குகனேந்திரன்)***.................................................. 220
*கொடி சுமந்த கொடியாள் **(மாணிக்கநடராசா ஜெகன்மோகன்)***.................................................. 222
*17 வருட நிர்வாகத்தில் **(சி.சு.சண்முகநாதன்)***.................................................. 224

*17ஆவது ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரி*
*பழைய மாணவர் சங்கம் கனடா* ***(சுடர்.இ.மகேந்திரன்)*** ..................................... *225*
*இறுதி மூச்சுவரை சுகிர்த ரீச்சரின் பங்களிப்பு* ***(மா.வ.ஜெகநாதன்)*** ............. *226*
*கண்ணீர் அஞ்சலி (வளர்மதி சமூகத்தினர்)* ............................................................. *228*
*Biographic Glimpses* ............................................................................................... *229*
*Our Beloved Mother's Last Few Days*
*(July 30th 2011 to September 12th 2011)* ***(Sukanya, daughter)*** ................................................. *241*
*Our Dearest Grandmother* ***(Roobiny Sivananthan and Keshan Sivananthan)*** .................... *252*
*An Ode to Ammamma Dear* ***(Roshan Thevarajah)*** ........................................................... *253*
*Our Paaty* ***(Nila Suthaker and Roja Suthaker)*** ............................................................... *255*
*மறைந்தும்..... மறக்க முடியாத ரீச்சர்* ***(சுடர் மகேந்திரன்)*** .................................. *256*
*மங்களம்* ................................................................................................................ *261*